873
16.x.02

வெளியீடு : 20-7-2007 Issued : 20-7-2007

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 10, 2007—தொகுதி 26—எண் 2

Tuesday the 10th April 2007—Volume 26—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

D
V29 31'P07
P07. 26. 2
227566

தமிழ்நாடு ... சென்னை-600 009
எழும்பூர்

10-4-2007

உள்ளடக்கம்


பக்கங்கள்

1. வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 217-249

2. சிறப்புக் கவன ஈர்ப்பு—

(அ) கரூர் மாவட்டம், சலவை மற்றும் சாயப் பட்டறையாளர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தம் 250-253

(ஆ) பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா நடத்தவுள்ளதாக வந்த செய்தி 253-259

(இ) சின்னம்மை நோய் பரவுவதைத் தடுக்க நடவடிக்கை 259-264

3. தகவல் கோரல்—

(அ) ஆழியாறு பகுதியில் தென்னை மரங்களுக்குத் தண்ணீர் வழங்குதல் 265-266

(ஆ) திரு. பி. சீனிவாச ராவ் அவர்களுக்குத் திருத்துறைப்பூண்டியில் நினைவுச் சின்னம் அமைத்தல் 266-268

(இ) அரியலூர் தொகுதி, கிராமங்களில் திருவிழாக்கள் நடத்த அனுமதிப்பது 269-271

(ஈ) சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன் வீடு தாக்கப்பட்டது தொடர்பாக 271

(உ) சென்டூர் வெடி விபத்து, வெடிபொருளின் தன்மை குறித்த விசாரணை மேற்கொள்ளுதல் 277-279

| | பக்கங்கள் |
|---|---|
| **4. கவன ஈர்ப்பு—** | |
| சிட்டா நூல் தட்டுப்பாட்டினால் நெசவாளர்கள் பாதிப்பு | 272-276 |
| **5. அறிக்கைகள் அளித்தல்—** | |
| பொதுக் கணக்குக் குழு | 280 |
| **6. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | 280-368 |
| கோரிக்கை எண் 45-சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | |
| *மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை | 280,304,306, 311,356-367 |
| *திரு. எல். ரவிச்சந்திரன் | 299,304-310 |
| திருமதி பெ. பிரபாவதி | 312-315 |
| டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி | 291,315-326 |
| *திருமதி பெ. கமலாம்பாள் | 303,327-334 |
| *திருமதி ரா. லீமா றோஸ் | 303,334-340 |
| திருமதி பி. பத்மாவதி | 298,340-347 |
| *திருமதி இளமதி சுப்பிரமணியன் | 347-355 |
| **7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 368-369 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 27, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038
## 2007 ஏப்ரல் 10, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்"

சொற்களை அளவறிந்து உரைத்திடும் தூயவர்கள் அவையிலிருப்போரின் வகையறியும் ஆற்றல் உடையவராயிருப்பின் பிழை நேருமாறு பேசமாட்டார்கள்.

### 1. வினாக்கள்–விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**31—**

#### வாக்குச் சாவடி

***18318—திரு. இ. மகேந்திரன்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மற்றும் வேலை செய்யும் இடத்திற்குச் சென்று வர வழங்கப்படுகிறது. பார்வையற்றவரும், கால் முடமானோரும் விரைவுப் பேருந்துகளில் மாநிலத்திற்குள் ஆண்டுக்கு ஒரு முறை தமது சொந்த ஊருக்குச் சென்று வர இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். மன வளர்ச்சி குன்றியவர்கள், எவ்வித வருமான வரம்புமின்றி உதவியாளர் ஒருவருடன் இலவசப் பேருந்துப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

### 4.27. ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கென பணியாற்றும் அரசுசாரா நிறுவனங்களைப் பதிவு செய்தல்

ஊனமுற்றோருக்கெனச் சேவை புரிந்து வரும் அரசுசாரா நிறுவனங்கள் அனைத்தும் ஊனமுற்றோர் சட்டம், 1995-ன்கீழ் பதிவு செய்துகொள்ளுதல் மிகவும் அவசியமாகும். ஊனமுற்றோருக்கென எவ்வித மறுவாழ்வுப் பணியை மேற்கொண்டிருந்தாலும், அத்தகைய அரசுசாராத் தொண்டு நிறுவனங்கள் அனைத்தும், ஊனமுற்றோர் (சம வாய்ப்புகள், உரிமைப் பாதுகாப்பு மற்றும் முழுப் பங்கேற்பு) சட்டம், 1995-ன் 52-வது பிரிவின்கீழ் பதிவு செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரிடம் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

### 4.28. ஊனமுற்றோருக்குத் தடையற்ற சூழ்நிலையை ஏற்படுத்துதல்

ஊனமுற்றோர், சமுதாயத்தின் மற்றைய பிரிவினருடன் இணைந்து வாழ ஏதுவாக, ஊனமுற்றோருக்குத் தடையற்ற சூழ்நிலையை ஏற்படுத்தித் தர மாநில அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஊனமுற்றோர் (சம வாய்ப்புகள், உரிமைப் பாதுகாப்பு மற்றும் முழுப் பங்கேற்பு) சட்டம், 1995-ல் குறிப்பிட்டுள்ளவாறு, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளில் (DCR) தேவையான திருத்தங்களை வெளியிட்டு, அதன்மூலம், உடல் ஊனமுற்றோர் பயனடையும் வகையில் பொதுக் கட்டடங்களில் சாய்வு தளம் மற்றும் இதர தடையில்லாச் சூழ்நிலையை ஏற்படுத்த அரசால் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஊனமுற்றோர் சமுதாயத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் முழுமையாகப் பங்கேற்பதை உறுதி செய்யத் தேவையான தடையற்ற சூழ்நிலையை ஏற்படுத்தித் தரக் கோரி பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் நகராட்சி' நிருவாகத் துறை ஆகிய அரசுத் துறைகளை மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது.



### 4.29. கடும் ஊனமுற்றோருக்கான பராமரிப்பு உதவித் தொகை

கடுமையாக ஊனமுற்றோர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகை ரூ.200/-லிருந்து அதிகரிக்கப்பட்டு மாதம் ரூ.500/- வீதம் 1-9-2006 முதல் வழங்கப்படுகிறது. பராமரிப்பு உதவித் தொகை, பயனாளிகளுக்குப் பண அஞ்சல் (Money order) வாயிலாக மாதந்தோறும் அவர்களுடைய வீட்டிற்கே அனுப்பப்படுகிறது. ஏற்கெனவே கடும் ஊனமுற்றோர் பராமரிப்பு உதவித் தொகை பெற்று வந்த 8,400 பயனாளிகள் என்ற எண்ணிக்கையை 2006-2007-ல் 10,000 ஆக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. கடும் மன வளர்ச்சி குன்றியோரின் வாழ்வாதாரத்திற்காக வருமான வரம்பையும், எண்ணிக்கையையும் கருத்தில்கொள்ளாமல் இவர்கள் அனைவருக்கும் கடும் ஊனமுற்றோருக்கான உதவித் தொகை வழங்கப்படும்.

### 4.30. (அ) மன வளர்ச்சி குன்றிய பெண்களுக்கான பாதுகாப்பு இல்லம்

14 வயதிற்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றிய வயது வந்த மகளிரைப் பாதுகாக்கும் வகையில் பாதுகாப்பு இல்லம் நடத்தும் தொண்டு நிறுவனங்களுக்கு மாநில அரசால் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒரு தொண்டு நிறுவனத்திற்கு ஒவ்வோர் இல்லத்திலும் 30 பெண்கள் பயனடையும்வண்ணம் ஆண்டுதோறும் தலா ரூ.2.50 இலட்சம் வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் மதுரை, சேலம், தூத்துக்குடி, சிவகங்கை மற்றும் வேலூர் ஆகிய 5 இடங்களில் பாதுகாப்பு இல்லங்கள் செயல்படுகின்றன.

### (ஆ) மன நிலை பாதிக்கப்பட்டோருக்கான இல்லம்

மன நலம் பாதிக்கப்பட்டோரைப் பராமரிக்கவென வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் 'உதவும் உள்ளங்கள்' எனப்படும் உள்ளூர்த் தொண்டு நிறுவனத்தின்மூலம் மன நலம் பாதிக்கப்பட்டோர் இல்லம் அரசின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வில்லமானது, மன நலம் பாதிக்கப்பட்டோரின் திறமைகள் குறித்துப் பொது மக்களிடையே சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. இவ்வில்லத்தில், 25 மன நலம் குன்றியோர் பராமரிக்கப்பட்டுப் பயனடைந்து வருகின்றனர்.

[2007 ஏப்ரல் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி வரையறை என்பது தேர்தல் ஆணையத்தினுடைய பொறுப்பில், அதற்காக அமைக்கப்பட்ட நடுவர் மன்றம் போன்ற ஓர் அமைப்பு, அதை நிறைவேற்றுகிறது. அந்தத் தொகுதி அமைப்புகளைப் பற்றி பொது மக்கள் தங்களுடைய கருத்துகளைத் தெரிவிப்பதற்கு அண்மையிலே ஓர் அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அமைப்பு சார்பாக, பொது மக்களுடைய கருத்தை அவர்கள் அறிவார்கள். அதிலே சட்டமன்ற உறுப்பினரோ, நாடாளுமன்ற உறுப்பினரோ, பொது மக்களுடைய பிரதிநிதிகளோ, பஞ்சாயத்துத் தலைவரோ, யாராக இருந்தாலும் தங்கள் கருத்தைத் தெரிவிக்கலாம். ஆனால், தொகுதிகள் அமைக்கப்படுகிறபோதே, அதற்கென்று ஒரு அடிப்படை இலக்கணம், வடக்குத் திசையிலேயிருந்துதான் ஒரு மாவட்டத்திற்குள் தொகுதிகளைப் பிரித்துக்கொண்டு செல்ல வேண்டும். தொகுதிகளில் ஒவ்வொரு ஒன்றியமும் கூடுமானவரையில் முழு அளவில் மொத்தமாக இடம் பெற வேண்டும். இப்படி அதற்குமேல் மக்கள் தொகை அடிப்படையிலேயும், வாக்காளர் அடிப்படையிலேயும் ஏறத்தாழ ஒரே அளவாக, சமச்சீராக அமைய வேண்டும். இவையெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் வரவேற்கக்கூடிய கொள்கைகள். அவற்றை நிறைவேற்றுகிறபோது ஏதேனும் குறைபாடு இருக்குமானால், பொது மக்கள் சார்பாகத் தெரிவிக்கப்படுகிற அந்த ஆலோசனைகளைச் சட்டமன்ற உறுப்பினரும் அந்தக் குழுவிற்குத் தெரிவிக்கலாம். அது ஏடுகளிலே வெளியிடப்பட்டிருக்கிறது.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**32—**

### துணை மின் நிலையம்

***334—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 ஏப்ரல் 10]

(அ) தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைந்துள்ள சிறுசேரிப் பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அதிகம் அமைந்துள்ள சிறுசேரிப் பகுதியில் ஒரு 230/110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க ரூ.43.47 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. சிப்காட் இடம் தேர்வு செய்யப்பட்டு, 2004-2005 திட்டக் காலத்தில் சேர்க்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலமாதியில் கடந்த 2, 3 மாதங்களுக்கு முன்பு, 400 மெகாவாட் திறன்கொண்ட மின் பகிர்வு நிலையத்தை அங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். அதேபோன்று, இந்த சிறுசேரிப் பகுதியையும் சேர்த்துப் பல்வேறு புதிய தொழில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கழகத் தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே கடந்த 10, 11 மாதங்களில் வந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் கவனத்திலே கொண்டு, நமது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு 230/110 கி.வோ. நிலையத்திற்குப் பதிலாக, 400 மெகாவாட் திறன்கொண்ட மின் நிலையம் அமைக்க உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற இந்த

[2007 ஏப்ரல் 10

சிறுசேரிப் பகுதியில் இன்றையதினம் தொழில்நுட்ப நிறுவனங்கள் ஏராளமாக வந்துகொண்டிருப்பதை மனதிலேகொண்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கடந்த மாதம் அந்தச் சாலை முழுவதும் சுற்றிப் பார்த்து, இன்னும் என்னென்ன வசதிகள் செய்து தர வேண்டும் என்பதை அதிகாரிகளோடு ஆய்வு செய்து, அந்தப் பகுதியின் தொழில்நுட்ப வளர்ச்சிக்காக அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, தொழில்நுட்ப நிறுவனங்கள் ஏராளமாக வந்துகொண்டிருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த ஆலோசனையை மின் வாரியம் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, மாத்தூர் பகுதியில் நிறையத் தொழிற்கூடங்கள் உள்ளன. நல்லூரிலுள்ள துணை மின் நிலையம் 110 கே.வி. திறன்கொண்டது. நிறையத் தொழிற்சாலைகள் உள்ளதால், அங்கே அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது எனப் பொது மக்களும், அங்குள்ள தொழில் அதிபர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அங்கு அதிகப்படியான திறன்கொண்ட ஒரு கூடுதல் துணை மின் நிலையத்தை அரசு அமைத்துக் கொடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையிலே அமைந்துள்ள தொழிற்பேட்டையில் மின் தடை ஏற்படுவதாகவோ அல்லது அங்கே இருக்கக்கூடிய தொழில் அதிபர்களுக்கு மின்சாரப் பற்றாக்குறை என்ற குறைபாடு வந்ததாகவோ இதுவரை அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது குறித்து விவரமாக எழுத்துமூலமாகத் தெரிவிப்பார்களேயானால், அதிகாரிகளோடு கலந்து பேசி, அங்கிருக்கக்கூடிய மின் திறனை அதிகப்படுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.



2007 ஏப்ரல் 10]

**33—**

## கால்வாய்த் திட்டம்

***2001—திருமதி ராணி வெங்கடேசன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதி, மருதூர் மேலக்காலில் முத்தாலங்குறிச்சி தனிக் கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப்படுமா?

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது தேவை எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தொகுதியிலுள்ள மருதூர் மேலக்காலிலிருந்து 8 கி.மீ. தூரத்தில் முத்தாலங்குறிச்சி குளம் உள்ளது. இந்த 8 கி.மீ. தூரத்திலும், படுக்கையூர், முரப்பநாடு, ஆழிக்குடி, பக்கப்பட்டி ஆகிய கிராமங்கள் உள்ளன. அங்கு 500 ஏக்கர் நிலங்கள் பாசன நிலங்களாக உள்ளதால், அங்கு தண்ணீர் சென்ற பிறகுதான், முத்தாலங்குறிச்சிக்கு வருகிறது. ஆகையால், 1997 ஆம் ஆண்டு பொதுப் பணித் துறை ஆய்வு செய்து, அனவரதநல்லூரில் 2 கி.மீ. தூரம் வரை கால்வாய் வெட்டி, முத்தாலங்குறிச்சிக்கு நேரடியாகத் தண்ணீர் கொண்டு வருவதற்காக 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தயார் செய்து, அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பிறகு அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. மீண்டும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், 750 ஏக்கருக்கு மேலான நிலங்கள் பயனடையும் என்பதைப் பணிவோடு கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையின் சார்பில் அப்படி ஆய்வு செய்யப்பட்டது உண்மை. தாமிரபரணியிலே உள்ள 8 அணைக்கட்டுகளிலே, 7-வது அணைக்கட்டு மருதூர் அணைக்கட்டு. மருதூர்

அணைக்கட்டினுடைய வலதுபுறத்திலிருந்து மேலக்கால் வரை, அந்த மேலக்காலிலே 4-வது மடையிலேயிருந்து ஒரு கால்வாய் பிரிந்து செல்கிறது. அது முக்கவர் என்ற கால்வாய். அந்தக் கால்வாயின்மூலமாகத்தான் முத்தாலங்குறிச்சிக்குத் தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது. ஆனால், அதிலே 15 மடைகள் இருக்கிற காரணத்தால், கடைசியில் இருக்கிற முத்தாலங்குறிச்சிக்குத் தண்ணீர் போகவில்லை என்பதற்காக, மேலக்காலிலே 15, 16-வது மடைக்கு இடையே நேராக ஒரு கால்வாய் வெட்டி, தண்ணீர் கொண்டு போக வேண்டும் என்று பொதுப் பணித் துறை ஆய்ந்தது. ஆனால், அந்தக் கால்வாய் வெட்டுகிற பகுதியிலே வசவப்பபுரம், ஆழிக்குடி போன்ற பகுதிகள் இருக்கின்றன. அவையெல்லாம் இரு போக நஞ்சை நிலங்கள்; அவர்கள் தர மறுத்துவிட்டார்கள். ஆகையினாலே, ஏற்கெனவே இருக்கிற அந்த முக்கவர் கால்வாயைச் சீர்படுத்தியிருக்கிறோம். உலக வங்கியின் 2-வது பிரிவிலே lining செய்யப்பட்டிருக்கிறது; 3½ இலட்சம் ரூபாய்க்குத் தூர் வாரப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம்விட, அந்தக் கால்வாயை வெட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதலும் கிடைக்கவில்லை. ஊர் மக்களின் எதிர்ப்பு இருக்கிற காரணத்தால், புதிய கால்வாய் வெட்டுவதைவிட, இருக்கிற கால்வாயைச் செப்பனிட்டுத் தந்தால், தண்ணீர் போவதற்கு வழி உண்டாகும் என்ற முடிவுக்குப் பொதுப் பணித் துறை வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியைப் பற்றி நன்கு அறிந்தவர் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர். எங்கள் தொகுதி, விவசாயத்தையே நம்பியிருக்கிறது. விவசாயத் தொழிலுக்கு வேண்டிய இந்தப் பாசனத் திட்டத்தை மறுபரிசீலனை செய்து, எங்களுக்குச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கு அளிக்கப்பட்ட காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பிலே, தமிழ்நாட்டின் பாசனம் முழுவதும், நெல் பயிரிடுவதாகவும், பாசனக் காலம் . . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாதது.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்**: முக்கியமான கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, உட்காருங்கள்.

வினா எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைசசர் அவர்கள்.

**34—**

## கட்டட வசதி

***11106—திரு. எல்.பி. தர்மலிங்கம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சத்தியமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு ஆணை வெளியிடப்பட்டு, கட்டடப் பணி 31-5-2007-க்குள் முடிக்கப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூரிலே இருக்கின்ற பதிவுத் துறை அலுவலகம் மிகக் குறுகிய, சிறிய கட்டடத்திலே இயங்கி வருகிறது. அதைப் புதிய கட்டடமாக இந்த ஆண்டு கட்டித் தர அமைச்சர் முன்வருவாரா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை

நிதிநிலைக்கேற்பப் பரிசீலிக்கப்படும். பதிவுத் துறை அலுவலகத்திற்கு அருகில் அரசுக்குச் சொந்தமான இடமாக இருந்தாலும் அல்லது தானமாக இடம் கொடுக்கப்பட்டாலும், இதனைப் பரிசீலிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

35—

## தொழிற்பேட்டை

***2169— திரு. பெ.சு. விஜயகுமார்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதியில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க, தொழிற்பேட்டை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதியில் தற்போது புதிதாய்த் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் சிட்கோவின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதியில், கடந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே, சிப்காட் தொழிற்சாலை அமைப்பதற்குத் தேவையான ஆணைகள் வழங்கப்பட்டன. அந்தத் தொழிற்சாலையை உடனடியாகத் தொடங்குவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன். அதேபோல், கலசப்பாக்கம் தொகுதி விவசாயம் நிறைந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியிலே அரசு சார்பில் வேலைவாய்ப்பு அளிக்கின்ற வகையிலே தொழிற்பேட்டை அமைக்க முன்வருமா என்பதையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட் தொழிற்பேட்டை என்னுடைய துறையில் இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய துறையில் இருக்கிறது. தொழில் செய்ய இடம் கிடைப்பது; தொழில் முனைவோர் எண்ணிக்கை ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து, தேவையான இடங்களில் தொழிற்பேட்டைகளை அனுமதிக்க எதிர்காலத்திலே அரசு முயற்சிகளை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியம், மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.

36—

## வீட்டுமனைப் பட்டா

***14581—திரு. ஓ. சுப்பிரமணியம்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் அணைக்கட்டில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2007 ஏப்ரல் 10

*(அ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிக்கிறவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில், 2007 ஜனவரி திங்கள் முதல், ஆறு மாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை எண் 854-ன்படி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.*

*(ஆ) இவ்வினா எழாது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியம்.*

**திரு. ஓ. சுப்பிரமணியம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1948 ஆம் ஆண்டு தொடங்கி 1955 ஆம் ஆண்டு பணி நிறைவு பெற்று, அன்றைய பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் திறந்து வைக்கப்பட்ட, ஆசியாக் கண்டத்தின் இரண்டாவது பெரிய அணை பவானிசாகர் அணை. அந்த அணை கட்டிய காலத்தில், அதிலே பணியாற்றிய கூலித் தொழிலாளிகள் கடந்த 50 ஆண்டு காலத்திற்கும் மேலாகப் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தில் குடியிருந்து வருகிறார்கள். அந்தக் கூலித் தொழிலாளர்களுக்குக் குடியிருப்புமனைப் பட்டா வழங்க 1996 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண் 408-ன்படி பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான அந்தக் குடியிருப்புப் பகுதிகள் நத்தமாக மாற்றப்பட்டன. ஆனால், என்ன காரணத்தினாலோ, பட்டா வழங்கப்பெறவில்லை. ஆனால், சமுதாயத்தில் இருக்கக்கூடிய அடித்தட்டு மக்களுக்கு, அவர்களுடைய உணர்வுகளை. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. ஓ. சுப்பிரமணியம்:** மதிக்கும் வகையில், அடித்தட்டு மக்களுக்கு விலாசம் கொடுத்திடும் வகையில் தாயுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள் அரசில், ஒரே இடத்தில் 10 ஆண்டுகள் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தில் பவானிசாகர் கூலித் தொழிலாளர்களுக்குப் பட்டா வழங்கப்படுமென அறிவித்த மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி.



2007 ஏப்ரல் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.*

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளுக்குமேல் குடியிருந்தால் உடனடியாகப் பட்டா வழங்க வேண்டுமென்ற ஒரு One time G.O.-வை நம்முடைய அரசாங்கம் பிறப்பித்திருக்கின்றது. அதன்மூலமாகப் பல்லாயிரக்கணக்கானோர் பயன்பெறவிருக்கின்றார்கள். அந்தத் திட்டத்தினுடைய காலக் கெடு 30-6-2007-உடன் முடிவடைகிறது. அந்தக் காலம் போதாது என்று வருவாய்த் துறை அதிகாரிகள் சொல்கின்றார்கள். ஆகவே, அந்தக் காலக் கெடுவை நீட்டித்து, வருகின்ற டிசம்பர் 31 ஆம் தேதி வரை அரசு கால அவகாசம் வழங்குமா என்பதனைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப்போல, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஏற்கெனவே 2000 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தை ஒரு சிறப்புத் திட்டமாக அறிவித்து ஏறத்தாழ ஒரு இலட்சத்து தொண்ணூற்றைந்தாயிரம் பேருக்கு இந்தத் திட்டத்தின்மூலம் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த 5 ஆண்டு காலம் இந்தச் சிறப்புத் திட்டம் அமலிலே இல்லாத காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் இந்த அவையிலே வைத்த கோரிக்கையின் அடிப்படையிலே, நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் 6 மாத காலம் அவகாசம் கொடுத்திருக்கின்றார்கள். நாங்கள் அந்தக் காலக் கெடுவை இன்றைக்கு இருக்கின்ற அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் ஒவ்வொரு நாளும் அறிவுறுத்தி, இந்தத் திட்டத்தினுடைய progress என்ன என்பதை, உயர்வு என்ன என்பதை. நடவடிக்கை என்ன என்பதை இந்த அரசு ஆய்வு செய்துகொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே, இதுவரை சுமார் 2,500 நபர்களுக்கு மாநிலம் முழுவதும பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து பட்டா வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தச் சிறப்புத்

திட்டத்திற்குக் கால அவகாசம் தேவைப்படின், நீட்டிக்கப்படும் என்பதை நிதிநிலை அறிக்கையிலேயே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 9–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மிகச் சிறந்த ஒரு திட்டம். நீண்ட நெடுங்காலமாகப் பல்வேறு பெயர்களில் இருக்கிற, அரசுப் புறம்போக்கு நிலங்களிலே வசித்து வருகிற மக்களுக்கு ஒரு சிறந்த வாய்ப்பு. பல்வேறு மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது வருவாய்க் கோட்டாட்சியர் என்கிற அளவிலே இதற்கானப் பணிகள் நடைபெறுகின்றன. கீழ்மட்டத்திலே இன்னும் அந்தப் பட்டா வழங்குவதற்குரிய முறையான ஆய்வும், பொது மக்களிடத்திலே இருந்து முறையான மனுக்களைப் பெற்று அதன்மீது ஆய்வுகள் மேற்கொள்கிற பணியும் கிராம அளவிலே இன்னும் முறையாகப் போய்ச் சேராத பல பகுதிகள் இன்றைக்கும் இருக்கின்றன. இதுகுறித்துக் கேட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள், எங்களுக்கு டி.வி.க்கான பட்டியல் தயார் பண்ண வேண்டியிருக்கிறது; அதேபோல Gas அடுப்புக்கான பட்டியல் தயாரிக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது; அதோடு இணைத்து இந்தப் பணிகளைச் செய்வதிலே நடைமுறைச் சிரமம் இருக்கிறது என்று தெரிவிக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற இந்த நல்ல திட்டம், காலத்தில் மக்களுக்குப் போய்ச் சேர வேண்டுமானால், குறிப்பிட்ட சில மாதங்களுக்கு வருவாய்த் துறையில் ஒரு தனி நிர்வாக ஏற்பாட்டை ஏற்படுத்தி, பட்டா வழங்குகிற பணியை நிறைவு செய்தால்தான், காலத்தில் அது முடியும். ஆகவே, அதற்குரிய ஒரு தனி நிர்வாக ஏற்பாடு, பட்டா வழங்குகிற பிரச்சினைக்கு ஏற்படுத்தப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப்போல, தமிழகத்திலே உள்ள கிராமங்களிலே



10 ஆண்டுகளுக்குமேல் குடியிருந்து வருகின்றவர்களுக்குப் பட்டா வழங்குவதிலே எந்தச் சிரமமும் இல்லை. முழுமையாகக் கணக்கு எடுக்கப்பட்டுவிட்டது. அதேபோல, நகராட்சிகள், பேரூராட்சிகள், மாநகராட்சிப் பகுதிகள் போன்ற இடங்களிலே வாழ்கின்ற மக்களுடைய மனுக்களை விரைந்து ஆய்வு செய்ய ஒரு சிறப்புக் குழு அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இது ரொம்ப முக்கியமானது. குறிப்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சித் தலைவர், அந்த மாவட்டத்திலே இருக்கின்ற ஒரு மூத்த அலுவலர், அரசுத் துறையிலே இருக்கின்ற அலுவலரைக்கொண்டு இதற்குரிய கணக்கெடுப்பு ஏற்கெனவே 2000 ஆம் ஆண்டு முடிந்த அளவிலே, இதிலே குறிப்பாக survey செய்ய வேணடியிருக்கின்றது.

நகர்ப்புறங்களிலே அவரவர்கள் குடியிருக்கின்ற இடத்தின் அளவு எவ்வளவு; குறிப்பாக, கிராமப்புறங்களிலே என்றால், மூன்று சென்ட்; அதே மாதிரி நகராட்சிப் பகுதிகளில் என்றால், ஒன்றரை சென்ட்; அந்த விதிமுறைகளுக்குட்பட்டு வந்தால் இலவசமாகக் கொடுக்கிறோம். அந்த விதிமுறைகளுக்குட்பட்டு வராதவர்கள் குடியிருக்கிறார்கள் என்றால் வசதி வாய்ப்பு அதிகமாக உள்ளவர்கள் என்றால், அதற்குரிய தொகையை அவர்கள் செலுத்த வேண்டும். இதைக் கணக்கிட வேண்டியிருக்கிறது. மாநகராட்சிப் பகுதி என்றால், ஒரு சென்ட்; இப்படி அரசு விதிமுறை வகுத்திருக்கிறது. அந்த விதிமுறைகளுக்குட்பட்டுப் பணம் செலுத்துபவர்களைத் தனியாகவும், இலவசமாகப் பட்டா பெறுபவர்களைத் தனியாகவும் பிரித்து, அதை வழங்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றோம்.

குறிப்பாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், வேலைப் பளு அதிகம் இருக்கிறது என்று. எவ்வளவு வேலைப் பளு இருந்தாலும், மாண்புமிகு முதல்வர் அவர்களாலே பிப்ரவரி மாதத்திலே எனக்கு அறிவுறுத்தப்பட்டு, நான் தமிழ்நாட்டிலே இருக்கின்ற 20 மாவட்டங்களுக்குச் சென்று, இந்தப் பணியை மிக வேகமாக முடுக்கிவிட்டு ஒவ்வொரு நாளும் ஆய்வு செய்கிறேன். நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கின்றேன், நேற்றுகூட நான் ஆய்வு செய்து, 15 ஆம் தேதி, தமிழகத்திலே எவ்வளவு ஆய்வு முடிந்திருக்கிறது; எவ்வளவு பேர்களுக்குப் பட்டா கொடுக்கப் போகின்றோம் என்பதைத் தெரிவிப்பதற்கு விரைந்து இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள், நான்கு பேர்களுக்குக் கொடுக்கப்பட்ட பட்டாவிலே 200 பேர் குடியிருக்கிறார்கள் என்று என்னிடம் சொன்னார்கள்.

நான்கு பேர்களுக்குக் கொடுக்கப்பட்ட பட்டாவை அவர்கள் பயன்படுத்தாத காரணத்தால், உடனே அதை இரத்துச் செய்ய வேண்டுமென்று நான் சம்பந்தப்பட்ட துறையிடமும், மாவட்ட ஆட்சியர் மற்றும் துறை அலுவலர்களிடத்திலேயும் ஆணையிட்டிருக்கின்றேன். தமிழகத்திலே பட்டா வழங்குவதிலே எங்கேயும் தாமதம் ஏற்படுவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால், நிச்சயம் இந்த அரசு உடனே அதை வழங்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுமனைப் பட்டா மிக முக்கியமானது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல உத்தரவைப் பிறப்பித்தார்கள். ஆனால், அது நடைமுறைக்கு இன்னும் வரவில்லை. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில், பல்வேறு பணிகள் இருந்தாலும் பட்டா வழங்கப்படுவதாகச் சொன்னார்கள். சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு நான்கூட மேட்டூர் தொகுதியிலேயுள்ள பல கிராமங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வேண்டுமென்று மனுக்கள் கொடுத்து, இன்றைய வரையிலே ஒரு வீட்டிற்குக்கூட பட்டா வழங்கப்படவில்லை. அதற்கு அதிகாரிகள் சொல்லக்கூடிய காரணம், எங்களுக்குப் பல்வேறு வேலைகள் இருக்கின்றன என்பது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆகவே, இதில் சிறப்புக் கவனம் செலுத்தி, வீட்டுமனைப் பட்டா இல்லாத குடும்பங்கள் எத்தனை; ஒரு வட்டாரத்திலே அல்லது ஒரு வட்டத்திலே எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கெடுத்து, அவர்கள் எல்லோருக்கும் வழங்க வேண்டும். கிராமத்திலே கேட்கிறார்கள்; சுதந்திரம் பெற்ற காலத்திலேயிருந்து இன்றைய வரையிலே ஒரு மனைப் பட்டாகூட இந்த நாட்டில் வழங்கப்படவில்லை என்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதே வேளையில், நீங்கள் வீட்டுமனைப் பட்டா வழங்குவதாகச் சொல்கிறீர்கள். அரசுப் புறம்போக்கு நிலங்களிலே பல்வேறு வகைகள் இருக்கின்றன. நத்தம் புறம்போக்கு நிலங்களில் குடியிருந்தால் மட்டும் வழங்குகிறீர்களா அல்லது வேறு வகையான நிலங்களுக்கும் வழங்குகிறீர்களா? அதிலே கருத்து முரண்பாடுகள் இருக்கின்றன. வேறு வகையைச் சார்ந்த நிலமாக இருந்தாலும்கூட, அவை நத்தமாக மாற்றப்பட்டு, அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். ஆகவே, எப்படியிருந்தாலும்கூட, எந்த வகையான நிலத்திலே குடியிருந்தாலும், *10* ஆண்டுகள் குடியிருப்பார்களேயானால், அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)



*முற்பகல் 9–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள், தங்களுக்குப் பல்வேறு வேலைகள் இருப்பதாகச் சொல்லித் தட்டிக் கழிப்பதாக மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள். நான் இந்த அவையிலேயிருந்து, அந்த அதிகாரிகளுக்கு, உங்கள் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர்கள் சார்பாக, ஆணை பிறப்பிப்பதாக அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். எந்த வேலை இருந்தாலும், முதல் வேலையாக, இந்தப் பட்டா கொடுக்கிற வேலையைத்தான் அவர்கள் கருத வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *37*, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க பெரியசாமி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**37—**

## மண்ணெண்ணெய்

***5094—திரு. மு.க. பெரியசாமி:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதியில், சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் முறையாக மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004 ஆம் ஆண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவக் கிராமங்களுக்கு நிவாரண அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு, அவர்களுக்கு மண்ணெண்ணெய் மற்றும் நிவாரணப் பொருட்கள் அனைத்தும் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், 2004 ஆம் ஆண்டிலே குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு, அதிலே பழைய அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. அதே நேரத்தில் வழங்கப்பட்ட ஏனைய கார்டுகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை. அரிசி மட்டும்தான் வழங்கப்படுகிறது. ஆனால், அங்கேயிருக்கிற கிராம நாட்டாண்மைப் பஞ்சாயத்தார்கள், அந்த மூன்று லிட்டர் மண்ணெண்ணெயை, இரண்டு லிட்டராகக் கொடுத்து, பாக்கி ஒரு லிட்டர் உபரியை எடுத்து, ஏனைய கார்டுகளுக்கு இதுவரை வழங்கி வருகிறார்கள். ஆனால், அந்தப் பகுதியிலே இப்போது மின்சார விநியோகம் முற்றிலும் பாதிக்கப்பட்டு, இன்னும் முழுமையாகச் சீரடையவில்லை. மேலும், தற்காலிகக் குடியிருப்புகளில் மக்கள் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு மண்ணெண்ணெய் என்பது மிக, மிக அத்தியாவசியமாக இருக்கிறது. குறிப்பாக அந்தத் தொகுதியிலே, 8,754 விண்ணப்பங்கள் போடப்பட்டிருக்கின்றன. அவற்றில் 563 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1,186 அட்டைகள்தான் இதுவரையில் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த அட்டைகளுக்கு அரிசி மட்டும்தான் இதுவரை வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெரியசாமி, கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. மு.க. பெரியசாமி:** ஆனால், மண்ணெண்ணெய் இதுவரை வழங்கப்படவில்லை. ஆகவே அரசு, அந்தக் குடும்பங்களுக்கு, அவர்களின் அவசியத்தைக் கருதி மண்ணெண்ணெய் வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி வட்டத்திலே, சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 2004 ஆம் ஆண்டிலே தற்காலிகமாக அட்டைகள் வழங்கப்பட்டன. மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையில் அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, 2005 ஆம் ஆண்டிலே புதிதாக அவர்களுக்கு அட்டைகள் வழங்கப்பட்டன. அப்படி, அந்த மாவட்டத்தைப் பொறுத்தளவிற்கு முதலில் 14,237 பேருக்குத் தற்காலிக அட்டைகளை மட்டும் வழங்கி, நிரந்தரமாக 2005-லேயிருந்து 2009 வரைக்கும், அவர்களுக்கு அட்டைகள் வழங்கப்பட்டு, மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. ஆகவே, 2005 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரைக்கும் புதிதாக அட்டைகள் வழங்கப்படவில்லை என்று எந்தப் புகாரும் இதுவரை வரவில்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அப்படி ஏதாவது புகார் இருக்குமென்று சொன்னால், அதைத் துறையினுடைய அமைச்சரிடத்திலே கொடுத்தாலும் சரி அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கொடுத்தாலும் சரி, ஆய்வு செய்து, அவர்களுக்கு மீண்டும் புதிதாக அட்டைகள் வழங்கப்பட்டு, உரிய முறையிலே மண்ணெண்ணெய் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சியரிடத்திலே நானே நேரடியாகச் சென்று, அந்த விவரங்களையெல்லாம் கொடுத்து, கோரிக்கை வைத்திருக்கிறேன். ஆனால், இதுவரை அது நிவர்த்தி செய்யப்படவில்லை. மேலும், அந்த அட்டைகள் முதலிலே, மாவட்டத் தலைநகரங்களிலேயே அச்சிடப்பட்டதாகச் சொன்னார்கள். இப்பொழுது சென்னையிலே அடிப்பதனாலே, எங்களாலே அதைச் சரியாக வழங்க முடியவில்லை; ஆகவே, பழைய முறையிலேயே, மாவட்டத் தலைநகரங்களிலேயே அச்சிட்டுக் கொடுத்தால், உடனுக்குடன் எங்களால் கொடுக்க முடியும் என்று அந்த அதிகாரிகள் சொல்கிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் அச்சடிப்பது என்பதும், மாநில அளவில் அச்சடிப்பது என்பதும், ஒரு கொள்கை முடிவு. இப்பொழுது மாநில அளவில்தான் அச்சடித்து, அவை மாவட்டத்திற்கு வழங்கப்பட்டு, ஒவ்வொரு வட்ட அளவிலே, ஒவ்வொரு கிராம அளவிலே சென்றுகொண்டிருக்கிறது. ஆனால், நான் தமிழ்நாட்டில் இருக்கிற 29 மாவட்டங்களுக்குச் சென்று தணிக்கை செய்தபோது, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் எல்லாம், இவை எல்லாம் மாவட்ட அளவிலே இருக்கலாம்; அதுதான் எங்களுக்கு முறையாக, மக்களுக்குப் பயன்படுகிறவகையில், நுகர்வோருக்கு வசதியாக இருக்கும் என்ற ஒரு குறிப்பினைத் தந்தார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறோம். இது கொள்கை முடிவு என்கிற காரணத்தினால், முதலமைச்சர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டுப் பின்னால் அவை எல்லாம் அறிவிக்கப்படும். அதே நேரத்திலே, தரங்கம்பாடி பகுதியிலே, சுனாமியால் பாதிக்கப்பட்டிருக்கிற பகுதியிலே, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் புகார் கொடுத்ததாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதனுடைய நகலை என்னிடத்தில் தந்தால், முறையாக 2004-லே சுனாமியால் பாதிக்கப்பட்டு தற்காலிக அட்டை வழங்கப்பட்டவர்களுக்குக் கட்டாயம் அதைப் பரிசீலனை செய்து, அவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக வழங்கப்பட்ட கார்டுகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை என்கின்ற குற்றச்சாட்டு, பெர்துவாகத் தமிழகம் முழுவதும் இருந்துகொண்டிருக்கிறது. புதிய கார்டுகளுக்கு மத்தியத் தொகுப்பிலிருந்து மண்ணெண்ணெய் allot செய்யவில்லை என்று கடந்த முறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். புதிதாக வழங்கப்பட்டிருக்கின்ற அந்த கார்டுகளுக்கு மண்ணெண்ணெய் எப்பொழுது வழங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தளவிற்கு நமக்கு 76,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. ஆனால், இப்பொழுது மத்தியத் தொகுப்பிலிருந்து 59,852 கிலோ லிட்டர்தான் நமக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் நாம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். 39 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை. அது குறித்துத் தொடர்ந்து மத்திய அரசுக்கு இதுவரை ஏழு முறை கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. இரண்டு முறை முதலமைச்சர் அவர்களே எழுதிய பிறகுதான், இரண்டு மாதத்திற்கு, மூன்று மாதத்திற்கு என்று தற்காலிகமாக மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. அந்த மண்ணெண்ணெயை, புதிதாக இருக்கிற குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு முறை கொடுத்துவிட்டு, பின்னால் கொடுக்கவில்லையென்று சொன்னால், அதிலும் பிரச்சினை வரும். எனவே, ஏற்கெனவே குடும்ப அட்டை வழங்கியவர்களுக்கு விசேஷ காலங்களிலே அதாவது தீபாவளி வருகிறபொழுது, பொங்கல் வருகிறபொழுது மண்ணெண்ணெய் கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, தொடர்ந்து அந்த முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறோம். வந்தவுடனேயே, மண்ணெண்ணெய் யார், யாருக்கெல்லாம் கொடுக்கப்பட வேண்டுமோ, அதைக் கொடுப்பதற்கு வேண்டிய முயற்சியைச் செய்வோம். தொடர்ந்து மத்திய அரசை நாம் அணுகிக்கொண்டுதான் இருக்கிறோம்; முறையாக அணுகிக்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**38—**

## வேலைவாய்ப்பு அலுவலகம்

***5967—திரு. தி.க. ராஜா:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதியில் வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பத்தூர் தொகுதியில் வேலைவாய்ப்பு பதிவு அலுவலகம் ஏற்படுத்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம் தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய மாவட்டம். வேலூருக்கும், திருப்பத்தூருக்கும் 100 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. கடந்த காலங்களிலே ஆலங்காயத்திலே வேலைவாய்ப்பு பதிவு அலுவலகம் இருந்தது, அதையும் எடுத்துவிட்டார்கள். இப்பொழுது நாங்களெல்லாம் வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்ய வேண்டுமென்றால், 100 கிலோ மீட்டர், 150 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வேலூருக்குச் செல்ல வேண்டும். அப்படி இல்லையென்று சொன்னால், திருப்பத்தூர் நகராட்சியிலே, மாதத்திலே கடைசி செவ்வாய்க்கிழமை ஒரு நாள் மட்டும் பதிவு செய்கிறார்கள். அங்கே 100 பேர்களுக்கு மட்டும்தான் பதிவு செய்கிறார்கள். வேலூரிலே, திருப்பத்தூர் கல்வி மாவட்டம், வேலூர் கல்வி மாவட்டம் என்று செயல்படுகின்றன. அதிலே, திருப்பத்தூர் கல்வி மாவட்டத்திலே மட்டும் ஆண்டொன்றுக்கு 43,000 மாணவர்கள் 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு, I.T.I., Polytechnic போன்ற படிப்புகளை முடித்துவிட்டுப் பதிவு செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அங்கே இருப்பவர்கள் எல்லாம் ஏழை விவசாயக் கூலிகள். அவர்களெல்லாம் வேலூருக்குச் சென்று பதிவு செய்ய முடியாத அவல நிலை இருக்கிறது. எனவே, அரசு அதைக் கருத்தில்கொண்டு, இப்பொழுது மாதக் கடைசியிலே செவ்வாய்க்கிழமை பதிவு செய்கின்ற அந்த முறையை மாற்றி, தினசரி பதிவு செய்கின்ற நிரந்தர அலுவலகம் அமைத்துத் தர அமைச்சர் முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் தற்பொழுது செயல்பட்டு வருகிறது. வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மனுதாரர்களைப் பதிவு செய்தல், பணியமர்த்துதல், தொழில் முறை வழிகாட்டுதல் மற்றும் சுய வேலைவாய்ப்பிற்கு ஊக்குவித்தல் ஆகிய



பணிகளை ஆற்றி வருகிறது. எனவே, வேலூர் மாவட்டத்தில் ஏற்கெனவே அலுவலகம் ஒன்று செயல்பட்டு வரும் நிலையில், புதியதாகத் திருப்பத்தூர் தொகுதியில் வேலைவாய்ப்பு அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பகுதியிலே இந்தியாவிலேயே மிகச் சிறந்த சந்தன மரங்கள் விளையக்கூடிய ஜவ்வாது மலை, ஏலகிரி மலை இருக்கின்றன. அங்கே சுமார் ஒரு இலட்சம் மலைவாழ் மக்கள் வசிக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், திருப்பத்தூர் கல்வி மாவட்டத்திலே 81 உயர்நிலைப பள்ளிகளிலே ஆண்டொன்றுக்கு 22,480 பேர் படித்துவிட்டு வெளியே வருகிறார்கள். அதேபோல, திருப்பத்தூர் கல்வி மாவட்டத்தில் உள்ள 88 மேல்நிலைப் பள்ளிகளிலே, 12 ஆயிரம் பேரும், 53 மெட்ரிக் பள்ளிகளிலே 2,800 பேரும், அதேபோல கலைக் கல்லூரிகளிலே 3 ஆயிரம் பேரும், பாலிடெக்னிக் கல்லூரிகளிலே 900 பேரும், பிரைமரி நர்சரி பள்ளிகளிலே 300 பேரும், தைய்ல், டைப்பிங் போன்ற பள்ளிகளிலே 500 பேரும், Teacher Training-லே 1,500 பேரும், இப்படியாக 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொடர்ந்து 100 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வேலூருக்குச் செல்ல முடியாத அவல நிலை இருக்கிறது. மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியிலே, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான கட்டடங்கள் எல்லாம் நிறையக் காலியாக இருக்கின்றன. அரசாங்கத்திற்கு அந்தச் செலவுகூட கிடையாது. எனவே, நிரந்தரமாக அங்கே ஒரு அலுவலகத்தைத் தொடங்கி, ஏழை மக்கள் கல்வி கற்றபின், வேலைவாய்ப்பிற்குப் பதிவு செய்வதற்கு உதவிட நீங்கள் முன்வருவீர்களா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள படித்த இளைஞர்களுக்கு, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு உதவித் தொகை தருகின்ற அந்தச் சூழல் வந்த பிறகு, ஆயிரக்கணக்கான மாணவர்கள் தங்களுடைய கல்வியை முடித்துவிட்டு, ஒன்று, அந்த அலுவலகங்களில் பதிவு செய்வதற்கு நீண்ட வரிசையில் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இரண்டாவது, அப்படிக் காத்திருக்கின்றபோது, அவர்களுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டு, வெயிலில் சுருண்டு விழுகிறார்கள். ஒரு மாவட்டத்திற்கு ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் என்றிருப்பதை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர், பல்வேறு பணிகளுக்கு ஆள் எடுக்கின்ற நம்முடைய அரசு, எளிதாக இந்தத் திட்டங்கள் மக்களுக்குச் சென்று சேர்கின்ற வகையில் ஒரு கொள்கை முடிவாக, தமிழகம் முழுவதும், மாவட்டத்திற்கு இரண்டு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களைத் தொடங்குவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் வேலைவாய்ப்புத் துறை வேலையில்லாத துறையாக இருந்தது. இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் இன்றைக்கு அதிகப் பணிகளைச் செய்யக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைக் கருத்தில்கொண்டு, தற்போது சில மாவட்டங்களிலே இருக்கிற வேலைவாய்ப்பு அலுவலகங்களில் போதிய இட வசதி இல்லாத காரணத்தினால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சொல்லி வசதியான புதிய இடங்களுக்கு மாற்ற வேண்டும் என்று உத்தரவிட்டு, வேறு விசாலமான கட்டடங்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்களை மாற்றுவதற்கான முயற்சியை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா என் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.



**39—**

## மேம்பாலம்

***11252—திரு. செ.ம. வேலுசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் தொகுதி, ஒண்டிப்புதூர் இரயில்வே மேம்பாலப் பணிகளை விரைவில் நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், ஒண்டிப்புதூர் இரயில்வே மேம்பாலம், கோவை மாவட்டத்திலுள்ள பல்லடம் தொகுதியையும், சிங்காநல்லூர் தொகுதியையும் இணைக்கக்கூடிய பகுதியில், நாகப்பட்டினம்-கூடலூர்-மைசூர் தேசிய நெடுஞ்சாலையில், கிலோ மீட்டர் 334-ல் அமைந்துள்ள இரயில்வே மேம்பாலம் ஆகும். இந்த மேம்பாலம், நம்முடைய மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாகத் தமிழகத்தில் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தபோது, 5-10-2000 அன்று நெடுஞ்சாலைத் துறையின்மூலமாக ஆணை வழங்கப்பட்டு, அதற்குரிய மேம்பாலப் பணிகள் நடைபெற்று வந்தன. கடந்த காலத்திலே நெடுஞ்சாலைத் துறையினுடைய வேலைப் பகுதி முடிவுற்று, அதற்குப் பிறகு இரயில்வே வேலைப் பகுதி இரயில்வே துறையின்மூலம் நடைபெற்று வந்தது கொஞ்சம் காலதாமதமாகிவிட்டது. அதற்குப் பிறகு, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு நானும் நம்முடைய மத்திய இரயில்வே துறையினுடைய இணை அமைச்சர் மாண்புமிகு திரு. வேலு அவர்களும் நேரடியாக அந்தப் பணியை ஆய்வு செய்து, அந்தப் பணியை வேகமாகச் செய்ய வேண்டும் என்று சொல்லி, ஒப்பந்ததாரர்களுக்கும், அந்த இரயில்வே துறை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தி அதற்குப் பிறகு அந்தப் பகுதி முடிவடைந்து, இப்போது கடந்த தைப் பொங்கல் அன்று நம்முடைய மாண்புமிகு இரயில்வே துறையினுடைய இணை அமைச்சர் அவர்களும், நானும், அதற்குப்

பிறகு ஆய்வுக் கூட்டத்தை வைத்து, ஒப்பந்தப்புள்ளி கோரியிருந்த நெடுஞ்சாலைத் துறையின் பாக்கியிருக்கின்ற பகுதிக்கு உத்தரவு வழங்கப்பட்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பிப்ரவரி மாதம், பாரதியார் பல்கலைக்கழகத்தில் 'பாரதி தமிழ்ச் செம்மல்' பட்டம் வழங்கப்பட்ட நிகழ்ச்சிக்காகவும், அரசு நிகழ்ச்சிக்காகவும் கோவை வந்திருந்தபோது அங்கேயிருக்கின்ற பொது மக்களுடைய கோரிக்கையை ஏற்று, பால வேலையை விரைவில் முடிக்குமாறு அறிவுறுத்திவிட்டு வந்தார்கள். இந்த மாத இறுதியில் பணி முடிவுற்று, பாலம் திறக்கப்படும் என்று கூறுவதுடன் இப்போது அது நான்கு வழிப் பாதையாக இருக்கிறது. இரண்டு வழிப் பாதை பணி நேற்றோடு முடிவடைந்துவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, வரக்கூடிய 14-4-2007 அன்று சோதனை ஓட்டம் அந்தப் பாலப் பகுதியில் நடைபெறவிருக்கிறது. மீதியிருக்கின்ற இரண்டு வழிப் பகுதியும் முடிவுற்று, இந்த மாத இறுதியில் அந்த இரயில்வே மேம்பாலம் திறக்கப்பட்டு, அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான அந்தச் சாலையைப் பயன்படுத்த வேண்டிய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர்களுடைய கனவு நனவாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒண்டிப்புதூர் மேம்பாலம் நீண்ட நாட்களாகக் கானல் நீர்போல, தொடர்ந்து ஆயிரக்கணக்கான மக்களைத் தினம் பாதிக்கக்கூடிய பகுதியாக இருந்து வருகிறது. இரயில்வே துறையினுடைய காலதாமதத்தின் காரணமாக நின்றிருந்த இந்தப் பணி, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்று 11 மாத காலம் ஆகியும்கூட, ஜனவரியில் அந்த மேம்பாலம் திறக்கப்படும் என்று கூறி இருந்தீர்கள். கடந்த பிப்ரவரி 24 ஆம் தேதி அன்று தமிழகத்தினுடைய முதல்வர் கோவை வந்தபொழுது, ஏப்ரல் மாதம் 14 ஆம் தேதி மேம்பாலம் திறக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தீர்கள். இப்பொழுது அமைச்சர் அவர்கள் கூறுகின்றபொழுது, அந்தப் பணி முடிக்கப்பட்டதாகக் கூறினார்கள். கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர்தான் 7½ மீட்டருக்கான கான்கிரீட் போடப்பட்டிருக்கிறது. 15, 20 நாட்கள் அது காய





வேண்டும். அப்படியென்றால், இந்த மாத இறுதி வரை அந்தப் பாலம் பூர்த்தியடையாது. இப்படி இருக்கின்ற தருணத்தில், அதிவிரைவாக, நாம் பேசிவிட்டோம் என்பதற்காகத் திறப்பது சரியாக இருக்குமா என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். மேலும், அந்தப் பாலம் திறந்தவுடனேயே பாலத்திலிருந்து கோவைக்குச் செல்லக்கூடிய பகுதி மிகக் குறுகிய பாதையாக இருக்கின்றது. அது National Highways என்று அப்பொழுது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் இருந்ததை National Authority என்று மாற்றினீர்கள். Authority-யோ அல்லது National Highways-ஓ, அதை விரிவுபடுத்தினால்தான், அந்தப் பாலத்தை விரிவுபடுத்திய பின்னர்தான் மக்கள் செல்வதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மேலும், இதே கோவை நகரில் வாலாங்குளம் உட்பட 8 மேம்பாலங்களுக்கு இதோடு ஒப்பந்தம் விடப்பட்டது. அந்த 8 மேம்பாலங்களும் திறக்கப்படவில்லை. மத்திய, மாநில அரசுகளிலே பொறுப்பேற்றிருக்கின்ற நீங்கள் விரைவில் இந்த மேம்பாலங்களை முடிப்பதன்மூலமாக, ஆயிரக்கணக்கான பேர் 5 ஆண்டு காலமாகத் தவித்துக்கொண்டிருக்கின்ற நிலைமையை மாற்ற முடியும். துரித நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவைத் தலைவர்மூலமாக மாண்புமிகு அமைச்சரிடம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்திற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சராக இருந்தபொழுது அரசாணை வழங்கப்பட்டது என்பதை மீண்டும் தங்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகத்தான் நானே வெளிப்படையாகச் சொன்னேன். இரயில்வே துறையினுடைய பணி காலதாமதமாக நடைபெற்றதனால், சம்பந்தப்பட்ட அமைச்சரும், நானும் நேரடியாகச் சென்று, அதை விரைவாகச் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டு, அந்தப் பணி முடிவுற்று, கடந்த தைப் பொங்கலின்பொழுதுதான் நெடுஞ்சாலைத் துறையினுடைய பாக்கி இருக்கின்ற பணியைச் செய்வதற்காக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 57 இலட்சம் ரூபாய் மதிப்பிலான ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்ததாரரிடம் இறுதி செய்யப்பட்டு,

அதற்குரிய கையொப்பம் இடப்பட்டு, இப்பொழுது அந்தப் பணி நடைபெற்று வருகிறது. இன்னும் சொல்லப் போனால், வரக்கூடிய ஜூன் மாதம் 4 ஆம் தேதி வரை அந்தப் பாலப் பணியைச் செய்வதற்கு, ஒப்பந்ததாரருக்கு அவகாசம் இருக்கிறது. ஆனால் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கோவையில் அறிவித்துவிட்டு வந்த காரணத்தினால், எப்படியும் அந்தப் பணியை வேகமாகச் செய்ய வேண்டுமென்று எடுத்துரைத்ததன் காரணமாக, நெடுஞ்சாலைத் துறையினுடைய அலுவலர்களும், இரயில்வே துறையினுடைய அலுவலர்களும் இரவு, பகலாக அந்த வேலையைச் செய்து வருகிறார்கள்.

நேற்றோடு ஒரு இரண்டு வழிச் சாலை முழுமை பெற்றுவிட்டது. மற்றொரு இரண்டு வழிப் பாதைக்குரிய பணி தொடர்ந்து நடைபெற்று, 14-4-2007-க்குள் அந்தப் பணி முழுமை அடையும். ஆனால், curing என்கின்ற time இருக்கின்ற காரணத்தினால் 14-4-2007 அன்று அந்த இரண்டு வழிப் பாதையில் போக்குவரத்து சோதனை ஓட்டம் நடைபெற இருக்கின்றது. இந்த மாத இறுதியில் இரயில்வே துறையினுடைய இணை அமைச்சர் அவர்களும், நம்முடைய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களும் வந்து அந்தப் பாலத்தை திறந்து வைக்க இருக்கின்றார்கள். நிச்சயமாக இந்தப் பணி 14-4-2007-க்குள் முழுமைபெறும் என்பதை இந்த நேரத்தில் மீண்டும் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பாக்கி இருக்கின்ற வாலாங்குளம் பகுதியின் பணி இந்த ஆண்டு இறுதியில் முடிவுபெறும். அதற்குரிய இரயில்வே பணி நடைபெற்று வருகின்றது. அந்தப் பணியும் வேகப்படுத்தப்பட்டு, அந்தப் பாலப் பணியும் முழுமைபெறும் என்பதை இந்த நேரத்தில் மீண்டும் அவர்களுக்குத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று கோவை நகரில் இருக்கின்ற தொழில்நுட்பப் பூங்காவினுடைய அருகில் உள்ள ஹோப்ஸ் அருகிலே இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு 2005-லே மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில் உத்தரவு வழங்கப்பட்ட, பின்னர், இன்னும் அந்தப் பணி தொடங்கப்படாமல் இருக்கின்றது. தொழிற் பூங்கா வளர்கின்ற இந்த நிலையில், விரைவில் அந்தப் பணியைத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, என்னுடைய தொகுதியில் சூலூர்-சோமனூருக்கு இடையில் செங்கத்துறையில் இருக்கின்ற நொய்யல் பாலத்திற்கு நபார்டுமூலமாக ஆய்வு செய்யப்பட்ட அந்தப் பணி முடக்கப்பட்டிருக்கிறது. அது விரைவில் தொடங்கப்படுமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். வரக்கூடிய ஆண்டில் 11 பாலங்கள்—இருகூர், வட கோவை, திருப்பூர், ஊத்துக்குளி, பீளமேடு போன்ற பகுதிகளுக்கு மேம்பாலங்கள் கட்டக்கூடிய பணி ஆய்வில் இருப்பதாக நேற்று நான் Estimates Committee-யினுடைய கூட்டத்தில் அறிந்தேன். இந்தப் பணிகளும், 2000-லிருந்து 2007 வரை மேம்பாலங்கள் கட்டக்கூடிய பணியில் காலதாமதமானதைப்போல் இல்லாமல், விரைவில் மத்திய, மாநிலப் பொறுப்பில் இருக்கக்கூடிய இந்த அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள், அம்மாவினுடைய ஆட்சியில் அறிவித்ததாக. அறிவிப்பதோடு சரி, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞருடைய அரசுதான் அதற்குரிய பணிகளைச் செய்து வருகிறது; (மேசையைத் தட்டும் ஒலி) நடைமுறைப்படுத்துகிறது. பாலங்களுடைய வரலாறு, எப்போதெல்லாம் தலைவர் கலைஞருடைய அரசு நடக்கிறதோ, அப்போதெல்லாம் பாலங்கள் தமிழகத்திலே உருவாகி வருவதை நீங்கள் அறிவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதே கோவையில், உப்பிலிபாளையம் மேம்பாலம், அடுக்கு மேம்பாலம், Grade Separator, அதேபோல வட கோவை மேம்பாலம், இவையெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞருடைய ஆட்சியில் கட்டப்பட்ட வரலாற்றை இன்னும் சொல்லிக்கொண்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற இந்தப் பாலப் பணிகளைச் செய்வதற்கு இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், சிதம்பரம்-காட்டுமன்னார்குடி போகும் சாலை, பி.முட்லூர்-பரங்கிப்பேட்டை செல்லும்

சாலை பொது மக்கள் பயன்பாட்டிற்கு இல்லாமல் மிகவும் பழுதடைந்துள்ளதால், இந்தச் சாலைப் பணிகளை விரைந்து இந்த அரசு செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி, இரயில்வே மேம்பாலம் பற்றியது. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற சாலை, மாநில நெடுஞ்சாலையாக இருந்தது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞருடைய அரசு ஏற்பட்ட பிறகு, மத்தியத் தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் அந்தச் சாலைப் பணிக்காக இப்போது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கிறது. அந்தப் பணி நடைபெற்று முடிந்த பிறகு, தேசிய நெடுஞ்சாலைத் துறையிடம் அது ஒப்படைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் உள்ளதுபோல, எங்களுடைய ஊராக இருக்கின்ற தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடியிலே, மூன்றாம் கேட்டினுடைய இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்காக மத்திய, மாநில அரசுகள் பணம் ஒதுக்கி, மாநில அரசால் அதற்கான டெண்டர்களும் விடப்பட்டு, அந்த மேம்பாலப் பணிகள் இதுவரையிலும் இன்னும் நடைபெறாத நிலையிலே, அதை விசாரிக்கின்றபோது, எல்லாப் பணமும்—மூன்றாம் கேட்டினுடைய மேம்பாலம் கட்டும் பணிக்கு இடையூறாக உள்ள குடிநீர்க் குழாய்கள் மற்றும் மின் கம்பங்கள், டிரான்ஸ்ஃபார்மர்கள் ஆகியவற்றை மாற்றி அமைப்பதற்காக, உரிய கேட்புத் தொகை—சம்பந்தப்பட்ட தூத்துக்குடி நகராட்சி, மின்சார வாரியத்திடம் பட்டுவாடா செய்யப்பட்ட பின்பும், டெண்டர் விடப்பட்டு, கான்ட்ராக்டர்கள் வேலையைச் செய்கின்ற நேரத்திலே, அந்த இரயில்வே மேம்பாலப் பணிகள் முடக்கப்பட்டிருக்கின்றன. அந்த இரயில்வே மேம்பாலப் பணிகள் எவ்வளவு காலத்திற்குள் முடியும்? எவ்வளவு காலத்தில் மக்கள் பயன்பெறுகின்ற வகையில் அமையும் என்பதை இந்தத் துறையினுடைய அமைச்சர் இதற்குப் பதிலாகத் தர வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞருடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, இந்த நெடுஞ்சாலைத் துறை என்னிடத்திலே ஒப்படைக்கப்பட்ட பிறகு, அந்தத் துறையை நானும், துறையினுடைய செயலாளர் போன்றவர்களும் ஆய்வு செய்தோம். துறையில் பல்வேறு பணியிடங்கள் காலியாக இருந்தன. 7 தலைமைப் பொறியாளர் இருக்க வேண்டிய இந்தத் துறையில், 4 தலைமைப் பொறியாளர்கள் இடங்கள் காலியாக இருந்தன. 27 கண்காணிப்புப் பொறியாளர்கள் இருக்க வேண்டிய இந்தத் துறையில், 17 இடங்கள் காலியாக இருந்தன. 120 கோட்டப் பொறியாளர்கள் இருக்க வேண்டிய இடத்தில், 51 இடங்கள் காலியாக இருந்தன. 340 உதவிக் கோட்டப் பொறியாளர்கள் இருக்க வேண்டிய இடத்தில், 114 இடங்கள் காலியாக இருந்தன. இவற்றுக்கும் பதவி உயர்வு, பணி உயர்வு வழங்கப்பட்ட பிறகு, திரும்பிப் பார்க்கின்ற நேரத்தில், உதவிப் பொறியாளர் பணியிடங்கள் 270 இன்றைக்கும் காலியாக இருக்கின்றன. இதற்காக நம்முடைய் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு, நம்முடைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தை அணுகி இருக்கின்றோம். கடந்த பிப்ரவரி மாதம் 25 ஆம் தேதி அதற்கான தேர்வுகள் நடத்தப்பட்டிருக்கின்றன. நேர்காணல் விரைவில் நடத்தப்பட்டு, அந்தப் பணியாளர்களும் பணியிடங்களில் நிரப்பப்பட்ட பிறகு, இதுபோன்ற பணிகள், தொய்வான பணிகள் எல்லாம் வேகமாகத் தலைவர் கலைஞருடைய அரசில் நடக்கும். அந்த அளவுக்குத் தரமாகவும், தாமதமில்லாமலும் நடத்த வேண்டுமென்று எங்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அதுபோன்ற பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால், மாண்புமிகு உறுப்பினர் கோபித்துக்கொள்ளக் கூடாது; இந்தத் துறையைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கே ஒரு சில நாட்கள் ஆகிவிட்டன எங்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, நன்றி கூறி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

## சிறப்புப் பள்ளிகள்

***702—திரு. து. ரவிக்குமார்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மத்திய அரசின் மானியத்துடன் ஆதி திராவிட மாணவர்களுக்குச் சிறப்புப் பள்ளிகளை நடத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் மத்திய அரசின் மானியத்துடன், ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்குச் சிறப்புப் பள்ளிகள் நடத்தும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே இருக்கின்ற சமூக நீதித் துறை அமைச்சகத்தின் இணைச் செயலாளராக இருக்கின்ற திரு. சேவாராம் அவர்களால் கையெழுத்திடப்பட்டு, 16-3-2006 ஆம் தேதியிட்ட கடிதம் ஒன்று மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. அந்தக் கடிதத்தின்படி, ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்குச் சிறப்புப் பள்ளிகளைத் தொண்டு நிறுவனங்கள் தொடங்க முன்வந்தால், அதற்கான தொகையில் 90 விழுக்காட்டை மத்திய அரசு மானியமாக வழங்க இருக்கிறது. 10 சதவிகிதத்தை மட்டும் அந்தத் தொண்டு நிறுவனங்கள் வழங்க வேண்டும். இதிலே மாநில அரசின் பங்கு, செலவு என்பது ஒன்றுமே கிடையாது. அவர்கள் இதற்கு அனுமதி மட்டும் அளித்தால் போதும். இதன் அடிப்படையில், தொண்டு நிறுவனங்கள் இங்கே பள்ளிகளை, கல்லூரிகளைத் தொடங்க முன்வந்தால், அதற்கு நமது அரசு ஒப்புதல் வழங்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.



கலந்து பேசி, வேலைநிறுத்தத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, 5-4-2007 அன்றே மீண்டும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா நடத்தவுள்ளதாக வந்த செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, விதி 56-ல் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பாகக் கொடுக்கப்பட்டதை, சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கு 25-4-2007 அன்று (குறுக்கீடுகள்) விளக்கம் சொன்னதற்குப் பிறகு ஒன்றுமில்லை. உட்காருங்கள்.

ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கு 25-4-2007 அன்று அடிக்கல் நாட்டு விழா நடத்தவுள்ளதாக வந்த செய்தி குறித்து விதி 56-ன்கீழ் அறிவிப்பும் கொடுத்திருக்கிறார்கள். அது சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. A.I.A.D.M.K. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. டி. சுதர்சனம் ஆகியோரும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. தி. வேல்முருகன், திரு. தி.க. ராஜா, திரு. கி. ஆறுமுகம் மற்றும் திரு. கே.எல். இளவழகன் ஆகியோரும் அரசின் கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன்.

முற்பகல் 10-30

***திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, ஆந்திர அரசால் குப்பத்திற்கு அருகிலிருக்கிற கணேசபுரம் கிராமத்திலே அணை கட்டுவதற்குத் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாவட்டத்திலே இருக்கின்ற செய்தித்தாள்களிலே தினந்தோறும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அந்தச் செய்திகளின் அடிப்படையிலே, அங்கேயிருக்கின்ற பொது மக்கள் மத்தியிலும், உழவர் பெருமக்கள் மத்தியிலும் ஒரு பதட்ட நிலை தொடர்ந்து நிலவிக்கொண்டு வருகிறது. (மணியடிக்கப்பெற்றது) அந்தப் பதற்ற நிலையைப் போக்குவதற்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டுரங்கன், சிறப்புரை இல்லை, நீங்கள் கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களாலே உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கினுடைய அடிப்படையிலே, ஆந்திர அரசு அங்கே அணை கட்டுவதற்கு மேற்கொள்ளவிருக்கிற முயற்சிக்கு நிரந்தரத் தடையாணையைப் பெறுவதற்கு தமிழக அரசு ஒரு முயற்சியை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புவதோடு,** உச்ச நீதிமன்றத்தில் அம்மா அவர்களால் தொடுக்கப்பட்ட வழக்கினை அடிப்படையாகக் கொண்டு, அணை கட்டுவதற்கு நிரந்தரத் தடையாணையைப் பெறுவதற்கு, இந்த அரசு மூத்த வழக்கறிஞர்களை அமர்த்தித் தடையாணை பெறுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:****என்று ஒரு வாசகத்தைச் சொன்னார். அந்த வாசகம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) உட்காருங்கள். கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லிவிட்டு உட்கார வேண்டும். உட்காருங்கள். அடுத்து, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே கணேசபுரத்தில் ஆந்திர அரசு ஏப்ரல் மாதம் 25 ஆம் தேதி அவர்கள் பிரஜாபதம் என்கின்ற ஒரு திட்டத்தின் அடிப்படையில், அரசு இயந்திரம் அந்தக் கிராமங்களுக்கே சென்றடைகிறது என்கிற தத்துவத்தின் அடிப்படையிலே, அவர்கள் ஆய்வு செய்து, அடிக்கல் நாட்டு விழாவை அன்று வைத்துக் கொண்டு அணையைக் கட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட்டு இருப்பதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், அவர்கள் முந்தைய ஆட்சிக் காலத்தில் இங்கே எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவராக இருந்தபோது, அவரும், நானும்தான் இந்தப் பிரச்சினையை இங்கே கிளப்பி, உடனடியாக உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடுக்க வேண்டும் என்று அரசை நிர்பந்தித்தபோது, உச்ச நீதிமன்றத்திலே ஒரு வழக்கினைத் தொடுத்தார்கள். அந்த வழக்கு நிலையைப் பற்றித்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டுரங்கன் அவர்கள் இப்பொழுது கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், வெள்ளிமலை மற்றும் சேலம் மாவட்டம், கருமந்துறை ஆகிய இரண்டு இடங்களில் பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கு 100 விழுக்காடு மைய அரசின் மானியத்துடன் இரண்டு மாதிரிப் பள்ளிகளும் மேலும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியரின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் மைய அரசுத் திட்டத்தின்கீழ், சென்னை, கன்னிகாபுரம், ஆதி திராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் நாமக்கல் மாவட்டம், களங்காணி ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளி ஆகிய இரண்டு பள்ளிகளும் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. தொண்டு நிறுவனங்கள் இந்தச் சிறப்புப் பள்ளிகளை நடத்துவதற்கான கோரிக்கையை அரசிடம் கொடுத்தால், அரசு அது குறித்துப் பரிந்துரைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு.

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பத்மநாபபுரம் தொகுதியில், தக்கலையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற ஆதி திராவிடர் நலத் துறையின் விடுதிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும், அரசு அது குறித்து ஆய்வு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) கரூர் மாவட்டம் சலவை மற்றும் சாயப் பட்டறையாளர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு. கரூர் மாவட்டத்தில் (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள், ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், one by one ஆக எடுக்கிறேன், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கரூர் மாவட்டத்தில் 8 சலவைப் பட்டறைகள் மற்றும் 12 சாயப் பட்டறைகளை மூடுவதற்குத் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் உத்தரவிட்டுள்ளதால், அங்குள்ள சாயக் கழிவு நீர் (குறுக்கீடுகள்). நான் எல்லாவற்றையும் எடுக்கிறேன் என்று சொல்கிறேன் அல்லவா? எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் எடுப்பேன். திரு. நெடுஞ்செழியன், உட்காருங்கள். திரு. ராஜா, உட்காருங்கள். தகவல் கோரல் சம்பந்தமாக 4 items-க்கு reply வந்திருக்கிறது. அந்த நான்கையும் எடுத்துக்கொள்கிறேன். அதற்கு மட்டும் பதில் சொல்வார்கள்.

கரூர் மாவட்டத்தில் 8 சலவைப் பட்டறைகள் மற்றும் 12 சாயப் பட்டறைகளை மூடுவதற்குத் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் உத்தரவிட்டுள்ளதால், அங்குள்ள சாய, சலவைப் பட்டறையாளர்கள் 2-4-2007 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தம் மேற்கொண்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து, சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அறிவிப்புக் கொடுத்திருக்கின்றார்கள். அதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கின்றேன். இது சம்பந்தமாகத் திருவாளர்கள் வே. செந்தில் பாலாஜி, ரெ. நெடுஞ்செழியன், ல. ராதாகிருஷ்ணன், ஆர்.கே. பாரதி மோகன், எம்.வீ.ஆர். வீரகபிலன் மற்றும் பி. தங்கமணி ஆகியோர் கொடுத்திருக்கின்றார்கள். எல்லோருமே A.I.A.D.M.K. Party-ஐச் சேர்ந்தவர்கள். யாராவது ஒருவர் பேசுங்கள்.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 96 சாயப் பட்டறைகள், 8 பொது சுத்திகரிப்பு நிலையங்களிலும், தனியார் சுத்திகரிப்பு நிலையங்களிலும் சாயக் கழிவு நீரை சுத்திகரிப்புச் செய்து வருகின்றன. கரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கைத்தறி ஏற்றுமதியில் ஆண்டொன்றுக்கு சுமார் 3 ஆயிரம் கோடி ரூபாய்



வருவாயை ஈட்டித் தருகின்ற தொழில் சிறப்பாக நடந்து வருகின்றது. அந்த வகையில் 489 சலவை மற்றும் சாயப் பட்டறைகள் ஒருங்கிணைந்து, 8 பொது சுத்திகரிப்பு நிலையங்களிலும், 96 சாயப் பட்டறைகள் தனியார் சுத்திகரிப்பு நிலையங்களிலும் சாயக் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் முறையாக மாசு கட்டுப்பாடு வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய கட்டணங்களைச் செலுத்தி வருகிறார்கள். அதற்குண்டான இரசீதுகளையும் பெற்று வந்துள்ளார்கள்.

*முற்பகல் 10-25*

இந்நிலையில், கரூரில் இயங்கி வரும் மாவட்ட மாசு கட்டுப்பாடு வாரியம் 8-3-2007 அன்று அந்த வழக்கு சம்பந்தமாக, சென்னை உயர் நீதிமன்றத்திற்கு அளித்த தகவலின் அடிப்படையில், 20 சாயப் பட்டறை உரிமையாளர்கள் தங்களுடைய விண்ணப்பத்தை அளிக்கவில்லை என்று, இந்தப் பட்டறைகளை மூடுவதற்குப் பரிந்துரை செய்துள்ளார்கள். அதனை முன்னிட்டு, உயர் நீதிமன்றம் இந்த 8 சலவைப் பட்டறைகள் மற்றும் 12 சாயப் பட்டறைகளை மூடுவதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். ஆனால், 11-3-2007 அன்று கரூர் மாவட்டத்தில் 861 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன; அவர்களில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு விண்ணப்பிக்காதவர்களே யாரும் இல்லை என்ற ஒரு நிலையை, ஓர் அறிக்கையை, அதே மாசு கட்டுப்பாடு வாரியம் அறிக்கையாகத் தாக்கல் செய்துள்ளார்கள். இந்த வகையில், மாசு கட்டுப்பாடு வாரியம் முரண்பட்ட இரண்டு அறிக்கைகளைத் தாக்கல் செய்ததன் விளைவாக, அந்தப் பட்டறைகளை மூடுகின்ற ஒரு சூழ்நிலை உருவானது.

தமிழ்நாட்டில் பள்ளிப்பாளையம், குமாரபாளையம், ஈரோடு போன்ற பல்வேறு இடங்களில் இதேபோன்று சாயத் தொழில் நடந்து வருகின்றது. திருப்பூரைப் பொறுத்தவரை, பின்னலாடைகளுக்கு மட்டுமே சாயம் போடுவதற்குரிய சூழ்நிலை உள்ளது. ஆனால் பல்வேறு இடங்களில் கரூர், ஈரோடு, குமாரபாளையம், சேலம்போன்ற இடங்களில் அந்தச் சாயத் தொழிலைச் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை நிலவி வருகிறது. கரூரைப் பொறுத்தவரையில் 5 கிலோ நூல் கொண்ட கட்டு ஒன்றிற்கு 30 ரூபாயிலிருந்து 50 ரூபாய் வரை சுத்திகரிப்புக் கட்டணம் அதிகமாகச் செலவாகிறது. மேற்கண்ட பல இடங்களில் சுத்திகரிப்புச் செய்யாத காரணத்தால், அங்கே கட்டு ஒன்றிற்கு 30 ரூபாயிலிருந்து 50 ரூபாய் வரை விலை குறைவாக

வருகிறது. இதனால் கரூரில் தொழில்கள் மூடுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. இந்த வகையில் மாசு கட்டுப்பாடு வாரியம் Zero discharge என்ற ஒரு கட்டாய முறையைக் கரூரில் அமல்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சாய, சலவைப் பட்டறைகளுக்கும் Zero discharge என்ற ஒரே முறையை அமல்படுத்தினால், கரூரிலும் அந்தத் தொழில் நலிவடையாமல் மிகச் சிறப்பாக இருக்கும். மாசு கட்டுப்பாடு வாரியமும் மற்றும் அதிகாரிகளும் தவறான தகவல்களைக் கொடுத்ததன் விளைவாக, 16 ஆண்டுகள், 15 ஆண்டுகள், 10 ஆண்டுகள் முறையாக இயங்கி வந்த 20 சாயப் பட்டறைகளை மூடுகின்ற சூழ்நிலைக்கு இன்று ஆளாகியுள்ளன. அதேபோன்று, மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரிகள் சிலரின் தவறான நடவடிக்கைகள் காரணமாக, அந்தத் தொழில் நலிவடைகின்ற ஒரு சூழ்நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இது குறித்து, அரசு சிறப்புக் கவனம் செலுத்தி, கரூரில் மட்டுமே Zero discharge என்ற முறையை அமல்படுத்தாமல், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துச் சாயப் பட்டறைகளுக்கும் ஒரே சீராக அதனை அமல்படுத்த வேண்டுமென்பதோடு கரூரில் மூடப்பட்ட 20 சாயப் பட்டறைகளைத் திறப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புக் கவன ஈர்ப்பு என்பது, கரூரில் மூடப்பட்ட சாய, சலவைப் பட்டறை சம்பந்தப்பட்டது. ஆனால், உறுப்பினர் தமிழ்நாட்டையே சுற்றி வந்துவிட்டார். கரூர் மாவட்ட சாய மற்றும் சலவைப் பட்டறை உரிமையாளர்கள் சங்கம் 2-4-2007 அன்று முதல் தொடர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டது உண்மைதான். ஆனால், இந்த அரசைப் பொறுத்தளவில், யார் பாதிக்கப்பட்டாலும், உடனடியாக அதைக் கவனிக்கின்ற மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இருக்கின்ற காரணத்தாலும் மிகவும் எளிதாகச் சந்திக்கக்கூடிய முதலமைச்சர் அவர் என்ற காரணத்தாலும், கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய திரு. கே.சி. பழனிச்சாமி அவர்களும் மற்றும் கரூர் சாயப் பட்டறை மற்றும் சலவைப் பட்டறை உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகள் வந்து, 5-4-2007 அன்று முதல்வர் அவர்களைச் சந்தித்து, அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று,



இன்னும் குறிப்பாக, நேரடியாக அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சரோடு தொடர்புகொண்டு பேசி, மத்திய அரசோடு இணக்கமாக இருக்கின்ற காரணத்தால், மத்திய அரசை வலியுறுத்தினால், கட்டாயம் அது தடுத்து நிறுத்தப்படும் என்ற நம்பிக்கை தமிழ்நாட்டு மக்களுக்கு இருக்கிறது. ஆகவே, எப்பாடுபட்டாவது இந்த அணை கட்டப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். விட்டுவிட்டால், தமிழர்களுடைய உரிமை பறிபோய்விடும் என்ற நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தமிழக அரசும் இதிலே அதிகக் கவனம் செலுத்த வேண்டும்; அக்கறைகொண்டு தடுத்து நிறுத்த வேண்டுமென்ற வேண்டுகோளையும் முன்வைப்பதோடு, மாண்புமிகு மத்திய வனத் துறை அமைச்சரிடத்திலே தொடர்புகொண்டு பேசிய நேரத்தில், இதற்கு வனத் துறை அனுமதி அளிக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால், ஆந்திர மாநிலத்திலே சொல்லப்படுவது, எங்களுக்கு அனுமதி அளித்தாலும், அளிக்கவில்லையென்று சொன்னாலும், நாங்கள் கட்டியே தீருவோம் என்று பிடிவாதமாக இருப்பதாகவும் செய்தி வந்தவண்ணம் இருக்கிறது. எப்பாடுபட்டாவது இந்த அணை கட்டுவதை அரசு தடுத்து நிறுத்துமா என்பதை இந்த நேரத்திலே அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அம்மச்சர் அவர்கள்.

முற்பகல் 10-40

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் தெரிவித்த கருத்து, அவர்களுடைய உணர்வில் இந்த அரசும் பங்குகொள்கிறது. ஆந்திர மாநிலத்தில் பாலாற்றின் குறுக்கே அணை கட்டப்படும் என்ற செய்தி 5-1-2006 முதல் அடிக்கடி வந்துகொண்டிருக்கிறது. அப்போதிருந்தே தமிழக அரசு சார்பில் கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன; எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, 5-8-2006 அன்று ஆந்திர மாநிலத்திற்குச் சென்ற நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பொன்முடி அவர்களும், ஆந்திர முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, இது குறித்துப் பேசினார்கள். அப்போது தமிழக மக்களுடைய நலனைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு, சட்டத்திற்குப் புறம்பாக எந்த அணையையும் ஆந்திர அரசு கட்டாது

என்று ஆந்திர முதலமைச்சர் அவர்கள் உறுதி அளித்தார்கள். அப்படி ஏதாவது நாங்கள் கட்டுகிற நிலை ஏற்பட்டால், 1892 ஆம் ஆண்டின் பன்மாநில ஒப்பந்தப்படி அதனுடைய விவரத்தைத் தமிழக அரசுக்கு நாங்கள் அனுப்புவோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். பிறகு, மறுபடியும் அணை கட்டுவதாக, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது என்ற செய்தி 22-1-2007 அன்று வந்தவுடன் பொதுப் பணித் துறையினுடைய செயலாளர் ஆந்திர மாநில அரசுக்கு ஒரு கடிதம் எழுதினார். இப்படியெல்லாம் பத்திரிகையிலே வருகிறது; இது குறித்து ஏதாவது செய்தி உண்டா என்று கடிதம் எழுதினார்கள்.

அதைத் தொடர்ந்து, 25-1-2007 அன்று பூமி பூஜை நடைபெறுவதாகப் பத்திரிகையிலே செய்தி வந்தவுடன், அது குறித்து நானே ஆந்திர மாநிலத்து அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினேன். இதற்கும் மேலாக, ஆந்திர அரசு மேற்கொள்ளும் திட்டங்களைக் குறித்து சரியான விவரங்களை அறிய, விளக்கங்களை அளிக்கும்படி 1-2-2007 அன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், ஆந்திர முதலமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார்கள். அதற்குப் பதில் அளிக்கும் வகையில், இத்திட்டத்திற்கான வடிவமைப்பு இறுதியாக்கம் செய்யப்பட்டு வருகிறது என்றும், உறுதி அளித்தவாறு, திட்டத்தின் விவரங்கள் தமிழ்நாட்டிற்கு அளிக்கப்படும் என்றும் 5-2-2007 அன்று ஆந்திர முதல்வர் அவர்கள் நமக்கு ஒரு செய்தியை அனுப்பினார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் கேட்டதுபோல, 'இந்து' பத்திரிகையிலே வந்திருந்தாலும் சரி, இதுவரையில் ஆந்திர அரசிடமிருந்து எந்தவிதமான திட்ட அமைப்பு குறித்த செய்தியும் நமக்கு வரவில்லை. ஆனால், நேற்றைக்கு முன்தினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர்கள் கலந்துகொள்கிற நிகழ்ச்சிக்கு டெல்லிக்கு என்னை அனுப்பி வைத்தார்கள். அங்கே அவரைச் சந்திக்கக்கூடிய ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அப்போது நான் கேட்டேன். நீங்கள் அடிக்கல் நாட்டுவதாகப் பத்திரிகையிலே செய்திகள் வந்துகொண்டு இருக்கின்றனவே, உள்ளபடியே அப்படி திட்டம் உண்டா என்று கேட்டேன். அவர்கள் தெரிவித்தார்கள், அடிக்கல் நாட்டுவதற்கு நான் ஒன்றும் தேதியைக் குறிப்பிடவில்லை என்று தெரிவித்துவிட்டு, நான் திரும்பிப் போய் என்ன விவரம் என்று எல்லாம் கேட்டு. உங்களுக்கு விரைவிலே தெரிவிக்கிறேன் என்று சொல்லி அவருடைய diary–யை எடுத்துக் குறித்துக்கொண்டு போய் இருக்கிறார்கள். ஆகையினால், இந்த அரசு அதன்மீது கவனத்தைச் செலுத்திக்கொண்டு இருக்கிறது. என்ன நடக்கிறது என்பதைக் கோரிக்கொண்டு இருக்கிறது.



அதேபோன்று, நம்முடைய மத்திய வனத் துறைக்கு அனுப்பப்பட்டதா; Forest land வருகிற காரணத்தால் மத்திய அரசினுடைய அனுமதி வேண்டுமே அவர்களுக்கு, ஆந்திர அரசு மத்திய அரசை அணுகி இருக்கிறார்களா என்று கேட்டார்கள்.. அது குறித்தும் மாண்புமிகு மத்திய அமைச்சர் ராஜா அவர்களிடத்திலே நான் கேட்டபோது, அவர்களும் அவர்களுடைய அலுவலகத்திலே விசாரித்துவிட்டு, ஆந்திர அரசிடமிருந்து அப்படிப்பட்ட செய்தி எதுவும் வரவில்லை என்றுதான் தெரிவித்திருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் பாண்டுரங்கன் அவர்கள் பேசுகிறபோது, தாங்கள் ஒரு வழக்குத் தொடுத்து இருக்கிறோம் என்று சொன்னார்கள். நான் ஒத்துக்கொள்கிறேன். சென்ற கால ஆட்சியில் 10-2-2006 அன்று Original Suit ஒன்றை உச்ச நீதிமன்றத்திலே போட்டார்கள். ஆனால், இரண்டாவது மாதம் போட்ட Suit–க்கு அவர்கள் ஆட்சியைவிட்டுப் போகிற வரையில், நம்பர்கூட வாங்கவில்லை. கடைசியிலே கலைஞருடைய ஆட்சி வந்தபிறகுதான் அதற்கு நம்பர் வாங்கி, அந்த வழக்கை எடுத்து இருக்கிறார்கள். (குறுக்கீடு) Suit போட்டால் போதாது. மனு போட்டால் போதாது. (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. ஒரு case போட்டால், ஒரு மனு போட்டால் அதற்கு நம்பர் வாங்க வேண்டும். இல்லாவிட்டால், அதைக் கோர்ட்டில் எடுத்துக்கொள்ளமாட்டார்கள். அதற்குப் பிறகு நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான், அதற்கு நம்பர் வாங்கி, நடத்திக்கொண்டு இருக்கிறோம். அப்படி ஏதாவது ஆந்திர அரசு ஒப்பந்தங்களை மீறி, தடைகளை மீறி அணை கட்ட முற்படுமானால். அதைச் சட்ட ரீதியாக எப்படிச் சந்திக்க வேண்டுமோ, அப்படி இந்த அரசு சந்திக்கும் என்ற உறுதியை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (இ) சின்னம்மை நோய் பரவுவதைத் தடுக்க நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த subject. *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள்.

திருவாளர்கள் ஓ. பன்னீர்செல்வம், கே.ஏ. செங்கோட்டையன் மற்றும் டி. ஜெயக்குமார், A.I.A.D.M.K. சார்பாகவும், திருவாளர்கள் கி. ஆறுமுகம் மற்றும் தி. வேல்முருகன், பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகவும், திரு. கே. மகேந்திரன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகவும், சென்னை உட்பட தமிழகத்தில் அம்மை நோய்

அதிகமாகப் பரவுவதால் மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து, விதி 56-ன்கீழ் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் A.I.A.D.M.K. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

முற்பகல் 10-45

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு highly infectious disease என்று சொன்னால், Small Pox என்று சொல்வார்கள். அதேபோல, Chicken Pox என்று சொல்வார்கள். Measles என்று சொல்வார்கள். பொதுவாக, இதுபோன்ற highly infectious disease, அதாவது, வேகமாகப் பரவக்கூடிய மிகப் பயங்கரமான ஒரு நோய் என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஒரு காலக்கட்டத்தில் இருந்தது. அரசுகள் பல்வேறு காலக்கட்டங்களிலே இதை உணர்ந்து, உலக அளவிலே தடுப்பு மருந்துகள் எல்லாம் உரிய காலத்திலே கொடுக்கப்பட்டதன் விளைவாக, இப்பொழுது Small Pox-பெரியம்மை அறவே ஒழிக்கப்பட்டு, முழுமையான அளவிற்கு 10 ஆண்டு காலத்திற்குமேலாக பெரியம்மை இல்லை என்கின்ற ஒரு வரலாற்றை மனித சமுதாயம் பெற்றிருக்கின்றது. இது மனித சமுதாயத்திற்குக் கிடைத்திருக்கின்ற ஒரு மாபெரும் வெற்றி என்றே நாம் கருதுகின்றோம். ஆனால், இன்றைக்கு Measles—தட்டம்மையும், அதேபோன்று Chicken Pox-ம் நாம் எவ்வளவு முயற்சிகள் எடுத்தாலும்கூட, தடுப்பூசிகள் போட்டாலும்கூட, epidemic என்று சொல்லக்கூடிய அளவுக்கு, சில சூழ்நிலைகளில் வேகமாகப் பரவக்கூடிய அபாயகரமான ஒரு நிலைமை இருந்துகொண்டிருக்கின்றது. எனவே, இதிலே பிரத்தியேகக் கவனம் செலுத்தி, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நாம் எடுப்பதன்மூலமாகத்தான், இதை முழுமையாக நாம் ஒழிக்க முடியும்.

கடந்த 5 ஆண்டு கால, நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே போதுமான அளவிற்கு, வளரும் அந்தப் பிஞ்சுக் குழந்தைகளுக்கு உரிய காலத்திலே vaccination கொடுக்கப்பட்டதன் காரணமாகவும், அதேபோன்று இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படுகின்ற நிலையில் போதிய மருந்துகள் மருத்துவமனைகளிலே இருந்த சூழ்நிலை காரணமாகவும் முழுமையான அளவிற்கு இந்த epidemic பரவாமல் தடுக்கப்பட்டது, தவிர்க்கப்பட்டது. ஆனால், ஒரு மாதத்திற்கு முன்பாக, என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட, சென்னை மாநகராட்சி நிர்வாகத்திற்கு



இங்கே நான் பணிவன்போடு அரசைக் கேட்டுக்கொள்வதை 'Hindu' பத்திரிகையிலேகூட 7 ஆம் தேதி ஒரு செய்தி வந்திருக்கிறது. "A detailed Project Report for Palar has been prepared by the Central Designs Organisation of Andhra Pradesh and is being sent to the Tamilnadu for approval" என்று ஒரு செய்தி வந்திருக்கிறது. ஏற்கெனவே ஒரு design, DPR—Detailed Project Report தயார் செய்து, தமிழக அரசுக்கு அனுப்பப்பட்டதாக ஒரு செய்தி வந்திருக்கிறதே, அப்படி ஏதாவது Detailed Report-ஐத் தமிழக அரசுக்கு ஆந்திர அரசு அனுப்பி இருக்கிறதா? அதேபோல, "..according to highly placed sources, a revised DPR provided for construction of the small dam at the cost of Rs.55 crores to store 0.6 tmc for irrigation of 400 acres and to supply drinking water to about 10 to 15 villages in the drought prone villages in the Kuppam area. The State has already clarified that this storage would not be 2.tmc as apprehended by Tamil Nadu. It was proposed to start work on the project as soon as the DPR is accepted by Tamil Nadu. The funds for Palar were not a problem as a sum of Rs.900 crores has already been provided for the minor irrigation. Out of that, 55 crores, can even be alloted to minor irrigation project" என்று ஒரு செய்தி வந்திருக்கிறது.

நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்று சொன்னால், பாலாறு ஒன்றுதான் இப்போது எங்களுக்கு ஜீவநாடியாக இருந்துகொண்டு, மழை பொழிகிறபோது மட்டும் வெள்ளம் வந்து, எங்களைக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறது. அதற்காகத்தான் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், அதேபோல நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்களையும், ஒகேனக்கல் திட்டத்தை எங்களுடைய வேலூர் மாவட்டத்திற்கு அறைகூவலாகச் சேர்த்து எடுத்துக்கொள்ளுங்கள் என்று வலியுறுத்தி வந்துகொண்டிருக்கிறேன். இப்படி நாங்கள் வலியுறுத்திக்கொண்டிருக்கிறபோது, ஓரளவு தண்ணீர் வந்துகொண்டிருக்கிற பாலாற்றுக்கே ஆபத்து என்ற ஒரு நிலை வந்து, 25 ஆம் தேதி அடிக்கல் நாட்டு விழா என்று செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இந்தத் திட்டம் குறித்துத் தமிழ்நாடு அரசுக்கு ஏதாவது தகவல் தரப்பட்டிருக்கிறதா? Forest area-விலிருந்து 484 ஏக்கர் நிலத்தை அவர்கள் பெறுவதாகவும் ஒரு செய்தி வந்திருக்கிறது. ஆகவே, வனத் துறை அமைச்சர், மத்தியிலே இருக்கக்கூடிய நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்தச் செய்தியைச் சொல்லி, இதற்கு ஒரு தடையை வனத்

துறைமூலமாக ஏற்படுத்தி, நீதிமன்றத்தின்மூலமாகவும் தடையாணையைப் பெற்று, பாலாற்றின் குறுக்கே கணேசபுரத்தில் அணைக்கு அடிக்கல் நாட்டுகிற விழாவைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி.*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே குப்பம் பக்கத்திலே இருக்கிற கணேசபுரத்தில் அணை கட்டுவதற்காக 25-4-2007 அன்று அடிக்கல் நாட்டுவதாகப் பத்திரிகையிலே செய்தி வந்தவண்ணம் இருக்கிறது. இதைச் சொல்கிற நேரத்தில், தமிழக அரசின் சார்பில், நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக்கொள்வது, இதுவரையில் அப்படியொரு செய்தி வரவில்லையென்று அரசின் சார்பிலே சொல்லப்பட்டு வந்தாலும்கூட, அங்கே 25 ஆம் தேதி அடிக்கல் நாட்டுவது உறுதி என்று சொல்கிறார்கள். பத்திரிகையிலேகூட, நம்முடைய பொதுப் பணித் துறையைச் சார்ந்த அதிகாரிகளும், காவல் துறையினுடைய புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளும், ஆந்திர மாநிலம் சித்தூர் சென்று, அதை அறிந்து வந்திருக்கிறார்கள் என்ற செய்தியும் பத்திரிகையிலே வந்திருக்கிறது. ஆகவே, எப்படி இருந்தாலும்கூட, பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டிவிட்டால், தமிழ்நாட்டில் பல மாவட்டங்கள் பாதிக்கப்படக்கூடும் என்ற நிலையிலே, வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், சென்னையினுடைய ஒரு பகுதி மக்கள் அச்சத்திலே, பீதியிலே இருந்துகொண்டிருக்கிறார்கள்.

இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால், ஏற்கெனவே ஆந்திர மாநிலத்தினுடைய எல்லைப் பகுதியிலே 14 தடுப்பணைகளைக் கட்டியிருக்கிறார்கள். கர்நாடக மாநிலம் ஒரு பெரிய அணையைக் கட்டி. ஏற்கெனவே தண்ணீரைத் தேக்கிவிட்டது. ஆந்திர அரசால் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அணையினுடைய நீளம், உயரம், மதிப்பீடு எவ்வளவு, பாசனப் பகுதி எவ்வளவு ஏக்கர் என்ற விவரங்களைக்கூட எங்களிடத்திலே ஒரு பத்திரிகை நண்பர் கொடுத்திருக்கிறார். அந்தப் புள்ளிவிவரம்கூட இருக்கிறது. முன்பணமாக 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டது என்றும் சொல்லப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முயற்சி செய்தால்,



உட்பட்ட Communicable Diseases Hospital—C.D.H.—காலரா மருத்துவமனைக்கு நான் சென்றபொழுது, அங்கே vaccination பொதுவாக வெளியிலே குழந்தைகளுக்குப் போடுவதில்லை என்றும் அதே நேரத்திலே அங்கே வந்து தங்குகின்றவர்களுக்குப் போதிய மருந்துகள் இல்லையென்றும் தகவல் கிடைத்ததுதான் அதிர்ச்சிக்குரிய, வேதனைக்குரிய விஷயமாக இருக்கின்றது. எனவே, மனித சமுதாயத்திற்குக் கேடு விளைவிக்கக்கூடிய இந்தக் கடுமையான நோய்களை முழுமையான அளவிற்கு ஒழித்து வெற்றிகொள்வதற்கு வேண்டிய வழிவகைகளை அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.*

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலும், தமிழ்நாட்டிலும் முற்றிலுமாக ஒழிக்கப்பட்ட பெரியம்மை, சின்னம்மை போன்ற நோய்கள் தமிழகத்தில் பெரும்பான்மையான மாவட்டங்களில், அதாவது பத்திரிகைகளில் வந்த செய்திப் பிரகாரம் 15-க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் Chicken Pox என்று சொல்லக்கூடிய சின்னம்மை ஏற்பட்டு, பெரிய அளவில் பொது மக்கள் பாதிப்புக்குள்ளாகி, மருத்துவமனைகளில் ஆங்காங்கே அனுமதிக்கப்பட்டு, நம்முடைய தமிழக அரசும் சிறப்புக் கவனம் செலுத்தி, பல்வேறு மருத்துவமனைகளில் அதற்கான மருந்துகளைக் கொடுத்து, அதைத் தடுப்பதற்கான நடவடிக்கையை எடுத்து வருவதாகவும், ஆனால் ஒரு சில பகுதிகளிலே இந்த நோயினுடைய தன்மையைப் பற்றி அதிகமான பொது மக்கள், கிராமப்புற ஏழையெளிய மக்கள் புரிந்துகொள்ளாமல், அந்த நோய் எதற்காக வந்திருக்கிறது, எந்த மருத்துவரீதியாகப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை எல்லாம் உள்வாங்கிக் கொள்ளாமல், அவர்கள் ஜோதிடர்களையும், சாமியார்களையும் சந்தித்து, வேப்பிலை அடிப்பதும், அதனால் அந்த நோய் குணமாகுமென்ற மூட நம்பிக்கையின் அடிப்படையிலும், அந்த நோய் கிராமப்புறங்களிலும், நகரப் பகுதிகளிலும் இன்னும் பரவுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகிக்கொண்டிருக்கிற இந்தச் சூழலில், நம்முடைய தமிழக அரசு 15-க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் பரவலாக வந்த இந்த நோயைத் தடுப்பதற்கும், அந்த நோய் எதன் காரணமாக அந்த மக்களுக்கு ஏற்படுகின்றது என்ற மருத்துவரீதியான உண்மையையும், உடலில் ஏதாவது சத்துக்கள் குறைவு ஏற்பட்டதன் காரணத்தால் வருகிறதா

அல்லது கொசுக் கடி மூலமாக வருகிறதா அல்லது குடிநீரால் வருகிறதா; உணவுப் பழக்க வழக்கங்களால் வருகிறதா என்பதையும் தெளிவாக ஆராய்ந்து, இனி எக்காரணத்தைக்கொண்டும் அதுபோன்ற நோய்கள் வருவதை உடனடியாகத் தடுப்பதற்கும், தடுக்கின்ற நடவடிக்கைகள்மூலம் மேலும் பரவாமல் இருப்பதற்கும் இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது என்பதையும், அதேபோல் இனி எக்காரணத்தைக்கொண்டும் மூட நம்பிக்கைகள்மூலமாக இந்த நோயை ஒழிப்பதற்கு மக்கள் கையாளுகின்ற யுக்திகளைத் தடுப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு, அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

முற்பகல் 10-50

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியம்மை நோய் என்பது இந்தியாவில், தமிழகத்தில் 10 ஆண்டுகளுக்கு முன்னால் ஒழிக்கப்பட்டிருந்தாலும்கூட, தொடர்ச்சியாக பிப்ரவரி, மார்ச் மாதங்களில், சென்னை மாநகரம் உட்பட தமிழகத்தினுடைய பல்வேறு மாவட்டங்களில் சின்னம்மை நோய் என்பது கடுமையான பாதிப்புகளை உருவாக்கக்கூடிய நோயாக மாறிக்கொண்டிருக்கின்றது. சென்னை மாநகரம் உட்பட 18 மாவட்டங்களில் இந்த ஆண்டு பிப்ரவரி, மார்ச் மாதங்களில் பல ஆயிரக்கணக்கான மக்கள் சின்னம்மை நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சென்னையைப் பொறுத்தவரை, 500 பேர்தான் இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக அரசுப் புள்ளி விவரம் சொன்னாலும்கூட, பொதுவாக பிப்ரவரி, மார்ச் மாதங்களில் வரக்கூடிய இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்காக, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்துக்கொள்கிறேன்.

சின்னம்மை நோயைத் தடுப்பதற்கான மருந்து இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கிறது; இந்தியாவிலே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சின்னம்மை நோய்த் தடுப்பூசி 1,200 ரூபாய்க்குப் போட வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த ஊசியைச் சாதாரண மக்களால், ஏழை மக்களால் பயன்படுத்த முடியாத நிலைமை உருவாகியிருக்கக்கூடிய காரணத்தினால், அரசே சாதாரண மக்கள்,



ஏழை எளிய மக்களுக்கு சின்னம்மை நோய்த் தடுப்பூசியைப் போடுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இந்த நோய், பொதுவாகப் பள்ளிக்கூடங்கள்மூலமாகத்தான் பரவுவதாகச் சொல்லப்படுகிறது. கூடுதலான எண்ணிக்கையிலே மாணவர்கள் படிக்கக்கூடிய பள்ளிகளிலிருந்து இந்த நோய் பரவக்கூடிய காரணத்தினால், பள்ளிகளில் இதைத் தடுப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகளை மாநில அரசாங்கம் மேற்கொள்ளுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னம்மை நோயைப் பற்றி நம்முடைய உறுப்பினர்களெல்லாம் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். சின்னம்மை நோய் வருடா வருடம் ஜனவரி மாதத்திலேயிருந்து மே மாதம் வரைக்கும் வந்து போகிற ஒரு நோயாக இருந்துகொண்டிருக்கிறது. இந்த நோயினுடைய தன்மையைப் புரிந்துகொண்டு, அதற்கு வேண்டிய மருந்துகளை அதிகாரிகள் அந்த வருடத்திற்குத் தயாராக வைத்துக்கொள்கிறார்கள். போன வருடம் வந்த சிக்-குன்-குன்யா போன்று திடீரென்று வராமல் வருடா வருடம் வருகின்ற ஒரு நோயாக இந்த நோய் இருக்கிறது. ஆகவே, அதற்கு வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறார்கள். ஆனால், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசாங்கம் வந்த பிறகு, சிக்-குன்-குன்யாவினுடைய பாதிப்பை நாங்கள் புரிந்துகொண்டு, இந்த ஆண்டிலே எந்தெந்த நோய்கள் வருகின்றன என்பதையெல்லாம் தெரிந்துகொண்டு, முதலிலேயே, ஜனவரி மாதமே, இதற்கு வேண்டிய மருந்துகளை எல்லாப் பகுதிகளுக்கும் நாங்கள் சப்ளை செய்திருக்கிறோம். ஒவ்வொரு வருடமும் பார்ப்போம் என்று சொன்னால், வரிசையாக, அது எந்த ஆட்சி வந்தாலும் சரி, கரெக்டாக வந்து போய்விடுகிறது. அது இந்த ஆட்சி, அந்த ஆட்சி என்றில்லை, எல்லா ஆட்சிகளிலுமே வந்து போய்விடுகிறது. ஆகவே, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியைப் பொறுத்தளவிற்கு, கொஞ்சம் முன்னெச்சரிக்கையாக ஜனவரி மாதமே மருந்துகளையெல்லாம் எல்லா இடங்களுக்கும் சப்ளை செய்திருக்கிறோம். மாண்புமிகு

உறுப்பினர்கள் சொல்லியதுபோல எந்த இடங்களிலும் மருந்துகள் இல்லாமல் இல்லை. ஒரு வருடத்திற்கு ஏறத்தாழ 3,000 பேர், 4,000 பேர் வரைக்கும்தான் தமிழ்நாடு பூராவும் பாதிக்கப்படுகிறார்கள். தனியார் மருத்துவமனைகளிலே இதற்குச் சரியான வைத்தியம் செய்வதில்லை. இதற்கு வேண்டிய வைத்தியங்களை அரசு மருத்துவமனைகளில்தான் செய்கிறோம்.

ஒரு காலத்திலே மூட நம்பிக்கையோடு வீட்டைவிட்டு வெளியே வராதவர்களெல்லாம், இன்றைக்கு அம்மை நோய் வந்த பிறகு, மருத்துவமனைகளுக்கு வந்து மருந்துகளை வாங்குகிறார்கள். நம்முடைய அரசு மருத்துவமனைகளைப் பொறுத்தளவிற்கு, அதற்குத் தனியாக மருந்துகளைக் கொடுத்து, admission தேவையானால் மருத்துவமனையில் admit செய்கிறோம். இல்லையென்று சொன்னால், 5 நாட்களுக்குரிய 100 மாத்திரைகளைக் கையிலேயே கொடுத்துவிடுகிறோம். ஒரு நாளைக்கு 20 மாத்திரைகள் என்று சொல்லி, 5 நாட்களுக்கு 100 மாத்திரைகளைக் கொடுக்கிறோம். ஒரு ஆளுக்கு அந்த மாத்திரைகளுக்கு மட்டும் 800 ரூபாய் செலவாகிறது. இந்த நோயினுடைய தாக்கம் இப்போது குறைந்திருக்கிறது. இந்த மாதம், அடுத்த மாதம் எல்லாம் automatic ஆகக் குறைந்துவிடும். சென்னையிலே இருக்கிற மருத்துவமனைகளிலே நோயாளிகளினுடைய எண்ணிக்கை இப்போதே 45 தான் இருக்கிறது. ஒரு நேரத்தில் 90, 100, 110 என்றெல்லாம் இருந்தது. இன்று காலையிலே விசாரிக்கிற நேரத்திலே, 45 தான் இருக்கிறது. ஆகவே, இந்த நோயினுடைய தாக்கம் குறைந்து வருகிறது. எதிர்காலத்திலே இந்த நோய் பரவாமல் தடுக்கிற எல்லாவிதப் பணிகளையும் செய்கிறோம்.

இன்னொன்று, வருமுன் காப்போம் திட்டத்திலே, இந்த நோய் வராமல் எப்படித் தடுப்பது என்பதையெல்லாம் இன்றைக்குக் கையேடுகள் கொடுக்கும் பணிகளையெல்லாம் செய்கிறோம். இந்த நோய் வந்த மனிதனை, நோயுற்ற நோயாளியைத் தனியாக ஒதுக்கி வைத்து, அவருக்கு எந்தவிதமான சிறப்பு மருத்துவ சிகிச்சைகளைக் கொடுகக வேண்டும் என்பது பற்றிக் கூடக் கையேடாகக் கொடுத்திருக்கிறோம். எதிர்காலத்திலே இந்த நோய் வராமல் தடுக்கிற முயற்சியிலே நம்முடைய அரசாங்கம் தீவிரமாக இருக்கும் என்பதையும் அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



## 3. தகவல் கோரல்

### (அ) ஆழியாறு பகுதியில் தென்னை மரங்களுக்குத் தண்ணீர் வழங்குதல்

**திரு. கோவை தங்கம்:** தலைவர் அவர்களே . . .

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், என்ன? சொல்லுங்கள்.

முற்பகல் 10-55

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வால்பாறைத் தொகுதியிலுள்ள ஆழியாறைச் சுற்றி இருக்கின்ற கிராமங்களில் சுமார் 12 ஆயிரம் தென்னை மரங்கள் காய்ந்துகொண்டு இருக்கின்றன. விவசாயிகளுக்கு நல்ல அற்புதமான திட்டங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள் வழங்கியிருக்கின்ற இந்த நேரத்தில், தென்னை மரங்கள் காய்ந்து வருவதால், விவசாயிகள் மிகவும் வருத்தத்தில் இருக்கின்றார்கள். ஆகவே, ஒரு மாதத்திற்கு உயிர்த் தண்ணீர் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது உண்மைதான். எனினும், அங்கு இருக்கக்கூடிய சேத்துமடை B-கெனாலுக்கு மட்டும் அவர்கள் தண்ணீர் கேட்கிறார்கள். அதே மாதிரி சேத்துமடைக் கால்வாய், வேட்டைக்காரன்புதூர் கால்வாய், பொள்ளாச்சி கால்வாய், ஆழியாறு feeder கால்வாய், இநதக் கால்வாய்களில் இருக்கிற தென்னை மரங்களும் காய்கிற நிலையில் இருக்கின்றன. எங்களுக்கும் உயிர்த் தண்ணீர் தர வேண்டுமென்றுதான் அவர்களும் கேட்கிறார்கள். ஆகவே, இவருக்குத் தண்ணீர் விடுகின்றபோது, அவர்களுக்கும் தண்ணீர் விட வேண்டும். ஏனென்று கேட்டால், சேத்துமடையில் 10 ஆயிரம் ஏக்கர்;

வேட்டைக்காரன்புதூரில் 16 ஆயிரம் ஏக்கர்; பொள்ளாச்சியில் 22 ஆயிரம் ஏக்கர்; feeder கெனாலில் 13 ஆயிரம் ஏக்கர்; ஆக, இப்படி இவர்களுக்குத் தண்ணீர் விடுகின்ற அளவிற்குத் தண்ணீர் இல்லை. ஆழியாறில் என்ன நிலைமை என்று கேட்டால், 3,864 மில்லியன் கன அடித் தண்ணீர் இருக்க வேண்டிய இடத்தில், 1,100 கன அடித் தண்ணீர்தான் இருக்கிறது. இதிலேயே, P.A.P.–யில் third reach–க்கு இப்போது தண்ணீர் கொடுக்க வேண்டும். அதைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். மடக்கடவில் கேரளாவிற்குத் தண்ணீர் கொடுத்தாக வேண்டும். அதிலும் தண்ணீர் கொடுத்தாக வேண்டும். மீதியிருப்பதை எப்படியாவது சுரண்டி, தண்ணீர் கொடுக்க முடியுமா என்று கேட்டால், மிகவும் நெருக்கடியான நிலையில்தான் இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த பிறகு, அதிகாரிகளோடு நான் தொடர்புகொண்டு பேசியிருக்கிறேன். அவர்கள், third reach–நின்ற பிறகாவது ஏதாவது முடியுமா என்று பார்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இருக்கின்ற தண்ணீரில் ஓரளவு மீதமானாலும், அதைக் கொடுப்பதற்கு இந்த அரசு இயன்ற அளவிற்கு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) திரு. பி. சீனிவாச ராவ் அவர்களுக்குத் திருத்துறைப்பூண்டியில் நினைவுச் சின்னம் அமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தின் அடிமைப்பட்டுக் கிடந்த விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களையெல்லாம் ஒன்று திரட்டி, அவர்களுக்குச் சங்கம் வைத்துப் போராடுவதற்குத் தலைமை தாங்கியவர் இந்திய சுதந்திரப் போராட்டத்தினுடைய தளகர்த்தர்களிலே ஒருவராக இருந்து போராடிய ஒப்பற்ற தலைவர் திரு. பி. சீனிவாச ராவ் அவர்கள். அவர்களுடைய நூற்றாண்டு விழா இன்றையதினம். இந்தப் பேரவையிலே ஏற்கெனவே பேசப்பட்டு, திரு. பி. சீனிவாச ராவ் அவர்களுடைய நினைவைப் போற்றுகின்ற வகையிலே ஒரு நினைவுச் சின்னம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையும் விடப்பட்டிருக்கிறது. அது திருத்துறைப்பூண்டியிலே அமைக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, இடமும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு அவருடைய



பிறந்தநாள் என்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே கவனத்தைச் செலுத்தி, திரு. பி. சீனிவாச ராவ் அவர்களுக்குத் திருத்துறைப்பூண்டியிலே நினைவுச் சின்னம் அமைக்கப்படுவதற்கான அறிவிப்பினை வெளியிட வேண்டும் என்று அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டப் பேரவையினுடைய தலைவர் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல், மறைந்த தோழர் சீனிவாச ராவ் அவர்களுடைய நூற்றாண்டு நிறைவு நாள் இன்று. அவரை நினைத்து, அவர் எந்த உழவர் பெருங்குடி மக்களுக்குப் பாடுபட்டாரோ, அவர்களுக்கு நாமும் தொடர்ந்து பாடுபட வேண்டும் என்ற உறுதியை எடுத்துக்கொள்ள வேண்டிய நாள் என்பதை நானும் உணர்கின்றேன். ஏற்கெனவே இந்த அவையிலே அறிவித்ததை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைவூட்டி இருக்கின்றார்கள். எடுத்துச் சொன்னதைத் தொடுத்து, தொடர்ந்து அந்தப் பணியினை முடிப்போம் என்ற உறுதியை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சீனிவாச ராவ் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் உழவர் பெருமக்களுக்காகப் பல தியாகங்களைச் செய்தவர். தஞ்சை மாவட்டத்திலே விவசாயப் பெருங்குடி மக்கள், விவசாயத் தொழிலாளர்கள் சாட்டையடியும், சவுக்கடியும் பட்டபோது, ரத்தவிளாராக அவர்களெல்லாம் துடித்தபோது, அவர்களை அரவணைத்து, அவர்களுக்காக உழைத்தவர். தஞ்சை மாவட்டம் என்றால், ஒரு காலத்திலே பெரும் பண்ணையார்கள் கோலோச்சிய மாவட்டம். அந்த மாவட்டத்தில் சாதாரண மக்கள், ஏழையெளிய மக்கள், உழைக்கின்ற பெருங்குடி மக்கள், அவர்கள் உயர்வதற்காகப் பாடுபட்டவர் திரு. சீனிவாச ராவ் அவர்கள். அவருடைய நினைவைப் போற்றுகின்ற இந்த நாளில் நம்முடைய நண்பர் சிவபுண்ணியம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நான் இந்த அவையிலே அளித்த வாக்குறுதியை நிச்சயமாக நிறைவேற்றுவேன். மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்புகொண்டு, அவர்மூலமாக திரு. சீனிவாச ராவ் அவர்களுக்கு நினைவுச் சின்னத்தை நிறுவுவதற்கு ஏற்ற ஆயத்தங்களைச் செய்யுமாறு இன்றைக்கே கேட்டுக்கொள்வேன் என்பதை நான் அவருக்கு உறுதிபடக் கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் *11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி. (குறுக்கீடு) திரு. அமரமூர்த்தி, உட்காருங்கள். திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், திரு. பி. சீனிவாச ராவ் அவர்களைப் பற்றி நேரடியாகவே அறிந்தவர்கள். எங்களது ஒப்பற்ற தலைவர் திரு. ஜீவானந்தம் அவர்களும், திரு. சீனிவாச ராவ் அவர்களும் இந்த மாநிலத்திலே பல்வேறு இயக்கங்களைக் கண்டவர்கள். அவர்களோடு நேரடியாகத் தொடர்புகொண்டு, அந்த அனுபவங்களை எல்லாம் இங்கே அவையிலே, நாங்கள் சொல்லாத செய்திகளைக்கூட சிறப்பாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். அவருக்கு நினைவுச் சின்னம் அமைக்கப்படுவதற்கான முயற்சி இன்றே மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்கின்ற தத்துவத்தை ஏற்று நடைமுறைப்படுத்தி வருகிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், செங்கொடி இயக்கத்தினுடைய மகத்தான தலைவராக விளங்கிய பெருமதிப்பிற்குரிய சீனிவாச ராவ் அவர்களுக்கு, ஏற்கெனவே அறிவித்துள்ள அடிப்படையிலே, அங்கே ஒரு நினைவகம் உருவாக்கப்படுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தமைக்கு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்கள் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எங்கள் கழகக் கொடியில் செங்கொடியும் இணைந்திருக்கிறது என்பதைத் தெரியப்படுத்துகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)





## (இ) அரியலூர் தொகுதி, கிராமங்களில் திருவிழாக்கள் நடத்த அனுமதிப்பது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி. (குறுக்கீடு)

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் தொகுதியில், மாசி மாதத்திலிருந்துதான் எல்லாக் கிராமங்களிலும் திருவிழாக்கள் தொடங்கப்பெறும். தை மாதம் அறுவடை முடிந்து, அதைக் கொண்டு வந்து விவசாயிகள் விற்றுவிட்டு, திருவிழாவை மாசி மாதத்திற்குப் பிறகுதான் ஆரம்பிப்பார்கள். அந்தக் கோயில் திருவிழாக்களிலே, இரவு நேரங்களிலே நாட்டுப்புற ஆடல், பாடல் நிகழ்ச்சி, கலை நிகழ்ச்சி; காலை நேரத்திலே, ஜல்லிக்கட்டு அல்லது மஞ்சுவிரட்டு என்று சொல்வார்களே, அவையெல்லாம் வழக்கமாக ஒவ்வொரு கிராமத்திலும் நடக்கும்.

தற்சமயம் என்ன பண்ணுகிறார்கள் என்றால், காவல் துறை அதிகாரிகள், நாட்டுப்புற ஆடல், பாடல் நிகழ்ச்சிக்கும் இப்போது அனுமதி இல்லை என்கிறார்கள். ஜல்லிக்கட்டுக்கும் அனுமதி இல்லை என்கிறார்கள். ஜனவரி மாதம்; பிப்ரவரி மாதம் ஜல்லிக்கட்டை நடத்திக்கொள்ளலாம் என்று உயர் நீதிமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்தத் திருவிழாவே, மாசி மாதத்திற்குப் பிறகு ஜூன் வரை நடக்கும். மூன்று, நான்கு மாதங்கள், ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு நாள் வைப்பார்கள். அன்றைக்குத்தான் அந்தக் கிராமங்கள் ஒன்று கூடும். அந்தக் கிராமத்திலே இருக்கிற வாய்க்கால் சண்டை, வரப்புச் சண்டைபற்றியெல்லாம் அன்றைக்குத்தான் பேசித் தீர்த்து, ஒட்டுமொத்தக் கிராமமும் ஒன்று சேர்ந்து திருவிழாவை நடத்துவார்கள். அந்த ஒட்டுமொத்தக் கிராம மக்களும், அது மாதிரி நடத்தினால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறார்கள். இதற்கு ஒரு சில காவல் துறை அதிகாரிகள் தடை விதித்து, அந்தக் கிராம மக்களிடத்தில் பெரிய கொந்தளிப்பை உண்டுபண்ணுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்தத் திருவிழாக்களை அந்தக் கிராம மக்கள் சந்தோஷமாக நடத்துவதற்கு அனுமதி அளிப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் திருமண

விழாக்களிலே ஒரு செய்தியைச் சொல்வார். மணமகனுக்கு, மணமகளுக்கு, இருவருக்கும் அறிவுரை கூறுவார். கூறும்போது சொல்வார்; அந்தக் காலத்தில்—இலக்கியக் காலத்தில் புறநானூறு, அகநானூறு, இவையெல்லாம் போற்றப்பட்ட அந்தக் காலத்தில் — ஒரு மணமகள், மணமகன் எப்படி இருக்க வேண்டும் என்று நிர்ணயிப்பாள் என்றால், முரட்டுக் காளையை அடக்கி, அதன் கொம்பை உடைத்து, அதைப்போலப் புலியை அடக்கி, அதன் பல்லைப் பிடுங்கி தாலி கொண்டு வந்தால், அதைத்தான் கட்டிக்கொள்வேன் என்று மணமகள் சொல்வாள். அப்படிப்பட்ட வீரமிக்க காலம் அது. ஆனால், இந்தக் காலத்தில் நான் புலியை அடக்கினேன், நான் மாட்டை அடக்கினேன் என்று வந்தால், "ஏ அப்பா; புலியே அந்தப் பாடுபட்டால், நான் என்ன பாடுபடுவேன்" என்று (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு) மணமகள் அஞ்சுகின்ற காலம் இது என்று அண்ணா வேடிக்கையாகச் சொல்வார். ஆனால், அப்படி நடக்க வேண்டும், சமுதாயம் இருக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. வீரமிக்க சமுதாயமாகத்தான் விளங்க வேண்டும். அப்படி விளங்குவதற்கேற்ற வகையில் இந்த வீர விளையாட்டுக்களைப் பாதுகாப்பாக நடத்துவது நல்லது. ஏனென்றால், பல இடங்களில் நல்ல விழாக்கள் நடைபெறும் நேரத்தில், 10 பேர் இறந்தார்கள்; 20 பேர் இறந்தார்கள்; மாடு முட்டி இறந்தார்கள் என்றெல்லாம் செய்திகள் வருவது உள்ளபடியே சோகமான விஷயங்கள் ஆகும். இன்றைக்குக்கூட பத்திரிகையிலே பார்த்தால், திருவிழாவில் யானை முட்டி, யானை தந்தத்தால் ஒருவருடைய குடலைக் கிழித்து, அதுவே துதிக்கையிலே தூக்கிக்கொண்டு நாலு வீதி சென்றது என்ற செய்திகளைப் பார்ப்பதற்கே கஷ்டமாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஆபத்தான சூழ்நிலைகள் வராமல், வீரத்தை நிலைநாட்டுகின்ற இடத்தில், வீரத்தோடு, விவேகமும் சேர்ந்து செயல்பட வேண்டும் என்பதை மாத்திரம் எடுத்துக் கூறி, வீரத்தைத் தடுக்க மாட்டோம், விவேகம் துணைக்கு வர வேண்டும்; அவ்வளவுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் . . . (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? திரு. து. அமரமூர்த்தி, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) One minute. (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடல், பாடல் நிகழ்ச்சிக்கு police தடை விதிக்கிறார்கள், அதிலே ஒன்றும் பிரச்சினை வரப் போவதில்லை. ஜல்லிக்கட்டு என்பதை எல்லாக் கிராமத்திலும் நடத்துகிறார்கள். எல்லாக் கிராம மக்களும், police permission கொடுக்கமாட்டேன் என்கிறார்கள்; சொல்லுங்கள், சொல்லுங்கள் என்று எங்களைத் தொல்லைப்படுத்துகிறார்கள். நடத்துவது என்றால் நடத்து என்று சொல்ல வேண்டும். இல்லாவிட்டால், அது கிராமத்திலே இருக்கிறது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வீரத்தோடு, விவேகத்தோடு நடந்துகொண்டீர்கள் என்றால் நல்லது என்று சொல்லிவிட்டார்கள் அல்லவா? உட்காருங்கள்.

### (ஈ) சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன் வீடு தாக்கப்பட்டது தொடர்பாக

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 56-ன்கீழ் என்னுடைய பெயரால் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்திருக்கின்றேன். கடந்த 6-4-2007 அன்று நள்ளிரவில் ஒரத்தநாடு கிராமத்தில் உள்ள, தியாகராய நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்களுடைய வீட்டை 40-க்கும் மேற்பட்டவர்கள் தாக்கி, சேதப்படுத்தி இருக்கின்றார்கள். அங்கே தூங்கிக்கொண்டிருந்த . . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கண்ணப்பன் அவர்களுக்கு, அதைக் கவன ஈர்ப்பாகக் கொடுத்திருக்கிறீர்கள். நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். உட்காருங்கள்.

# 4. கவன ஈர்ப்பு

## சிட்டா நூல் தட்டுப்பாட்டினால் நெசவாளர்கள் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன் மற்றும் திரு. டி. ஜெயக்குமார் ஆகியோரில் ஒருவர் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கிச் சொல்லி இருக்கிற அந்த விளக்கத்தில் தேவையான சிட்டா நூல்கள் கிடைக்கின்றன என்ற விளக்கத்தையும் சொல்லி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த விளக்கத்தில் இருக்கிறது இல்லையா? (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** இல்லை, இல்லை. நான் படித்து விட்டேன். நான் தெரிந்து கொண்டேன். சொல்ல வேண்டும் இல்லையா, என்ன reason என்று?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, நிகழ்ச்சி நிரலில் இருப்பதை மாத்திரம் படியுங்கள், அதற்கு அமைச்சர் பதில் சொல்வார்கள், அதற்கப்புறம் நீங்கள் விவரம் கேட்கலாம்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிட்டா நூல் தட்டுப்பாட்டினால் நெசவாளர்கள் வாரத்தில் 3 நாட்கள் மட்டுமே வேலை செய்ய வேண்டிய அவல நிலை உள்ளது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:



### அறிக்கை

தமிழகத்தில் கைத்தறி நெசவுத் தொழில், விசைத்தறி நெசவுத் தொழில், நூற்பாலைத் தொழில், பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடைத் தொழில்கள் ஆகியன சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவற்றில் விசைத்தறித் தொழிலில் நாட்டிலேயே இரண்டாம் இடத்தையும் இதர தொழில்களில் முதலாம் இடமும் பெற்றுத் தமிழகம் விளங்குகிறது.

நாட்டில் உள்ள 3,039 சிறிய, நடுத்தர மற்றும் பெரிய நூற்பாலைகளில், தமிழகத்தில் மட்டும் நாளது தேதியில் 1,850 நூற்பாலைகள் உள்ளன. (60.88%). இந்தியாவிலுள்ள நூற்பாலைகளில் 39.3 மில்லியன் கதிர்கள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் தமிழகத்தின் பங்கு 17.92 மில்லியன் கதிர்களாகும். (45.6%) அனைத்து நூற்பாலைகளும் தங்களது உற்பத்தித் திறனில் சில நிபந்தனைகளுக்குட்பட்டு 40% சிட்டா நூல் உற்பத்தி செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள நூற்பாலைகள்மூலம் 300 மில்லியன் கிலோ அளவிற்குப் பருத்தி சிட்டா நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. இவற்றில் தமிழகத்தின் பங்கு 120 மில்லியன் கிலோ நூல் ஆகும். தமிழகத்தில் 4.13 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. மேலும் சுமார் 4 இலட்சம் விசைத்தறிகள் நிறுவப்பட்டுள்ளன. தவிர, 1,117 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள சுமார் 2.64 இலட்சம் நெசவாளர்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் நூல் கிடங்குமூலம் சிட்டா நூல் விநியோகிக்கப்பட்டு வருகிறது. கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்திச் செய்யப்படும் நூல் வகையினைத் தவிர, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் இதர நூல்கள் தனியார் நூற்பாலைகளிலிருந்து தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம்மூலம் ஆலை வாயில் விலையில் (Mill Gate Price) கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தனியார் நிறுவனங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து தேவையான அளவிற்கு சிட்டா நூல் வழங்குவதற்காக மத்திய அரசு கைத்தறிகள் அதிகம் நிறைந்துள்ள பகுதிகளில் மில் விலைக்கே நூல் சப்ளை செய்ய, புதிய நூல் கிடங்குகள் அமைக்கத் தகுதியுடைய நிறுவனங்களிடமிருந்து தேசிய வளர்ச்சிக் கழகத்தால் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில், பவானி,

சென்னிமலை, கரூர், சேலம், பிச்சானூர், சென்னை, குறிஞ்சிப்பாடி, குடியாத்தம் ஆகிய பகுதிகளில் தனியார் கைத்தறி பெரு நெசவாளர்கள் (Master Weavers) மூலம் கிடங்குகள் அமைக்கப்பட்டு, தனியார் அமைப்பின்கீழ் உள்ள நெசவாளர்களுக்குத் தடையின்றி சிட்டா நூல் வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும், தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின்மூலம், மதுரை மற்றும் சேலம் ஆகிய பகுதிகளில் கிடங்கு அமைக்கப்பட்டு,- நூல் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. இது தவிர கைத்தறி நெசவாளர்கள் தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம், கோவை மற்றும் சென்னையினை நேரடியாக அணுகி, ஆலை வாயில் விலையில் சிட்டா நூலினைப் பெற்றுக்கொள்ளலாம். தற்போது மாநில அரசு, கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் சிட்டா நூலின்மீதான 2% விற்பனை வரியினை இரத்துச் செய்ததன் காரணமாக, கைத்தறி ஜவுளிகளின் விலை குறைந்து, அதிக அளவில் உற்பத்தி, விற்பனை மேற்கொள்ளவும், நெசவாளர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்பு மற்றும் நியாயமான கூலி பெறவும் வழிவகை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, 2005-2006 ஆம் ஆண்டில் 6,108 மில்லியன் ச.மீ. ஆக இருந்த கைத்தறித் துணி உற்பத்தி 2006-2007 ஆம் ஆண்டில் 6,871 மில்லியன் ச.மீ. ஆக உயர்ந்துள்ளது. தொடர்ச்சியாகவும், தேவைக்கேற்பவும் கைத்தறி நெசவாளர்களுக்கு சிட்டா நூல் தடையின்றி விநியோகம் செய்யப்பட்டதே இந்த வளர்ச்சிக்குக் காரணமாகும்.

மேலும், கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து ஆண்டு முழுவதும் வேலை கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், கடந்த ஆண்டு மட்டுமல்லாது, நடப்பாண்டிலும் இலவச சேலை, வேட்டி திட்டத்தின்கீழ் 164 இலட்சம் வேட்டிகள் மற்றும் 164 இலட்சம் சேலைகள் உற்பத்தி செய்து வழங்குவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேலும், தமிழகக் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களின் சிட்டா நூல் தேவையினை முழுவதுமாகப் பூர்த்தி செய்தபின், இதர மாநிலங்களுக்கும் மற்றும் ஏற்றுமதிக்கும் நூல் தமிழகத்திலிருந்து சப்ளை செய்யப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். தேவையான நூல் கிடைப்பதற்கு கோவை மற்றும் சென்னையிலே இருக்கிற தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின்மூலமாக தனியார்



நூற்பாலைகள்கூட நூலைப் பெற்றுக்கொள்ளலாம் என்று இங்கே குறிப்பு வழங்கப்பட்டு இருக்கிறது. கூட்டுறவு நூற்பாலைகளிலே 2005-2006 ஆம் ஆண்டு செய்ததைவிட நெசவாளர்களுக்கு வேண்டிய நூல் 2006–2007–லே கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டு இருக்கிறது என்ற விவரத்தையும் அவர் குறிப்பிட்டுக் காட்டி, இலவச வேட்டிகள் 1 கோடியே 64 இலட்சம் பேர்களுக்கும், சேலைகள் 1 கோடியே 64 இலட்சம் பேர்களுக்கும் வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்த காரணத்தின் அடிப்படையில், அங்கே நூல்கள் தேவைக்கேற்ப வழங்கப்படுகின்றன என்ற புள்ளிவிவரத்தையும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இன்றையதினம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும், நெசவாளர்களுக்கு ஒரு piece, 33 மீட்டர் மட்டும்தான் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள் வாரம் ஒரு முறை. அதனால் நெசவாளர்களுக்குக் கூலி 390 ரூபாய் மட்டும்தான் கிடைக்கிறது.

முந்தைய அரசு கால்த்தில் அவர்களுக்கு இரண்டு pieces என்று சொல்லி, 66 மீட்டர் நெய்வதற்கு வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. ஆகவே, அன்றைக்குக் கூலிகள் 750 ரூபாய் கிடைத்திருக்கிறது. ஆகவே, தமிழகத்திலே இருக்கிற கூட்டுறவு நெசவாளர் சங்கங்களிலே சிட்டா நூல் கிடைப்பதில்லை. வாரத்திற்கு 3 நாட்கள் மட்டும்தான் அந்த நூல்கள் கிடைக்கின்றன என்ற நிலை தமிழகத்தில் நிலவி வருகிறது. இதைத்தான் ஒரு காலத்திலே சொல்லுகிறபொழுது, நெசவாளர்கள் நெய்கின்ற துணிகள் தேக்கம் ஆகிறபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய தோளிலே சுமந்து, அதை விற்றார் என்ற சரித்திர வரலாறும் இருக்கிறது. அவர்களுடைய கண்ணீர் அன்றைக்குத் துடைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றைக்கு சிட்டா நூல் கிடைக்காத காரணத்தால், வாரத்திற்கு 3 நாட்கள் மட்டும்தான் இந்த நெசவாளர்களுடைய வாழ்க்கையிலே கூலி கிடைக்கிறது. 4 நாட்கள் கிடைக்கவில்லை என்ற அச்சம் நில்வி வருவதைக் குறிப்பிட்டுக் காட்டி, இந்த நெசவாளர்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை உங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் தவறான தகவல்களைக் கொடுக்கிற, ஒரு சூழ்நிலை நம்முடைய மன்றத்திலே நடந்துகொண்டிருக்கிறது. கூட்டுறவு நெசவாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பு.

கோ-ஆப்டெக்ஸ் நூல் கிடங்கின்மூலமாகவும், தனியாருக்குத் தேவையான, தனியார் நெசவாளர்களுக்கும் உரிய பாதுகாப்பினைத் தலைவர் கலைஞர் அரசு கொடுத்துக்கொண்டிருப்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை. காரணம், அவர்கள் சொல்லியதைப்போல, 2005-2006 ஆம் ஆண்டினுடைய கைத்தறித் துணியினுடைய மொத்த உற்பத்தி 6,108 மில்லியன் சதுர மீட்டர். ஆனால் 2006-2007 ஆம் ஆண்டில் கைத்தறித் துணியினுடைய மொத்த உற்பத்தி 6,871 மில்லியன் சதுர மீட்டர் என்கிற விவரத்தைச் சொல்லி, அவர் சொல்லிய காலக்கட்டத்தினுடைய நடவடிக்கைகளைவிட இன்றைக்கு உற்பத்தி அதிகமாகத்தான் இருக்கிறது. நெசவாளர்களுக்கு 100 சதவீதம் பாதுகாப்பினைத் தலைவர் கலைஞர் அரசு கொடுத்துக்கொண்டு வருகிறது. கண்ணீர் இல்லாத பிரச்சினைக்கு, கண்ணீராக்கிச் சொன்னீர்கள் என்றால், எப்படி? தமிழகத்திலே எந்தப் பகுதியிலே இதுபோலப் பிரச்சினை இருக்கிறது என்பதைத் தனியாக உறுப்பினர் சுட்டிக்காட்டினால் தலைவர் கலைஞர் அரசு உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்கோடெக்ஸிலே 3,000-க்கும் மேற்பட்ட நெசவாளர்கள் இருக்கிறார்கள்; அதைப்போல சென்னிமலைப் பகுதியிலே ஏறத்தாழ 35,000 பேர் இருக்கிறார்கள்; கரூரிலே ஏறத்தாழ 10,000 பேர் கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கிறார்கள்; அதேபோல, காஞ்சிபுரம் பகுதியிலே கூட்டுறவுச் சங்கங்களிலே 5,000-க்கும் மேற்பட்ட நெசவாளர்கள் இருக்கிறார்கள். மூன்று மாத காலமாகத்தான் இந்தக் குறைபாடுகள்; குறைவாக நூல் கிடைக்கிறது; வேலைவாய்ப்பு இல்லை என்ற நிலையிருக்கிறது. இதை நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசு மீண்டும் நடவடிக்கை எடுக்குமா என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஒரு நிலை உண்மையிலேயே இல்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படி அரசுக்குத் தெரியாமல் ஏதாவது சிறு நடவடிக்கைகள் இருந்தாலும், உடனடியாகச் சரி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (உ) செண்டூர் வெடி விபத்து, வெடிபொருளின் தன்மை குறித்த விசாரணை மேற்கொள்ளுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுவின் அறிக்கை அளித்தல். (குறுக்கீடு) திரு. பன்னீர்செல்வம், சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று சபையில் விழுப்புரம் மாவட்டத்தில், செண்டூர் என்ற கிராமத்தில் நடந்த வெடிபொருள் விபத்து பற்றிக் கவன ஈர்ப்பு கொண்டு வரப்பட்டு, அனைத்துக் கட்சிகளினுடைய பிரதிநிதிகளும் அதில் கலந்துகொண்டு பேசினார்கள். அதனால் ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகள் பற்றி நாம் விரிவாக விவாதித்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியைக்கொண்டு உரிய விசாரணை மேற்கொள்ளப்படும் என்ற ஒரு பதிலையும் இங்கே தந்தார்கள். ஆனால், இன்றைக்கு அரசு அளித்திருக்கின்ற அந்தச் செய்தி வெளியீட்டில், மூத்த அதிகாரியான திரு. எம்.எப். ஃபரூக்கி அவர்களை நியமனம் செய்திருப்பதாகவும், அவர் பின்வரும் இனங்களைப் பற்றி அரசுக்கு ஒரு மாதத்திற்குள் அறிக்கை அளிப்பார் என்றும் சொல்லி, சில இனங்கள்— 5 இனங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவையாவன:—

"1. வெடிமருந்துகள் சேமிப்பு, விற்பனை, எடுத்துச் செல்லுதல் மற்றும் பயன்பாடு ஆகியவை குறித்து அரசுத் துறைகள் தடையின்மைச் சான்றிதழ் அளிப்பதற்குத் தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகள் மற்றும் ஆணைகளை ஆய்வு செய்தல்;

2. 7-4-2007 அன்று நடந்ததைப்போன்ற வெடிவிபத்துக்களைத் தவிர்க்கும்பொருட்டு, வெடிமருந்துகள் சேமிப்பு, விற்பனை, எடுத்துச் செல்லுதல் மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் பாதுகாப்புத் தன்மையை உறுதி செய்யத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல்;

3. 7-4-2007 அன்று நடந்த விபத்தில் இறந்தோர் மற்றும் காயமுற்றோர்களுக்கென, பின்வரும் வகையில் நிவாரணங்கள் அளிப்பதற்கான பரிந்துரைகள்:

(அ) காயமடைந்தோர்களுக்கான மருத்துவச் செலவு;

(ஆ) இறந்தோர் குடும்பங்களில் உள்ள குழந்தைகள் படிப்புச் செலவு;

(இ) இறந்தோர் குடும்பங்களில் உள்ளவர்களுக்கு அரசு வேலை வழங்குதல்;

(ஈ) விபத்தில் முழுமையாகச் சேதமுற்ற வீடுகளை மறுபடியும் கட்டவும், பகுதி சேதமடைந்த வீடுகளைச் சீரமைக்கவும், கொடுக்கப்பட வேண்டிய நிவாரணத் தொகை;

(4) உயிர், உடைமை இழப்புகளுக்கான நஷ்ட ஈட்டினை சம்பந்தப்பட்ட வெடிமருந்து உரிமம் பெற்றவர் அல்லது அவரது முகவரிடமிருந்து பெறுவதற்கான வழிவகை குறித்து அரசுக்குப் பரிந்துரைகள் செய்ய;

(5) இவை சம்பந்தமான பிற பரிந்துரைகள்."

இந்த இனங்களை மட்டும்தான் அவர் ஒரு மாத காலத்திற்குள் விசாரணை செய்து அறிக்கை தர வேண்டுமென்று அரசின் சார்பாகச் செய்தி வெளியீடு வந்திருக்கின்றது. ஆனால், அந்த வெடிபொருள் விபத்து நடந்த சம்பவத்தால் பெரும்பான்மையான நாட்டு மக்களுக்கு மிகப் பெரிய அச்சம் இருக்கின்றது. குறிப்பாக, மாண்புமிகு அம்மா அவர்களும் அந்த அச்சத்தைப் பத்திரிகையின் வாயிலாகத் தெரிவித்திருக்கின்றார்கள். பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர் வணக்கத்திற்குரிய திரு. இராமதாஸ் அவர்களும், உயர் நீதிமன்ற நீதிபதியை வைத்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். ஆனால், இருக்கின்ற ஐயப்பாடு, அந்த வெடிமருந்து எம்மாதிரியான வெடிமருந்து என்பது ஆய்வு செய்யப்பட வேண்டும் என்பதுதான் அதில் நாங்களெல்லாம் சொன்ன முக்கியமான கோரிக்கை. அந்த இனம் இதில் விடுபட்டுப் போயிருக்கிறது. இந்த அரசுச் செய்தியிலிருந்து என்ன தெரிகிறது? வெடிமருந்துகளைத் தயாரிப்பவர்கள், எடுத்துச் செல்பவர்கள், அதை எந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்துகின்றனர்—ஒன்று, தேச விரோதக் காரியங்களுக்குப் பயன்படுத்துகின்றவர்களுக்கு இம்மாதிரியான அரசுச் செய்தி ஓர் ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது. எம்மாதிரியான விபத்துக்கள் நடந்தாலும், தேச விரோத சக்திகள் தேச விரோதச் செயலுக்கு எடுத்துச் செல்கிறபோது, விபத்துக்கள் நடந்தாலும்,



அரசு அதைத் தீர விசாரணை செய்யாத ஒரு சூழ்நிலை இன்றைக்கு இந்த அரசுச் செய்தியிலிருந்து வெளியாகியிருக்கிறது. ஆகவே, அரசு இதைச் சிந்தித்து, அந்த வெடிமருந்து எம்மாதிரியான வெடிமருந்து என்ற ஆய்வினையும் அந்த விசாரணையில் உள்ளடக்க வேண்டும் என்று உங்கள்மூலமாக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகின்றேன்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மென்மையாகப் பேசிவிட்டார்; இன்று கூர் தீட்டிக்கொண்டு வந்திருக்கிறார். வரவேற்கிறேன், வரவேற்கிறேன். ஆனால், ஒன்றை மறந்துவிடக் கூடாது. இந்த அரசு எதையும் மறைக்க விரும்பவில்லை. யார் தீவிரவாதத்திலோ, பயங்கரவாதத்திலோ ஈடுபட்டு நாட்டைக் காட்டிக் கொடுக்கின்ற காரியத்திலே ஈடுபட்டாலும், அவர்களை இந்த அரசு சும்மா விடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அண்மையிலே தமிழகத்தில் நடைபெறுகின்ற சில செய்திகள். பத்திரிகையிலே வந்த செய்திகளைப் பார்த்தாலே புரிந்துகொள்ளலாம். கட்சிகளுக்கு அப்பாற்பட்டு, யாராக இருந்தாலும், அது தி.மு.க.-வைச் சேர்ந்தவராக இருந்தாலும் அல்லது வேறு கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், பயங்கரவாதத்திற்கு ஏதோ ஒரு வகையிலே துணை போனவர்கள் அல்லது அதற்கு உதவியவர்கள், மறைமுகமாகத் துணை போனவர்கள், அவர்களையும் விடாமல் இந்த அரசு கைது செய்து நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது. இப்பொழுது, இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்த Terms of Reference போதவில்லை; இன்னும் தீவிரமாக இருக்க வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் விரும்புவாரேயானால், அதைக் குறித்துக் கொடுத்தால், அதையும் அதில் சேர்த்து, அதையும் அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி விசாரிக்க வேண்டும் என்று சொல்வதற்கு—எங்களுக்கு மடியிலே கனமிருந்தால்தான் வழியிலே பயம்—நிச்சயமாக அவர்களுக்கு இந்தச் செய்தியையும் அதில் இணைத்துக் கொடுத்து, 'இதையும் விசாரித்து அறிக' என்று சொல்ல நாங்கள் தயாராக இருக்கிறோம். அதைக் குறித்துக் கொடுத்தாரேயானால், அதை நான் இணைத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 36 முதல் 40 வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 45—சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 45-சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.85,01,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 67, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 166, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 271, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1185, திரு. மா. ராஜசேகரன்.

**திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1726, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 204, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2011, திரு. ஆர். சின்னசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2530, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1040, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.



**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2902, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3908, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4895, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1877, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3604, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 887, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உடல் ஊனமுற்றவர்கள் மற்றும் சமுதாயத்தில் பெற்றோரால் கைவிடப்பட்ட ஊனமுற்ற குழந்தைகளுக்கென்றும், மேலும் ஊனமுற்ற குழந்தைகளுக்கும் தங்கும் வசதியுடன்கூடிய இலவசமாகக் கற்பிக்கும், பயிற்சி அளிக்கும் மையங்களை அரசின் சார்பில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3240, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டு, வீட்டிலுள்ள வசதி குறைந்த பெண்களுக்கு இலவசமாகத் தையல், தட்டச்சுப் பயிற்சி அளித்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3406, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி கிராமம், எட்டி குட்டைமேடு ஊட்டச் சத்து மையத்திற்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9972, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், கிழுமத்தூரில் குழந்தைகள் சத்துணவுக் கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9575, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுய நிதிப் பள்ளிகளிலும் சத்துணவுத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1706, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் சத்துணவு மையங்கள் மிகவும் அசுத்தமாக உள்ளன. மேலும், சுகாதாரமற்ற முறையில் சமைத்து மாணவர்களுக்கு வழங்குகிறார்கள். இக்குறைகளைப் போக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1673, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விதவை மகள் திருமண உதவித் திட்டத்தில், 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகள் படித்த பெண்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 751, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் பணிபுரிகின்ற பெண்களுக்கென விடுதிகள் (Working Women's Hostel) கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 993, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சமூக நலத் திட்டங்களுக்குக் குடும்ப வருமானம் ஆண்டுக்கு ரூ.12 ஆயிரம் என்பதிலிருந்து, ரூ.24 ஆயிரமாக உயர்த்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1253, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டத்திலுள்ள சத்துணவுப் பணியாளர்களை. காலியாக உள்ள இடங்களில் பணி மாறுதல் செய்ய அரசு தடை விதித்துள்ளது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

அரசு செயற்கை உறுப்புகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 574, திரு. து. ரவிக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 599, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூடங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளைச் சரி செய்து, புதுப்பித்துக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4982, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தொகுதி, பள்ளிப்பாளையம் ஒன்றியம், வீரப்பன்பாளையத்தில் புதியதாக ஓர் அங்கன்வாடி மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4970, திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 5519, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அங்கன்வாடியில் இருக்கும் சமையலறைகளைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4806. திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் உள்ள கட்டடம் இல்லாத சத்துணவு மையங்களுக்குக் கட்டடங்கள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4795, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதியில், அங்கன்வாடி குழந்தைகளுக்கு அரசு குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1741, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதியில் உள்ள சத்துணவு மையங்களில் அமைப்பாளர் மற்றும் சமையலர்கள் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1768, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதியில் பல சத்துணவுக் கூடங்கள் சமையலறைக் கட்டடம்கூட இல்லாமல் இருக்கின்றன; உடன் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4712, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அங்கன்வாடி மையங்களுக்கு நிரந்தரக் கட்டட வசதி இல்லாமல் இருப்பது குறித்தும், புதிய கட்டட வசதிகளை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4732, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவுக் கூடங்களில் வழங்கப்படும் வாரத்தில் மூன்று முட்டைகளை வேக வைக்கத் தேவையான எரிபொருள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4420, திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அவினாசி தொகுதியில் உலக வங்கி நிதித் திட்டத்தின்கீழ் செயல்படும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகம் ஆள் நடமாட்டம் இல்லாத, போக்குவரத்து வசதியில்லாத பகுதியில் அமைந்திருப்பதால், வாராந்திரக் கூட்டங்கள், சம்பளம் பெறச் செல்வதுபோன்ற நாட்களில் பெண் பணியாளர்கள் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகிறார்கள்; ஆகவே, மேற்காணும் அலுவலகத்தை அவினாசி B.D.O. அலுவலகத்தில் காலியாக உள்ள கட்டடத்திற்கு மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4447, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சமூக நலத் துறைமூலமாகப் பெண்கள் பெறும் உதவித் தொகை மற்றும் ஊனமுற்றோர் மற்றும் விதவைகள் பெறும் உதவித்

தொகை ஆகியவற்றிற்கான பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4515, திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4575, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசபாளையம் தொகுதியில் சமூக நலத் துறை சார்பில் ஊனமுற்றோருக்காகப் புதிதாகப் பள்ளி தொடங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4293, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் குழந்தைகளுக்குக் கூடுதலாக பால் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4291, திரு. கி. ஆறுமுகம்.



**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேல்நிலைப் படிப்பு படிக்கும் ஏழை எளிய மாணவர்களின் நலன் கருதி, அவர்களுக்கும் மதிய உணவு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4178, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதி, காந்தி நகர், நரிக்குறவர் காலனியில் சமூக நலத் துறைமூலம் தொழிற்கூடம் அமைத்து, அம்மக்கள் தங்கள் தொழில்களைச் செய்ய, அவர்களுக்கு உதவ வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3896, முனைவர் கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4061, திரு. எஸ். ஜெயபால், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4119, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவுத் திட்டம், அங்கன்வாடிப் பணியாளர்கள், அமைப்பாளர்களில் பட்டம் பெற்றவர், பட்டதாரி ஆசிரியர்களைத் தகுதியான பணிகளுக்கு உயர்த்திட வேண்டிதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4062, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அனைத்து சமூக நலன் மற்றும் சத்துணவுப் பணியாளர்கள் அமர்ந்து ஆலோசனைக் கூட்டம் நடத்த கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2049, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, திங்களூர் ஊராட்சியில் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின்கீழ் தொடங்கப்பட்ட கவுண்டம்பாளையம் தொடக்கப் பள்ளி மாணவ, மாணவியருக்குத் தனியாகச் சமையலறை அமைத்து, சத்துணவு சமைத்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1908, திரு. ஆ. அருண்மொழிதேவன்.



**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதியில் கீரப்பாளையம் ஒன்றியம், காட்டுமன்னார்கோவில் ஒன்றியம் ஆகியவற்றில் உள்ள சிற்றூர்களில் பல இடங்களிலுள்ள சத்துணவு மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் இல்லை; கட்டடங்கள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1932, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியில் சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் குழந்தைகளுக்குக் கூடுதலாகப் பால் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2293, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவு முட்டைகள் கொள்முதல் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2105, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் மின் விசிறி வசதி ஏற்படுத்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2386, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதிய உணவு சாப்பிடும் மாணவர்களின் எண்ணிக்கையைச் சரியாகக் கணக்கு எடுத்து, போதிய முட்டைகள் மற்றும் சரியான அளவு உணவு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4009, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அங்கன்வாடி பணியாளர்களுக்கு இரு சக்கர வாகனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4048, திருமதி ராணி வெங்கடேசன்.



**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அங்கன்வாடி ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3677, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டத்தில் மதிய உணவு சாப்பிடும் மாணவ, மாணவியரின் எண்ணிக்கையைச் சரியாகக் கணக்கெடுத்து, போதிய முட்டை மற்றும் தரமான உணவு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3587, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உடல் ஊனமுற்றவர்களுக்கு அளிக்கப்படுகின்ற மூன்று சக்கர சைக்கிள், wheel chair போன்றவற்றின் எண்ணிக்கையையும், விதவைகளுக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் கொடுக்க இருக்கின்ற தையல் machine-களை மாவட்டங்கள், தொகுதிகளுக்கு ஒதுக்கீடு செய்யும் எண்ணிக்கையையும் அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3479, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2424, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊனமுற்றவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்க நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2447, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரத்தநாடு தொகுதியில் உள்ள அனைத்து சத்துணவு மையங்களையும் பழுதுபார்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2637, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவுக் கூடங்களில் விறகு வைத்துச் சமையல் செய்யும் முறையினை மாற்றி அரசு Gas அடுப்பு வழங்கி நல்ல முறையில் சமையல் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2745, திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், காலடிபட்டி சத்திரம் சுய உதவிக் குழுக் கட்டடம், தணிஞ்சியில் அங்கன்வாடி கட்டடம், சொக்கம்பட்டியில் அங்கன்வாடி கட்டடம், குன்றாண்டார்கோயில் ஒன்றியம், சுருளிக்கோயில் வடுகப்பட்டியில் சத்துணவு சமையல் கூடம், இலுப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2708, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், போளூர் சட்டமன்றத் தொகுதியில் ஊனமுற்றோர் சான்றிதழ் பெற விண்ணப்பித்தால் காலம் தாழ்த்தாமல் உடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3093, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவு மையங்களில் வழங்கப்படும் உணவின் தரத்தை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

22756

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3154, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவுப் பணியாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3349, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீண்ட காலமாக சத்துணவு மற்றும் அங்கன்வாடிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்குப் பதவி உயர்வு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3298, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள சத்துணவு மையங்களுக்கும், அங்கன்வாடி மையங்களுக்கும் புதிய கட்டடங்கள் கட்டவும், பராமரிக்கவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 838, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவு அங்கன்வாடி ஊழியர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சலுகைகளுடன் பணி வரன்முறை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2971, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் தொகுதியில் ஏழ்மையான முதியோர்களின் நலன் கருதி, முதியோர் இல்லம் புதிதாகத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைமீது விவாதம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன் அவர்கள். 10 நிமிடங்களில் உரையை முடித்துவிடுங்கள்.

***திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் பௌர்ணமிகளை ஒருசேரப் பெற்ற ஒளிமுகம், பார்வைக்குத் தெரியாமல் பாறைக்குள் மறைந்திருக்கும் தேரைக்கும் உணவளித்த கருணைத் தாய், ஆட்சி சிம்மாசனத்தில் வேண்டுமானால் இன்றைக்கு இல்லாமல் இருக்கலாம்; ஆனால், மக்களின் இதய சிம்மாசனத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சி செய்துகொண்டிருக்கின்ற எங்கள் அம்மா அவர்கள், நின்றால் மாநாடு, நடந்தால் பேரணி என்று, மக்கள் செல்வாக்கைத் தன்னகத்தேகொண்டு, ஆட்சியாளர்களின் குளறுபடிகளுக்குச் சவுக்கடியாய், (மேசையைத் தட்டும் ஒலி) அநீதிகளைச் சுட்டுப் பொசுக்கும் எரிமலையாய், கொடுமைகளைக் களைவதிலே சூறாவளியாய், இந்த ஆட்சியாளர்களுக்கு சிம்ம சொப்பனமாய் விளங்கும், (மேசையைத் தட்டும் ஒலி) ஊனிலும், எங்கள் உயிரிலும் இரண்டறக் கலந்து எங்களை இயக்கிக்கொண்டிருக்கும் புனிதத் தாய், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசையை நோக்கி வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) எனது நெஞ்சார்ந்த நன்றியினை அவர்களுடைய பொற்பாதங்களில் சமர்ப்பித்து, எனது முதல் உரையைத் தொடங்குகிறேன்.

@ 371 முதல் 161 வரையிலான பக்கங்களில் இணைப்பு-1ஆக அச்சிடப்பட்டுள்ளது.



சர். பிட்டி. தியாகராயர் பிறந்த சிறுபான்மைத் தெலுங்கு தேவாங்கர் சமூகத்தில், ஓர் ஏழைக் கைத்தறி நெசவாளர் குடும்பத்தில் பிறந்த என்னைக் கழகத்தில் சேலம் மாநகர் மாவட்டத்தில் 11-வது வட்டக் கழகச் செயலாளராக்கி, முக்கனியில் முதல் கனி, மாநகரில் முதலாவது தொகுதியில் வாய்ப்பளித்து, ஆன்றோர்களும், சான்றோர்களும் அலங்கரித்த இந்த மாமன்றத்தில் என்னையும் இடம்பெறச் செய்த எனது கண்கண்ட நடமாடும் பேசும் காவல் தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் பணிந்து என் நன்றியினைச் சமர்ப்பிக்கின்றேன்.

இம்மாமன்றத்திற்கு வாக்களித்து அனுப்பி வைத்த எனது தொகுதிவாழ் மக்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன். எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. துரை சந்திரசேகரன் தலைமை)*

"ஆடை, அணிகலன், ஆசைக்கு வாசமலர்
தேடுவதும், ஆடவர்க்குச் சேவித் திருப்பதுவும்,
அஞ்சுவதும் நாணுவதும் ஆமையைப் போல் வர்ழுவதும்
கெஞ்சுவதுமாகக் கிடக்கும் மகளிர் குலம்,
மானிடர் கூட்டத்தில் வலிவற்ற ஒரு பகுதி!"

என்ற பாரதிதாசன் பாட்டைப் பொய்யாக்கி, மகளிர்தான் மானுட சக்தி என்று இந்த மண்ணில் நிலைநாட்டிய சரித்திரத் தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள், எங்கள் சேலம் மாநகரில் தொடங்கி வைத்த திட்டம் தொட்டில் குழந்தைத் திட்டம். இந்தத் திட்டத்திற்காக, 'உலக மாதா' என்று அழைக்கப்பட்ட அன்னை தெரசா அம்மையார் அவர்களால் எங்கள் அம்மா அவர்கள் உச்சி முகர்ந்து, பாராட்டப்பட்டார்கள். இந்தத் திட்டத்தில் தத்தெடுக்கப்பட்ட பெண் குழந்தைகளுக்கு இந்த மானியக் கோரிக்கையில் எந்த அறிவிப்பும் இல்லாதது வருத்தத்தை அளிக்கிறது.

பொட்டுப் பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய், (குறுக்கீடு) ஆண்டாண்டு காலமாக அமுங்கிக் கிடந்த பெண் குலத்தின வரலாற்றுப் பக்கத்தில் மறுவாழ்வு தந்து, பெண் குலத்திற்குப் பெருமை சேர்த்த மற்றொரு திட்டம் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்.

பெண் குழந்தை என்றாலே கள்ளிப்பால் கொடுத்துக் கொல்லும் நிலையை மாற்றி, ஏழைக் குடும்பங்களில் பிறக்கின்ற பெண்

குழந்தைகளுக்கு ஏற்றம் தர வேண்டும் என்பதற்காகப் பல்வேறு திட்டங்கள் தந்து, பெண்ணின் உயர்வுக்கு வழிகாட்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) சிந்தனையில் உதித்த திட்டம்தான் இது. பள்ளிப் பருவத்தில் ஒரு பெண் குழந்தை இருந்தால். . .

முற்பகல் 11-30

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கன்னிப் பேச்சாக இருந்தாலும், சரியான பேச்சாக இருக்க வேண்டும். தவறான கருத்துகளை இங்கே கூறக் கூடாது. பெண்கள் பாதுகாப்புத் திட்டத்தை முதன்முதலாகத் தமிழகத்தில் அறிமுகப்படுத்தியவர் நமது முதல்வர் அவர்கள்தான் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எல். ரவிச்சந்திரன்:** இந்தத் திட்டத்தை 2002 ஆம் ஆண்டு எங்கள் அம்மா அவர்கள்தான் கொண்டு வந்தார்கள் என்பதை நான் இந்தச் சபைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளிப் பருவத்திலே ஒரு பெண் குழந்தை இருந்தால், அந்தப் பெண் குழந்தையின் படிப்புக்காக மாதம் ரூபாய் 300/-ம், அதே குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால், தலா 150 ரூபாய் படிப்புச் செலவுக்காகவும், ஒரு பெண் குழந்தை இருந்தால் அவளின் திருமணத் திட்டத்திற்காக ரூபாய் 80 ஆயிரமும், இரண்டு பெண் குழந்தைகள் ஒரு குடும்பத்தில் இருந்தால், இரு பெண் குழந்தைகளுக்கும் தலா 40 ஆயிரம் ரூபாயும் கிடைக்கச் செய்த, பெண் குலத்தை வாழ வைக்க அவதரித்த எங்கள் அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் கொண்டு வந்த இந்தத் திட்டம் இன்று எந்த நிலையில் உள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

அதேபோல், புரட்சித் தலைவர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்த நேரத்தில், இது பிச்சைக்காரர் திட்டம், பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகளைத் தட்டேந்த வைத்துவிட்டார்கள், இந்தத் திட்டம் சினிமாவைப்போல் 100 நாட்கள் ஓடுமா, 150 நாட்கள் ஓடுமா என்று கேட்ட தலைவர்கள் இந்த அவையில் இருக்கிறார்கள்.



மறைந்த மாமனிதர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் தொலைநோக்குத் திட்டமான இந்த மாபெரும் திட்டத்தை எதிர்த்தவர்களும் இந்தத் திட்டத்தை அமல்படுத்தியே ஆக வேண்டும். எந்த ஆட்சி அமைந்தாலும், இந்தத் திட்டத்தைக் கைவிடுபவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் கைவிட்டுவிடுவார்கள் என்கிற திட்டம்தான் சத்துணவுத் திட்டம். இந்தத் திட்டத்தில் பயன்பெறும் குழந்தைகள், கடந்த 11 மாத கால ஆட்சியில், சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு வாந்தி, வயிற்றுப் போக்குபோன்ற நிலைகள், சம்பவங்கள், பெரம்பூர், வியாசர்பாடியில் தொடங்கி தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் நடந்தேறி வருகின்றன. இதில் பல ஆயிரம் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர். மதுராந்தகத்தில், கொதிக்கின்ற சாம்பார் அண்டாவில் சென்ற வருடம் இரண்டு குழந்தைகள் விழுந்து இறந்ததை நாம் அனைவரும் அறிவோம். தொடர்ந்து இதுபோல் நடந்து வரும் செயல்களைத் தடுக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

சத்துணவுத் திட்டத்தில் குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து அளிக்கும் வகையில் எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சியில் உருளைக் கிழங்கு, கொண்டைக் கடலை, பச்சைப் பயறு ஆகியவை வழங்கப்பட்டன. அதுபோல், இப்போதும் நீங்கள் வழங்குகிறீர்களா என்று அறிய ஆசைப்படுகிறேன். தற்போது நீங்கள் முட்டை வழங்குவதாக அறிவித்துள்ளீர்கள். ஏற்கெனவே அம்மா அவர்கள் வழங்கி வந்த ஊட்டச் சத்து நிதியினை இரத்துச் செய்துவிட்டு, அந்த நிதியில் இருந்துதான் இந்த முட்டையை வழங்குகிறீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) 3 முட்டைகள் வழங்குவதாக அறிவித்துள்ளீர்கள். ஆனால், அந்த முட்டைகளை வேக வைப்பதற்கான எரிபொருள் வழங்காததால், சத்துணவு மையங்களில் சத்துணவு ஊழியர்கள் அவதிப்படுகின்றனர் என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் எவர்சில்வர் தட்டுகள் வாங்குவதற்காக ஒவ்வொரு வருடத்திற்கும் ரூபாய் ஒரு கோடி ஒதுக்கப்பட்டு வந்தது. சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கும் தட்டுகள் வாங்கப்பட்டன. இப்போது இந்தத் திட்டத்தின்மூலம் குழந்தைகளுக்குத் தட்டுகள் வாங்கப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

இதுபோன்று தொலைநோக்குப் பார்வையில், புரட்சித் தலைவரின் அரசியல் வாரிசாகத் திகழும் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த, ஒன்று முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற அனைத்துப் பள்ளி மாணவ, மாணவிகளுக்குக் கொடுக்கப்பட்ட இலவச சீருடை, இலவசப் பாடப் புத்தகங்கள், மேலும் இலவச சைக்கிள் போன்ற தொலைநோக்குத் திட்டங்களை யார் ஆட்சிக்கு வந்தாலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதனையும், அப்படிக் கைவிட்டுவிட்டால் இந்தத் தமிழக மக்கள் அவர்களைக் கைவிட்டுவிடுவார்கள் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

*முற்பகல் 11-35*

இந்தியத் துணைக்கண்ட வரலாற்றில், மகளிர் காவல் நிலையம் அமைத்ததோடு, மகளிர் கமாண்டோ படையை உருவாக்கி, மகளிரையே மார்ஷல் ஆக்கி, குடிசை வீட்டிலே இருந்த கிராமத்துப் பெண்கள்கூட வங்கிகளுக்குச் சென்று வரவு-செலவுக் கணக்குகள் வைக்கின்ற நிலையை ஏற்படுத்தி, புதிய புறநானூற்றைப் படைத்த எங்களது புரட்சித் தாய் கொண்டு வந்த திட்டம் மகளிர் சுய உதவிக் குழுத் திட்டம்.

மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தளவில், பெண்களின் வாழ்வில் ஒரு பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்தியவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 2001 ஆம் ஆண்டு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, மகளிர் சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை 58,391 என்று இருந்ததை 2006 ஆம் ஆண்டு ஆட்சியை நிறைவு செய்யும்போது சுமார் 3,15,724 குழுக்களாக உயர்த்தி அமைத்து, கிராமப் பெண்களின் வாழ்வில் பேரொளி ஏற்படுத்திய பெண்ணினப் பேரொளி எங்கள் அம்மா அவர்கள். இந்த மகளிர் சுய உதவிக் குழுத் திட்டம் எங்கள் ஆட்சிக் காலத்தில் சமூக நலத் துறையில் இருந்து வந்தது. ஆனால், அது தற்போது உள்ளாட்சித் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு பணி நிமித்தமாக உள்ளவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** லாபியிலே சத்தம் போட்டுக் கொண்டிருப்பவர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.



**திரு. எல். ரவிச்சந்திரன்:** அவர் எந்த அளவிற்கு இந்தத் துறையைக் கவனித்துக்கொள்வார் என்று தெரியவில்லை. எனவே, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மீண்டும் உள்ளாட்சித் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு, சமூக நலத் துறையிலேயே சேர்க்கப்படுமா என்று உங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன். கடந்த நிதிநிலை அறிக்கையில்கூட ஆண்டிற்கு 25,000 மகளிர். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** லாபியிலே உள்ளவர்கள் அமைதியாக இருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** கடந்த நிதிநிலை அறிக்கையில் ஆண்டிற்கு 25,000 குழுக்கள் தொடங்கப்படும் என்றீர்கள். ஆனால், அந்த அறிவிப்பு அச்சிலேயேதான் உள்ளது. குழுக்கள் தொடங்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இன்றையதினம் ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவி 10 ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு மட்டும்தான் என்று, சான்று கேட்கிறீர்கள். அப்படியென்றால் 10 ஆம் வகுப்புக்குக்கீழ் படித்த பெண்கள் திருமணம் செய்துகொள்ளக் கூடாதா? (குறுக்கீடுகள்) எனவே, நான் கேட்க விரும்புவதெல்லாம் ஏழைப் பெண்கள் என்றாலே, வருமான வரம்பை நிர்ணயம் செய்து, அனைத்து ஏழைப் பெண்களுக்கும் இந்தத் திருமண உதவித் திட்டத்தின் உதவி கிடைக்கச் செய்ய இந்த அரசு முன்வர வேண்டும்.

இந்தச் சமூக நலத் துறை மானியக் கோரிக்கையைப் பொறுத்தமட்டில், கிராமத்தில் ஒரு பழைய பழமொழி உண்டு. "அறுக்கமாட்டாதவன் இடுப்பில் 58 அரிவாள் இருப்பதுபோல", இந்த ஆட்சி இருக்கும் வரை பெண்கள் முன்னேற்றம் என்பது முயல் கொம்புதான். குளம் மட்டுந்தான் உள்ளது, குமுதம் இல்லை என்பதுபோல்; வாள் மட்டும் இருக்கின்றது, வீரம் இல்லை என்பதுபோல்; வானம் மட்டும் இருக்கிறது, நிலவில்லை என்பதுபோல்; கடை மட்டும் உள்ளது, பொருட்கள் இல்லை என்பதுபோல்; நிலம் மட்டும் உள்ளது, வளம் இல்லை என்பதுபோல்; இந்த மானியக் கோரிக்கையில் உப்பும் இல்லை, சப்பும் இல்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. பிரபாவதி. *(குறுக்கீடுகள்)*

**திரு. போளூர் ம. வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் Sir. *(குறுக்கீடுகள்)*

**திருமதி பெ. பிரபாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் உயிர்த் துடிப்பாய், தமிழகத்தில் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று, தமிழகத்தை வாழ்விக்க வந்த முதல்வரே, முத்தமிழறிஞரே, *(மேசையைத் தட்டும் ஒலி)* உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தனிப் பெருந்தலைவரே, கடந்த கால வரலாற்றுப் பக்கங்கள் தங்கள் பெயரைத் தாங்குவதால், அது வரலாற்றுக்கே பெருமை. அஞ்சுகம் அன்னையின கருவறையில் உதித்த உதய சூரியனே, தமிழக இனம் காக்க, மொழி காக்க, தமிழர் நலன் காக்க, கடந்த காலங்களில் நெருப்பாற்றில் நீச்சலிட்ட தியாகத்தின் திருவிளக்கே, தங்களின் ஒப்பற்ற தலைமையில் எனக்கும் மக்கள் பணியாற்ற வாய்ப்புத் தந்த பாரி வள்ளலே, பகலவனே, உமக்கு என் நன்றியினை வெறும் வார்த்தைகளால் கூறிவிட இயலாது. உம்மை வணங்கி மகிழ்கின்றேன்.

வருங்காலத் தமிழகத்தின் இளைய சூரியன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் ஐயா பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், எங்கள் ஈரோடு மாவட்டச் செயலாளர், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கும், கோவை மாவட்டச் செயலாளர், மாண்புமிகு அமைச்சர், அண்ணன் பொங்கலூராார் அவர்களுக்கும் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தோழர்களுக்கும் மற்றும் என்னுடைய தாராபுரம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றியினைப் பணிவுடன் காணிக்கையாக்கி, வணங்கி, என் கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன். நிதிநிலை அறிக்கை விவாதத்தைத் தொடர்ந்து நடைபெறும் சமூக நலத் துறை மானியத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் மனம் கனிந்த நன்றி.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் நல்லாட்சியில், பெண்கள் இனம் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதன்படி,



ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு, கர்ப்பிணிப் பெண்களுக்கு, விதவைகளுக்கு, ஆதரவற்ற முதியோர்களுக்கு, ஊனமுற்றவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் மற்றும் ஆரம்பப் பள்ளிகளில் பெண் ஆசிரியர்களுக்கு முன்னுரிமை, இலவச எரிவாயு இணைப்புடன்கூடிய அடுப்பு வழங்கி 'அடுப்பூதும் பெண்கள்' என்ற வாசகத்தையே அகராதியிலிருந்து அகற்றியிருக்கிறீர்கள். இல்லந்தோறும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கி, மகளிரை மகிழ்வூட்டியிருக்கிறீர்கள். அனைத்து அமைப்புகளிலும் மகளிருக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு கிடைக்கப் பெரும் முயற்சி எடுத்து வருவது; இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி; சத்துணவுடன் வாரம் மூன்று முட்டைகள், இரண்டு ஏக்கர் இலவச நிலம், விவசாயக் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி என எண்ணற்ற திட்டங்கள் எங்கள் தி.மு.க. அரசு, முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையில் சீரும் சிறப்புமாகச் செயல்பட்டு வருகின்றன என்பதைப் பெருமையுடன் இம்மாமன்றத்தில் கூறிக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-45*

பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், குழந்தைகளின் முன்னேற்றத்திற்காகவும், ஊனமுற்றோர், நலிந்தோர், முதியோர் நலனுக்காகவும் சமூக நலத் துறை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த முதியோர் உதவித் தொகை ரூபாய் 200/-லிருந்து 400 ரூபாயாக நிதிநிலை அறிக்கையில் உயர்த்தியதை மக்கள் மனதாரப் பாராட்டுகிறார்கள். தமிழக மக்களின் நலனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கையைப் பல்வேறு தரப்பு மக்களும் வெகுவாகப் பாராட்டிக்கொண்டுள்ள இந்த வேளையில், எதிர்க்கட்சியினர் ஏதாவது ஒரு குறை தென்படாதா என்று துருவிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், பட்டிதொட்டியெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கை பேசப்பட்டு வருகிறது. ஏனென்றால், வரி இல்லாத நிதிநிலை அறிக்கை மற்றும் உதவித் தொகை 400 ரூபாயாக உயர்த்தியதே காரணமாகும். இதை உயர்த்திக் கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அனைவரின் சார்பாக முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

12 ஆம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு 15,000 ரூபாய் திருமண உதவித் திட்டம், இந்தத் திட்டத்தில் பயன்பெறுவதற்காகவே கிராமங்களில் பெற்றோர்கள் தங்கள் பெண் குழந்தைகளை 12 ஆம்

வகுப்பு வரை படிக்க வைத்திருக்கிறார்கள். எனவே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எந்த நோக்கத்திற்காக இந்தத் திட்டத்தைத் தொடங்கினார்களோ, அந்தக் குறிக்கோள் இன்று நிறைவேறி வருகிறது. இதற்காகப் பெண் குலத்தின் சார்பாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், நிதி அமைச்சர் இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், எங்கள் தாராபுரம் தொகுதி வளர்ச்சிக்காகவும், பொது மக்கள் நலனுக்காகவும் பின்வரும் கோரிக்கைகளைப் பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

தாராபுரம் தொகுதிவாழ் மக்களின் குடிநீர் ஆதாரம் அமராவதி ஆறு மட்டுமே. அதில் தண்ணீர் வரும் மாதங்கள் குறைவு. எனவே, குடிநீர்ப் பிரச்சினைக்கு ஒரே நிரந்தரத் தீர்வாக திருமூர்த்தி அணையிலிருந்து தாராபுரத்திற்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டத்தை நிறைவேற்றித் தரக் கேட்டுக்கொள்கின்றேன்.

காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் கிடைக்க வேண்டிய குடிநீர் அளவில் பாதி அளவுகூட கிடைக்கப்பெறாமல் உள்ள பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டுகின்றேன்.

தாராபுரம் தொகுதியில், உடுமலை வட்டத்திற்குள் அமைந்துள்ள கனியூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தி, புதிய கட்டடம் கட்டி, அடிப்படை வசதிகளை உருவாக்கித் தர வேண்டுகின்றேன்.

தாராபுரம் அரசு பொது மருத்துவமனையில் பல பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. மேலும், Ultrasound scan, E.C.G. போன்ற கருவிகள் பழுதடைந்துள்ளன. இதனால், ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளை, மூன்று மணி நேரம் கோவைக்குப் பயணம் சென்று காப்பாற்ற வேண்டிய நிலையை மாற்றி, தாராபுரம் அரசு பொது மருத்துவமனையை மேம்படுத்தித் தர வேண்டுகின்றேன்.

கடந்த அ.தி.மு.க. அரசால் தாரை வார்த்து, மூடுவிழா நடத்தப்பட்ட, தாராபுரம் அருகிலுள்ள கொளத்துப்பாளையம், ஈரோடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் இயக்கி, தொழிலாளர்களின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டுகின்றேன்.

படித்தவர்களும், பாட்டாளிகளும், பாமரர்களும் நிறைந்துள்ள தாராபுரம் தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். எங்கள்



மக்களின் வாழ்க்கை மேம்பாடு அடைய, அருகிலுள்ள தொழில் நகரமாம் திருப்பூர் பின்னலாடைத் தொழிலுக்குத் தேவையான உப தொழில்களையும் தாராபுரத்தில் நிறுவிட வேண்டுகின்றேன்.

தாராபுரம் மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் கிராமங்கள் அதிகம். மாணவ, மாணவியர் கல்லூரிப் படிப்பைத் தொடர 80 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஈரோடு செல்ல வேண்டிய நிலையுள்ளது. எனவே, தாராபுரத்தில் அரசுக் கல்லூரி ஒன்றும், அரசுப் பொறியியல் கல்லூரி ஒன்றும் ஏற்படுத்தித் தர வேண்டுகின்றேன்.

தமிழகம் எங்கும் உள்ள உடல் ஊனமுற்றோர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை ரூபாய் 200/-லிருந்து ரூபாய் 400/-ஆகவும், கடும் உடல் ஊனமுற்றோருக்கு ரூபாய் 200/-லிருந்து ரூபாய் 500, ஆகவும் உயர்த்தப்பட்ட நிலையில், உடல் ஊனமுற்ற அரசு ஊழியர்களின் வாகனப் படியை ரூபாய் 150/-ஆக உயர்த்தி வழங்க வேண்டுகின்றேன்.

இன்னும் பல கோரிக்கைகள் உள்ளன. அதனை வருங்காலங்களில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களிடம் சமர்ப்பிக்கவுள்ளேன். இதுவரை நிறைவேற்றக் கோரி சமர்ப்பித்த திட்டங்கள் மற்றும் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், இந்த அரிய வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், தமிழகத்தின் வருங்கால நம்பிக்கை நட்சத்திரம் எங்கள் தளபதி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மற்ற அமைச்சர் பெருமக்களுக்கும் பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் 2007-2008 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு அகில இந்திய காங்கிரஸ் பேரியக்கத்திற்கும், தலைவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றே

என்னைத் தமிழ்நாடு மகளிர் ஆணையத்தின் உறுப்பினராக்கி, நல்ல பல சேவைகளை மகளிருக்கு அளிக்கச் சந்தர்ப்பம் கொடுத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் சிரம் தாழ்த்தி நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விஞ்ஞானமும், தொழில்நுட்பமும், பொருளாதார வளர்ச்சியும் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மிகப் பெரிய அளவில் மாற்றிக்கொண்டு வருகிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு நினைத்துக்கூட பார்க்க முடியாமல் இருந்த நிறைய விஷயங்கள், இன்றையதினம் மனித வாழ்க்கையை இலகுவாகவும், வசதியாகவும் அமைத்துக்கொள்ள மிகவும் உதவியாக உள்ளன.

ஒரு காலத்தில் அடித்தட்டு மக்கள், உடல் ஊனமுற்றோர்கள், பெற்றோரை இழந்து தவிக்கும் அனாதைக் குழந்தைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் போன்றவர்களுக்கு வாழ்க்கையில் உதவ யாருமே இல்லை என்ற நிலைமை இருந்தது. அப்படிப்பட்ட மக்களைக் கண்டறிந்து, தேர்ந்தெடுத்து, அவர்களின் வாழ்க்கையில் வழிகாட்ட, ஒளியேற்ற இந்த அரசு இருக்கிறது என்பதை உணர்த்துவதற்காகவே உருவாக்கப்பட்ட துறைதான் இந்த சமூக நலத் துறை.

இந்தத் துறை எவ்வளவு வெற்றிகரமாகச் செயல்படுகிறதோ, அந்த அளவிற்கு ஏழையெளிய மக்கள் பயன்பெறுவார்கள். எந்த அளவிற்கு ஏழையெளிய மக்கள் பயன் அடைகின்றார்களோ, அந்த அளவிற்கு அவர்கள் இந்த அரசை வாழ்த்துவார்கள். எந்த அளவிற்கு இந்த அரசை வாழ்த்துகிறார்களோ, அந்த அளவிற்கு இந்த அரசின் அடித்தளம் வலுவாகவும், விரிவாகவும் இருக்கும். இதை நன்கு அறிந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், எந்த அளவிற்கு நலத் திட்டங்களை வழங்கியிருக்கிறார் என்று சொன்னால், நாம் தொடக்கப் பள்ளிக்குச் சென்று முதலில் உயிர் எழுத்தைப் படிக்கும்பொழுது 'அ' என்றவுடன் அம்மா என்றும், 'ஆ' என்றவுடன் ஆடு என்றும், 'இ' என்றவுடன் இலை என்றும் படித்தது நினைவு இருக்கலாம். ஆனால், தற்போது தமிழகத்தில் படிக்கும் ஏழைக் குழந்தைகள், 'அ' என்றவுடன் அரிசி கிலோ இரண்டு ரூபாய்க்கு என்றும், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) 'ஆ' என்றவுடன் ஆனந்தமாகக் கண்டுகளிக்க இலவச வண்ணத் தொலைக்காட்சி என்றும், (மேசையைத் தட்டும் ஒலி) 'இ' என்றவுடன் இலவச நிலம்



மற்றும் இலவச எரிவாயு அடுப்பு என்றும் (மேசையைத் தட்டும் ஒலி) படிக்கும் நிலையில், தமிழில் உள்ள அத்தனை உயிர் எழுத்துக்கும் மெய் எழுத்திற்கும் உயிரையும், மெய்யையும் வழங்கியுள்ள மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் நலத் திட்டங்களைச் சொல்லிக்கொண்டே செல்லலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

சமூக நலத் துறையில் பெண்கள் திருமண உதவித் திட்டங்களில் ஒன்று, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம். இந்த உயர்ந்த அற்புதமான திட்டம் 3-6-1989 அன்று டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டு, 10 ஆயிரம் ரூபாய் கல்யாண உதவியாகப் பெண்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. இந்தத் திட்டத்தின்கீழ் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தில் பெற்றோர்கள் தங்களுடைய பெண் குழந்தைகளையும் 10 ஆம் வகுப்பு வரை பள்ளிக்கு அனுப்பியதால் பெண்களின் கல்வியில் வளர்ச்சி காணப்பட்டது. ஆனால், முந்தைய அரசால் அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு 1-4-2002 முதல் இந்த அற்புதமானத் திட்டம் நிறுத்தப்பட்டது. மீண்டும் டாக்டர் கலைஞர் பதவியேற்றவுடன், 3-6-2006 முதல் இந்தத் திட்டத்தை அமல்படுத்தியதோடு மட்டுமல்லாமல், இந்த முறை தங்கத்தின் விலையேற்றத்தை மனதில்கொண்டு, கருணை உள்ளம் படைத்த டாக்டர் கலைஞர் அவர்கள், உதவித் தொகையை ரூ.10 ஆயிரத்திலிருந்து ரூ. 15 ஆயிரமாக உயர்த்தி வழங்கியுள்ளார். கலைஞர் அவர்களுக்குத் தமிழகப் பெண்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டின் இலக்காக 46 ஆயிரம் பயனாளிகள் என்று அரசு நிர்ணயித்து இருந்தது. இதில் 45,999 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர். அதாவது, நூற்றுக்கு நூறு சதவீதம் இந்தத் திட்டத்தில் மக்கள் பயன்பெற்றுள்ளனர். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இந்த நிதியாண்டில் இந்த இலக்கை 50 ஆயிரமாக அரசு உயர்த்தி உள்ளது. அதாவது, 4,000 பயனாளிகள் மட்டுமே அதிகரித்துள்ளனர். உயர்ந்து வரும் மக்கள் தொகையைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பயனாளிகள் இலக்கைக் குறைந்தது ஒரு இலட்சமாக உயர்த்த வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

விதவை மகளிருக்கான ஈ.வி.ஆர். மணியம்மை நினைவு திருமணத் திட்டம். இந்தத் திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் நிதியாண்டில், 2,952 பேர் பயனடையும் வகையில், 29.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் குறியீட்டைச் சற்று உயர்த்தி வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். மேலும் இத்திட்டத்தின்கீழ், குடும்பத்தில் ஒரேயொரு பெண்ணுக்கு மட்டுமே இச்சலுகை வழங்கப்படுகிறது. எனவே, ஒன்றுக்கு மேற்பட்ட பெண் குழந்தைகளை வைத்திருக்கும் விதவைத் தாய்மார்களுக்கும் உதவும் வகையில், குறைந்தபட்சம் இரண்டு குழந்தைகளாவது இந்தத் திட்டத்தின்கீழ் பயன்பெற உத்தரவிடுமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-55

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு ஏழை விதவைகள் மறுமணத் திட்டத்தின்கீழ் சென்ற ஆண்டில் 150 பேர் என்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டாலும், 192 பேருக்குப் பயனளிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டிற்கு இந்தக் குறியீடு 150-லிருந்து 200 பேராக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் குறைந்த அளவாக உள்ளதால், இந்தக் குறியீட்டைத் தளர்த்தி, விண்ணப்பிப்பவர்களில் தகுதி உள்ளவர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் நடவடிக்கை எடுத்து, அதற்கேற்ப நிதியை வழங்க வேண்டுமென்று டாக்டர் கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். இந்தத் திட்டத்தின்கீழ், விதவையை மணக்கும் ஆணுக்கு இது முதல் திருமணமாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் உள்ளது. இந்த நிர்பந்தத்தைத் தளர்த்த வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தத் தருணத்தில் எனக்கு ஒரே ஒரு சந்தேகத்தை சமூக நீதி காத்த காவலரும், வாழும் வள்ளுவருமாகிய டாக்டர் கலைஞர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று விரும்புகிறேன். ஆங்கிலத்தில், கணவனை இழந்த மனைவிக்கு Widow என்று சொல்கிறோம். அதேபோல், மனைவியை இழந்த கணவனுக்கு Widower என்று சொல்கிறோம். ஆனால், கணவனை இழந்த மனைவிக்குத் தமிழ் அகராதியில் விதவை என்றும், கைம்பெண் என்றும் வார்த்தைகள் உள்ளன. ஆனால், மனைவியை இழந்த ஆண்களுக்கு என்ன பெயர் என்று அறிய எனக்குத் தெரிந்த தமிழ் அகராதிகளைப் புரட்டிப் பார்த்தேன். வார்த்தை புலப்படவில்லை. எனவே, கற்புக்கரசிக்குக் கடற்கரையில் மீண்டும் சிலையை நிறுவிய, பெண்களின் காவலராகிய டாக்டர் கலைஞர் அவர்கள் எனது சந்தேகத்தைத் தீர்த்து வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



ஆதரவற்ற பெண்களுக்கு வழங்கும் அன்னை தெரசா நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு 150 பயனாளிகள் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 207 பேர் பயன்பெற்றுள்ளனர். இந்த நிதியாண்டில் இந்த இலக்கை 300 ஆக உயர்த்தி இருப்பது மிகவும் குறைந்த இலக்காகும். எனவே, இத்திட்டத்தின்கீழ், குறைந்தது ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 பயனாளிகளாவது பயன்பெறும் வகையில் இலக்கை மாற்றி அமைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கர்ப்பிணிப் பெண்கள் திட்டம் ஆசியாவிலுள்ள அத்தனை பெண்களும் வியந்து பாராட்டிக்கொண்டிருக்கும் ஒரு திட்டம். இந்தத் திட்டத்தின்கீழ் கருவுற்ற பெண்களுக்கு 8 மாதத்திலிருந்து தொடர்ந்து 6 மாத காலத்திற்கு மாதம் ரூ.1,000/- என்ற வீதத்தில் ரூ.6,000/- வழங்கி வருவதால், தாய், சேய் நலம் பேணப்பட்டு, எதிர்கால சந்ததியின் நுண்ணறிவுத் திறனை வளர்க்க உத்தரவிட்ட இந்த அரசுக்குத் தமிழகப் பெண்கள் அனைவரின் சார்பிலும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டத்தையும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமணத் திட்டத்தையும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் யாரும் மாற்ற இயலாதவாறு, எப்படிப் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்துச் சட்டமாக்கினீர்களோ, அதேபோல் இந்த இரண்டு திட்டங்களுக்கும் சட்டம் கொண்டு வர வேண்டுமென்று காங்கிரஸ் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

18 வயதிற்கு மேற்பட்ட ஆண் வாரிசு இருந்தாலும், விதவைகளுக்கும், கணவரால் கைவிடப்பட்ட மனைவியருக்கும் ஓய்வூதியம் வழங்கலாம் என்ற உத்தரவு அரசு அலுவலகங்களில் சரியான முறையில் கிடைக்கப்படாததால், பெண்களால் இச்சலுகையைச் சரிவரப் பெற இயலவில்லை. உதாரணமாக, எனது தொகுதியிலேயே தாசில்தார்கள் இந்த உத்தரவின் நகல் கிடைக்கப்பெறவில்லை என்று சொல்கிறார்கள். எனவே, அந்த உத்தரவின் நகலை சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலகங்களிலும் கிடைக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின்கீழ் நிதியாண்டிற்கு 5,500 பேர் பயனடையும் வகையில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2003-லிருந்து பயனாளிகளின் எண்ணிக்கை 5,500 ஆகத்தான் உள்ளது என்பதையும் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டுள்ளேன். சமுதாயத்தில் நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட மனைவியர், உடல் ஊனமுற்றோர் ஆகியோர் சுய தொழில் செய்து தாங்கள் உயிர் வாழ ஒரு நம்பிக்கையையும், பொருளாதார முன்னேற்றத்தையும் கொடுக்கக்கூடிய இத்திட்டம் மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒரு திட்டமாகும். படிப்பறிவு இல்லாதவர்கள் இதன்மூலமாகத்தான் பயனடைய முடியும். ஆகவே, இந்தத் திட்டத்திற்கு 10,000 பேர் என்ற குறியீட்டை உயர்த்தி, அதற்கான நிதியுதவியினை வழங்கும்படித் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தற்போது நமது மாநிலம் தகவல் தொடர்புத் துறையில் மிகவும் வளர்ச்சி பெற்று வருவதால், இத்துறையில் பணிபுரிவதற்காக அனைத்து மாவட்டங்களிலிருந்தும், ஏன், வெளி மாநிலங்களிலிருந்தும் வரும் மகளிருக்காக, சுமார் 500 வேலை செய்யும் பெண்கள் ஒரே இடத்தில் தங்குவதற்கு வசதியாக, சுமார் 7 கோடி ரூபாய் செலவில் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய All under one roof Working Women's Hostel-ஐ இந்த மாநிலத்தில் role model ஆகக் கொண்டு வந்ததற்கு இந்த அரசைப் பெண்களின் சார்பாகப் பாராட்டி எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெருகி வரும் ஏற்றுமதி ஆடைகள் தயாரிப்புத் தொழிலில் ஈடுபடும் பெண்களின் மாத வருமானம் 7,000 ரூபாய் முதல் 8,000 ரூபாய் வரை உள்ளது. தற்போது ஏற்றுமதி விதிகள் மிகவும் தளர்த்தப்பட்டுள்ள காரணத்தினால், பெண்களுக்கான வேலைவாய்ப்பு அதிகரிக்கப்பட்டு வருகிறது. எனவே, இந்த அரசு கிராமப்புறப் பெண்களுக்கு ஆயத்த ஆடைகள் தைப்பதற்குப் பயிற்சி அளிக்க முன்வர வேண்டுமென்றும் இந்த உரையின்மூலம் கேட்டுக்கொள்கிறேன். கிராமங்களிலிருந்து நகரங்களுக்குப் பயிற்சி எடுக்க வரும் பெண்கள் தங்குவதற்கு, மகளிர் விடுதிகளையும் அரசு சலுகைகளுடன் பெண்களுக்கு உதவும் வகையில் அமைக்க வேண்டும் என்றும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.



நண்பகல் 12-00

சிவகாமி அம்மையார் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம். சற்றுமுன் இதைத்தான் அ.இ.அ.தி.மு.க.வினர் தாங்கள் கொண்டு வந்தத் திட்டமாகச் சொல்லியிருந்தார்கள். நான் கேட்கிறேன், சிவகாமி அம்மையாரின் பெயரில் கொண்டு வந்தத் திட்டம். கண்டிப்பாக முந்தைய ஆட்சியில் கொண்டு வந்திருக்க முடியாது. சிவகாமி என்பது, காமராஜர் அம்மாவின் பெயர். இதைக் கண்டிப்பாக டாக்டர் கலைஞர்தான் கொண்டு வந்திருக்க முடியும் என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் தேவையில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது பெண் சிசுக் கொலையைத் தடுப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட ஒரு திட்டமாகும். இந்தத் திட்டத்தின்கீழ், ஒரே ஒரு பெண் குழந்தை உள்ள குடும்பத்தில், கணவனோ, மனைவியோ யாராவது குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்டால், அந்தப் பெண் குழந்தையின் பெயரில் அரசாங்கம் 22,500 ரூபாய் டெபாசிட் செய்கிறது. அதேபோல, இரண்டு பெண் குழந்தைகளுக்குப் பிறகு செய்துகொண்டார்கள் என்று சொன்னால், 15,200 ரூபாய் வைப்புத் தொகையாகச் செலுத்தப்படுகிறது. இருந்தபோதிலும், பெண் சிசுக் கொலை முழுமையான முறையில் தடை செய்யப்படவில்லை என்பதுதான் உண்மை. 0-விலிருந்து 6 வயது வரை இருக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையை நீங்கள் எடுத்துப் பார்த்தீர்கள் என்று சொன்னால், மொத்த மக்கள் தொகையில் 16 விழுக்காடு இருக்கின்றார்கள். அதில் male babies மட்டும் 52 விழுக்காடாக இருக்கிறார்கள். Female babies 42 விழுக்காடாக இருக்கிறார்கள். இது ஒரு clear gender imbalance-ஐக் காட்டுகிறது. Latest ஆக எடுத்த சர்வேயில்கூட, எடப்பாடி தாலுகாவில், சேலம் மாவட்டத்தில் 714 பெண் குழந்தைகளுக்கு 1,000 male babies என்ற கணக்கில்தான் இருக்கிறார்கள். ஆகையால், இந்த அரசு உடனடியாக ஒரு monitoring committee-யை ஏற்படுத்தி, எல்லாத் துறைகளிலிருந்தும் பெண்களை உறுப்பினர்களாகப் போட்டு, female infanticide, female foeticide-ஐ அறவே, அறவே, அறவே ஒழிக்க வேண்டுமென்பதை இந்த நேரத்தில் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மத்தியப் பிரதேச அரசு உள்ளாட்சித் தேர்தலில் மகளிர்க்கு 50 விழுக்காடு பிரதிநிதித்துவம் அளித்துள்ளது. நாங்கள் 50 சதவிகிதம் எல்லாம் கேட்கவில்லை. இந்த 33 சதவிகித இட ஒதுக்கீடு என்பது ஒரு கானல் நீராகவே இருக்கின்றது, போகாத ஊருக்கு வழி சொல்வதுபோலத் தோன்றுகின்றது. ஆகையால், நடக்கும் பட்ஜெட்

தொடரிலேயே 33 சதவிகிதத்திற்காக minimum ஒரு தீர்மானத்தையாவது நிறைவேற்றி டாக்டர் கலைஞர் அவர்கள் மத்திய அரசுக்குப் பரிந்துரைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005. Domestic Violence Act, 2005. குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005 என்னும் மத்தியச் சட்டம் மற்றும் அதன் தொடர்பான விதிகள் 26-10-2006 முதல் அமலுக்கு வந்தன. அரசமைப்புச் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளபடி பெண்களின் உரிமையைப் பாதுகாக்கவும், பெண்களைக் குடும்ப வன்முறையிலிருந்து பாதுகாக்கவும் அதிக அதிகாரத்தை அரசுக்கு இச்சட்டம் வழங்குகிறது. எந்தச் சட்டமும் இயற்றப்படுவதால் மட்டும் மக்களுக்குப் பயன் கிடைக்காது. இந்தச் சட்டங்கள் மக்களைச் சென்றடைந்து, மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அன்னை சோனியா காந்திஜியின் ஆதரவால், அவருடைய வழிகாட்டுதலின்பேரில் நடக்கும் டாக்டர் மன்மோகன் சிங் அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இந்தச் சட்டத்தைத் தமிழக அரசு விளம்பரங்கள்மூலமும், சிறப்பு வகுப்புகள்மூலமும், சிறப்பு செய்முறைமூலமும் பெண்களுக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

'சாதிகள் இல்லையடி பாப்பா' என்ற கூற்றினை நிறைவேற்ற தமிழக அரசு கலப்புத் திருமண உதவித் திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ.3.50 கோடி நிதி உதவி வழங்கியதற்காக இந்த அரசுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். நாட்டில் சாதிகளை ஒழிக்க, கலப்புத் திருமணத்தைத் தவிர சிறந்த வழி வேறு ஒன்றும் இருக்க முடியாது. இவ்வாறு கலப்புத் திருமணம் புரியும் துணிச்சலான தம்பதியினருக்கு அரசு பல நல்ல சலுகைகளை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

குழந்தைகள் காப்பகங்கள் 8 மாவட்டங்களில் இல்லை. அந்த 8 மாவட்டங்களிலும் குழந்தைகள் காப்பகங்களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நடந்துகொண்டிருக்கும் டாக்டர் கலைஞரின் பொற்கால ஆட்சியில், இந்தியாவிலேயே ஊனமுற்றோருக்கான நல் வாரியத்தை அமைத்து, இந்தியாவிலேயே தமிழகத்தை Role model ஆகக் கொண்டு வந்ததற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



உடல் ஊனமுற்றோர்கள் நலனுக்காக இந்த அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளில், சிறப்பு அவயவங்கள், கல்வி உதவித் தொகை மற்றும் சிறப்பு வகுப்புகள் நடத்துவது மட்டுமின்றி, அவர்களை இந்தச் சமுதாயத்தில் இணைத்துக்கொள்ளும் அளவிற்கு, நீங்கள் மனதால் ஊனமுற்றோர் அல்ல, உங்கள் திறமைகளுக்கும் ஊனம் இல்லை என்பதை அவர்களுக்குத் தெளிவுபடுத்தும் வகையில், அவர்கள் கேட்காமலேயே 23 பள்ளிகளைத் தொடங்கி, அவர்களுக்குக் கல்லூரி வரைக்கும் இலவசக் கல்வி கொண்டு வந்திருப்பது, உண்மையிலேயே மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற எண்ணத்தில் இந்த அரசு செயல்படுகிறது என்பதைக் காட்டுகிறது. இவ்வாண்டு B.Com., B.C.A., ஆகிய இளநிலைப் பட்டப் படிப்புகளை, காது கேளாதவர்களுக்காக பிரசிடென்சி கல்லூரியில் கொண்டு வந்ததற்காக இந்த அரசை மனதாரப் பாராட்டுகிறேன்.

பிற்பகல் 12-05

மன வளர்ச்சி குன்றியோருக்கு, அவர்கள் குடும்பத்திற்கு எந்த உபயோகமும் இல்லாத நிலையிலும், அவர்களும் மனிதர்கள்தான் என்று அவர்களின் பெற்றோரின் குறை தீர்க்கும் வகையில் அவர்களை வளர்ப்பதற்கும் மற்றும் அவர்களுடைய மருத்துவ வசதிக்காகவும் ரூ.25 கோடி நிதி ஒதுக்கியிருப்பது, டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் இந்தத் தமிழகத்தில் யாருமே விடுபடவில்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இவையெல்லாம் N.G.O.s மூலமாகத்தான் செயல்படப் போகின்றன என்பதைத் தெரிந்துகொண்டேன். நீங்கள் N.G.O.s-ன் back ground-ஐப் பாருங்கள். உண்மையிலேயே அவர்களுக்குச் சேவை மனப்பான்மை உள்ளதா என்பதைப் பார்த்துதான் அவர்களுக்கு registration செய்ய அனுமதிக்க வேண்டும் என்றும் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

நம் மாநிலத்தின் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டங்கள்—I.C.D.S. (Integrated Child Development Scheme)—இந்தியாவிலேயே முன்மாதிரியாக இருக்கின்றன. "Very good implementation" என்று, நம்முடைய பாரதப் பிரதமர் மாண்புமிகு டாக்டர் மன்மோகன் சிங் அவர்களே பாராட்டியுள்ளார்.

கல்விக் கண் திறந்த பெருந் தலைவர் காமராஜர் அவர்களால் மதிய உணவுத் திட்டமாகத் தொடங்கப்பட்டு, தற்பொழுது சத்துணவுத் திட்டமாக அரசுப் பள்ளிகள், உள்ளாட்சிப் பள்ளிகள், அரசு

உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை வழங்கப்படுகின்றது. ஆனால் அரசின் நிதியுதவி பெறாமல், அங்கீகாரம் மட்டுமே பெற்ற பள்ளிகளில் இந்தத் திட்டம் அமல்படுத்தப்படவில்லை. ஆனால், அரசின் அங்கீகாரம் மட்டும் பெற்ற பள்ளிகளும் இன்றைய காலக் கட்டத்தில் கல்வியின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானவையாகும். எனவே, இந்த ஆண்டு முதல் அரசின் அங்கீகாரம் மட்டுமே பெற்ற தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் சத்துணவு வழங்கப்பட வேண்டும் என்று எங்களது காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சத்துணவில் வாரத்திற்கு 2 முட்டைகள் என்பதை, வாரத்திற்கு 3 முட்டைகள் என வழங்க உத்தரவிட்ட இந்த அரசுக்கு, அனைத்துத் தாய்மார்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தந்த மாவட்டங்களில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுவிற்குக் கோழிப் பண்ணைகள் வைப்பதற்குக் கடன் கொடுத்து அவர்களின்மூலமாகவே இந்த முட்டைகளைப் பெற்றால், பெண்களுக்கும், தங்கள் சொந்தக் காலில் நிற்க முடியும் என்ற தன்னம்பிக்கை பிறக்கும். இரண்டாவது, எங்காவது சத்துணவு அமைப்பாளர்கள் இந்த முட்டைகளைச் சரிவரக் குழந்தைகளுக்குத் தராமல் இருந்தார்கள் என்று சொன்னால், இந்த சுய உதவிக் குழுக்களில் உள்ள பெண்களே அதையும் பார்த்துக்கொள்வார்கள். இங்கே அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள், உருளைக் கிழங்கு தருகிறார்களா, கொண்டைக் கடலை தருகிறார்களா என்றெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தார்கள். எனக்குத் தெரிந்த வரை, வியாழக்கிழமைதோறும் 20 கிராம் உருளைக் கிழங்கும், வெள்ளிக்கிழமைதோறும் 20 கிராம் கொண்டைக் கடலையும் கொடுத்தார்கள். 3-வது முட்டையை, என்று தரப் போகிறார்கள் என்று தெரியவில்லை.

இதன்படி நீங்கள் பார்த்தீர்கள் என்று சொன்னால், National Recommendations Committee, மத்திய அரசின் சத்துணவு ஆலோசனை கமிட்டியின்படி, தேவையான புரோட்டீன் மற்றும் கலோரிகள் அதிக அளவில் நம்முடைய குழநதைகளுக்குக் கிடைக்கின்றன என்பதை, ஒரு மருத்துவர் என்ற முறையில் நான் மிகவும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். இவ்வாறு சத்துணவுத் திட்டங்களை அரசு வழங்குவதால் மாணவர்களின் வருகை சதவிகிதமும் உயர்ந்துள்ளது. இதனால் பெருந் தலைவர் காமராஜர் தொடங்கிய இத்திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதற்காகவும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



Rubella Vaccine என்று சொன்னாலே, நம்முடைய அமைச்சர் அவர்கள் மருத்துவர் என்ற முறையில் புரிந்துகொள்வார்கள் என்று நினைக்கின்றேன். 14 வயது சிறுமியருக்கு, 9th standard படிக்கும் பெண்களுக்கு இந்த Vaccine-ஐ நாம் போட்டுவிட்டோம் என்று சொன்னால், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள், blindness, deafness, congenital mal-formation இல்லாமல் பிறக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இந்த அரசு எல்லாப் பெண்களுக்கும் 14 வயதில் Rubella Vaccine-ஐப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, அங்கன்வாடியின் infrastructure-ஐயும் develop செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Last but not the least; சமூக நலத் திட்டங்களின்மூலம் அரசு உதவிகள் பெறுவதற்கு ஆண்டு வருமான வரம்பு ரூ. 12 ஆயிரம் என்றிருக்கிறது. அதற்கு எல்லோருமே பொய் Certificate-களை வாங்கித்தான் submit செய்கிறார்கள். ஆகையால், அதை ரூ.24 ஆயிரமாக உயர்த்த வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

உடல் ஊனமுற்றோருக்கு அடையாள அட்டை பெறுவதில் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. Blind people-ஐ, கண் பார்வையற்றோரை நீங்கள் பார்த்தீர்களானால், அவர்கள் தலைமை அலுவலகத்தைத் தேடிச் சென்று அடையாள அட்டையைப் பெறுவதில் மிகவும் சிரமப்படுகின்றார்கள். ஆகையால், சிறப்பு முகாம் அமைத்து இந்த அட்டைகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Gender Budgeting என்று பார்த்தீர்களானால், இந்த அரசு 35-லிருந்து 40 விழுக்காடு பெண்களுக்காக ஒதுக்கீடு செய்திருக்கிறது. அதுவும் சமூக நலத் துறையில் ரூ.1,250 கோடியில் 900 கோடி ரூபாய் women-க்கே வந்து சேர்ந்திருக்கிறது என்பதற்கும் பாராட்டுகிறேன்.

இறுதியாக, எனது தொகுதிப் பிரச்சினைகளுக்கு வர விரும்புகிறேன். பின்தங்கிய தொகுதியான எனது மதுராந்தகம் தொகுதியில் உள்ள படாளம் சர்க்கரை ஆலை செயல்படாமல் உள்ளது. இது குறித்து சென்ற ஆண்டு நான் கோரிக்கை வைக்கும்போது, நம் முதல்வர் அவர்கள் மீண்டும் அதைச் செயல்பட வைப்பேன் என்று உறுதி கூறினார்கள். அது பற்றி ஆராய்ந்து, அதை மீண்டும் செயல்பட வைக்க சுமார் 100 கோடி ரூபாய் நிதி தேவைப்படும் என்ற நிலையில், அதனுடைய மறு சீரமைக்கும் பணி அப்படியே நிற்கிறது. எனவே, "ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணும்" தன் பெயரிலேயே கருணையையும், நிதியையும் கொண்ட தமிழக முதல்வர்

அவர்கள் என் தொகுதி மக்கள்மீது பரிவுகொண்டு, கடந்த ஆட்சியில் மூடப்பட்ட படாளம் சர்க்கரை ஆலையினை விரைந்து திறப்பதற்கான உத்தரவினை வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

e-governance, e-administration, e-tender, e-library எல்லாம் கொண்டு வரும் இந்த அரசுக்கு, மருத்துவர் என்ற முறையில் e-medicine கோரிக்கையையும் வைக்க ஆசைப்படுகிறேன். இதுதான் Tele-medicine எனப்படும். இந்த வசதியை சென்னை, பொது மருத்துவமனையிலிருந்து எனது தொகுதியில் உள்ள மதுராந்தகம் மருத்துவமனைக்குச் செய்து கொடுத்தால், குறைந்த மருத்துவர்களோடு, நிறைந்த வசதியை மதுராந்தகம் மக்கள் அடைய முடியும் என்பதை மருத்துவரான நான் கூறக் கடமைப்பட்டுள்ளேன். மேற்கூறிய கோரிக்கை நிறைவேற்றப்பட்டால், தற்பொழுது செங்கல்பட்டு மருத்துவமனைக்கு refer செய்யப்படும் அனைத்து நோயாளிகளுக்கும் மதுராந்தகத்திலேயே மருத்துவ உதவி அளிக்க முடியும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தைச் செயல்படுத்த, முதலீடாக சுமார் 6 இலட்சம் ரூபாய்தான் தேவைப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர், விரைந்து உரையை முடியுங்கள்.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மேலும் இந்த Tele-medicine மருத்துவத்தைத் தொடர்ச்சியாகப் பெறுவதற்கு பி.எஸ்.என்.எல்.க்கு நாம் கட்ட வேண்டிய தொகை மாதம் ரூ.20 ஆயிரம் மட்டுமே தேவைப்படுகிறது. எனவே, இந்த வசதிகளை எனது தொகுதியில் role model ஆகச் செயல்படுத்துமாறு, ஒரு மருத்துவர் என்ற முறையில் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி என்ற மூன்று எழுத்தின் நிறைவானவரே!
நலன்களைக் கொடுக்கும் என் கோரிக்கைகளை ஏற்பவரே!
நல் சமுதாயத்தின் சிற்பியாக நாளைய வரலாற்றில் நிற்பவரே!
நல் எண்ணத்துடன் நான் இங்கு வைத்த
விண்ணப்பங்களுக்குச் செவி சாய்ப்பவரே!
அஞ்சுகத் தாய் பெற்றெடுத்த அருமைப் புதல்வரே!
அஞ்சாமல் சொல்கிறேன் என் கோரிக்கை நிறைவேறும் என்று!
வாய்ப்பு அளித்தமைக்கு வணங்குகிறேன்!
வரப் போகும் நன்மைகளுக்காக நன்றி கூறுகிறேன்!.

நன்றி. வணக்கம். ஜெய்ஹிந்த்.



**திருமதி செல்வி ராமஜெயம்:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், மாண்புமிகு உறுப்பினர் திருமதி கமலாம்பாள், (குறுக்கீடுகள்) என்ன?

**திருமதி பதர் சயீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு பேர் எழுந்து நிற்கிறீர்கள். உங்கள் இரண்டு பேரில் யார் பேசப்போகிறீர்கள்?

**திருமதி பதர் சயீத்:** உறுப்பினர் பேசினார்கள். அந்தப் பாதுகாப்பு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் டாக்டர்.

**திருமதி பதர் சயீத்:** கொஞ்சம் கேளுங்கள். அவர் டாக்டரா? தெரியவில்லை. Sorry, very sorry; எனக்கு உறுப்பினர் என்பதுதான் தெரியும். Anyway, sorry. பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் பற்றிக் குறிப்பிட்டார்கள். She said that this Government has brought it. I want to correct that situation. புரட்சித் தலைவி அம்மாதான் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். One more, may I just request you. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திருமதி கமலாம்பாள். (குறுக்கீடு) No, No. I am not allowing.

***திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டம் பற்றிய மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் தியாகச் செம்மல் திரு. கோ.க. மணி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'தொட்டிலை ஆட்டும் கை. தொல்லுலகை ஆளும் கை' என்பது தமிழில் வழங்கப்பட்டு வரும் முதுமொழியாகும். நாடு என்பதும், சமூகம் என்பதும் மக்களைக் குறிப்பது. மக்கள் அனைவரும் அன்னை வயிற்றில் பிறந்து, அன்னையின் அரவணைப்பில் வளர்ந்தவர்களே! எனவே, இந்த மக்கள் சமூகம் முழுவதும் அன்னையின் பெரும்

கொடையாகும். பெண்களைப் போற்றிய பெருங் கவிஞர் பாரதி புதுமைப் பெண்களின் வரவிற்குக் கட்டியம் கூறியவர்.

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கிஇவ் வையம் தழைக்குமாம்"

என்றும்,

"எட்டு மறிவினில் ஆணுக் கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி"

என்றும் பாரதியார் அன்று பாடினார். அதுபோல, இன்று புதுமைப் பெண்களெனப் புறப்பட்ட பெண்களுக்கு நல்ல பல இலவசத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் முண்டாசு கட்டாத பாரதியாக இன்று பாடுகிறார்.

"பெண்ணடிமை தீருமட்டும் பேசும்திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே"

என்பதுபோல, மக்கள் தொகையில் சரி பாதியாக உள்ள பெண்கள் முன்னேற்றம் அடையாமல் போனால், எவ்வித வளர்ச்சியும் முழுமைபெறாது. எனவேதான், பெண்களுக்குச் சம உரிமை, சம பங்கு, சம அந்தஸ்து, சம வாய்ப்பு என, பெண்ணுரிமைக் காவலரும், சமூக நீதிப் போராளியுமான எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள் தாடியில்லாத பெரியாராக, முடக்கப்பட்ட பெண்ணுரிமைக்காக, மது, ஆபாசத்திற்கு எதிராகப் போராடிக்கொண்டு வருகிறார். 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்று பாரதி அன்று பாடினான். இன்று பெண்களை மிகக் கேவலமாகச் சித்தரித்து எதைப்பார்த்தாலும், புத்தகம், சினிமா, சிகரெட், மது, எதில் பார்த்தாலும் பெண்களை விளம்பரங்களில் கேவலப்படுத்துகிறார்கள், பணம் பண்ணுவதற்கு.

அதேபோல, சின்னத் திரை, பெரிய திரையில் ஆபாசமாக, அதாவது அறையிலே நடப்பதை அம்பலத்திலும், வன்முறைகளிலும், கொடுமைகளிலும் பல கேவலங்களை எல்லாம் சின்னத் திரைகளில் காட்டுகிறார்கள். பாரதியார் இருந்திருந்தால் அந்தச் சின்னத் திரையை, பெரிய திரையை டார் டாராகக் கிழிப்பார். இப்போது நம்முடைய கலைஞர் அவர்கள் அதற்கெல்லாம் தடை உத்தரவு நிச்சயமாகப் போடுவார். அதேபோல நான் ஒன்று சொல்கிறேன்.



மேற்கத்திய கலாச்சாரமாம். அது என்ன கலாச்சாரம்? ஒட்டுத் துணியிலே உடம்பைக் காட்டிக்கொண்டு ஒய்யார நடை நடந்து உலக அழகிப் போட்டி என்று அதைக் கொண்டு வந்து, மேற்கத்திய கலாச்சாரம் என்று, மொழியையும், பண்பாட்டையும் சீர்குலைத்து வருகிறார்கள். இதையும் நம்முடைய கலைஞர் அவர்கள் தடை செய்வார் என்பது நிச்சயம். அவர் தமிழ்ப் பற்று உடையவர். கண்ணகி சிலையைக்கூட மீண்டும் கொண்டு வந்து, தமிழ்ப் பண்பாட்டை நிலைநிறுத்தியவர். அதனாலே தமிழ்ப் பெண்களுக்காக, அவர் நிச்சயம் ஆபாசத்தையெல்லாம் ஒழிப்பார் என்று நான் இந்த நேரத்திலே உங்களிடத்திலே கூறிக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

குழந்தைகள் சமுதாயத்தின் அரிய, பெரிய சொத்தாகும். குழந்தைகள் வளர்ச்சிதான் எதிர்காலத்தின் சமூக வளர்ச்சியாகும். அதனால்தான் அந்தக் குழந்தைகளுக்கு முட்டை, முட்டை, முட்டை; வாரத்திற்கு மூன்று முட்டை. ஊட்டு, ஊட்டு, ஊட்டு என்று குழந்தைக்குத் தாய்போல கலைஞர் ஊட்டுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல, முட்டையோடு, பாலும், பழமும் சேர்ந்து ஊட்ட வேண்டும். அவர் தாயாக இருந்து குழந்தைகளுக்கு அதைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாநில அளவில் குழந்தைகள் ஆணையம் அமைக்க வேண்டும். ஏனென்று சொன்னால், ஒருங்கிணைப்பு இல்லையென்றால், அந்தக் குழந்தைகள் வளர்ச்சிபெறாது. கருவுற்று இருக்கின்ற கர்ப்பிணிப் பெண்களுக்கும் மற்றும் தொடர்ந்து இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்த பெண்களுக்கும் உதவித் தொகை வழங்கி வருகிறார்.

அதேபோல, 10 ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு வழங்குகின்ற திருமண உதவித் தொகையை 8 ஆம் வகுப்பு படித்தவர்களுக்கும் அவர் வழங்க வேண்டும். இன்னும் நிறைய இருக்கின்றன. மேலும், இந்த உதவித் தொகையை ரூ.15 ஆயிரத்திலிருந்து ரூ. 20 ஆயிரமாகக் கொடுக்க வேண்டும். ஏனென்றால், அவர்தான் தாய் ஆயிற்றே! குழந்தைகளுக்கு, அதுவும் பெண் குழந்தைகளுக்குத் தாராளமாகச் செய்வார். தாய் என்றால் பெண்களின்மேலே ரொம்பக் கருணை இருக்கும் இல்லையா? அதுபோல, நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள், இந்தத் தொகையை ரூ.15 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாக உயர்த்த வேண்டுமென்று, பெண்களுக்காக நான் இதைக் கேட்டுக்கொள்கிறேன்.

பெண்களுக்கென்று ஒரு தனி வாரியம் அமைக்க முன்வர வேண்டும். மேலும், பெண்கள் சுய உதவிக் குழுவிற்குப் போதிய நிதியுதவி அளிக்கும் வகையில், மகளிர் வளர்ச்சி வங்கி உருவாக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கோயில்களில் எல்லோரையும் அர்ச்சகராக நியமனம் செய்கிறார்கள். எல்லாக் கோயில்களிலும் ஆண்களைப்போல பெண்களையும் பெண் அர்ச்சகர்களாக நியமிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே உங்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

விதவைப் பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் உதவித் தொகையை, அலையவிடாமல் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3,000, 5,000 பேர் O.A.P.—அதாவது, முதியோர் உதவித் தொகை கோருகிறார்கள். English-ல் பேசக் கூடாது. வந்துவிட்டது. நான் கேட்கிறேன். (குறுக்கீடு) உடம்பு சரியில்லை. தொண்டை வலிக்கிறது. கிராமப்புறங்களில் வயதான ஏராளமானவர்கள் சாப்பாட்டிற்காகத் திண்டாடுகிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள் எல்லாம் தருமபுரி மாவட்டம், எனக்கு நன்றாகத் தெரியும், எல்லா மாவட்டங்களிலும் சுற்றிக்கொண்டு இருந்தேன் அல்லவா? அப்போது பார்த்தோம் என்றால், தருமபுரியிலிருந்தும், ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டிலே எல்லா மாவட்டங்களிலிருந்தும் வேலைக்கு எல்லோரும் வந்துவிடுகிறார்கள். இப்போது இங்கே செங்கல்பட்டு மாவட்டத்திலே எத்தனை கம்பெனிகள் இருக்கின்றன? எல்லா கம்பெனிகளிலும் அந்த ஆட்கள்தான் நிறைய இருக்கிறார்கள். எல்லோரும் பெற்றோரை விட்டுவிட்டு வந்துவிடுகிறார்கள். அந்தப் பெற்றோருடைய நிலைமை என்ன ஆவது? அவ்வளவுதான். அவர்கள் என்ன பண்ணுவார்கள்? எனக்கு 68 வயதாகிறது. இன்னும் 2 வயது போனால் 70 வயது. அப்போது என்னை மாதிரி இருக்கின்ற ஆட்கள் எல்லாம் என்ன பண்ணுவார்கள் பிள்ளைகள் எல்லாம் விட்டுவிட்டுப் போய்விட்டால்? அதனாலே அந்த வயதான குழந்தைகள்—அவர்கள் குழந்தைகள் மாதிரி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மையார் அவர்களுக்கு, அவர்



அடுத்த முறை எம்.எல்.ஏ.-வாக வந்தால் எம்.எல்.ஏ. சம்பளம் கிடைக்கும். இல்லாவிட்டால், பென்ஷன் கிடைக்கும்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** நான் எனக்காகக் கூறவில்லை அய்யா! வயதானவர்களுக்காக கூறுகிறேன். என்னைப்போன்ற வயதானவர்களுக்காக என்று சொன்னேன். எனக்கு அல்ல. பெற்றோருக்கு, அப்பா, அம்மாவிற்கு எந்தப் பிள்ளைகள் சோறு போடுகிறார்கள்? அவர்களை என்ன பண்ணுகிறார்கள் என்றால், வயதானவுடனே, 'சனியனே, சாகவில்லையா, போ, என் முன்னே நிற்காதே' என்று, தோட்டத்திலே கொண்டு போய்ப் போட்டுவிடுகிறார்கள். பாருங்கள், நீங்கள் வேண்டுமானால் தெரு, திண்ணையிலே, அவர் வயல் வெளிக்கெல்லாம் போய்விட்டுக் கிடப்பார். உண்மையிலேதான். எந்தப் பிள்ளையும் தாயையும், தகப்பனையும் நிச்சயமாகக் கவனிப்பதில்லை. எங்கேயோ ஒருவர் கவனிக்கிறார். அதனால், அந்தத் தாய்போல் இருக்கிற எங்களுடைய முதல்வர் கலைஞர் 60 வயதான எல்லோருக்கும்—அவர் பணக்காரராக இருந்தாலும் சரி, ஏழையாக இருந்தாலும் சரி, எவ்வளவோ இலவசத் திட்டங்களைத் தந்த கலைஞர் அவர்கள் 60 வயதானவர்கள் எல்லோருக்கும்—உதவித் தொகை, அதாவது முதியோர் ஓய்வூதியம் கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே அவரைத் தாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-20

அடுத்து, படித்த பெண்கள் எண்ணிக்கை அதிகரித்த நிலையில், அதிகமான பெண்கள் சமுதாயத்திலே வேலைவாய்ப்பினை எதிர்நோக்கி உள்ளார்கள். வேலை கிடைத்திடும் பெண்கள், தங்கள் குடும்பத்தாரையும், ஊரையும்விட்டு, பணிபுரிய வெளியூருக்குச் செல்ல வேண்டியுள்ளது. அவர்களுக்குத் தங்கும் வசதி பிரச்சினையாக உள்ளது. பெரும்பான்மையான பெண்கள் சிறந்த தங்கும் இடத்தில், குறைந்த வாடகையிலும், வசதியாகவும், நல்ல சூழ்நிலையில் பாதுகாப்புடனும் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். பணிபுரியும் பெண்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த தங்கும் இடத்தைக் கட்டித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எல்லா மாவட்டங்களிலும் ஆதரவற்ற முதியோர் இல்லம் கட்டித் தர வேண்டும். காஞ்சிபுரம் நகரில் மையப் பகுதியான காமராஜர் நகரில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, தனியார் ஆண்கள் உயர்நிலைப்

பள்ளி, வட்டாட்சியர் அலுவலகம், போக்குவரத்துத் தலைமை அலுவலகம், மத்தியக் கூட்டுறவு வங்கி, நெல் மண்டி, பேருந்து நிலையம் மற்றும் ஓட்டல்கள், கடைகள் இருப்பதால், எப்பொழுது பார்த்தாலும் நெரிசலாக இருக்கிறது. அந்த இடத்தில் ஒரு சுரங்கப் பாதை கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் நகரில் நெரிசலைக் குறைக்க, காஞ்சிபுரம் பொன்னேரிக் கரையிலே புதிய பஸ் நிலையம் ஏற்படுத்தி, எல்லா மாநில பஸ்களும் அங்கு வந்து செல்ல ஏற்பாடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் கோயில்கள் நிறைந்த நகரம். அங்கே தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசிக்க வருகிறார்கள். பெண்கள் மற்றும் குழந்தைகள் இயற்கை உபாதையைக் கழிக்கக் கஷ்டப்படுகிறார்கள். ஆண்கள் எல்லோரும் போய்க் குளத்தில் குளித்துவிடுகிறார்கள்; எல்லாம் செய்கிறார்கள். பெண்கள் அந்த இடத்தில் எங்கேயும் போக முடியாமல் தவிக்கிறார்கள். நான் கோயிலுக்குப் போனபோது இதை என்னிடம் சொன்னார்கள். அதனால், அங்கே தங்கும் விடுதியைக் கட்டித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் அறிக்கையிலே முதல்வர் அவர்கள், காஞ்சிபுரத்திலே ஜவுளிப் பூங்கா அமைக்கப்படும் என்று சொன்னார்கள்; அதை உடனடியாகக் காஞ்சிபுரத்திலே அமைத்தால், அதனால் பலருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தர முடியும். எனவே, அதை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரத்தில் பெண்களுக்கென சிறு தொழில் செய்ய ஏதுவாக, தொழிற்பயிற்சி மையங்கள், சிறு தொழில் மையங்கள் மற்றும் தொழிற்பேட்டை நிறுவ முன்வர வேண்டும். எங்கள் மாவட்டத்தில்தான் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் இருக்கிறார். அதை, அவர், கலைஞர் அவர்களிடம் சொல்லி, அங்கே நிறையத் தொழிற்சாலைகளை அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாத் தொகுதிகளிலும் எல்லாத் தொழிற்சாலைகளும் இருக்கின்றன. காஞ்சிபுரத்தில் ஒரு தொழிற்சாலைகூட இல்லை. அங்கே எல்லோரும்—பெண்களும், ஆண்களும் நிறையக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனால், நிறையத் தொழிற்சாலைகளைக் கட்டி, அவர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



எல்லா அங்கன்வாடி கட்டடங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டும். வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

ஊட்டச் சத்துப் பணியாளர்களுக்கும், சத்துணவுப் பணியாளர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். வேலை நியமனம் செய்வதில் இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்ற வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். Gas இணைப்பை ஊட்டச் சத்து மையத்திற்கு வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு, அவர்கள் ஓய்வுபெற்றபின் ஓய்வூதியம் வழங்க வேண்டும். ஓய்வுபெறும்போது வழங்கப்படும் தொகை ரூ.50 ஆயிரத்தை ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தித் தர வேண்டும். காஞ்சிபுரத்தில் மகளிர் நீதிமன்றம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

ஊனமுற்றோருக்கென தனி வாரியம் அமைக்க வேண்டும். ஒவ்வொரு கல்வி நிலையிலும் நல்ல மதிப்பெண் பெறும் ஊனமுற்ற மாணவ, மாணவிகளுக்கு மேற்படிப்புக்கான அனைத்து உதவிகளையும் அரசே ஏற்க வேண்டும். 1972 ஆம் ஆண்டு முதல் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையில் மாவட்டந்தோறும் பணியாற்றும் பார்வையற்ற பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு, இளநிலை உதவியாளர்கள் அந்தஸ்தில் வேலையில் சேர்ந்த நாள் முதல் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும்.

சமூக மேம்பாட்டுப் பணிகள் செய்து வரும் தொண்டு நிறுவனங்கள் சில முறைகேடாகச் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. அவற்றை அதிகாரிகள் சரிவரக் கண்காணிப்பதில்லை. தொண்டு நிறுவனங்களை அரசு ஆய்வு செய்து, முறைகேடானவற்றை இரத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் நகரில் போக்குவரத்து நெரிசலைப் போக்கவும், அனைத்து மாநிலப் பேருந்துகள் வந்து செல்வதற்கும்—இதை ஏற்கெனவே சொல்லிவிட்டேன்—காஞ்சிபுரத்திலிருந்து சென்னை செல்ல இரவு 10-00 மணிக்குமேல் பேருந்துகள் கிடையாது. அதனால், வேலூர், பெங்களூரிலிருந்து வரும் பேருந்துகளை இரவு 10-00 மணிக்குமேல் காஞ்சிபுரம் வழியாகச் சென்னை செல்லப் புதிய தடங்களை ஏற்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் புதிய இரயில் நிலையம் அருகில் போக்குவரத்து நெரிசல்களைத் தவிர்க்க புதிய மேம்பாலம் கட்ட மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நெசவாளர்கள் மற்றும் விசைத்தறியாளர்கள், நெய்பவர்கள், கூட்டுறவுச் சங்கத்தில் வீட்டுக் கடன் பெற்றுள்ளார்கள். அந்தக் கடனைத் தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொர்ள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

தையல் தொழில் தெரிந்த ஏழையெளிய பெண்களுக்கு 5,050 தையல் மெஷின்கள்தான் இந்த ஆண்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. அது போதுமானதாக இல்லாததால், கூடுதல் பெண்கள் பயன்பெறும் வகையில், தையல் மெஷின்கள் கூடுதலாக வழங்கப்பட வேண்டும்.

அரசுப் பணியாளர்கள் இயற்கை எய்திய நாள் முதல், அவர்களுடைய வாரிசுதாரர்கள் 3 ஆண்டுகள் முடிவுறும் முன்பாக கருணை அடிப்படையில் வேலை வழங்கக் கோரி விண்ணப்பம் செய்திட வேண்டும் என்றும், இக்காலக்கட்டத்திற்குள் அவர்கள் 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும், 8 ஆம் வகுப்பு தேர்ச்சிபெற்றவராகவும் இருத்தல் வேண்டும் என்றும் உள்ளது. இது யதார்த்த முறைக்கு ஏற்றதாக இல்லை. கருணை அடிப்படையில் வேலை வழங்குவதில் உள்ள கட்டுப்பாடுகள் களையப்பட்டு, அரசாணை எண் 120-ல் வெளியிடப்பட்டுள்ள நாளுக்கு முந்தைய நாளே தொடங்க வழிவகை செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வாய்ப்பினைத் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

***திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன், சத்துணவு திட்டத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்காக வாய்ப்புத் தந்தமைக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். கடந்த 10 மாத காலத்தில், ஏழையெளிய மக்களுக்காக, குறிப்பாகப் பெண்களுக்காகப் பல்வேறு நலன்களை நிறைவேற்றியுள்ள தமிழக முதல்வர் அவர்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். இத்துறையின் அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.



மாணவர்களுக்கு இலவச சைக்கிள், கல்லூரிவரை இலவசக் கல்வி, பெண்கள் திருமணத்தின்போது ரூ.15,000 உதவி, கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.6 ஆயிரம் உதவி, முதியோர், விதவைகளுக்கு ரூ.400 உதவி, ஊனமுற்றோர்களுக்கு நல வாரியம் எனவுள்ள பல்வேறு நலத் திட்டங்களை மனமுவந்து வரவேற்கிறோம். ஏழையெளிய பெண்களுக்கு உதவும் அரசினுடைய இந்தத் திட்டம், முழுமையாக அவர்களைச் சென்றடைய வேண்டும் என்பதே எங்களின் விருப்பம். இத்திட்டத்தில் நடைமுறையில் இருக்கக்கூடிய சில நிபந்தனைகளைத் தளர்வு செய்து, யதார்த்தமான, சாத்தியமான நிபந்தனைகளை முன்மொழிவு செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், இந்தத் துறையின் அமைச்சர் அவர்களும் கனிவோடு பரிசீலனை செய்யக் கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டத்தில், மாத வருமானம் ரூ.12 ஆயிரத்தின்கீழ் இருக்க வேண்டும் என்று கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், மாவட்டங்களில் இருக்கக்கூடிய கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளிட்ட அதிகாரிகள், குறைந்தபட்ச வருமானம் ரூ.15,000 வரை என்று பதிவு செய்கிறார்கள். இதன் காரணமாக, இந்தத் திட்டத்தின் நிதி உதவியை, சாதாரணப் பெண்கள் பெற முடியவில்லை. ஆகவே, சமூக நலன் கொள்கை விளக்கக் குறிப்பிலே உள்ள, ரூ.12,000/-க்குக்கீழ் என்கிற வருமான வரம்பை, குறைந்தபட்ச வருமானம் ரூ.15,000 ஆகக் கொண்டு, அதற்குமேல் உயர்த்த வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின்மூலம் கேட்டுக்கொள்கிறேன். மனு செய்த அனைவருக்கும், முறையான விசாரணை செய்து, பயன்பெறும் பெண்களின் எண்ணிக்கையை உயர்வு செய்ய வேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

இஸ்லாமியப் பெண்கள் திருமண உதவித் தொகை பெறுவதற்கான பொது நிபந்தனைகள், 10 ஆம் வகுப்பில் இருந்து 8 ஆம் வகுப்பு எனக் குறைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். விதவை மகள், ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதியுதவி, இத்திட்டத்தில் 8 ஆம் வகுப்பு வரை படித்திருகக வேண்டும் என்ற நிபந்தனையால் அரசினுடைய நிதியுதவி அரசிற்கே திருப்பி அனுப்பபப்படுகிறது என்பதை அறிகிறேன். ஆகவே, விதவையினுடைய மகள் திருமணத்தில், கல்வி நிபந்தனையாக இருப்பதைக் காட்டிலும் விதவையினுடைய மகள் திருமணத்திற்கு, உதவி என்பதை மட்டும் தகுதியாக்கிட வேண்டும். விதவைப் பெண்களுக்கான உதவித் தொகை

ரூ.400 பெற, 45 வயதிற்குமேல் இருக்க வேண்டும் என்று கூறி மனுக்கள் நிராகரிக்கப்படுகின்றன. உனக்குக் கையும், காலும் நன்றாக இருக்கிறது, உழைத்துச் சாப்பிடு என்று 40 வயது விதவைப் பெண்ணிடம் அரசு அதிகாரிகள் கூறுகிறார்கள். இத்தகைய உபதேசம் செய்கிற அதிகாரிகள், நம்முடைய விதவைப் பெண்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற தமிழக அரசினுடைய கொள்கையைப் புரிந்துகொண்டு செயல்பட மறுக்கிறார்கள். ஆகவே, 20 வயதில் ஒரு பெண் விதவையாக இருந்தாலும், அந்தப் பெண்ணுக்கு ரூ.400 உதவித் தொகை கிடைக்க அரசு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வருவாய் வரம்பைத் தளர்த்த வேண்டும். அதேபோன்று மகன் இருந்தாலும் முதியோர்களுக்கு பென்ஷன் வழங்கப்படும் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் அறிவித்தார்கள். அரசாணை வழங்கப்படவில்லை. விரைவில் அரசாணை வழங்கி, முதியோர்களுக்கு ஆண் மகன்கள் இருந்தாலும், பென்ஷன் வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுகிறேன். இந்தத் திட்டத்திலும், அசையும், அசையாச் சொத்து ரூ..5,000 வரை இருக்கலாம் என்பதை மாற்றி ரூ.7,000 வரை இருக்கலாம் என்பதை அறிவிக்க வேண்டும். சத்துணவு மற்றும் அங்கன்வாடிகளில் பணியாற்றும் இலட்சக்கணக்கான ஊழியர்களுக்கு ஓய்வு வயதை அடையும்போதே பென்ஷன் வழங்க அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர் ஆக்க வேண்டுமென்ற அவர்களது நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

அங்கன்வாடி பணியாளர்கள் காலை 7½ மணி முதல் மாலை 4 மணி வரை நெருப்பில் போராடி, சமைத்துப் போட்டு, தாயைப்போன்று குழந்தைகளைப் பராமரிக்கிறார்கள். அதே நேரத்தில், காய்கறிகள் 15 பைசா, தாளிப்புப் பொருட்கள் 9 பைசா, எரிபொருள் 11 பைசா என்று, பயனாளிக்கு 35 பைசா என்றுள்ளதை, 75 பைசாவாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 3 முட்டைகள் அவித்துக் கொடுக்க வேண்டிய சூழ்நிலையில், சென்னை போன்ற மாநகரங்களில் விறகு வாங்குவது மிகவும் சிரமம் என்பதைத் தாங்களும் அறிவீர்கள். இலவச எரிவாயு மற்றும் அடுப்பை மக்களுக்கு வழங்கும் தமிழக அர்சு, அதை விஸ்தரித்து, சத்துணவு மற்றும் அங்கன்வாடிகளுக்கும் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.



சத்துணவுப் பணியிடங்களுக்கான காலியிடங்களில் ஏற்கெனவே வேலை செய்துகொண்டு வந்த சமையல் உதவியாளர்களை அங்கே நிரந்தரப்படுத்தவேண்டும். விதவை, ஆதரவற்ற பெண்களுக்கு வேலையில் முன்னுரிமை என்ற அரசின் கொள்கைகள் பல இடங்களில் மீறப்பட்டு இருப்பதாக புகார்கள் வருகின்றன. தகுதியானவர்களுக்கு முன்னுரிமை வழங்க இத்துறை முன்முயற்சி எடுக்க வேண்டும். அதைப்போன்று, அங்கன்வாடிகளில் உதவியாளர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை விடுப்பு வழங்க வேண்டும். மத்திய அரசு வழங்குகின்ற ரூ. 500-250 என்ற ஊதிய முறை உயர்வினை தமிழக அரசு முறையாக ஊழியர்களுக்கு வழங்க வேண்டும். சமூக நலத் துறை முழுக்க முழுக்கப் பெண்கள் சார்ந்த துறையாக இருப்பது பெருமைக்குரிய விஷயம் ஆகும். மேற்பார்வையாளர் முதல் ஊர் நல அலுவலர், திட்ட அலுவலர் என, இவர்கள் அனைவரும் பெண்களே. சுகாதாரம் மற்றும் கல்வித் துறையில் பணியிட மாறுதல் கவுன்சலிங் முறையில் பின்பற்றப்படுவதைப் போன்று இந்தத் துறையிலும் பணியிட மாறுதலில் கவுன்சலிங் முறையைக் கொண்டு வர வேண்டுமென வலியுறுத்துகிறோம். அரசு மறு வாழ்வு இல்லங்களில் பணியாற்றும் காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்களுக்கு சிறப்பு தொழுநோய்ப் படியாக ரூ.20 மட்டுமே 30 ஆண்டு காலமாக வழங்கப்படுவதை உயர்த்த வேண்டும்.

தகுதி அடிப்படையில் சமூக நலத் துறை, ஊனமுற்றோர் மறுவாழ்வுபோன்ற துறைகளிலே பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். அரசு ஆதரவற்ற குழந்தைக் காப்பகங்களில் தொகுப்பூதியத்தில் 14 ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் பெண் ஊழியர்களை நிரந்தர ஊழியர்களாக்கி, ஊதிய விகிதம் வழங்க முன்வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வரதட்சணை ஒழிப்பு மற்றும் குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்தினை அமலாக்கும் மாவட்ட சமூக நல அலுவலருக்கு, அது குறித்த பயிற்சி செயலாக்கத்திற்கான வழிமுறைகள் இத்துறையின்மூலம் வழங்கப்பட வேண்டும். இப்பணிகள், திட்டங்கள் நிறைவேறாத சூழ்நிலைகள் மாற்றப்பட வேண்டும். குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்தில் தற்காலிகமாக சமூக நல அதிகாரி, பாதுகாப்பு அதிகாரியாகவும், சேவை அமைப்புகளில் ஒருவரும் நியமிக்கப்பட்டு உள்ளனர். சரியான வழிகாட்டுதல் மற்றும் புரிதல் இன்றி, செயல்பாடு தொடக்க நிலையிலேயே உள்ளது. தமிழகம் முழுவதும்

எண்ணற்ற பெண்கள் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் ஒரே ஒரு பாதுகாப்பு அதிகாரியால் மட்டும் இதனைச் சரிவரச் செய்திட இயலாது. எனவே, சட்டப்படி, தமிழகத்திலுள்ள அனைத்துக் குற்றவியல் நடுவர் மன்ற எல்லைகளுக்கும் தனித்தனியாக, எந்தத் துறையையும் சாராத, பொதுவான ஒருவரைப் பாதுகாப்பு அதிகாரியாக நியமித்திட வேண்டும். இதன்மூலமே இந்தத் திட்டத்தைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்தவும், பாதிக்கப்படும் பெண்கள் அனைவரும் பயன்படுவதையும் உறுதிப்படுத்த முடியும்.

ஊனமுற்றோர்களுக்கான தனி வாரியத்தை வரவேற்கிறோம். பஸ் பாஸ்களுக்காக அலைவதை விடுத்து, ஊனமுற்றோர்களுக்கான அடையாள அட்டையையே போதுமானதாகக் கருத வேண்டும். யானைக் கால் நோயால் பாதிக்கப்பட்டவர்களை இந்தப் பட்டியலில் இணைக்க வேண்டும். மன வளர்ச்சி குன்றியவர்களுக்கு, உதவியாளரோடு இலவசப் பேருந்துப் பயணம், மாத உதவித் தொகை ஆகிய அறிவிப்புகளையும் வரவேற்கிறோம்.

கடும் மன வளர்ச்சி குன்றியோர் எனக் கொள்கைக் குறிப்பேட்டில் உள்ளதை மாற்றி, பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டதைப்போன்று மன வளர்ச்சி குன்றியோர் கடும் ஊனமுற்றோர் என்பதால் அனைவருக்கும் சலுகை கிடைக்கப் பெற வேண்டும்.

தமிழ்நாட்டில் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் மன வளர்ச்சி குன்றியோர்களுக்கான சிறப்புப் பள்ளிகளில் பணியாற்றும் சிறப்பு ஆசிரியர்களுக்கு அரசு, கால முறை ஊதியம் வழங்க வேண்டும். அப்பள்ளிகளில் தனியார் பள்ளிகளை ஒழுங்காற்றுச் சட்டத்தின் வரம்பிலிருந்து வெளியில் எடுத்து, அப்பள்ளிகள் தனி ஒழுங்காற்றுச் சட்டம்—Special School Regulation Act-ன்படி இயக்கப்பட வேண்டும். அதைப்போன்று, மனநலம் குன்றியோர்களுக்கான பாதுகாப்பு விடுதிகள் நடத்தும் அமைப்புகளுக்கு அரசு உதவ வேண்டும். எனது தொகுதியில் காரோடு என்ற பகுதியில் இந்த அமைப்பு உள்ளது. அரசின் சார்பிலும், மனநலம் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்க அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டுகிறேன்.

மதுரைப் புறநகர் மற்றும் தருமபுரி, கிருஷ்ணகிரி பகுதிகளில் பெண் சிசுக் கொலை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பாலியல் திருமணத்தால் இளம் விதவைகள் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது. அத்தகைய பகுதிகளில் தீவிரப் பிரச்சாரத்தையும், கண்காணிப்பையும் அரசு மேற்கொள்ள வேண்டும். முதியோர்கள்கூட



அத்தகைய முறையில் விஷம் வைத்துக் கொல்லப்படுவதாகப் பல தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. குடும்பத்திற்குத் தேவையான வருமானம் போதாமையால், வயதான பெற்றோர்களைச் சுமையாக நினைக்கும் இந்தச் சமூகச் சூழலில், அரசு கொள்கை ரீதியாக முதியோர்களைப் பாதுகாக்க, அதற்குரிய ஏற்பாடுகளை இத்திட்டத்தின்மூலமாகச் செய்ய வேண்டும்.

*பிற்பகல் 12-35*

பெண்கள் ஆணையத்திற்குச் சட்ட அந்தஸ்து வேண்டுமென்று தொடர்ந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இம்மாமன்றத்தில் வலியுறுத்தி வருகிறோம். ஆனாலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏனோ சட்ட அந்தஸ்து தர யோசிக்கிறார்கள். பல மாநிலங்களில் பெண்கள் ஆணையம் சட்ட அந்தஸ்து பெற்றிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே, தமிழகத்தில் இருக்கக்கூடிய பெண்கள் ஆணையத்திற்கும் உரிய சட்ட அந்தஸ்தைக் கொடுத்து, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அதற்கான சட்டத்தை இயற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

இந்தியாவிலே 53 சதவிகிதக் குழந்தைகள் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்ற தகவலை மாண்புமிகு மத்திய அமைச்சர் ரேணுகா சௌத்ரி அவர்கள் கூறியுள்ளார்கள். 5 முதல் 12 வயது வரை உள்ள குழந்தைகள் இச்சம்பவத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இந்தியாவிலே 13 மாநிலங்களிலே சர்வே எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் அப்படிப்பட்ட கணக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்கின்றதா? ஆனாலும், தமிழகத்திலே இப்படிப்பட்ட சம்பவங்கள் இன்றைக்கு அமைதியாக நடைபெறுகின்றன. குழந்தைகள் பாதிக்கப்படுகிறபோது, பாதிக்கப்பட்ட குடும்பங்கள் வெளியே சொல்வதில்லை. ஆகவே, பெற்றோர்களுக்கும், குழந்தைகளுக்கும் sexual abuse சம்பந்தமாக விளக்கம் கொடுக்க வேண்டும். பெற்றோர்-ஆசிரியர் கூட்டமைப்பை அடிக்கடி நடத்த வேண்டும். படிப்பில் இதைப் பாடத் திட்டமாகக் கொண்டு வர வேண்டும்.

தமிழக அரசின் போக்குவரத்துத் துறையில் ஓட்டுநராக, நடத்துநராகப் பெண்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையில்கூட இல்லை. சுவாமி ஐயப்பன் மலைக்குப் பெண்கள் செல்லக் கூடாது என்று எழுதப்படாத தடை இருப்பதுபோன்று, போக்குவரத்துத் துறையில் பெண்கள் ஓட்டுனராக, நடத்துனராக இருக்கக் கூடாது என்று விதியில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

அறநிலையத் துறை, நெடுஞ்சாலைத் துறை, நில அளவைத் துறை, இவைகளில் எல்லாம் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் இல்லை. அரசுத் துறைகளில் பெண் என்ற பாரபட்சம் இல்லாமல், அனைத்துத் துறைகளிலும் பெண்களை நியமிக்க அரசு முன்வர வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். குறைந்தபட்சக் கல்வி முடித்த பெண்களுக்கு Attender, Watchman வேலைகள் கிடைக்கப்பெற வாய்ப்பு ஏற்படும். அரசு வாகனங்களை ஆண்களே ஓட்டுகிறார்கள்; ஒரு பெண் ஓட்டுநர்கூட இல்லை என்பதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இவ்வளவையும் கூறி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பத்மாவதி.*

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டுக்கான சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட மானியக் கோரிக்கையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவில் ஓங்கி வையகம் தழைக்கும்" என்பதற்கிணங்க, வறியோரிலும் கடைக்கோடியாக இருக்கின்ற பெண்கள் சமத்துவம் பெற, பெண்களுக்குச் சொத்துரிமை, உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவிகித இட ஒதுக்கீடு அளித்து, 33 சதவிகிதப் பெண்களைப் பல்வேறு பொறுப்புகளில் பணியில் அமர்த்திப் பார்ப்பதோடு மட்டுமின்றி, நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் பெண்களுக்கு 33 சதவிகிதம் இட ஒதுக்கீட்டுச் சட்டமுன்வடிவு வர வேண்டும் என்பதற்காகப் பல்வேறு முயற்சிகளையும், ஆதரவையும் மேற்கொண்டுள்ள நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்தப் பெண்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சென்ற ஆட்சியிலே முடக்கப்பட்ட ஏழைப் பெண்களின் திருமண உதவித் திட்டம். அதை மேம்பட்ட வகையிலே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள்.



**திருமதி பி. பத்மாவதி:** ரூபாய் 15 ஆயிரம் வழங்கியதோடு, விதவைப் பெண்களின் மகள் திருமண உதவித் திட்டம், ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம், கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம், ஏழை விதவை மறுமண உதவித் திட்டம், கர்ப்பிணிப் பெண்களுக்குப் பேறுகாலத்திற்கு முன்பு 3 மாதம், பேறுகாலத்திற்குப் பின்பு 3 மாதம், தலா 6 ஆயிரம் ரூபாய் நிதி. அதேபோன்று, முதியோர்கள் மற்றும் விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கு உதவித் தொகையை உயர்த்தி ரூபாய் 400 ஆக வழங்கிய நமது அரசை நாங்கள் மனதாரப் பாராட்டுகின்றோம். அதே சமயத்தில், இந்த நலன்களைப் பெறக்கூடிய பயனாளிகளுக்கு உரிய காலத்தில், உரிய பலன் கிடைப்பதற்கு அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். மிகவும் பரிதாப நிலையில் பல்வேறு பணிகளைச் செய்துகொண்டிருக்கின்ற வீட்டு வேலை செய்கின்ற தொழிலாளர்கள், அதிலும் குறிப்பாகப் பெண்கள், அவர்களுக்கு நல வாரியத்தை அமைத்து, அவர்களது வாழ்க்கையில் நம்பிக்கையூட்டிய மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்த நேரத்திலே நன்றியுடன் நாங்கள் பாராட்டுகின்றோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12-40*

அதேபோன்று, ஊனமுற்றவர்களுக்கெனத் தனி வாரியத்தை இந்தியாவிலேயே நமது மாநிலத்தில் அமைத்திருப்பதோடு மட்டுமின்றி, மன வளர்ச்சி குன்றியவர்களையும் பாதுகாக்கும்வண்ணம், ஆர்வமுள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்மூலம், ஊனமுற்றவர்களுக்கு, இந்த நல வாரியத்தின்மூலம் நிதி வழங்கலாம் என்ற ஒரு நல்ல அறிவிப்பை, சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற மன வளர்ச்சி குன்றியோரின் மாநாட்டில், தனது உரையில் வெளியிட்ட கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்த நேரத்திலே நாங்கள் பாராட்டுகிறோம்.

அந்த வகையில், எய்ட்ஸ், போலியோவைவிட குழந்தைகளைக் கடுமையாகப் பாதிக்கக்கூடிய, கடுமையான விளைவுகளை ஏற்படுத்தககூடிய தசைச் சிதைவு—muscular destruction என்கின்ற கொடூரமான வியாதியால் பாதிக்கப்படுகின்ற குழந்தைகளின் பரிதாப நிகழ்வை இம்மாமன்றத்தில் கூற நான் விரும்புகின்றேன். இவ்வியாதி பெரும்பாலும், முழுக்க முழுக்க ஆண்களைத்தான் பாதிக்கின்றது. நமது மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு, அவர்கள் மருத்துவராக இருப்பதால், இந்த

வியாதியினுடைய குணங்கள் முற்றிலுமாக நன்கு அவர்களுக்குத் தெரியும் என்பதையும் இந்த நேரத்திலே நான் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். 18 வயதிற்குமேல் உயிர் வாழ முடியாத குழந்தைகள், எந்த வயதில் சாவு வரும் என்பதை முன்கூட்டியே அறிந்துவிடக்கூடிய பெற்றோர்கள், அந்தக் குழந்தைகளைப் பார்த்து, கொடூரமான மன அழுத்தத்தோடு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்தக் குழந்தைகள் கொஞ்சம், கொஞ்சமாகச் செயலிழந்து, கை, கால்கள் முடக்கப்பட்டு, படுத்த படுக்கையாகி, இறந்துவிடுகிறார்கள். திருச்சியில் நர்கீஸ் நிர்மலாதேவி-ஆசைத்தம்பி என்கின்ற தம்பதியின் நெருங்கிய குடும்பத்தில் ஏற்பட்ட இதுபோன்ற சோகச் சம்பவத்திற்குப் பிறகு, இறந்துபோன அந்தக் குழந்தையின் பெயரில் 'டயனியும், நண்பர்களும்' என்ற தொண்டு நிறுவனத்தை 1993-லே பதிவு செய்திருக்கின்றார்கள். அந்த நிறுவனம் இதுவரையில் தமிழகம் முழுவதுமிருந்து கிட்டத்தட்ட 190 பேர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கான பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றது. அதில் 70 குழந்தைகள் இறந்துவிட்டார்கள். 6 குழந்தைகளை அவர்களால் பராமரிக்க முடியவில்லை. மற்ற 114 குழந்தைகளை அந்த நிறுவனம் இன்று பராமரித்து வருகின்றது. இதற்கான முழு விவரங்களையும் மாண்புமிகு நமது முதல்வர் அவர்களிடமும், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடமும் நான் அளித்திருக்கின்றேன்.

வாழ்க்கையின் துன்ப, துயரங்களை மீட்டெடுக்கப் பல்வேறு நலத் திட்டங்களை வாரி வழங்கியுள்ள நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையோடு, ஊனமுற்றோர் பிரிவிலே சிறப்புப் பிரிவை உருவாக்கி, அந்தக் குழந்தைகளைப் பராமரிக்கும் தொண்டு நிறுவனத்தின்மூலமாக, அவர்களுக்கான உதவிகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்நாடு மகளிர் ஆணையம். தமிழ்நாடு மகளிர் ஆணையத்திற்குத் தலைவர் மற்றும் உறுப்பினர்களை அறிவித்திருப்பது மகிழ்ச்சியானது. அதே சமயத்தில், அந்த ஆணையம் சட்டரீதியாக, தன்னாட்சி அதிகாரம் கொண்ட அமைப்பாகச் செயல்பட வேண்டுமென்று நாங்கள் அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். தொடர்ந்து நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கின்ற கோரிக்கைகளுள் இதுவும் ஒன்று. குறிப்பாக, இந்த ஆணையம் என்பது, பொதுவாக, ஒரு சிவில் கோர்ட்டுக்கு என்ன அதிகாரம் இருக்கின்றதோ, அத்தனை அதிகாரங்களும் அந்த ஆணையத்திற்கு உண்டு. எனவே, அந்த



வகையில் அவர்கள் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும். சுதந்திரமாகப் பெண்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். எனவே, அந்த வகையில் இந்த ஆணையம் சிறப்பாகச் செயல்படுவதற்கான ஆக்கபூர்வமான ஆலோசனைகளை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்குவார்கள். அந்த வகையில், ஒரு தன்னாட்சி அதிகாரம் பெற்ற ஓர் அமைப்பாக அது செயல்பட வழிவகுக்க வேண்டும். சட்டரீதியாகச் செயல்பட வழி வகுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம். குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் மத்தியச் சட்டம் 26-10-2006 அன்று அமலுக்கு வந்துள்ளது. தற்காலிகமாக மாவட்ட சமூக நல அலுவலர்கள்தான் பாதுகாப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நமது கொள்கை விளக்கக் குறிப்பிலே இங்கே அளித்திருக்கின்றார்கள். இருப்பினும், காலம் தாழ்த்தாமல் அந்தப் பாதுகாப்பு அதிகாரிகளை உடனடியாக நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பல்வேறு முனைகளில் தாக்குதல்களுக்கு ஆளாகும் பெண்கள் வெளியில் சொல்ல முடியாமல் மன உளைச்சலுக்கு ஆளாகி, சித்தப் பிரமை பிடித்தவர்களாக ஆக்கப்படுகிறார்கள். எனவே, அப்படிப்பட்ட பெண்கள், துணிச்சலாக அவர்களது பிரச்சினைகளை வெளியில் சொல்வதற்கான வகையில், இச்சட்டம் பற்றிய விவரங்களை அறிந்துகொள்ளக்கூடிய வகையில், ஆங்காங்கு விழிப்புணர்வுக் குழுக்களை அமைத்து, நமது அரசு அந்தச் சட்டத்தைப் பற்றிய முழு விவரங்களையும் அடிமட்டத்தில் இருக்கின்ற அனைத்துப் பெண்களுக்கும் சொல்லக்கூடிய வகையில் விளம்பரம் செய்ய வேண்டுமென்று இந்தத் தருணத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-45

இந்திய அளவில் சத்துணவுத் திட்டம் நம்முடைய மாநிலத்தில் முதலிடம் வகிக்கிறது என்பதை நாம் எல்லோரும் பெருமையாக ஏற்றுக்கொள்கின்றோம். இந்தச் சத்துணவில் வாரம் மூன்று முட்டைகளை வழங்கி, ஆரோக்கியமான குழந்தைகளை உருவாக்கும் இத்திட்டத்தை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கின்றோம். அதே சமயத்தில், இந்த மாதிரி முட்டைகள் வழங்குகின்றபோது, அந்த

முட்டைகளை எடுத்து வருவதற்கு ஒன்றியத் தலைமையகத்திற்குச் சென்றுதான் அந்த ஊழியர்கள் அதைப் பெற்று வர வேண்டும். அப்படிச் செல்கின்றபோது, ஒரு முட்டைக்கு 8 பைசா வீதம் அவர்களுக்குப் போக்குவரத்துச் செலவாக அரசு அளிக்கின்றது. எனவே, அவர்கள் சென்று ஒரு மையத்திற்கு 30, 20 அல்லது 25 முட்டைகளுக்குமேல்—அவ்வளவுதான் அவர்களால் எடுக்க முடியும். அந்த வகையிலே அவர்கள் சென்று வருகின்றபோது ஒரு முட்டைக்கு 8 பைசா என்றால், 30 முட்டைக்கு ரூ.2.40 தான் அவர்களுக்கான போக்குவரத்துச் செலவாக இருக்கிறது. எனவே, இந்த நேரத்தில் அவர்களுக்குக் கிடைக்கின்ற அந்தக் குறைந்த ஊதியத்தில்தான் அவர்களது செலவினங்களை ஈடுகட்டக் கூடிய ஒரு நிலை இருக்கின்ற காரணத்தால்தான், மற்ற அரிசி, பருப்பு, அதுபோன்ற பொருட்கள் எவ்வாறு மையத்தில் வழங்கப்படுகிறதோ, அதுபோன்று இந்த முட்டைகளை, நல்ல தரமான முட்டைகளா எனச் சோதித்து அவர்களுக்கு வழங்கினால்தான் உதவிகரமாக இருக்கும். அவ்வாறு வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, சத்துணவு, அங்கன்வாடிகளில் பணிபுரிகின்றவர்களை நிரந்தர ஊழியர்களாக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாக அவர்கள் கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள். எனவே, 27 ஆண்டுகள் அங்கு பணியாற்றியவர்கள் எல்லாம் ஓய்வுபெற்றுக்கூட சென்றுவிட்டார்கள். அப்படிப்பட்டவர்களுடைய, நலனைப் பாதுகாத்து, அதில் படித்தவர்கள், அதேபோன்று பணி மூப்பு, கல்வித் தகுதி, இதையெல்லாம் ஆய்வு செய்து, பிற துறைகளில் இருக்கின்ற வேலைவாய்ப்பிலேகூட அவர்கள் தகுதிக்கேற்ப பணிகளைப் பகிர்ந்தளிக்க வேண்டும். அதற்கான வகையில் அரசு இந்த நேரத்திலே பரிசீலிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். சுமார் 27 ஆண்டு காலம் பணியாற்றி வெளியே செல்கின்றவர்கள், அவர்களுக்கு ஓய்வூதியம் இல்லையென்ற மிகப் பெரிய ஒரு வருத்தத்தைத் தெரிவிக்கின்றார்கள். அதை அரசு பரிசீலித்து, அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோன்று அங்கன்வாடியில் பணிபுரிகின்ற ஊழியர்கள்கூட காலையில் 7 மணிக்குச் சென்று மாலையில் 4 மணி வரையில் அவர்கள் பணியாற்ற வேண்டும். அப்படிக் காலையிலே செல்கின்றபோது அந்தக் குழந்தைகளைக் காலையில் அழைத்துக்கூட



வர முடியாத சூழ்நிலையிருக்கின்றது. 7 மணிக்கு வேலை செய்ய முடியவில்லை. வீட்டிலிருந்து செல்வதுகூட மிகப் பெரிய சிரமமாக இருக்கிறது. எனவே, இந்தக் கால நேரத்தைக் கொஞ்சம் மாற்றி, காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை என்று அந்தப் பணி நேரத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, வட்டாரக் குழந்தை வளர்ச்சித் திட்டக் கூட்டம் மாதம் ஒரு முறை அவர்களுக்கு நடக்கிறது. அவர்கள் எல்லாம் அந்த ஒன்றியத் தலைநகரத்திலிருந்து அந்த மையத்திற்குச் சென்று வர வேண்டும். அவ்வாறு சென்று வருகின்றபோது, அவர்களுக்குப் போக்குவரத்துச் செலவாக ரூ.5 கொடுக்கிறார்கள். இன்றைக்கு பஸ் கட்டண உயர்வு, இவையெல்லாம் இருக்கின்றபோது, 5 ரூபாயில் அவர்கள் சென்று வருவது மிகவும் சிரமமான சூழ்நிலை. எனவே, அதை 50 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அங்கன்வாடியில் பணிபுரிகின்ற அந்த உதவியாளர்களுக்கு வருடம் 365 நாட்களும் பணிகள் இருக்கும். எனவே, இந்த மாதிரியான சூழ்நிலையில், வாரம் ஒரு நாள் லீவு அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய வகையிலே அதில் கொஞ்சம் மாற்றம் செய்து, ஒரு நாள் அவர்களுக்கு லீவு கொடுக்க வேண்டும் என்று இந்தத் தருணத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோன்று, எரிவாயு அடுப்புகளை—நானும் வலியுறுத்திக் கூறுகின்றேன்—என்னவென்று சொன்னால், கிராமப்புறங்களிலே விறகு வாங்கித்தான் செய்ய வேண்டும். எரிபொருள் செலவு அதிகமாகிறது என்று அவர்கள் தரப்பிலே தொடர்ந்து சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். எனவே அதைத் தவிர்ப்பதற்கு—மழைக் காலம் வந்தால் அவர்கள் மிகவும் சிரமப்படுவார்கள். கண்கூடாக நாங்கள் அந்தப் பிரச்சினைகளைப் பார்க்கின்றோம். எனவே, அதைப் போக்குவதற்கு—மாநகரங்களில் எல்லாம் வழங்கப்படுவதுபோன்று எல்லாப் பகுதிகளிலும், எல்லா மையங்களுக்குமே எரிவாயு அடுப்பை வழங்க வேண்டுமென்று இந்தத் தருணத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, சத்துணவு அங்கன்வாடிகளுக்குப் பணியாளர்களை அதிகமாக இப்போது தேர்வு செய்து இருக்கின்றார்கள். மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திருக்கின்றார்கள். அப்படி

அவர்கள் தேர்வு செய்கின்றபோது, விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், நலிவுற்றவர்கள், இன்னும் மையத்திற்கு அருகில் இருக்கின்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று அரசில் சிறபபு மிக்க ஆலோசனைகளை வழங்கியிருக்கின்றார்கள். எனவே, நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த அமைப்பு சிறப்பாகச் செயல்பட, எந்தவிதக் குறுக்கீடும் இல்லாமல், அரசு எந்த நோக்கத்தோடு அறிவித்திருக்கிறதோ, அதை நிறைவேற்ற வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 12-50*

அதேபோன்று, என்னுடைய நன்னிலம் தொகுதிப் பிரச்சினையை நான் கட்டாயமாகச் சொல்லவேண்டும். சத்துணவுத் துறை மானியக் கோரிக்கையாக இருந்தாலும்கூட; இந்த நேரத்திலே ஒரு பிரச்சினையைக் கட்டாயமாக நான் நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடமும், அதுபோன்று நம்முடைய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடமும் ஒரு வேண்டுகோளாக முன்வைக்கின்றேன். என்னுடைய தொகுதியில் பேரளத்திலே, இணை மின் நிலையம் கொண்டு வருவதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, எல்லா வகைகளிலும் எல்லா வேலைகளும் முடிவுற்றுவிட்டன. நிலம்கூட அளந்து முள் வேலி போட்டுவிட்டார்கள். ஆனால், அந்த ஆதீனத்தில் இருந்து நிலம் பெறுவதில், அரசு என்ன விலை நிர்ணயித்திருக்கிறதோ, அந்த விலைக்குக் கொடுப்பதில் ஆதீனம் இணக்கம் தெரிவிக்காத காரணத்தினால், அது தொடர்கதையாகப் போகிறது. தொடர்ந்து மிகவும் பிரச்சினையாக இருக்கிறது. நேற்றையதினம்கூட எனக்குத் தொலைபேசியிலே சொன்னார்கள். உண்ணாவிரதம் மேற்கொள்ளப் போகிறோம் என்று சொல்லி, அந்தப் பகுதிப் பொது மக்கள் அறிவித்திருக்கின்றார்கள். எனவே, உடனடியாக இந்த மிகப் பெரிய பிரச்சினையைத் தீர்த்து வைத்தால்—அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு, மின்சார வெட்டு, குறைந்த மின் அழுத்தம் அடிக்கடி ஏற்படுகிறது; இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உடனடியாக மாண்புமிகு நமது மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு நமது அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் இந்தப் பிரச்சினையிலே கவனம் செலுத்தி, தீர்த்து வைக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பத்மாவதி, உரையை முடியுங்கள்.

**திருமதி பி. பத்மாவதி**: நிறைய இருக்கின்றது. எல்லாவற்றையும் நான் எழுதி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கொடுத்து இருக்கின்றேன். எனவே, அதற்கான கட்டடங்களை அவர் கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, வாய்ப்பிற்கு நன்றி சொல்லி, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி இளமதி சுப்பிரமணியன்.

***திருமதி இளமதி சுப்பிரமணியன்:** குன்றாத நெஞ்சுறுதியும், கொள்கை உள்ளம் கொண்ட மாதர் குல மாணிக்கமே! இருளினை விரட்டும் இலட்சிய தீபமே! சீறி வரும் தடைகளைச் சிதறடிக்கும் சிங்க நிகர் தலைவியே! (மேசையைத் தட்டும் ஒலி) நலிந்தோரை நாடிச் சென்று, நல உதவிகள் வழங்கிட்ட நன்மணியே! கல்லாமையே இல்லை என்னும் தமிழகத்தை உருவாக்கிய கலைவாணியே! இல்லாமையே இல்லை என்னும் தமிழகத்தைக் காண உழைத்திட்ட தமிழ் அன்னையே! வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று கூறிய வள்ளலாரைப்போன்று, பக்தர்களுக்கு ஆலயந்தோறும் அன்னதானத் திட்டம் வழங்கிய அன்னமிட்ட தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) சாதாரணத் தொண்டனாகிய என்னை அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தின் பெருந் தலைவராகவும், அதற்குப் பின் வலங்கைமான் சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளராகவும் என்னை அடையாளம் காட்டிய தாயே! மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பேராதரவால் என்னை நீங்கள் வெற்றிபெறச் செய்து, பேரறிஞர் பெருந்தகை அண்ணா, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்., மாதர் குல மாணிக்கம் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) ஆகியோரெல்லாம் அமர்ந்த இந்த மாமன்றத்தில், சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட மானியக் கோரிக்கையில் பேச அனுமதி வழங்கிய, தமிழகத்திற்கு அடையாளம் காட்டிய மக்கள் தலைவி, எங்கள் குடும்பத்தின் குல விளக்கு, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, என்னை வலங்கைமான் தொகுதியின் சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த வலங்கைமான் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், கூட்டணிக் கட்சியைச் சார்ந்த

அனைத்து நண்பர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தினைக் காணிக்கையாக்கி, பேரவையில் என்னுடைய முதலாவது உரையினை ஆற்றுவதற்கு வாய்ப்பளித்திருக்கும் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எங்களுடைய கொறடா அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இவ்வளவு நேரமும் நீங்கள் subject-க்குள்ளேயே வரவில்லை. (குறுக்கீடுகள்)

**திருமதி இளமதி சுப்பிரமணியன்:** சமூக நலத் துறை என்பதே எல்லாத் துறைகளையும் உள்ளடக்கிய துறையாகக் கொண்டுதான் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. அந்தத் திட்டங்களை முறையாகச் செயல்படுத்தி, மக்களுடைய நல்வாழ்வுக்கும், மேன்மைக்கும் பாடுபட வேண்டியதே ஒரு மக்கள் நலன் காணும் அரசின் ஒரே கடமையாக அமைகின்றது. அப்பொழுதுதான் அந்த அரசு சமூக நலன் பேணும் சேம நல அரசாகப் போற்றப்படுகின்றது.

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும்–இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து–இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்"

என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தும் வகையில்தான், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். திட்டங்களைத் தீட்டி, நாட்டு மக்களை மேன்மையுறச் செய்தார்.

குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டம், இலவச சீருடை வழங்கும் திட்டம், இலவசப் பாடப் புத்தகம் வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி, கல்வி வளர்ச்சியை ஊக்குவித்து, இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களை அளித்து புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பாகச் செயல்பட்டு வந்தார்கள்.

மகளிர் முன்னேற்றத்திற்காக ஏராளமான திட்டங்களை வகுத்து, அவற்றையெல்லாம் செயல்படுத்தி, நாட்டிற்கே வழிகாட்டியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே ஆவார்கள். கிராமப்புறங்களில் உள்ள ஆதி திராவிட மகளிரும் நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக மாறும் வகையில் புதியதோர் திட்டங்களை வகுத்து அம்மா அவர்கள் செயல்படுத்தி வந்தார்கள்.



பிற்பகல் 12-55

பொருளாதாரத்தில் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்பதற்காக, மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்குவதிலும், விரிவாக்குவதிலும் கவனத்தைச் செலுத்தினார்கள். அதன் விளைவாகவே, கிராமப்புறங்களில் ஆயிரக்கணக்கான சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, 2004 ஆம் ஆண்டு வாக்கில் 1,70,802 சுய உதவிக் குழுக்களும், அவற்றில் உறுப்பினர்களாக மட்டும் 28,91,287 பேர்களும் இருந்தார்கள் என்ற புள்ளிவிவரத்தைச் சமர்ப்பிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோன்று, பெண் சிசுக் கொலையைத் தடுப்பதற்காகத் தமிழகத்தில் தொட்டில் குழந்தைத் திட்டத்தினை இதய தெய்வம் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்கள்தான் கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பெண் குழந்தை நலன் மற்றும் பெண் குழந்தை நல வாரிய மத்திய அமைச்சர் ரேணுகா சவுத்ரி அவர்களும், இந்தியாவிலேயே இந்தத் திட்டத்தினைக் கொண்டு வர முடியும் என்று, அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டத்தையே பாராட்டும் வகையிலே அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து மகளிர் காவல் நிலையங்களை உருவாக்கும் திட்டம், பெண் கமாண்டோக்கள் அமைக்கும் திட்டம் போன்றவை உலகம் முழுவதும் போற்றப்பட்டு வருகின்றன. நாடு கடந்து பாகிஸ்தான் நாட்டில்கூட அந்த நாட்டின் பிரதமராக இருந்த திருமதி பெனாசிர் பூட்டோ அவர்கள்கூட அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைப்பதிலும், பெண் கமாண்டோக்கள் படையை உருவாக்குவதிலும் ஆர்வம் காட்டியுள்ளார்கள்.

உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவிகிதம் இடம் கிடைப்பதற்கான பஞ்சாயத்து ராஜ் சட்டம் கொண்டு வர 1992 ஆம் ஆண்டில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பாராளுமன்றத்திலும், மக்களவையிலும் பஞ்சாயத்து ராஜ் மசோதா நிறைவேற்றப்பட்டாலும், மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட முடியாமல் போய்விட்டது. அரைகுறையாக நின்று விட்ட அந்த முயற்சி, 1992 ஆம் ஆண்டில்தான் நிறைவேறியது. 1994 ஆம் ஆண்டில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தபோதுதான் அந்தத் திட்டத்தினை மாநிலத்தில் செயல்படுத்துவதற்கான தனிச் சட்டமும் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து, சட்டத்துக்குரிய விதிமுறைகளும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் வகுக்கப்பட்டன.

பாராளுமன்றத்திலும், மாநிலங்களின் சட்டமன்றங்களிலும் மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு கிடைப்பதற்கான சட்டம் இன்னும் நிறைவேற்றப்படாத நிலையில்தான் இருந்து வருகிறது. தற்பொழுது உள்ள மத்திய அரசு பதவியேற்ற 4 ஆண்டுகள் நிறைவடையும் நிலையிலும் அந்தச் சட்டத்தை நிறைவேற்ற முடியாத நிலையில்தான் இருந்து வருகின்றது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மத்திய அரசின் உயர் கல்வி நிறுவனங்களில் 27 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கி நிறைவேற்றப்பட்ட சட்டத்தைக்கூட அமல்படுத்த முடியாத நிலையில்தான் மத்திய அரசு அல்லாடிக்கொண்டிருக்கிறது.

குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் திட்டம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். குழந்தைகள் சத்துணவுத் திட்டம் என்ற பெயரில் தொடங்கி, தொடர்ந்து செயல்பட்டு வருவதாக நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. வருமுன் காப்போம் திட்டம், வாழ்ந்து காட்டுவோம் என்ற திட்டமாகவும், உழவர் பாதுகாப்புத் திட்டம், விவசாயிகள் சமூக நலப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் என்று மாற்றப்பட்டதுபோல் இல்லாமல், புரட்சித் தலைவர் அவர்கள் பெயரால் உள்ள திட்டம் அப்படியே தொடரும் என்று கூறியிருப்பது ஆறுதல் அளிப்பதாக இருக்கிறது.

இன்னும் அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட திட்டங்களின் பெயர்களை மாற்றுவதிலும், திட்டங்களையே சிதைப்பதிலும் இந்த அரசு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தையோ, இலவசமாக வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தையோ, இலவச பாடப் புத்தகம் வழங்கும் திட்டத்தையோ, பெண்களுக்கான உதவி வழங்கும் திட்டத்தையோ கைவிட முடியாமலும், பெயரை மாற்ற முடியாமலும் இருந்து வருவதும் ஆறுதல் அளிப்பதாக இருக்கிறது. ரூபாய் 1 கோடியே 99 இலட்சம் மக்கள் வாழும் கருவறை முதல் வாழ்வின் இறுதிக் காலம் வரை பயன் அளிக்கும் முறையில் செயல்படுத்தப்பட்டு வந்த உழவர் பாதுகாப்புத் திட்டத்தையே மாற்றியதை யாராலும் மாற்றவும் முடியாது மறுக்கவும் முடியாது.

காமராஜர் பிறந்த நாளை, கல்வி வளர்ச்சி நாள் என்று அறிவித்து, அந்த நாளிலிருந்து 2 முட்டைகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஏற்கெனவே 1999 ஆம் ஆண்டில் திமுக. ஆட்சியில் இருந்தபோதுதான் காமராஜர் பிறந்த தினம் தியாகிகள் தினமாக அனுசரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இப்பொழுது அதை



மாற்றி, கல்வி வளர்ச்சி தினம் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. எப்படி இருந்தாலும், இரண்டு வகையிலும் அழைக்கப்படுவதற்குப் பொருத்தமானவர் பெருந்தலைவர் காமராஜர் என்பதால், அதனைப் பொறுத்துக்கொள்ளலாம். வாரத்தில் ஒரு முட்டையைக் கூடுதலாக வழங்குவதற்குப் பதிலாக பால் வழங்க முடியுமா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும்.

மகளிர் குழுக்களின் மூலமாகவே கறவை மாடுகள் வாங்குவதற்கு அரசு உதவி வழங்குகின்றது. ஆனால், கறந்த பாலை நல்ல விலைக்குக் கொடுப்பதற்குக்கூட முடியாத நிலையில்தான் பலரும் இருந்து வருகிறார்கள். அந்த நிலையினை மாற்றி, பள்ளிக் குழந்தைகளுக்குப் பால் வழங்கும் திட்டத்தை அமல்படுத்தினால், எல்லா வகையிலும் உதவிகரமாக அமையும்.

இதேபோன்று, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாகவே சத்துணவுத் திட்டத்திற்குத் தேவையான முட்டை, பருப்பு, விறகு போன்றவற்றை வாங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டால், தரமான பொருட்கள் கிடைப்பதற்கும், உள்ளூரில் கிடைக்கும் பொருட்களையே கொள்முதல் செய்வதற்கும் வாய்ப்பு ஏற்படும்.

பிற்பகல் 1-00

சத்துணவுப் பணியாளர்கள் ஓய்வுபெறும்போது, அமைப்பாளர்களுக்கு 50,000 ரூபாயும் சமையல் உதவியாளர்களுக்கு 20,000 ரூபாயும் வழங்கப்படும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அதனை இரு மடங்காக உயர்த்தித் தர வேண்டும் என்ற கோரிக்கையை சத்துணவுப் பணியாளர்கள் முன்வைத்தார்கள். இந்த அரசு அதனை ஏற்றுக்கொள்வதாக அறிவித்தும், நடைமுறைப்படுத்தவில்லை என்று கூறப்படுகிறது. அதனை உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

20 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரிந்து ஓய்வுபெறும் சத்துணவு ஊழியர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கிட வேண்டுகிறேன். அரசுத் துறையில் ஏற்படுகின்ற இளநிலை உதவியாளர்கள் காலிப் பணியிடங்களில் பட்டதாரிகளாக உள்ள சத்துணவு அமைப்பாளர்களைப் பணியமர்த்திட வேண்டுகிறேன். அரசுப் பணியாளர்களுக்கு வழங்குவதுபோல், சத்துணவுப் பணியாளர்களுக்கும் மருத்துவப் படி, வீட்டு வாடகைப் படி வழங்கிட வேண்டுகிறேன்.

தனியார் நடத்தி வரும் ஆதரவற்ற மாணவர்கள் விடுதிகளுக்கு அரசு மானியம் அளிக்க வேண்டுகிறேன். விறகு, காய்கறி, மளிகைச் சாமான்கள் வாங்குவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பாக நிர்ணயிக்கப்பட்ட 35 பைசா, இந்த மானியக் கோரிக்கையிலும் தொடருகிறது. தி.மு.க. ஆட்சியில் மளிகைச் சாமான்கள், காய்கறிகள் மற்றும் விறகு ஆகியவற்றின் விலைகள் ராக்கெட் வேகத்தில் உயர்ந்துள்ளன. மேலும், வாரத்திற்கு 3 முட்டைகள், உருளைக் கிழங்கு, பச்சைப் பயறு, கொண்டைக் கடலை ஆகியவற்றை வேக வைப்பதற்குத் தரப்படும் நிதியை இரண்டு மடங்காக உயர்த்தித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய வலங்கைமான் தொகுதி, தஞ்சை, திருவாரூர் ஆகிய இரண்டு மாவட்டங்களை உள்ளடக்கியது. விவசாயக் குடும்பங்களைச் சார்ந்த ஏழை மாணவர்களின் நலன் கருதி, வலங்கைமானில் அரசுக் கலைக் கல்லூரி ஒன்றை அமைத்துக் கொடுத்து, ஏழை மாணவர்களின் வாழ்வில் ஒளிவிளக்கு ஏற்ற வேண்டுமாய் வேண்டுகிறேன்.

அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திட்டை வழியாகக் கும்பகோணம் செல்லும் சாலையில், திட்டை ரெயில்வே கிராசிங்கின்கீழ், பேருந்து செல்லும் வழியில், மழைக் காலங்களில் 10 நாட்கள், 15 நாட்கள் என்று மழை நீர் தேங்கி, போக்குவரத்து நின்று விடுகிறது. அதனால், அரசு ஊழியர்களும், மாணவ, மாணவிகளும், பொது மக்களும், வியாபாரிகளும் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இந்த நிலையைப் போக்கும் வகையில், அந்த இரயில்வே கிராசிங்கில் மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

தஞ்சையிலிருந்து திட்டை வழியாகக் கும்பகோணம் செல்லும் சாலையில், பள்ளிஅக்ரஹாரம் பிரிவிலிருந்து திட்டை வரை உள்ள சாலை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அந்தச் சாலையினைச் சரி செய்து தரும்படி வேண்டுகிறேன்.

வலங்கைமான், குப்பசமுத்திரம் வாய்க்கால் அருகில் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே 5,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றிட, ரெகுலேட்டர் வசதியுடன் படுக்கை அணை (Bed Dam) அமைத்துத் தர வேண்டுகின்றேன். இதனால் 1,000 விவசாயக் குடும்பங்கள் பயன்பெறும். ஏற்கெனவே, மேற்படி இடத்தில் படுக்கை அணை கட்டுவதற்கு வரைவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அரசின் ஒப்புதலுக்குக் காத்திருக்கின்றது என்பதனையும் தெரிவித்து, அதற்கு அரசு ஒப்புதல் அளித்து, படுக்கை அணை அமைத்துத் தர வேண்டுகிறேன.



வலங்கைமான் அருகில் புகழ்பெற்ற சந்திரசேகரபுரம் கூட்டுறவுப் பண்டகசாலை தற்பொழுது செயல்படாமல் மூடப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் விளைவித்த பொருட்களை வியாபாரம் செய்ய, விற்று இலாபம் பெற முடியாமல் தவிக்கின்றனர். எனவே, புகழ்பெற்ற சந்திரசேகரபுரம் கூட்டுறவுப் பண்டகசாலையினை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

வெள்ளி நாக்குப் படைத்தவர் என்று ஆங்கிலேயரால் பாராட்டிப் போற்றப்பட்டவரும், மகாத்மா காந்தியின் நண்பரும், ஜவஹர்லால் நேருவினால் பாராட்டப்பட்டவருமான வலங்கைமானில் பிறந்த திரு. வி.எஸ். சீனிவாச சாஸ்திரி அவர்களுக்கு, அவர் பிறந்த மண்ணிலேயே நினைவகத்தை அமைத்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

வலங்கைமான் பேரூராட்சியில் புகழ்பெற்ற ஸ்ரீமகாமாரியம்மன் கோயில் அமைந்துள்ளது. ஆனால், இப்பேரூராட்சியில் பேருந்து நிலையம் இல்லாமல் பொது மக்கள் பெரிதும் அவதிப்படுகின்றனர். எனவே, வலங்கைமான் பேரூராட்சி பொது மக்களின் நலன் கருதி, பேருந்து நிலையமும், வணிக வளாகமும் அமைத்துத் தர வேண்டுகிறேன். வலங்கைமான் நகரப் போக்குவரத்து நெருக்கடியினை நீக்கிடப் புறவழிச் சாலை அமைத்துத் தர வேண்டுகிறேன்.

அம்மாப்பேட்டை ஒன்றியம், வெண்ணுக்குடி-களக்குடி இடையே, வெண்ணாற்றின் குறுக்கே பாலம் கட்டித் தர வேண்டுகிறேன். இதனால், பதினைந்து கிராமப் பொது மக்கள் பலன் அடைவார்கள். எனவே, வெண்ணாற்றின் குறுக்கே பாலம் கட்டித் தருமாறு அன்புடன் வேண்டுகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

வலங்கைமான் அரசுப் பொது மருத்துவமனையில் பெண் மருத்துவர் பணியிடம் காலியாக உள்ளது. எனவே, பெண் மருத்துவர் பணி நியமனம் செய்து தருமாறு வேண்டுகிறேன். வலங்கைமான் அரசுப் பொது மருத்துவமனையில் காலியாக உள்ள சித்த மருத்துவர், ஆயுர்வேத டெக்னீசியன் மற்றும் செவிலியர், உதவியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள் பணியிடங்களை நிரப்பிட வேண்டுகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* பழுதடைந்துள்ள மற்றும் அனைத்து (குறுக்கீடு) மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல ஏதுவாக ஆம்புலன்ஸ் வாகனம் வழங்கிடவும், மருத்துவமனையில் உள்ள மருத்துவர் தங்கும் அறை, மருந்து சேமிப்புக் கிடங்கு ஆகியவை சேதம் அடைந்துள்ளதால் இவற்றிற்குப் புதிய கட்டடம் கட்டித் தரவும்,

இம்மருத்துவமனையிலுள்ள குறைபாடுகளைச் சரி செய்து நிறைவேற்றித் தருமாறு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மணி அடித்தால் இங்கே கொஞ்சம் பாருங்கள் அம்மா! எவ்வளவு நேரமாகப் பேசிக்கொண்டு இருக்கிறீர்கள்? சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

*பிற்பகல் 1-05*

**திருமதி இளமதி சுப்பிரமணியன்:** வலங்கைமான் நெடுஞ்சாலைத் துறை உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகம் தற்பொழுது வலங்கைமான் பயணியர் தங்கும் விடுதியில் இயங்கி வருகிறது. இதனால், பொது மக்கள் தங்குவதற்கு இடமில்லாமல் பெரிதும் சிரமப்படுகின்றனர். எனவே நெடுஞ்சாலைத் துறை உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தைத் தனிக் கட்டடத்தில் அமைத்துத் தர வேண்டுகின்றேன்.

வலங்கைமான் ஒன்றியம், ஆலூர் வழியாகக் காருகுடி, மூலாழ்வாஞ்சேரி, உத்தமதானபுரம், பாபநாசம் சென்று மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். மேலும், இவ்வழியாக எந்தவொரு பஸ் வசதியும் இல்லாமல், மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். அவசரத் தேவைக்கு மருத்துவமனைக்குச் செல்லவும், அவசரக் காலங்களுக்கும் எந்த வாகன வசதியும் இல்லாமல் பெரிதும் மக்கள் கஷ்டப்படுகின்றனர். ஏற்கெனவே இவ்வழியாக மினி பஸ் சென்று இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. தற்பொழுது இயங்காமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே அரசு பொது மக்களின் நலன் கருதி, ஆலூர்-பாபநாசம் செல்ல வசதியாக அரசு பஸ் வசதி ஏற்பாடு செய்து தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அம்மாப்பேட்டையிலிருந்து ஆலங்குடி செல்ல தென்குவளவேலி வழியாக ஒரு பேருந்து வசதியும், அம்மாப்பேட்டையிலிருந்து அவளிநல்லூர் வழியாகப் பாபநாசம் செல்ல ஒரு பேருந்து வசதியும் செய்து தர அன்புடன் வேண்டுகின்றேன்.

வலங்கைமான் ஒன்றியம், சித்தன்வாழூர் கிராமத்தில் விவசாயிகளின் நலன் கருதி ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு நிரந்தரமான கட்டடத்தைக் கட்டித் தருமாறு அன்புடன் வேண்டுகிறேன்.



மேலும், S.S.A. அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்தின்மூலம் பயிலும் குழந்தைகளுக்குச் சத்துணவு உரிய நேரத்தில் வழங்குவதற்காக, ஒரு கிலோ மீட்டர், 2 கிலோ மீட்டர் தொலைவு சென்று, அந்த உணவை எடுத்து வந்து குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. அதைத் தவிர்த்து, அந்தக் குழந்தைகளுக்கு அங்கேயே உணவு வழங்குவதற்கு, அந்த உணவைத் தயாரிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி, விடைபெற்றுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உரையாற்றிய அ.தி.மு.க.வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திருமதி இளமதி சுப்பிரமணியன் அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். நான் குறுக்கிட்டுப் பேச வேண்டாம் என்று தவிர்த்துக்கொண்டேன். இருந்தாலும், ஒரு விளக்கத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு என்கிற பஞ்சாயத்து ராஜ் சட்டத்தை 1994 ஆம் ஆண்டு எங்களுடைய ஆட்சியிலேதான் நாங்கள் கொண்டு வந்தோம் என்று சொன்னார்கள். அது உண்மையாகக்கூட இருக்கலாம். ஆனால், இந்தியாவிலேயே 1996-க்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிப் பொறுப்பிலேதான் தமிழ்நாட்டிலே நம்முடைய உள்ளாட்சி அமைப்பிலே பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்து அமல்படுத்தியிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, காவல் துறையிலே பெண்களை இணைக்கக்கூடிய அந்தத் திட்டத்தையும் நாங்கள்தான் கொண்டு வந்தோம் என்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், 1973 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது கலைஞர் அவர்கள்தான் பெண்களையும் காவலர்களாக நியமிக்கலாம் என்கிற அந்தச் சட்டத்தையும் கொண்டு வந்தார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் உரையாற்ற வேண்டும். (குறுக்கீடு) Reply பண்ண வேண்டும். Time இல்லை. உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை.

**•மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எழுத்தாளர்கள், கவிஞர்கள் தங்கள் காவியங்களைப் படைக்கும்போது தங்கள் படைப்புகளை இறைவனுக்கோ, தங்கள் வழிகாட்டிகளுக்கோ, அன்புக்குப் பாத்திரமானவர்களுக்கோ சமர்ப்பணம் செய்வார்கள். ஆனால், 2000 ஆண்டுகளுக்கு முன்னரே நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தைப் படைத்த இளங்கோவடிகள், கடவுளையோ, மனிதனையோ வாழ்த்திப் பாடாது,

*"திங்கள் போற்றுதும், திங்கள் போற்றுதும்,*
*ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்,*
*மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்"*

என்று சொல்லி, இயற்கையை வழிபட்டு, தன்னுடைய இறவாத இலக்கியத்தைப் படைத்தார். இயற்கைதான் மனிதனுக்கு அடித்தளமாக, மனித வாழ்வுக்கு மையமாக இருக்கிறது. ஆனால், அந்த இயற்கையை வளப்படுத்துவதும், ஆட்டிப் படைப்பதும் வேறெந்த சக்தியும் அல்ல, மனித சக்தியே. அணு சக்தி, மின் சக்தி, ஓம் சக்தி, பராசக்தி, அது எந்த சக்தியாக இருந்தாலும், இந்த சக்திகளுக்கு எல்லாம் உயர்ந்த சக்தி, மனித சக்திதான். நான் மனித சக்தி எனச் சொல்வது, அறிவை, ஆற்றலை, திறமையை. இத்திறமைகள் மனிதர்களுக்கே இருக்கும்போது, அந்த மனிதர்கள்தான் தெய்வங்களாக விளங்குகிறார்கள். அந்த அடிப்படையிலேதான் இளங்கோவடிகள் பாணியில்,

*"பெரியார் போற்றுதும், பெரியார் போற்றுதும்,*
*பேரறிஞர் அண்ணா போற்றுதும், பேரறிஞர் அண்ணா போற்றுதும்,*
*என் தந்தை வடிவமாக நான் வணங்கும் நமது முதல்வர்*
*போற்றுதும், முதல்வர் போற்றுதும்"*

என வாழ்த்தி வணங்குகிறேன்



அடுத்து, எங்களைப் போன்றவர்களுக்கு வழிகாட்டியாக, குறுகிய காலக்கட்டத்தில் அனைத்து மாவட்டங்களிலும் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) களப் பணியில் இறங்கி, எப்படி ஓர் அமைச்சராகச் செயல்பட வேண்டுமென்று எங்களுக்கெல்லாம் முன்னோடியாக விளங்கும், கழகத்தின் தலைமகன் மட்டுமல்ல; எங்கள் குடும்பத்தின் தலைமகன், பாசத்திற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி), அடுத்து இந்த வையகத்தில் உள்ள விஷக் கிருமி, விஷச் செடிகள், விஷ இலைகளைச் சுட்டுப் பொசுக்கி, "ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும், ஆதவன் மறைவதில்லை" என்பதை உண்மையாக்கி, நமது சின்னமான உதய சூரியனுக்கு வாக்களித்த, நான் என்றும் நன்றி மறவாத, ஆலங்குளம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், என் வணக்கத்தினைச் செலுத்தி, சமூக நலத் துறை மானியக் கோரிக்கையின்மீதான எனது பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

ஒரு நாட்டின் வளர்ச்சி, முன்னேற்றம், அந்த நாட்டைச் சார்ந்த பெண்கள், குழந்தைகள், ஊனமுற்றவர்களைக் கண்டறிந்த பிறகே, அது வளர்ந்த நாடா, இல்லையா எனக் கணிக்கப்படுகிறது. சமுதாயத்தின் விளிம்பில் உள்ள இவர்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்பதற்காக, நமது முதல்வர் அவர்கள், இந்த ஆண்டு, சமூக நலத் துறைக்குக் கூடுதலாக 310 கோடியே 74 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளார்.

சமூக நலத் துறையின் வாயிலாக, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம், விதவை மறுமணம், விதவை மகள் திருமணம், ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதியுதவி, கலப்புத் திருமண நிதியுதவி ஆகியவற்றிற்காக ரூ.82 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் வாயிலாக 50,700 பெண்கள் பயனடைவார்கள்.

திருமண உதவித் திட்டங்களில் ஏன் இவ்வளவு அக்கறை? சமுதாயத்திற்குத் திருமணம் தேவையா என ஒரு சிலர் நினைக்கலாம். ஒரு குடும்பம் தோன்றிட, தாய், தந்தை, தமையன், தமக்கை, தம்பி, தங்கை என்ற பாசமான, நேசமான உறவின் பரிமாணங்கள் உருவாகிட, ஒரு சீரான சமுதாய அமைப்பு ஏற்பட்டிட, திருமணம்

என்ற பந்தம் அவசியம். நமது முதல்வர் அவர்கள் பெரிதும் மதிக்கின்ற மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களின் நினைவாக வழங்கும் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ், சென்ற ஆண்டு 69 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, 46 ஆயிரம் பெண்கள் பயனடைந்துள்ளனர். இந்த ஆண்டு 50 ஆயிரம் பெண்கள் பயன்பெறுவதற்காக, 69 கோடி ரூபாயிலிருந்து 75 கோடி ரூபாய் எனக் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களாகச் சட்டமன்ற உறுப்பினர்கள் பலர், சென்னையில் உள்ள இட நெருக்கடி, வீட்டுமனைகளின் விலை உயர்வு ஆகியவை பற்றித் தங்கள் கருத்துகளைக் கூறினார்கள். மேலும், மாறி வரும் சமுதாயச் சூழ்நிலையில், பெண்கள் அதிக அளவில் வெளியூர்களிலிருந்து சென்னைக்குப் பணிபுரிய வருகிறார்கள். இப்பெண்கள் பாதுகாப்புடன் தங்குவதற்கு, மத்திய அரசின் உதவி பெற்று, சுமார் 7 கோடி ரூபாய் மதிப்புள்ள பல அடுக்குகள் கொண்ட விடுதிகளை, பெண்கள் விடுதித் திட்டத்தின்கீழ் கட்ட இவ்வரசு முடிவு செய்துள்ளது.

ஒரு குடும்ப அமைப்பில் பெற்றோர்களின் அரவணைப்பில், வழிகாட்டுதலில் வளரும் குழந்தைகள், முழுமையான உடல் மற்றும் மன வளர்ச்சி பெற்று, வாழ்க்கையில் சிறந்த நிலையை அடைவதற்கு வாய்ப்புப்பெற்றவர்களாக உள்ளனர். இந்த உண்மையைப் புரிந்து, ஆதரவற்ற, கைவிடப்பட்ட குழந்தைகள் தத்தெடுக்கப்பட வேண்டும். அதனால், தத்தெடுத்தலை ஊக்குவிப்பதற்கு இனி ஆண்டுதோறும் Adoption Awareness Programme-அதாவது, தத்தெடுத்தல் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி, தத்தெடுக்க விரும்பும் பெற்றோர்கள் விதிமுறையை அறிவதற்கு இலவசக் கையேட்டை வழங்கவிருக்கிறது. முதல் கருத்தரங்கம் இந்த ஆண்டு மே மாதம் நடைபெறவுள்ளது. உள்நாட்டில் தத்துக் கொடுக்க மொத்தம் 19 நிறுவனங்களுக்கு உரிமம் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.9 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மகளிரை மட்டும் அங்கத்தினர்களாகக்கொண்ட 102 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம், 43,804 மகளிர் பயனடைந்து வருகின்றனர். இவர்கள் தையற்தொழில், பதிவேடுகள் தயாரித்தல் மற்றும் மெழுகுவர்த்தி பொம்மைகள் செய்தல்போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.



ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளிகளில் வழங்கப்படும் சீருடைகள் கடந்த ஆட்சியில் 2003-2004 ஆம் ஆண்டு முதல் தனியார்மூலம் தைத்து வழங்கப்பட்டு வந்தது. இதனால் மகளிர் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களின் ஆண்டு வருமானம் குறைந்தது. இதை நிவர்த்தி செய்திடும்பொருட்டு, இந்த ஆண்டு முதல் இப்பணியை மகளிர் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மகளிர் நலன் மேம்பாட்டைப் பொறுத்து, மாநில மகளிர் ஆணையம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பெண்களுக்கு இழைக்கப்படும் குற்றங்களைக் களைவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த ஆணையத்திற்கு அதிக அதிகாரமும், சட்ட அந்தஸ்தும் வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த ஆட்சிக் காலத்தில், ஆடு வெட்டக் கூடாது; கோழி வெட்டக் கூடாது என்று சட்டங்களைக் கொண்டு வந்து, நமது தமிழ் மக்கள் தொன்றுதொட்ட காலத்திலிருந்தே பின்பற்றிய இறை வழிபாட்டு முறையை மாற்ற முயன்றது மட்டுமல்லாமல், நமது உணவுப் பழக்கத்திலும், கடந்த ஆட்சி, அவர்களின் உணர்வைத் திணிக்க முயன்றது. எப்படித் தெரியுமா? வளர வேண்டிய பச்சிளம் குழந்தைகள் அறிவைப் பெருக்கி, நாட்டை வளப்படுத்த வேண்டிய மாணவ, மாணவிகளுக்கு மதிய உணவுத் திட்டத்தின் வாயிலாக, நமது முதல்வர் அவர்கள் அறிமுகப்படுத்திய, வாரம் ஒரு முட்டை வழங்கும் திட்டத்தையே தயவுதாட்சண்யமின்றி நிறுத்தியது.

பிற்பகல் 1-15

பச்சைத் தமிழனின் வாழ்க்கை முறையை மாற்ற முயன்றதால், பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் சரியாக வாக்களித்து, இழந்த ஒரு முட்டையைப் பெற்றது மட்டுமல்லாமல், அடுத்து வந்த சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் சரியாக வாக்களித்து, ஒரு முட்டைக்குப் பதிலாக, இன்று வாரம் 3 முட்டைகளைக் குழந்தைகளுக்காகப் பெற்றுள்ளனர். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஏன் முட்டைக்கு இத்தனை முக்கியத்துவம் என்றால், உணவுப் பண்டங்களிலேயே முட்டையில்தான் அதிக அளவில் புரதச் சத்தும், தாதுப் பொருட்களும் உள்ளன. விஞ்ஞானிகள் முட்டையை reference protein• ஆகக் கருதுகிறார்கள். உடல் வளர்ச்சிக்கும், மூளை வளர்ச்சிக்கும் புரதச் சத்து இன்றியமையாதது.

கடந்த ஆண்டு கர்ம வீரர் காமராஜர் அவர்கள் பிறந்த நாளையொட்டி, வாரம் இரண்டு முட்டைகள் வழங்கும் விழாவில் 'மாணவர்கள் தேர்வில் முட்டை வாங்காமல் இருக்க முட்டை வழங்குகிறோம்' என்று நகைச்சுவையோடு நமது முதல்வர் கூறிய கருத்தினை நாம் சற்றுக் கூர்ந்து கவனித்தால், ஓர் உண்மை புலப்படும். ஒரு நாட்டின் மிகப் பெரிய முதலீடு மனித வளம்தான் (Human Resource). அந்த விலை மதிக்க முடியாத மனித வளம் சிறப்பாக வளர்ந்து, கல்வி அறிவைப் பெற்று, நாட்டை முன்னேற்றப் பாதைக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்ற தொலைநோக்குப் பார்வையோடு, முட்டை வழங்கும் திட்டத்தை மேம்படுத்திய பெருமை நமது முதல்வரையே சாரும். சமுதாய மறுமலர்ச்சி ஏற்படுத்தப் போகும் வாரம் 3 முட்டை வழங்கும் திட்டம் ஜூலை 15 ஆம் நாளன்று அமல்படுத்தப்பட உள்ளது. இதற்காக நமது முதல்வர் 165 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளார் எனத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முதன்முறையாக சத்துணவு சமையலறைகளை 'புகையில்லா அடுப்பறைகளாக' அமைப்பதற்கு 750 நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளுக்கு எரிவாயு அடுப்பு அமைப்பதற்காக 1.5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, அதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. மேலும், 1,000 அங்கன்வாடி மையங்களுக்கு எரிவாயு அடுப்பு வசதி செய்து தரப்பட்டுள்ளது. பிரஷர் குக்கர்களும் வழங்கப்பட்டுள்ளன.

B.Ed. பட்டப் படிப்பில் பட்டம்பெற்ற சத்துணவு ஊழியர்கள் மற்றும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு ஆசிரியர் பணி கிடைத்திட உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இதுவரை 650 பயனாளிகள் ஆசிரியர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டனர். கடந்த ஆண்டு சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக 9,356 நபர்கள் பணி நியமனம் செய்யப்பட்டார்கள்.

ஆண்டுதோறும் 72 இலட்சம் பயனாளிகள் மதிய சத்துணவுத் திட்டத்தின் வாயிலாகப் பயன்பெறுகிறார்கள். இன்று இந்திய அளவில் மட்டுமல்ல, சர்வதேச அளவில்கூட வேறு எந்த நாட்டிலும் இத்தனை சிறப்பான, மேம்படுத்தப்பட்ட மதிய சத்துணவுத் திட்டம் இல்லையெனப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இந்தப் பெருமைக்குச் சொந்தக்காரர், ஒப்பற்ற



தலைவர், ஒரே தலைவர், நமது முதல்வர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) சத்துணவுத் திட்டத்திற்கு இவ்வாண்டு மொத்தம் 781 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக, 6 மாதத்திலிருந்து 2 வயது வரையிலான குழந்தைகளுக்கு இணை உணவும், நோய் தடுக்கத் தடுப்பு மருந்துகளும், மேலும், 2 வயது முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு சத்துணவுடன்கூடிய, வாரம் மூன்று முட்டை, நோய் தடுக்கத் தடுப்பு மருந்துகள், விளையாட்டு உபகரணங்கள்மூலம் முன்பருவக் கல்வி எனப் பல வசதிகள் வழங்கப்படுகின்றன.

இப்போது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக அளவில் 89 சதவிகிதக் குழந்தைகள் நோய்த் தடுப்பு ஊசியைப் பயன்படுத்துகிறார்கள். கேரள மாநிலத்திற்கு அடுத்தபடியாகத் தமிழ்நாட்டில்தான் 69 சதவிகிதக் குழந்தைகள் ஊட்டச் சத்துக் குறைபாடில்லாதவர்களாக உள்ளனர். மேலும், 92 சதவிகிதக் குழந்தைகள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் வாயிலாக முன்பருவக் கல்வியினைப் பெற்றுப் பயனடைகின்றனர். முட்டை வழங்கும் திட்டத்தின்வாயிலாக தமிழகம் ஊட்டச் சத்துக் குறைபாடு இல்லாத மாநிலமாக முதலிடத்தில் வருமென, the malnutrition free State என சத்துணவு நிபுணர்கள் கணிக்கின்றார்கள்.

இன்று உலகளவில் ஆண்டுதோறும் 50 இலட்சம் கர்ப்பிணிப் பெண்கள் மரணம் அடைகிறார்கள். இந்தியாவில் மட்டும் 1 இலட்சம் கர்ப்பிணிப் பெண்களில் 570 பெண்கள் மரணம் அடைகிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் 1 இலட்சம் கர்ப்பிணிப் பெண்களில் 69 பெண்கள் மரணம் அடைகிறார்கள். எனினும், இம்மரணங்களில் 90 சதவிகித மரணங்கள் தடுக்கப்பட்டிருக்கலாம் என்பதுதான் நிதர்சனமான, வேதனையான உண்மை. மனித உரிமைச் சங்கங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், ஒரு மனிதன் தூக்கிலிடப்பட்டால் கண்டிக்கின்றன, ஆட்சேபனை தெரிவிக்கின்றன. கர்ப்பிணிப் பெண்கள் மத்தியில் நிகழும் மரணங்களைப் பற்றி நமது முதல்வரைத் தவிர வேறு யாரும் குரல் கொடுப்பதில்லை. இந்த நிலை மாற வேண்டும் என்பதற்காகத்தான், இந்த அரசு மைய அரசுடன் இணைந்து ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், வளர் இளம் பெண்கள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச் சத்தும், மற்றும் சுகாதாரப்

பிரச்சினைகளைத் தடுப்பதற்குக் கூடுதல் விழிப்புணர்வை ஏற்படுத்தி, பல நலத் திட்டங்களையும் வழங்குகிறது. அதனால்தான் தமிழகத்தில் கர்ப்பிணிப் பெண்களின் இறப்பு சதவிகிதமும், ஒரு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் மரண விழுக்காடும் ஏனைய மாநிலங்களைவிடக் கணிசமாகக் குறைந்துள்ளது.

தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், நமது முதல்வரின் வழிகாட்டுதலில் மிகவும் சிறப்பாகச் செயல்படுவதாகப் பாராட்டி, மற்ற மாநிலங்கள் தமிழகத்தைப் பின்பற்றி இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று நமது பாரதப் பிரதமர் அவர்கள் இந்தியாவிலுள்ள அனைத்து மாநில முதல்வர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளார் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-20

இன்று தமிழ்நாட்டில் சுமார் 16.42 இலட்சம் ஊனமுற்றோர் உள்ளனர். ஊனமுற்றோர் நலனில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது. Doctor-களுக்கெல்லாம் Doctor ஆக விளங்கும் நமது முதல்வரிடம் மேலோங்கி நிற்பது மனித நேயம். More than anything, our Chief Minister is a humanist. அதனால்தான் இவ்வாண்டு ஊனமுற்றோர் நலத்திற்குக் கூடுதலாக 38.76 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இயற்கையின் கடுஞ்சீற்றங்களின் கொடிய படைப்பு, உடல் ஊனமுற்றோர். குறிப்பாக, மன வளர்ச்சி குன்றியோர். மன வளர்ச்சி குன்றியோர் தங்களுடைய நிலையைப் புரிந்துகொள்ளாத, தங்களைப் பாதுகாத்துக்கொள்ளத் தெரியாத பச்சிளம் குழந்தைகள்போன்றவர்கள். அதனால்தான் நமது முதல்வர் தனிக் கவனம் எடுத்து, 2007-2008 ஆம் நிதி ஆண்டில் மன வளர்ச்சி குன்றியோருக்காக 2.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளார். இந்நிதியின்மூலம் கடும் மன வளர்ச்சி குன்றியோருக்கு வருமான வரம்பைக் கருத்தில்கொள்ளாமல் உதவித் தொகை வழங்குதல், அனைத்து மாவட்டங்களிலும் சிறப்புப் பள்ளி, தொழிற்பயிற்சி நிலையங்கள், பாதுகாப்பு இல்லங்கள் அமைத்திடுதல் போன்றவற்றை நம்பகத் தன்மை வாய்ந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்த இருக்கின்றது இவ்வரசு. இன்று ஊனமுற்றோரில் 4.9 சதவிகிதத்தினர் மட்டுமே கல்வி அறிவுபெற்றவர்களாக உள்ளனர். அதிலும் 9 சதவிகிதம் பேர்தான் மேல்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தவர்களாக உள்ளனர்.



சர்வ சிக்ஷா அபியான்—அனைவருக்கும் ஆரம்பக் கல்வித் திட்டத்தின்கீழ், ஊனமுற்ற மாணவர்களுக்காக சிறப்பு நிதியாக 11 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஆண்டில், பள்ளிக் கல்வித் துறையுடன் ஒருங்கிணைந்து, அவர்களுக்குத் தேவையான சிறப்புக் கல்விப் பயிற்சி சாதனங்கள், சிறந்த காதொலிக் கருவிகள், இயந்திரம் பொருத்திய சக்கர வாகனங்கள் என, வளர்ந்த நாடுகளுக்கு இணையாக வழங்கி, அவர்கள் படிப்பை ஆர்வத்துடன் தொடர்ந்திட, அதிக அளவில் கல்வியைப் பெற்றிட இவ்வரசு திட்டமிட்டுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் பணி நியமனத் தடைச் சட்டம் சிறப்புப் பள்ளிகளிலும் பாய்ந்தது. உதாரணத்திற்கு, ஈரோட்டில் உள்ள அரசாங்கக் காது கேளாதோர் உயர்நிலைப் பள்ளியில் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை மொத்தம் 117 மாணவ, மாணவியர் பயின்று வந்தனர். ஆனால், நான்கு ஆசிரியர்கள் மட்டுமே பணியில் இருந்தனர் என்பதிலிருந்தே, அ.தி.மு.க. ஆட்சியில் ஊனமுற்றோர்மீதுள்ள அக்கறையைப் பற்றி நான் இன்னும் அதிகமாக விவரிக்கத் தேவையில்லை. காலியாக உள்ள இந்தப் பணியிடங்களில், பணி நியமனம் செய்திட நமது முதல்வர் அவர்கள் ஆணை வெளியிட்டுள்ளார்.

இனி, கால் ஊனமுற்றோர்கள் எவருக்குமே மூன்று சக்கர வண்டி இல்லை என்ற நிலை ஏற்பட்டிட, 1.80 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, அனைவருக்கும் இவ்வாகனம் வழங்கப்படும். தகுதியான ஊனமுற்றோர்கள் இல்லாததால் முந்தைய ஆண்டுகளில் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டு, நிரப்பப்படாமல் உள்ள 3 சதவிகிதக் காலிப் பணியிடங்களை நிரப்ப சிறப்புத் தேர்வு ஒன்றை நடத்த அரசு முடிவு செய்துள்ளது. இத்தேர்வுமூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வரம்பில் உள்ள காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்.

கை ரிக்ஷா ஒழிக்கும் திட்டம், தொழுநோயாளிகளுக்கு மறுவாழ்வு மையம், பார்வையற்றோர்க்குக் கண்ணொளி வழங்கும் திட்டம், ஊனமுற்றோர்க்குக் கையினால் இயக்கப்படும் மூன்று சக்கர வாகனத்திலிருந்து, இன்று இயந்திரம் பொருத்திய மூன்று சக்கர வாகனம் வரை ஊனமுற்றோர்களுக்காகப் பல திட்டங்களை இந்தியாவிலேயே முதலாவதாக அறிமுகப்படுத்தியதில் முதன்மையானவர் நமது முதல்வர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பணிகள் அனைத்தும் சிறப்பாகச் சென்றடைய ஊனமுற்றோர் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த

ஆண்டு ஊனமுற்றோர் மறுவாழ்வுக்காக வகுக்கப்பட்ட அனைத்துத் திட்டங்களுக்கும் ரூ.77.64 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏழை முதியோர்கள், ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட, ஆதரவற்ற மகளிர், ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் ஆகியோருக்குச் சென்ற ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்பட்ட மாத ஓய்வூதியம் ரூபாய் 400 இவ்வாண்டும் தொடர்ந்து வழங்கப்படும். இவ்வோய்வூதியத் திட்டங்களின் வாயிலாக 12,47,025 பயனாளிகள் இன்றைய நிலவரப்படிப் பயன் அடைந்துள்ளனர். இதற்காக இவ்வாண்டு 624.91 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*பிற்பகல் 1-25*

இன்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இந்த விவாதத்தில் பங்குகொண்டு அரிய பல கருத்துகளைக் கூறினார்கள். ஒன்றிரண்டு கருத்துகளுக்கு என் பதிலை நான் இங்கு தெரிவிக்க விரும்புகின்றேன். முக்கியமாக, பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், தொட்டில் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தைப் பற்றி. இந்தத் தொட்டில் குழந்தைத் திட்டத்தின் வாயிலாகப் பெண் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு நிரந்தரத் தீர்வு ஏற்படாது. It is only a stop gap measure. ஒரு தற்காலிக நடவடிக்கை மட்டுமே. தொட்டில் குழந்தைத் திட்டத்தின்மூலம் சிசு வதை தடுக்கப்பட்டாலும், இக்குழந்தைகள் அனாதை ஆக்கப்படுகிறார்கள். இத்திட்டத்தின்வாயிலாகக் குழந்தைகளின் உயிர் பாதுகாக்கப்பட்டாலும், அவர்களின் வாழ்க்கை நிலை எவ்வாறு இருக்கும் என்பது ஒரு கேள்விக்குறியே. அதனால், பெண் குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால், சமுதாயத்தில் பெண்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் வேண்டும். இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு, பெண் கல்வி மட்டுமே. பெண் குழந்தைகளைப் பெற்றோர்கள் நிதிச் சுமையாக நினைக்கக் கூடாது, அனாதை ஆக்கக் கூடாது என்பதற்காக நமது முதல்வர் தொலைநோக்குப் பார்வையோடு, சிவகாமி அம்மையார் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம், திருமண நிதியுதவித் திட்டங்கள், பேறுகால நிதியுதவித் திட்டம் போன்றவற்றை உருவாக்கி, இத்திட்டங்களின் வாயிலாக இனி, எதிர்காலத்தில் தொட்டில் குழந்தைகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைய, அதற்காக இந்த அரசு முயற்சிக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.



அதுபோல, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அரசின் நிதியுதவியைப் பெற வேண்டுமென்றால், அரசின் விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்குகள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும். பதிவு செய்த நாள் முதல், இலாப நோக்கமின்றி குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் நலத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். இந்நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, அரசின் நிதியைச் சரியாகப் பயன்படுத்தியிருக்கின்றனவா, இல்லையா என்பதைக் கண்டறிய சமூக நல அலுவலர்களால் தவறாமல் கண்காணிக்கப்படுகின்றன. அப்படித் தவறு ஏதும் நேர்ந்தால், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உரிமம் பறிக்கப்பட்டு, கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படும்.

காலத்தின் அருமையைக் கருதி, முக்கியமான சில அறிவிப்புகளை மட்டும் தெரிவிக்க விரும்புகின்றேன். அறிவிப்புகள் அடங்கிய புத்தகம்@ அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அவற்றை நான் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படும் அங்கன்வாடி மையங்கள், இனி மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும்வண்ணம், தமிழில் "குழந்தைகள் மையம்" என அழைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு குழந்தையின் மூளை வளர்ச்சி இரண்டு வயதிற்குள் முழுமை அடைகிறது. இதனைக் கருத்தில்கொண்டு, ஒரு வயது முதல் 2 வயது வரையுள்ள குழந்தைகள் மையங்களின்மூலம் பயனடையும் குழந்தைகளுக்கு இவ்வாண்டு முதல் வாரம் ஒரு முட்டை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னையை அடுத்துள்ள பரனூரில் உள்ள தொழுநோயால் அவதியுறும் நோயாளிகளுக்கு மருத்துவ உதவி மற்றும் மறுவாழ்வு அளிக்கும் அரசு மறுவாழ்வு இல்லத்திற்கு, கூடுதலாக 100 குடும்பங்களுக்கு இட வசதி வழங்கும் வகையில் மேலும் ஒரு புதிய கட்டடம் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

---

@ 462 முதல் 464 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டில், 1,539 குழந்தைகள் மையங்கள் மற்றும் 3,168 சிறிய குழந்தைகள் மையங்கள், ஆக மொத்தம் 4,707 புதிய குழந்தைகள் மையங்களை அமைத்திட அரசு அனுமதி அளித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

குழந்தைகள் மையங்களில் பணிபுரியும் ஊழியர்களின் வேலை நேரம், தற்போதுள்ள முறையான காலை 7-30 மணி முதல் மாலை 4-30 மணி வரை என்றிருப்பதை மாற்றி, காலை 8-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை என அமைக்கப்படும்.

கல்வித் தகுதிபெற்ற 810 சத்துணவு சமையலர்/உதவியாளர்களுக்குச் சத்துணவு அமைப்பாளர்களாகப் பதவி உயர்வு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளி சத்துணவு மையங்கள் மற்றும் குழந்தைகள் மையங்களுக்குப் பாத்திரங்கள் வாங்கவும், சமையலறைகளை நவீனப்படுத்தவும் இந்த ஆண்டு ரூபாய் 4 கோடியே 51 இலட்சம் செலவிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதரவற்ற சிறுவர்/சிறுமியருக்கான சிறப்பு இல்லங்கள் மற்றும் குழந்தைகள் இல்லங்களைப் பராமரிக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு அளிக்கும் மானியம், ஒரு நபருக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 225/- என்ற நிலையிலிருந்து ரூபாய் 450/-ஆக இவ்வாண்டு முதல் உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தூத்துக்குடி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் உள்ள குழந்தைகள் காப்பகங்களுக்கு ரூபாய் 1 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

தற்போது பார்வையற்றோரைத் திருமணம் புரியும் நல் உடற்கூறு உள்ள நபர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையைப் பெற ஆண்டு வருமான உச்சவரம்பு ஏதும் இல்லை. ஆனால், மற்ற வகை ஊனமுற்றோரை மணம் புரியும் நபர்களுக்கு ஆண்டு வருமான உச்சவரம்பு ரூபாய் 24,000/- என உள்ளது. இந்த வருமான உச்சவரம்பு இவ்வாண்டு முதல் நீக்கப்படுகிறது. இதன்மூலம் மற்ற தகுதிகள் உள்ள அனைவரும் இத்திட்டங்களின்கீழ் பயனடைவார்கள்.

சமுதாயத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும், முழுமையாக ஊனமுற்றோரும் பங்கேற்பதை உறுதி செய்ய, தமிழ்நாடு முழுவதும் புதிதாகக் கட்டப்படும் அரசுக் கட்டடங்கள், அரசு சார்ந்த கட்டடங்கள், தனியார் நிறுவனக் கட்டடங்கள் மற்றும் பொதுக்



கட்டடங்களை ஊனமுற்றோர் பயன்படுத்தும் வகையில், சாய்வு தளம் (ramp) போன்ற வசதிகள் மற்றும் தடையில்லாச் சூழ்நிலை (Barrier free environment) ஏற்படுத்துவது கட்டாயமாக்கப்படும்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** இறுதியாக, என் தந்தையின் கருத்தினைக் கூறி என் உரையை முடிக்க விரும்புகின்றேன். என் தந்தை அவர்கள் அடிக்கடி நமது முதல்வர் அவர்களைப் பற்றி 'என் தலைவர் அவர்கள், நிர்வாகத் திறமையிலும், மன உறுதியிலும் மாபெரும் நெப்போலியனைப் போன்றவர்' என்று பல முறை சொல்லக் கேட்டிருக்கிறேன். எவ்வாறு நெப்போலியனுக்கு 'Nothing is impossible'-ஓ, அதேபோல எங்கள் தலைவருக்கு 'Anything and Everything is possible'. இத்தகைய எதையும் சாதிக்கின்ற தலைமையின்கீழ் சமூக நலத் துறை இன்னும் சிறப்பாகச் செயல்படும் எனக் கூறிக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 45, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறுகின்றனவா என அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,478,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.85,01,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] 

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (11-4-2007) புதன்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

43. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் 2005-2006 ஆம் ஆண்டிற்கான கணக்குகள்மீதான தணிக்கை அறிக்கை. [1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125(2)(ஏ) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

51. மானியக் கோரிக்கை எண் 43—பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

52. மானியக் கோரிக்கை எண் 45—சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

53. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய செயல் முறைத் திட்டம், 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

54. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய "மக்கள் சாசனம்", 2007. (தமிழ், ஆங்கிலம்)



55. பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007-2008. (தமிழ்)

56. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தாறாவது அறிக்கை. (2006-2007).

57. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தேழாவது அறிக்கை. (2006-2007).

58. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தெட்டாவது அறிக்கை. (2006-2007).

59. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தொன்பதாவது அறிக்கை. (2006-2007).

60. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பதாவது அறிக்கை. (2006-2007).

## இணைப்பு—I

*(304 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 45—சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008

## அத்தியாயம் 1

**முன்னுரை**

அகத்தின் அழகு முகத்திலே தெரியும் என்பதுபோல ஒரு நாட்டின் வளர்ச்சியானது அந்நாட்டின் குழந்தைகள், மகளிர் மற்றும் ஊனமுற்றோர் ஆகியோரது வளர்ச்சியில்தான் உள்ளது. பாரதியார் விருதுபெற்ற நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நாட்டில் ஏற்படும் வளர்ச்சியின் பயன்கள் எளியோரைச் சென்றடைய வேண்டும் என்று அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறார். பெண்களின் நிலையானது GDI குறியீடுமூலம் அறியப்படுகிறது. இது தமிழ்நாட்டில் 0.654 ஆக உள்ளது. இது அகில இந்தியக் குறியீடான 0.560 என்பதைவிட அதிகமாகும். அதேபோல குழந்தைகளிடையே காணப்படும் ஊட்டச் சத்து நிலையானது 1990-ல் 41.40 சதவிகிதமாக இருந்த சாதாரண நிலைக் குழந்தைகளின் எண்ணிக்கை 2006 ஆம் ஆண்டு நிலவரப்படி 61.75% ஆக உயர்ந்துள்ளது. இந்நிலையானது, இவ்வரசால் சத்துணவுத் திட்டத்தில் வாரம் மூன்று முறை முட்டை வழங்கப்படுவதையடுத்து மேலும் அதிகரிக்கும். மேலும், பிரசவத்தின்போது இறந்துவிடும் குழந்தைகளின் இறப்பு விகிதமானது 1000-க்கு 53 என இருந்தது தற்போது 41 ஆகக் குறைந்துள்ளது. இதை 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் 20 ஆகக் குறைக்க இவ்வரசு திட்டமிட்டுள்ளது.

திட்டங்களைத் தொடர்ந்து செம்மையாகச் செயல்படுத்துவதனாலும், திட்டச் செயல்பாட்டைக் கண்காணிப்பதன்மூலமும் மற்ற மாநிலங்களைவிட வேகமாக இந்நிலையை எட்ட முயற்சிக்க வேண்டுமே தவிர, தற்போதைய உயர்ந்த நிலையோடு மன நிறைவடைந்துவிடக் கூடாது.

திருத்தியமைக்கப்பட்ட மக்கட்தொகை வரையறையின் அடிப்படையில் அதிக அங்கன்வாடி மையங்களையும், குறு அங்கன்வாடி மையங்களையும் தொடங்குவதன்மூலம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் பரவலாக்கத்தினை அதிகப்படுத்தி, பயனாளிகள் இத்திட்டத்தின் பயன்களை அடைய ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமான தொலைவு நடக்கத் தேவையற்ற நிலையை உருவாக்குதலே இவ்வாண்டின் முக்கியக் குறிக்கோளாகும். இரும்புச் சத்து மாத்திரைகள், போலிக் அமிலம், வைட்டமின் 'ஏ' மாத்திரைகள் மற்றும் அயோடின் கலந்த ஊட்டச் சத்துக்களை வழங்குவதன்மூலம் வளர்இளம் பெண் குழந்தைகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களிடையே உள்ள இரத்த சோகையைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஒழுக்க நெறி பிறழக்கூடிய அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்படும் பெண்கள் மற்றும் குழந்தைகளைக் காப்பதும், அவர்கள் பாலியல் ரீதியாகத் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதும் இவ்வரசின் முக்கியக் குறிக்கோள்களாகும். இந்நோக்கங்களை எட்டும் வகையில் தக்க முயற்சியை இவ்வரசு மேற்கொண்டு வருகிறது. மாநிலம் முழுவதிலும் இவ்வாறு துன்புறும் நிலையில் உள்ளவர்களைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்கத் தனியார் நிறுவனத்தின்மூலம் இவ்வாண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

"ஊனமுற்றோர்களுக்குத் தகுந்த நல்ல வேலை இங்கு இருப்பதில்லை. ஆனால், ஒவ்வொரு பணியிலும் உள்ள நல்லவர்கள் அனைவரிடமும் ஏதோ ஒரு வகை ஊனம் உள்ளது. நமக்கு வேண்டியதெல்லாம், ஊடுருவிப் பார்க்கும் தன்மையும் மற்றும் தொலைதூரப் பார்வையுமே ஆகும். ஊனமுற்றோர்களிடம் உள்ளத் திறனை ஊடுருவிப் பார்க்கும் தன்மையும் மற்றும் அவர்களால் எல்லாம் செய்ய முடியும் என்பதைப் புரிந்துகொள்ளும் தொலைதூரப் பார்வையுமே ஆகும்" எனக் கூறினார் புகழ்பெற்ற அமெரிக்கப் பேச்சாளரான ரிச்சர்டு பைமிடல். மேலே உள்ள பொன் மொழியில் உள்ளபடி சிந்தித்துப் பல புதிய திட்டங்கள் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளன. சமுதாயத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியிலும், குறிப்பாகப் பெண்கள், குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோரின் நலனிலும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கண்ணும்கருத்துமாக இருக்கிறார் எனபது அனைவரும் அறிந்ததே. தனி மனிதனின், அதிலும் குறிப்பாக ஊனமுற்றோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும், மேம்படுத்துவதிலும் நமது இந்தியத் துணைக் கண்டத்திற்கே அவர் வழிகாட்டியாகத் திகழ்கிறார். அவரது சீரிய தலைமையின்கீழ், சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையானது சமூக நலத் திட்டங்களைச் சிறப்பாகவும், செம்மையாகவும் செயல்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

# அத்தியாயம் 2

## மகளிர் மற்றும் குழந்தைகள் நலம்

2.1. மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு அத்தியாவசியச் சேவைகளான சுகாதாரம், ஊட்டச் சத்து, குழந்தைகள் நலம், மகளிர் நலம் ஆகியவற்றை எளிதில் பெறுவது, அவர்கள் வாழும் சூழ்நிலையை மேம்படுத்துதல் ஆகிய பணிகளின்மூலம் மகளிர் மற்றும் குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியை மேம்படுத்துவதுபோன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழக அரசு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது. சமூக நலத் துறையானது ஏழ்மை நிலையில் உள்ள பெண்கள் மற்றும் சிறார்களுக்குக் கல்வி கற்க, திருமணம்/மறுமணம் செய்ய நிதியுதவி வழங்கிப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. பெண் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு ஏற்ற மற்றும் பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காகவும், பாலின வேறுபாட்டைக் களைவதற்காகவும், வளர்இளம் பெண்களின் நிலையினை மேம்படுத்தும் வகையிலும் அரசு பல்வேறு கொள்கைகளை ஏற்படுத்தி, சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. இது தேசிய சராசரியைவிடக் கூடுதலாக உள்ள தமிழ்நாட்டின் பாலின வளர்ச்சிக் குறியீட்டின்மூலம் நிரூபணமாகியுள்ளது.

### மகளிர் நலத் திட்டங்கள்

### 2.2. திருமண உதவித் திட்டங்கள்

ஏழைப் பெற்றோர்கள்/பாதுகாவலர்கள் தங்களுடைய மகள்களுக்குத் திருமணம் செய்ய அவர்கள்படும் இன்னல்களைத் தவிர்ப்பதற்காக சமூக நலத் துறைமூலம் திருமண நிதி உதவித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மொத்தம் ஐந்து திருமண/மறுமண நிதியுதவித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. டாக்டர் தாமாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டத்தைத் தவிர மற்ற திட்டங்களின்கீழ் பயன்பெற பெண்ணின் வயது வரம்பு 18 முதல் 30-க்குள் இருக்க வேண்டும்.





| வ. எண் | திட்டம் | உதவியின் அளவு | இருக்க வேண்டிய தகுதி |
|---|---|---|---|
| 1. | மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் (3–6–2006 முதல் மீண்டும் துவக்கப்பட்டது) | ரூ.15,000/– | (அ) பெண்ணின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்குள் இருக்க வேண்டும்.<br>(ஆ) பெண்ணின் வயது 18-30-க்குள் இருக்க வேண்டும்.<br>(இ) ஒரு குடும்பத்திலிருந்து ஒரு பெண்ணுக்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்படும்.<br>(ஈ) கல்வித் தகுதி: பத்தாம் வகுப்பு படித்திருக்க வேண்டும் (பழங்குடியினர் எனில், 5 ஆம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும்) |
| 2. | ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவைப் பெண்களின் மகள் திருமண நிதியுதவித் திட்டம் | ரூ.10,000/– | (அ) பெண்ணின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு குறைவாக இருக்க வேண்டும்.<br>(ஆ) பெண்ணின் வயது 18–30 க்குள் இருக்க வேண்டும்.<br>(இ) ஒரு குடும்பத்திலிருந்து ஒரு பெண்ணுக்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்படும்.<br>(ஈ) கல்வித் தகுதி: பெண் 8 ஆம் வகுப்புப் படித்திருக்க வேண்டும். |
| 3. | அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதியுதவித் திட்டம் | ரூ.10,000/– | பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். பெண்ணின் வயது 18 முதல் 30-க்குள் இருக்க வேண்டும். |

| வ. எண் | திட்டம் | உதவியின் அளவு | இருக்க வேண்டிய தகுதி |
|---|---|---|---|
| 4. | தமிழக அரசு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் | (அ) ரூ.20,000 (திருமணச் செலவிற்காக ரூ.10,000 மற்றும் தேசிய சேமிப்புப் பத்திரமாக ரூ.10,000) | (அ) கலப்பு மணம் புரிந்துகொள்ளும் தம்பதியரில் ஒருவர் ஆதி திராவிடர் அல்லது பழங்குடியினத்தவராகவும் மற்றவர் வேறு இனத்தவராகவும் இருத்தல் வேண்டும். பெண்ணின் வயது 18 முதல் 30-க்குள் இருத்தல் வேண்டும். |
| | | (ஆ) ரூ.10,000 (திருமணச் செலவிற்காக ரூ.3,000 மற்றும் தேசிய சேமிப்புப் பத்திரமாக ரூ.7,000) | (ஆ) கலப்பு மணம் புரிந்துகொள்ளும் தம்பதியரில் ஒருவர் பிற்பட்ட (அ) மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராகவும், ஒருவர் முற்பட்ட பிரிவைச் சேர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும். பெண்ணின் வயது 18 முதல் 30–க்குள் இருத்தல் வேண்டும் |
| 5. | டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு ஏழை விதவை மறுமண நிதியுதவித் திட்டம் | ரூ.10,000/– (ரூ.3,000/– பணமாகவும் ரூ.7,000/– தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கப்படும் | (அ) வருமான வரம்பு ஏதுமில்லை. (ஆ) பெண்ணின் வயது 20 முதல் 35-க்குள் இருத்தல் வேண்டும். |



## 2.3. சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவசத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், ஆதரவற்ற பெண்கள் மற்றும் ஊனமுற்ற ஆண்கள் மற்றும் பெண்களின் சுய வேலைவாய்ப்புத் திறனைப் பெருக்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடும் நோக்குடன் தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

## 2.4. சேவை இல்லங்கள்

நிலையான வருமானம் பெறுபவர்களே தற்போதைய பொருளாதார நிலையில் கஷ்டப்படும்போது, வாழ்வாதாரமற்ற விதவைகள், ஆதரவற்ற மற்றும் உதவிக்கு எவருமில்லாத பெண்கள் ஆகியோருக்கு சிறப்புப் பாதுகாப்பு தேவைப்படுகிறது. இத்தகைய பெண்களுக்குப் பாதுகாப்பு அளித்திடவும், அவர்கள் தங்களது வாழ்க்கையை மீண்டும் செம்மையாக அமைத்துக்கொள்ள உதவிடவும், சமூக நலத் துறை தாம்பரம், கடலூர், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை, மதுரை மற்றும் கன்னியாகுமரி ஆகிய 8 இடங்களில் சேவை இல்லங்களை நடத்தி வருகிறது. சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்டோர்களுக்கென மேலும் ஒரு சிறப்புச் சேவை இல்லம் நாகப்பட்டினத்தில் செயல்பட்டு வருகிறது. 14 முதல் 18 வயது வரையிலானவர்கள் மற்றும் 18 வயதுக்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்களுக்கென இச்சேவை இல்லம் செயல்பட்டு வருகிறது. இச்சேவை இல்லங்கள், உள்ளுறைவோருக்குத் தங்குமிடம், உணவு, கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழில் பயிற்சி ஆகியவற்றை அளிக்கின்றன. இச்சேவை இல்லங்களில் உள்ளுறையும் மகளிர் தமது குழந்தைகளைத் தங்களுடன் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவதுடன், அக்குழந்தைகளுக்குக் கல்வி வசதியும் அளிக்கப்பட்டு வருகிறது.

அனைத்துச் சேவை இல்லங்களிலும் மேல்நிலை வகுப்புகளும், தொழிற்கல்வியும் இல்லத்திலேயே வழங்கப்படுகிறது. உணவூட்டுச் செலவினமாக மாதம் ஒன்றுக்குத் பெரியவர்களுக்குப் தலா ரூ.300/- வீதமும், குழந்தைகளுக்குத் தலா ரூ.225/- வீதமும் வழங்கப்படுகிறது. பெரியவர்களுக்கு ரூ.500/- மதிப்பில் ஒவ்வொரு ஆண்டும் இலவச சீருடை வழங்கப்படுகிறது. மேலும், இச்சேவை இல்லத்தில் வசிக்கும் குழந்தைகளுக்கு ஆண்டிற்கொரு முறை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டப் பயனாளிகளுக்கு வழங்கப்படும் சீருடைத் துணியினைக் கொண்டு சீருடை தைத்து வழங்கப்படுகிறது.

இவ்வில்லங்களில் தங்கியிருப்போர்களுக்குத் தேவையான பாட நூல்கள் மற்றும் குறிப்பேடுகள் தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்திடமிருந்து வாங்கி, இலவசமாக வழங்கப்படுகிறது. உடல் ஊனமுற்றோருக்கெனத் தனியாக ஒரு பிரிவு தாம்பரம் சேவை இல்லத்தில் இயங்கி வருகிறது.

திருநெல்வேலி, கடலூர், சிவகங்கை, சேலம் மற்றும் தாம்பரம் சேவை இல்லங்களில் மேல்நிலை வகுப்புகளில் செவிலியர் பயிற்சி, துணி மற்றும் வடிவமைப்புப் பயிற்சி, ஆய்வகத் தொழில்நுட்பப் பயிற்சி போன்ற பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இவை தவிர, தாம்பரம் சேவை இல்லத்தில் செயலகப் பயிற்சியும், மதுரை சேவை இல்லத்தில் தையற்பயிற்சியும் வழங்கப்படுகிறது. அனைத்துச் சேவை இல்லங்களிலும் 10-ம் வகுப்பு முடித்த சேவை இல்ல மாணவிகளுக்கு நவீன தொழில் நுட்பத்தில் ஈடுபாடுகொள்ளும் வகையில் கணிப்பொறிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியையும், 10 ஆம் வகுப்புக் கல்வியையும் முடித்த பெண்கள் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சிக்குப் பரிந்துரைக்கப்படுகின்றனர். தாம்பரம் சேவை இல்லத்தில் பட்டுத் தொழில் பயிற்சி வகுப்பு அங்குள்ள பெண்களின் பொருளாதார உயர்வுக்காகத் துவக்கப்பட்டுள்ளது. மேலும், ஆண்டுக்கு 40 பெண்களுக்கு 19.34 இலட்சம் செலவில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்பு மறுபடியும் துவங்கப்பட உள்ளது.

## 2.5. தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் சேவை இல்லங்களுக்கு அரசு மானியஉதவி

கணவனால் கைவிடப்பட்டவர்கள், விதவைகள் மற்றும் ஆதரவற்றோர் ஆகியோர்களுக்காக காந்தி கிராமத்திலுள்ள கஸ்தூரிபாய் சேவாஸ்ரமம், சென்னையில் உள்ள ஸ்ரீசேவா மந்திர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள சரணாலயம் ஆகிய தொண்டு நிறுவனங்கள்மூலம் மூன்று சேவை இல்லங்கள் அரசு நிதி உதவியுடன் நடத்தப்படுகின்றன. இச்சேவை இல்லங்களுக்குக் கல்வி மற்றும் தையற்பயிற்சி மற்றும் கைத்தொழிலில் பயிற்சி அளிப்பதற்காக ஆசிரியர்களுக்கான மானியம் மற்றும் பயிற்சி உதவித் தொகையைக் கீழ்க்கண்டவாறு அரசு வழங்குகிறது. பயிற்சி உதவித் தொகையாக ரூ.20/-ம் ஆசிரியர் மானியமாக ரூ.75/-ம் வழங்கப்படுகிறது.

## 2.6. பணிபுரியும் பெண்கள் விடுதிகள்

பணிக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அவர்கள் தங்குவதற்கு ஏற்ற பாதுகாப்பான இட வசதியின் தேவையும் அதிகரிக்கிறது. பெண்கள் அவர்கள் பணிபுரியும் இடம்



அல்லது அதன் அருகிலேயே தங்குவதற்குத் தக்க இட வசதியினை நாட வேண்டியுள்ளது. எனவே பணிபுரியும் பெண்களுக்கு உதவும் வகையில், சென்னையில் 2, கடலூர், மதுரை, புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருச்சி மற்றும் ஓசூரில் தலா ஒன்று வீதம் 8 பணிபுரியும் மகளிர் விடுதிகள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. பணிபுரியும் மகளிர் விடுதியில் சேருவதற்கான மாத வருமான உச்சவரம்பாக ரூ.10,000/- நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வாடகையாக மாதமொன்றுக்கு சென்னையில் உள்ள விடுதிகளில் ரூ.200/-ம் இதர மாவட்டங்களில் ரூ.150/-ம் வசூலிக்கப்படுகிறது. தண்ணீர், மின்சாரம் மற்றும் உணவு ஆகியவற்றிற்கான செலவினங்கள் உள்ளுறைவோர்களால் சரிசமமாகப் பகிர்ந்துகொள்ளப்படுகின்றன. இவ்விடுதியில் பணிபுரியும் கண்காணிப்பாளர், உதவியாளர், சமையலர், துப்புரவாளர் மற்றும் இதர பணியாளர்களின் ஊதியம் அரசால் வழங்கப்படுகிறது.

### புதிய பணிபுரியும் மகளிர் விடுதி கட்டுதல்

பணிபுரியும் மகளிருக்குப் பாதுகாப்பை அதிகரித்து, அவர்கள் பயமற்ற சூழ்நிலையில் வாழ வகை செய்யும்பொருட்டு, பணிபுரியும் மகளிர் விடுதிகளைக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. 11-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் குறைந்த மற்றும் நடுத்தர மக்களின் தேவைக்காக சென்னையில் மட்டும் மேலும் 10 மகளிர் விடுதிகள் தேவைப்படும். இவ்விடுதிகளை ஏற்படுத்த ரூ.7 கோடி செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதேபோல, தமிழகத்திலுள்ள மற்ற மாநகராட்சிப் பகுதிகளான மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகியவற்றிற்குத் தலா 2 விடுதிகள் தேவைப்படும். இவைகளை ஏற்படுத்த மேலும் ரூ.7 கோடி கூடுதலாகத் தேவைப்படும். மேற்கண்ட திட்டங்களுக்காக மத்திய அரசின் உதவியை நாடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.7. வழிகாட்டி மையம்

பெண்களின் நலனுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் பல்வேறு திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு 1979 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட வழிகாட்டி மையங்கள் 20 மாவட்டங்களில் மாவட்ட சமூக நல அலுவலகங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்த வழிகாட்டி மையங்கள் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சிறு தொழில் தொடங்க கடனுக்கான விண்ணப்பப் படிவங்களை தேசியமயமாக்கப்பட்ட

வங்கிகளுக்குப் பரிந்துரை செய்து அனுப்புவதோடு, மாவட்ட சமூக நல அலுவலர்களால் கையாளப்படும் வரதட்சணைக் கொடுமை குறித்த புகார்கள், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான பணிகளில் உதவி புரிகின்றன.

**2.8. ஏழை விதவைத் தாய்மார்களின் குழந்தைகளுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்**

தற்போது அரசுப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் இலவசமாகப் புத்தகங்கள் வழங்கப்படும் நிலையில், ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்குக் குறைவாக உள்ள ஏழை விதவையரது பள்ளி செல்லும் குழந்தைகள் பயன்பெறும் வகையில் கீழ்க்கண்டவாறு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன:

| வகுப்பு | ஆண்டொன்றுக்கு ஒரு குழந்தைக்கு வழங்கப்படும் புத்தகம் மற்றும் குறிப்பேடுகளின் மதிப்பு |
|---|---|
| 1 மற்றும் 2 ஆம் வகுப்பு | ரூ.50/- |
| 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை | ரூ.125/- |
| 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை | ரூ.175/- |
| 9 மற்றும் 10 ஆம் வகுப்பு | ரூ.300/- |
| +1 மற்றும் +2 வகுப்பு | ரூ.600/- |

**2.9. வேலைக்குச் செல்லும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான காப்பகம்**

வேலைக்குச் செல்லும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகள், அவர்களுக்குப்பின் பிறந்திடும் மழலையர்களைக் கவனிக்க வேண்டிய சூழ்நிலையால் பள்ளிக்குச் செல்லாமல் நின்றுவிடுகின்றனர். இவர்களில் சிலர் சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபடுகின்றனர். இத்தகைய குழந்தைகளைத் தமது சகோதர, சகோதரிகளைக் கவனித்துக்கொள்ள வேண்டிய பொறுப்பிலிருந்து விடுவிக்கவும், சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்த்து, அவர்களைப் பள்ளிக்குச் செல்ல ஊக்குவிக்கும்பொருட்டும் தொண்டு



நிறுவனங்கள்மூலம், ஒரு குழந்தைக் காப்பகத்திற்கு 25 குழந்தைகள் வீதம், 106 குழந்தைகள் காப்பகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவைகளுக்கு அரசு மானியமாக ஆண்டொன்றுக்குத் தலா ரூ.25,410 வீதம் வழங்கப்படுகிறது.

**2.10. பெண்களுக்கான சமூகப் பொருளாதாரத் முன்னேற்றத் திட்டங்கள்**

(I) மகளிர் சமூகப் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைவதை உறுதி செய்வதை முக்கியக் குறிக்கோளாகக்கொண்டு கூட்டுறவு அமைப்புகளின் நிர்வாகத்தில் மகளிர் பங்கேற்க வாய்ப்பளிக்கும் வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

(II) மகளிரை மட்டும் அங்கத்தினர்களாகக் கொண்ட தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதன்மூலம் பெண்கள் சமூக முன்னேற்றம் அடைய வழிவகை செய்யப்படுகிறது. இந்த வகையில் 102 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் சமூக நல இயக்குநரின் கட்டுப்பாட்டிலும், 25 இணை உணவு தயாரிக்கும் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளரின்கீழும் செயல்படுகின்றன. இத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் சமூக நலத் துறை செயல்படுத்தும் திட்டங்களுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலமும், இதரப் பணிகள் மூலமும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் பெண்களுக்கு வருமானம் ஈட்டக்கூடிய வேலைவாய்ப்பினை வழங்குபவையாக விளங்குகின்றன.

| வரிசை எண் | கூட்டுறவுச் சங்கத்தின் வகைப்பாடு | கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | தையல் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் | 80 | 41,917 |
| 2. | எழுதுபொருள் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் | 15 | 833 |
| 3. | இதர சங்கங்கள் | 7 | 1,054 |
| | மொத்தம் | 102 | 43,804 |

[2007 ஏப்ரல் 10

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பாலியஸ்டர் மற்றும் பருத்தி நூல் இழை கலந்த துணியாலான இலவச சீருடைகளைத் தைக்கும் பணியில் 80 தையல் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 41,917 அங்கத்தினர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதன்மூலம் சேவை இல்லங்கள் மற்றும் ஆதரவற்றோர் இல்லங்களில் உள்ள மாணவ, மாணவியர் உட்பட 63 இலட்சம் பேர் பயனடைகின்றனர்.

சமூக நலத் துறையின் கட்டுப்பாட்டில் 15 எழுதுபொருள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றன. இச்சங்கங்களில் 833 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவ்வெழுதுபொருள் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் அரசு அலுவலகங்களுக்கும் மற்றும் அரசு நிறுவனங்களுக்கும் தேவையான பதிவேடுகளைத் தயாரிக்கும் பணியினை மேற்கொள்வதன்மூலம் சங்கப் பெண் அங்கத்தினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றன.

3 உற்பத்தியுடன் இணைந்த பயிற்சி மையங்கள் ஆயத்த ஆடைத் தயாரிப்பு, பொம்மை தயாரித்தல் மற்றும் மெழுகுவர்த்தி தயாரித்தல் ஆகிய தொழில்சார் பயிற்சிகளை வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள 40 மகளிருக்கு ஆண்டுதோறும் வழங்கி வருகின்றன.

சமூக நலத் துறையானது தையற்பயிற்சி, பனையோலையாலான பொருட்கள் தயாரித்தல், பாய் முடைதல் மற்றும் தும்புப் பயிற்சி ஆகிய தொழிற்பயிற்சி அளிக்கும் 39 பயிற்சி மையங்கள்மூலம் 713 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கிறது.

மேற்கண்ட பயிற்சி மையங்களில் பழங்குடி மகளிர் மட்டுமே பயனடையும் வகையில் சேலம் மாவட்டத்தில் இரண்டும், நாமக்கல் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் தலா ஒன்றுமாக மொத்தம் 4 தையற்பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன. இப்பயிற்சி மையங்களின் வாயிலாக ஒவ்வொரு ஆண்டும் 65 பழங்குடி மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின வகுப்பைச் சேர்ந்த மகளிருக்கும் இம்மையங்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

2003-2004 முதல் தனியாரிடம் வழங்கப்பட்டு வந்த, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் பள்ளிகள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்



2007 ஏப்ரல் 10]

சிறுபான்மையினர் நலத் துறையைச் சார்ந்த பள்ளிகள் மற்றும் கள்ளர் முறைப்படுத்தல் பள்ளிகள் ஆகியவற்றில் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் சீருடைகளைத் தைக்கும் பணியானது, தற்போது மகளிர் தொழிற்கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் வருவாய் மேம்படும் வகையில் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களிடம் வழங்கப்படுகின்றன.

**குழந்தை நலத் திட்டங்கள்**

**2.11. அரசு குழந்தைகள் காப்பகங்கள்**

சமுதாயத்தில் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகளை நாட்டின் சிறந்த குடிமக்களாக்க வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையுடன் தமிழ்நாடு முழுவதிலும் 5,155 குழந்தைகள் பயன்பெறும் வகையில் 27 ஆதரவற்ற குழந்தைகள் காப்பகங்களை அரசு நடத்தி வருகிறது. இக்காப்பகங்களில் உள்ளுறையும் குழந்தைகளுக்கு உணவு, உடை, இருப்பிடம், கல்வி மற்றும் மருத்துவச் செலவினம் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன.

இக்காப்பகங்களில் சேரக் கீழ்க்கண்ட தகுதிகள் இருக்க வேண்டும்:

- பெற்றோரோ/உறவினரோ இல்லாத ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகள்
- தாய் அல்லது தந்தை இருவரில் ஒருவர் இறந்துவிட்ட/நீண்ட நாள் கைதியாக இருப்பின், தாய் அல்லது தந்தையால் பாதுகாக்க முடியாத நிலையில் உள்ள குழந்தைகள்
- தொழுநோய்/மனநோயால் பாதிக்கப்பட்ட பெற்றோரால் கவனிக்க இயலாத குழந்தைகள்

அரசு குழந்தைகள் காப்பகங்களில் உள்ள குழந்தைகளுக்குக் கீழ்க்கண்ட வசதிகள் வழங்கப்படுகின்றன:

- ❖ ஒரு குழந்தைக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.225/- வீதம் உணவிற்குச் செலவிடப்படுகிறது.
- ❖ 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை வகுப்புகள் நடத்தப்படுகின்றன.
- ❖ 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை வெளிப் பள்ளிகளில கல்வி.

- ❖ இக்காப்பகக் குழந்தைகள் தன்னிறைவுடனும், தன்னம்பிக்கையுடனும் வாழ்வதற்கு உதவும் வகையில் அவர்களுக்குத் தொழிற்கல்வியும் அளிக்கப்படுகிறது.

- ❖ அரசு குழந்தைகள் காப்பக உள்ளுறைவோர் கல்வி பயிலத் தேவையான புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் தமிழ்நாடு பாட நூல் கழகம்மூலம் வாங்கி வழங்கப்படுகினறன.

- ❖ அரசு குழந்தைகள் காப்பகங்களில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ஆண்டுதோறும் இரண்டு ஜதை சீருடைகள் தைத்து வழங்கப்படுகின்றன.

- ❖ 6 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலும், மற்றும் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலும் வெளிப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கு ஆண்டுதோறும் முறையே ரூ.400/- மற்றும் ரூ.500/- மதிப்பீட்டில் இரண்டு ஜதை சீருடைகள் தைத்து வழங்கப்படுகின்றன.

- ❖ அரசு குழந்தைகள் காப்பக உள்ளுறைவோர் ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்குத் தலா ரூ.150/- வீதம் படுக்கைச் செலவினத்திற்காக வழங்கப்படுகிறது. (நீலகிரி மாவட்ட அரசு குழந்தைகள் காப்பகத்திற்கு மட்டும் ஒரு குழந்தைக்கு ரூ.250/- வீதம் படுக்கைச் செலவினத்திற்காக வழங்கப்படுகிறது)

- ❖ அரசு குழந்தைகள் காப்பகக் குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்குத் தலா ரூ.50/- மதிப்புள்ள தோலினாலான காலணிகள் வழங்கப்படுகின்றன.

- ❖ மருத்துவ வசதி:—

  250 குழந்தைகள் வீதம் உள்ள 20 அரசு குழந்தைகள் காப்பகங்களில் உள்ள குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1,000/- வீதமும்;

  100 குழந்தைகள் வீதம் உள்ள 7 அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.500/- வீதமும் மருத்துவச் செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.





- இக்குழந்தைகள வெளியுலக அறிவுபெற்றுத் தமது திறமையை வளர்த்துக்கொள்ள உதவும் வகையில் காப்பகங்களுக்கு அருகில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

காப்பக உள்ளுறைவோர்களுக்கான திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்துவதை உறுதி செய்யவும், காப்பகங்கள் நல்ல முறையில் இயங்க அறிவுரை வழங்கவும் சமூக சேவகர்கள், கல்வித் துறை, சுகாதாரத் துறை மற்றும் சமூக நலத் துறை அலுவலர்களைக்கொண்ட மாவட்ட ஆட்சியர் தலைமையிலான ஒரு குழு மாவட்டந்தோறும் அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி, காப்பகங்களின் முன்னேற்றத்தினையும், குழந்தைகளின் கல்வி, ஆரோக்கியம் மற்றும் குழந்தைகளைக் காப்பகத்தில் சேர்த்தல் ஆகியவை குறித்தும் கண்காணிக்கிறது. காப்பகங்கள் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு மாவட்ட சமூக நல அலுவலருக்கு இக்குழு உதவுகிறது.

**2.12. குழந்தைகள் நலனில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பு**

ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரித்து சாதாரணக் குடிமக்களாக வளரச் செய்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஒரு பெற்றோர் மட்டும் உள்ள அல்லது பெற்றோரே இல்லாத 5 வயது முதல் 18 வயது வரையுள்ள குழந்தைகள் இத்திட்டத்தின்மூலம் பயன் பெறுகின்றனர். குழந்தையின் பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

காப்பகங்களை நடத்தும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஊக்குவிக்கும்பொருட்டு, குழந்தைகளைப் பராமரிப்பதற்காக அரசு மானியம் வழங்கி வருகிறது. 1-4-1992 முதல் ஒரு குழந்தைக்கு ஆகும் செலவான ரூ.250/-ல் 80 சதவிகிதமான ரூ.200/-ஐ அரசு மானியமாக வழங்கி வருகிறது. மீதமுள்ள 20 சதவிகிதத் தொகையான ரூ.50/-ஐ அந்தந்தத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களே ஏற்றுக்கொள்கின்றன. இந்நிறுவனங்களில் தங்கும் 25 குழந்தைகள்கொண்ட ஒரு குழுவிற்குப் பராமரிப்புக்காக ஒரு இல்லத் தாய் அல்லது இல்லத் தந்தையும், ஒரு உதவியாளரும் இருத்தல் வேண்டும். தற்சமயம் 174 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் 12,800 குழந்தைகளுக்காக அரசிடமிருந்து பராமரிப்பு மானியம் பெறுகின்றன.

## 2.13. சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்

பெண் சிசுவதையைத் தடுப்பது, ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பிப் பெற்றுக்கொள்ளும் போக்கைக் குறைத்தல் மற்றும் குடும்பக் கட்டுப்பாட்டை ஊக்குவித்தல் ஆகியவற்றை நோக்கமாகக்கொண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் வேறு குழந்தைகள் எவரும் இல்லாமல் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டுமே உள்ள குடும்பங்களில், பெற்றோரில் எவரேனும் ஒருவர் 35 வயதுக்கு முன்னதாகக் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொண்டு இருந்தால், அக்குழந்தையின் பெயரில், தமிழ்நாடு மின் விசை நிதி அடிப்படை மேம்பாட்டு நிறுவனத்தில் தொடக்க வைப்பீடாக ரூ.22,200/- அரசால் செலுத்தப்படுகிறது. இந்த வைப்பீட்டுத் தொகையிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.150/- அப்பெண் குழந்தை முதல் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை கல்வி பயிலும் செலவிற்காக வழங்கப்படுகிறது. 20 ஆம் ஆண்டில், வைப்பீடு செய்யப்பட்ட ஆண்டிலிருந்து முழுமையாக வட்டியுடன்கூடிய முதிர்வுத் தொகை, அப்பெண்ணின் மேற்கல்வி/திருமணச் செலவிற்கு உதவும்.

இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருந்து ஆண் குழந்தை இல்லாத குடும்பங்களில் அப்பெண் குழந்தைகள் ஒவ்வொருவரின் பெயரிலும் தமிழ்நாடு மின் விசை நிதி அடிப்படை மேம்பாட்டு நிறுவனத்தில் ரூ.15,200/-ஐத் தொடக்க வைப்பீடாக அரசு செலுத்துகிறது. இத்தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியைக்கொண்டு அப்பெண் குழந்தைகள் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை ஒவ்வொருவருக்கும் கல்வி பயில மாதம் ஒன்றுக்கு ரூ.150/- வழங்கப்படும். 20 ஆண்டுகளுக்குப் பிறகு வட்டியுடன்கூடிய முதிர்வுத் தொகை முழுமையாக ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும். இது அக்குழந்தைகள் மேற்கல்வி பெற/திருமணச் செலவை ஈடு செய்ய உதவிடும்.

## 2.14. தொட்டில் குழந்தைத் திட்டம்

தொட்டில் குழந்தைத் திட்டம் முதன்முதலில் சேலம் மாவட்டத்தில் பெண் சிசுக் கொலையினை அறவே ஒழிக்கும் நோக்கோடு ஏற்படுத்தப்பட்டது. பின்னர், பெண் சிசுக் கொலை அதிகமாக நடக்கின்ற மாவட்டங்களாகக் கண்டறியப்பட்ட மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களுக்கு இந்தத் திட்டம்



விரிவுபடுத்தப்பட்டது. தொட்டில் குழந்தை வரவேற்பு மையங்கள், போதிய பணியாளர்கள், உள்கட்டமைப்பு வசதிகளான மருந்துப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள், தொலைபேசி வசதி, குளிர்சாதனப் பெட்டி வசதி ஆகியவற்றுடன் தொடங்கப்பட்டுள்ளன. 188 தொட்டில்கள் மாவட்ட சமூக நல அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையம்/துணை மையம் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுக் குழந்தைகள் பெறப்படுகின்றன.

இந்த வரவேற்பு மையங்கள் கைவிடப்பட்ட/தேவையில்லை என ஒதுக்கப்பட்ட சிசுக்களைப் பெற்று, அவைகளின் உயிரைக் காப்பதில் முக்கியப் பங்காற்றுகின்றன.

மாவட்ட சமூக நல அலுவலர்கள் இத்திட்டத்தில் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்படுகின்றனர்.

பெண் சிசுவதையைத் தடுப்பதில் மற்ற துறைகளுடன் மாவட்ட நிர்வாகம் ஒருங்கிணைந்து செயலாற்றுகிறது.

## 2.15. தத்து எடுத்தல்

தத்துத் திட்டமானது, அனாதையாக்கப்பட்ட, கைவிடப்பட்ட, ஆதரவற்ற, ஒதுக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தக்கதொரு குடும்பச் சூழலை ஏற்படுத்திக் கொடுத்து, அதன்மூலம் அக்குழந்தைகளுக்குப் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் அன்பும், அரவணைப்பும் கிடைக்கவும், அவர்களிடமுள்ள செயல் திறன் மற்றும் உள்ளாற்றலை வெளிப்படுத்தவும் உதவுகிறது. மேலும், குழந்தையில்லாக் கணவன்-மனைவிக்குத் தங்களுக்கென குழந்தையைப் பேணிப் பராமரிக்கும் வாய்ப்பையும், மகிழ்ச்சியையும் இத்திட்டம் வழங்குகிறது. குழந்தைகள் உடலாலும், உள்ளத்தாலும் இயல்பான வளர்ச்சியைப் பெறவும், அறிவாற்றலையும், பொருளாதார நிலையையும் உயர்த்திக் கொள்ளவும், குழந்தைகள் தவறான முறைகளில் ஈடுபடுத்தப்படுவதைத் தடுப்பதிலும், அனாதைக் குழந்தைகள் சமூகத்தால் சிறுமைப்படுத்தப்படுவதைத் தடுப்பதிலும் இத்திட்டம் முக்கியப் பங்காற்றுகிறது.

உள்நாட்டில் தத்துக் கொடுக்க 19 நிறுவனங்களுக்கு உரிமம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனங்கள் சென்னை, கோயமபுத்தூர், தருமபுரி, திருச்சி, தூத்துக்குடி, மதுரை, சேலம், திண்டுக்கல்,

நாகப்பட்டினம், திருநெல்வேலி, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் செயல்படுகின்றன. உரிமம்பெற்ற நிறுவனங்களில் 8 நிறுவனங்களுக்கு வெளிநாட்டினருக்குத் தத்துக் கொடுக்கவும் உரிமம் அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மாவட்டத்திற்குக் குறைந்தபட்சம் ஒரு தத்து நிறுவனத்தைக் கண்டறிய அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உரிமம் அளிக்கப்பட்ட எல்லா நிறுவனங்களும் சட்டபூர்வத் தத்தெடுத்தலை மேற்கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 3,355 குழந்தைகள் தத்தெடுத்தல் திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளனர். மத்திய அரசின் சமூக நீதி மற்றும் உரிமையளித்தல் துறையின்கீழுள்ள CARA என்ற அமைப்பு வெளிநாட்டினருக்குத் தத்துக் கொடுக்கும் உரிமம் அளிக்கிறது. உள்நாட்டில் தத்துக் கொடுக்கும் உரிமத்தை மாநில அரசு வழங்குகிறது.

**2.16. முதியோர் இல்லங்கள்**

மாறும் வாழ்க்கை முறை மற்றும் நகரமயமாக்கல் ஆகியவை அதிக எண்ணிக்கையிலான வயோதிகர்கள் ஆதரவில்லாமல் போகும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. மேலும், வாழ்நாள் நீட்சி அதிகரித்து வருவதாலும் முதியோரின் மக்கட்தொகை உயர்ந்து வருகிறது. வறுமை நிலையில் உள்ள குடும்பத்தைச் சார்ந்த முதியோர்களும், ஆதரவற்ற நிலையில் உள்ள முதியோர்களுமே அன்றாட வாழ்வில் உணவு, உடை, உறைவிடம் இன்றி அதிகம் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் இன்னல்களைக் களைய, 16 தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு முதியோர் இல்லங்களை நடத்த அரசு மானியம் அனுமதித்துள்ளது. இவ்வில்லங்களில் 620 முதியோர்களுக்கு உணவு மற்றும் இருக்க இருப்பிட வசதி அளிக்கப்படுகின்றது. 40 முதியோர்கள் தங்கக்கூடிய ஒவ்வொரு முதியோர் இல்லத்திற்கும் அரசு ஒரு ஆண்டுக்கு ரூ.2 இலட்சத்தை மானியமாக வழங்குகிறது. ரூ.40 ஆயிரத்தைத் தொண்டு நிறுவனங்களே தங்கள் பங்காகச் செலவிட வேண்டும். இவ்வில்லங்கள் அவ்வப்போது அலுவலர்களால் ஆய்வு செய்யப்படுகின்றன. மத்திய அரசு முதியோர்கள் பாதுகாப்பிற்கான சட்டத்தினை இயற்றியபின், மாநில அரசு 'முதியோர் கொள்கை'யினை வெளியிடும்.

**2.17. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத் திட்டங்கள்**

சுனாமி பேரலையின் பாதிப்பால் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கன்னியாகுமரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை,



இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க சமூக நலத் துறையின்மூலமாகக் கீழ்க்கண்ட நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:

**(அ) சிறப்பு குழந்தைகள் காப்பகம்**

சுனாமி பேரலையால் ஆதரவற்றோராக்கப்பட்ட, குறிப்பாகக் குழந்தைகள் மற்றும் பெண்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும்பொருட்டு, மூன்று அரசு சிறப்பு குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டன. தற்சமயம் நாகப்பட்டினம் மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் மட்டுமே 0—14 வரையிலான வயதுடைய தலா 100 குழந்தைகள் பயன்பெறும் வகையில் இக்காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் துவக்கப்பட்ட சிறப்பு குழந்தைகள் காப்பகம் 14-3-2006 முதல் நாகர்கோவிலிலுள்ள அரசு குழந்தைகள் காப்பகத்துடன் இணைக்கப்பட்டது.

**(ஆ) வளர்இளம் பெண்கள் (14—18) மற்றும் 18 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்களுக்கான சிறப்புச் சேவை இல்லம்**

14 வயது முதல் 18 வயதிற்குட்பட்ட வளர்இளம் பெண்களுக்காகவும், 18 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்களுக்காகவும் நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் சிறப்புச் சேவை இல்லங்கள் முறையே 6-1-2005 மற்றும் 18-1-2005 ஆகிய தேதிகளில் துவக்கப்பட்டன. தற்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட தகுதியான உள்ளுறைவோர் இல்லாத காரணத்தால் கன்னியாகுமரி அரசு சிறப்புச் சேவை இல்லமானது, மற்ற குழந்தைகளும் பயன்பெறும் வகையில் பொதுச் சேவை இல்லமாக மாற்றப்பட்டுள்ளது.

**(இ) நிதி உதவித் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ், சுனாமி பேரலையால் பெற்றோரை இழந்து நிராதரவாக உள்ள 14 வயது வரையிலான சிறார்கள் (இரு பாலர்) மற்றும் 14 முதல் 18 வயது வரையிலான வளர்இளம் பெண்களுக்குத் தலா ரூ.5 இலட்சமும், 18 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்களுக்குத் தலா ரூ.3 இலட்சமும் தமிழ்நாடு மின் விசை நிதி அடிப்படை மேம்பாட்டு நிறுவனத்தில் பயனாளியின் பெயரில் நிதி வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகை முதிர்வு அடைந்தவுடன் பயனாளியின் உயர் கல்விக்கோ அல்லது சுய வேலைவாய்ப்பிற்கோ பயன்படும். இத்திட்டத்தின்கீழ் இதுவரை

ரூ.7,41,26,661/- முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்தும், இயற்கைப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்தும் பெறப்பட்டு வைப்பீடு செய்யப்பட்டதன்மூலம் 223 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**(ஈ) சுனாமியால் பாதிக்கப்பட்டோர்க்கு உளவியல்ரீதியான அரவணைப்புப் பயிற்சி**

தமிழ்நாடு அரசு ஐ.நா. வளர்ச்சித் திட்டத்தின் (UNDP) நிதியுதவியுடன், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உளவியல் ரீதியான அரவணைப்புப் பயிற்சி இத்துறையின்மூலமாக (இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை நீங்கலாக) 11 கடலோர மாவட்டங்களில் நடத்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. மேற்கண்ட திட்டத்தின்கீழ், இதுவரை 2,813 சமுதாய அளவிலான பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு, அவர்கள்மூலம் 32,852 குடும்பங்களுக்கும், 1,51,424 நபர்களுக்கும் உளவியல்ரீதியான ஆலோசனை (Counselling) வழங்கப்பட்டது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களிடையே குடிப்பழக்கத்தைத் தடுப்பதற்கான ஒரு சிறப்புத் திட்டம் தொடங்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக உலக சுகாதார மையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் டிடிகே. ரங்கநாதன் மருத்துவ ஆராய்ச்சி மையத்தால் சமுதாயக் களப் பணியாளர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. உலக சுகாதார மையத்தின் புது தில்லி அலுவலகத்தின் மூலமாக APW திட்டத்தின்கீழ் ரூ.13.06 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. குடிப்பழக்கத்தினால் பாதிக்கப்பட்டோரை எவ்வாறு அப்பழக்கத்திலிருந்து விடுவிப்பது என்பது குறித்து 11 கடலோர மாவட்டங்களில் உள்ள சமுதாய நலப் பணியாளர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. பயிற்சி முடித்த பின்னர் இந்தச் சமுதாய நலப் பணியாளர்கள் இம்மாவட்டங்களில் குடிப்பழக்கத்தினால் பாதிக்கப்பட்டோரின் விவரங்கள் மற்றும் அவர்கள் உட்கொள்ளும் மதுவின் அளவு ஆகியவற்றைச் சேகரித்து, தீவிர பாதிப்புக்குள்ளானோரை மருத்துவ சிகிச்சைக்குப் பரிந்துரைப்பதோடு, பாதிக்கப்பட்டோருக்கு உளவியல்ரீதியிலான ஆதரவும் வழங்குகின்றனர்.

### 2.18. தமிழ்நாடு சமூக நல வாரியம், சென்னை

1954-ல் துவக்கப்பட்ட தமிழ்நாடு சமூக நல வாரியம் கீழ்க்கண்ட நோக்கங்களுடன் செயல்பட்டு வருகிறது:



1. சமூக நலத் தன்னார்வ அமைப்புகளை உருவாக்குவதை ஊக்குவித்தல்.
2. தனியார் சேவை நிறுவனங்களின் பணித்திறனை மேம்படுத்துவதற்குத் தொழில்நுட்பம் மற்றும் நிதியுதவி அளித்து அவற்றின் தரத்தினை உயர்த்துதல்.
3. அரசு நிதி உதவிமூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

இந்நோக்கங்களை எட்டும் வகையில், மத்திய சமூக நல வாரியம், கல்வி, பயிற்சி, விழிப்புணர்வை ஏற்படுத்துதல், வருவாயைப் பெருக்க வழிகள் மற்றும் இதர சேவைகள்போன்றவைகள்மூலம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு உதவி புரிகிறது. தொண்டு நிறுவனங்களுக்குத் திட்டங்களின் தன்மையைப் பொறுத்து 50 சதவிகிதம் முதல் 90 சதவிகிதம் வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது. சில சிறப்புத் திட்டங்களுக்கு 100 சதவிகிதம் நிதியுதவியும்கூட வழங்கப்படுகிறது.

ஏப்ரல் 2006 முதல் மார்ச் 2007 வரையில், 606 தொண்டு நிறுவனங்களின்கீழ் இயங்கும் 1,456 தொண்டு அலகுகளுக்கு ரூ.954 இலட்சம் மத்திய அரசிடமிருந்து நிதியுதவிபெற்று வழங்கப்பட்டுள்ளது. மாநில அரசின் நிதியுதவியான ரூ.14.80 இலட்சம் 206 தன்னார்வ அலகுகளைக்கொண்ட 206 தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 2.19. தமிழ்நாடு சமூக நல வாரியத்தின்கீழ் கிராமப்புறங்களில் செயல்படும் தொண்டு நிறுவனங்களுக்குத் தமிழக அரசின் மானியம்

கிராமப்புறங்களில் மக்கள் நலனுக்காகச் செயல்படும் 200 தொண்டு நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, குறைந்தபட்சம் மூன்று வருடங்கள் நல்ல நிலையில் இயங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுகின்றன. திறன் பயிற்சி அளிப்பதற்கான தையல் இயந்திரங்கள், தட்டச்சு இயந்திரங்கள், கயிறு இராட்டினங்கள் முதலிய உபகரணங்களும் பகல் நேரப் பராமரிப்பு மையங்களில் உள்ள குழந்தைகளுக்கான விளையாட்டுச் சாதனங்கள் மற்றும் உபகரணங்கள்போன்றவைகள் வாங்குவதற்கு ஒவ்வொரு ஆண்டும் 200 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்குத் தலா ரூ.5,000/- வீதம் மானியமாக அரசால் வழங்கப்படுகிறது. இத்தொண்டு நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு சமூக நல வாரியம்மூலம் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு சமூக நல வாரியம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு உதவி புரிய ஏதுவாக மாநில அரசு ஆண்டுதோறும் ரூ.10 இலட்சத்தை விடுவிக்கிறது. இதன்மூலம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மழலையர் காப்பகங்கள், பால்வாடி மற்றும் குழந்தைகள் விளையாடும் இடம் ஆகியவற்றின் உள்கட்டமைப்பு மேம்படுத்தப்படுகிறது. மேலும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு 50:50 என்ற அடிப்படையில் ரூ.5,000/- மானியமாக வழங்கப்படுகிறது.

## 2.20. குடும்ப ஆலோசனை மையம்

குடும்ப ஆலோசனை மையத்தின் நோக்கமானது, குடும்பத்தில் நிலவும் கருத்து வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையை நிலவச் செய்வதாகும். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நாமக்கல், கரூர், ஈரோடு, விழுப்புரம், வேலூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் நடைபெற்று வரும் 6 குடும்ப ஆலோசனை மையங்களுக்குத் தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் வாயிலாக அரசு நிதி உதவி அளித்து வருகிறது. இம்மையங்கள் வரதட்சணைக் கொடுமை, குடும்பத்தில் நிலவும் கருத்து வேறுபாடுகள், குடிப்பழக்கம் ஆகிய இன்னல்களுடன் அணுகும் பெண்களுக்கு, அவற்றை நீக்க உதவி செய்வதுடன், எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோயாளிகளுக்குத் தகுந்த ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றன.

## 2.21. தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 1993-ல் கீழ்க்கண்ட நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டது:

1. பெண்களின் நலனைப் பாதுகாத்தல்.
2. பெண்கள் நடத்தப்படும் விதத்திலுள்ள குறைபாட்டைக் களைதல்.
3. அரசுக்கு உகந்த இனங்களில் நடவடிக்கைக்குப் பரிந்துரைத்தல்.



சமீபத்தில் இந்த ஆணையமானது முனைவர் கே.எம். இராமாத்தாள் அவர்கள் தலைமையில் மாற்றியமைக்கப்பட்டது. இவ்வாணையத்தில் தலைவியும், ஒன்பது உறுப்பினர்களும் உள்ளனர். இவ்வாணையத்தில் உறுப்பினர்கள்: (1) அரசுச் செயலாளர், சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை (2) இரண்டு பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் (3) ஒரு அகில இந்திய ஆட்சிப் பணி அலுவலர் மற்றும் ஒரு காவல் துறை அலுவலர் (4) இரண்டு புகழ்பெற்ற பொதுச் சேவையில் உள்ள மகளிர் (5) ஒரு வழக்கறிஞர் மற்றும் (6) சமூக நல ஆணையர் மற்றும் இயக்குநர் (உறுப்பினர்-செயலர்). இவ்வாணையம் தனது அதிகாரத்தை அதற்கான அரசாணையில் உள்ளபடி பயன்படுத்தும்.

## 2.22. குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005 என்னும் மத்தியச் சட்டம் மற்றும் அது தொடர்பான விதிகள் 26-10-2006 முதல் அமலுக்கு வந்தன. அரசியலமைப்புச் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளபடி பெண்களின் உரிமையைப் பாதுகாக்கவும், பெண்களைக் குடும்ப வன்முறைகளிலிருந்து பாதுகாக்கவும் அதிக அதிகாரத்தை அரசுக்கு இச்சட்டம் வழங்குகிறது. இச்சட்டத்தின்படி சமூக சேவையில் ஈடுபட்டுள்ள தகுதி படைத்த பெண்கள் “மாவட்டப் பாதுகாப்பு அதிகாரியாக” நியமிக்கப்படும் வரை, மாவட்ட சமூக நல அலுவலர்கள் தற்காலிகமாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் “மாவட்டப் பாதுகாப்பு அதிகாரி”யாக நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்டந்தோறும் புகழ்பெற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிலிருந்து ஒரு சேவை வழங்குபவரும், சென்னைக்கு இரண்டு சேவை வழங்குபவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். சேவை வழங்குபவர்கள் மருத்துவ வசதிகள், ஆலோசனை வழங்குதல் மற்றும் சட்டரீதியான உதவி வழங்கத் தேவையான வசதிகள் போன்றவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் என அவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டோர்கள் தங்குவதற்கு மற்றும் அவர்களுக்கு ஆகும் உணவூட்டுச் செலவினங்கள் சேவை வழங்குபவர்களுக்கு அரசால் திரும்ப வழங்கப்படும்.

**2007–2008 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் விவரப் பட்டியல்**

**சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை (தலைமைச் செயலகம்)**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | தலைமைச் செயலக சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறைக்கு ஒரு படிப்பெருக்கி இயந்திரம் மற்றும் பன்முறைப் பயன்பாடுகொண்ட ஒரு நிகரி இயந்திரம் வாங்குதல் | 0.80 |
| 2. | சமூக நலன் மற்றும் சத்துணவு திட்டத் துறையின் கணினி அறையைக் குளிரூட்ட ஒரு டன் திறன் கொண்ட இரண்டு சீர்வளிச் சாதனங்கள் வாங்குதல் | 1.00 |
| | மொத்தம் | 1.80 |

சமூக நலம்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | அரசு சேவை இல்ல உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் பணிபுரியும் மகளிர் விடுதிகளில் நூலகம் அமைத்தல் | 5.95 |
| 2. | மாவட்டங்களில் செயல்படும் 7 சேவை இல்லங்களுக்குக் கணினி மற்றும் துணைப் பாகங்கள் வழங்குதல் | 3.44 |
| 3. | மாவட்டங்களில் செயல்படும் 25 அரசு குழந்தைகள் காப்பகங்களுக்குக் கணினி மற்றும் துணைப் பாகங்கள் வழங்கல் | 12.25 |
| 4. | மாவட்டங்களில் சத்துணவுத் திட்ட அலுவலர்களுக்கு 30 கணினி மற்றும் துணைப் பாகங்கள் வழங்குதல் | 14.75 |



| வ. எண் | திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 5. | திண்டுக்கல் மாவட்ட சமூக நல அலுவலகப் பழைய ஈப்பிற்குப் பதில் புதிய ஈப்பு வாங்குதல் | 4.50 |
| 6. | நீலகிரி மாவட்டம் கோடப்பமந்து அரசு குழந்தைகள் காப்பகத்திற்குப் புதிய எரிவாயுக் குழாய்கள் மற்றும் பர்னர்கள் பொருத்துவது | 0.20 |
| 7. | 27 அரசு குழந்தைகள் காப்பகங்களுக்குப் புதிய சமையல் பாத்திரங்கள் வாங்குதல் | 9.45 |
| 8. | பள்ளிச் சத்துணவு மையங்களுக்கு உணவு சமைக்கத் தேவையான அலுமினியப் பாத்திரங்கள் வாங்கி வழங்குதல் | 50.00 |
| 9. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டப் பயனாளிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வழங்குதல் | 85.00 |
| 10. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் சமையல் கூடத்துடன், பண்டக சாலைக் கூடம் கட்டுதல் | 85.00 |
| 11. | பள்ளிச் சத்துணவு மையங்களிலுள்ள சமையல் அறைகளை நவீனப்படுத்துதல் | 100.00 |
| | மொத்தம் | 370.54 |

# அத்தியாயம் 3

## சத்துணவு

### 3.1. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய குழந்தைகளுக்குத் தேவையான ஊட்டச் சத்து நிறைந்த உணவினை வழங்குவதன்மூலம் குழந்தைகளிடையே காணப்படும் ஊட்டச் சத்துக் குறைவினைச் சரி செய்தல், குழந்தைகளின் கல்வியறிவு விகிதத்தினை அதிகரித்தல், பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், குழந்தைகள் பள்ளிக்குச் செல்லாமல் இடையில் நின்றுவிடுவதைக் குறைத்தல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் முதலில் ஊரகப் பகுதிகளிலுள்ள குழந்தைகள் நல மையங்களில் 2-5 வயதிற்குட்பட்ட முன்பருவக் கல்வி பயிலும் குழந்தைகள் மற்றும் 5-9 வயதிற்குட்பட்ட ஆரம்பப் பள்ளிக் குழந்தைகள் ஆகியோர் பயனடையும்வண்ணம் 1-7-1982 முதல் செயல்படுத்தப்பட்டது. பின்னர், 15-9-1982 முதல் இத்திட்டம் நகர்ப் பகுதிகளிலுள்ள சத்துணவு மையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, செப்டம்பர் 1984 முதல் 10-15 வயது வரையிலான பள்ளி மாணவ, மாணவிகளும் பயனடையும் வகையில் மேலும் விரிவுபடுத்தப்பட்டது. 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ஆண்டு முழுவதும் (365 நாட்களிலும்), 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்குப் பள்ளி வேலை நாட்களில் (220 நாட்கள்) மட்டும் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. 15-1-1983 முதல், ஓய்வூதியம்பெறும் முதியோரும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்று வருகின்றனர்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்காக 2007-2008ஆம் ஆண்டிற்கு ரூபாய் 781 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





**அங்கன்வாடிகளில் உள்ள சத்துணவு மையங்கள் (டிசம்பர் 2006 நிலவரப்படி)**

| வ. எண் | திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இணை உணவு | | மதிய உணவு | இணை உணவு | சத்துணவு | |
| | | | 6–24 மாதக் குழந்தைகள் | 25–36 மாதக் குழந்தைகள் | 24–60 மாதக் குழந்தைகள் | கருவுற்ற / பாலூட்டும் தாய்மார்கள் | முதியோர் உதவித் தொகை பெறுவோர் | மொத்தம் |
| 1. | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் (பொது) | 26226 | 178227 | 129805 | 325454 | 156002 | 9779 | 799277 |
| 2. | முந்தைய உலக வங்கி உதவிபெறும் ஒ.கு.வ.தி.ய-3 திட்டம் | 19500 | 209533 | 125989 | 876297 | 357026 | 23357 | 1592202 |
| | மொத்தம் | 45726 | 387760 | 255794 | 1201751 | 513028 | 33136 | 2391479 |

பள்ளிச் சத்துணவு மையங்கள்

| வ. எண் | திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (கிராமப்புறம்) | 40,169 | 54,93,217 |
| 2. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (நகர்ப்புறம்) | 1,747 | 3,76,693 |
| | மொத்தம் | 41,916 | 58,69,910 |

ஊரகப் பகுதிகளிலுள்ள சத்துணவு மையங்கள் ஊரக வளர்ச்சி இயக்குநரின் கட்டுப்பாட்டில் இருந்தன. தற்போது 20-7-2006 முதல் அம்மையங்கள் சமூக நலத் துறை ஆணையர் மற்றும் இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் மாற்றப்பட்டுள்ளன.

சத்துணவுபெறும் மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை = 12,34,887 + 58,69,910 = 71,04,797.

**நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு வீதம்**

| வ. எண் | உணவுப் பொருட்கள் | வயது விவரம் (வருடங்களில்) | | | | முதியோர் உதவித் தொகை பெறுவோர் |
|---|---|---|---|---|---|---|
| | | 2–5 | 5–9 | 10–15 | | |
| | | | | 6–8 ஆம் வகுப்பு | 9–10 ஆம் வகுப்பு | |
| 1. | அரிசி | 80 கிராம் | 100 கிராம் | 100 கிராம் | 120 கிராம் | 200 கிராம் |
| 2. | பருப்பு | 10 கிராம் | 15 கிராம் | 15 கிராம் | 15 கிராம் | 15 கிராம் |
| 3. | எண்ணெய் | 2 கிராம் | 1 கிராம் | 1 கிராம் | 1 கிராம் | 1 கிராம் |
| 4. | உப்பு | 1.9 கிராம் | 1.9 கிராம் | 1.9 கிராம் | 1.9 கிராம் | 1.9 கிராம் |
| 5. | காய்கறிகள், தாளிதம் மற்றும் எரிபொருள்* | 35 பைசா | 35 பைசா | 35 பைசா | 35 பைசா | 35 பைசா |
| 6. | முட்டை * வாரம் இரு முறை (திங்கள் மற்றும் புதன் கிழமைகளில்) | 46 கிராம் (குறைந்த பட்ச அளவு) | 46 கிராம் (குறைந்த பட்ச அளவு) | 46 கிராம் (குறைந்த பட்ச அளவு) | 46 கிராம் (குறைந்த பட்ச அளவு) | |

*காய்கறி – 15 பைசா, தாளிதப் பொருட்கள் – 9 பைசா, எரிபொருள் – 11 பைசா.



**புரதச் சத்து மிகுந்த உணவு**

2 வயது முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகள் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு 3-6-1989 முதல் சத்துணவுடன் வேக வைத்த ஒரு முட்டை வழங்கப்பட்டு வந்தது. 2006 ஆம் ஆண்டு முதல் பெருந்தலைவர் காமராசர் பிறந்த ஜூலைத் திங்கள் 15 ஆம் நாள் "கல்வி வளர்ச்சி நாள்" ஆகக் கொண்டாடப்படுகிறது. இவ்வரசால் அறிவிக்கப்பட்டபடி, 15-7-2006 முதல் 2-15 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் மாணவ, மாணவியருக்கு வாரத்திற்கு 2 முட்டைகள், திங்கள் மற்றும் புதன் கிழமைகளில் வழங்கப்பட்டு வருகிறது. தவிர, வேக வைத்த 20 கிராம் கறுப்புக் கொண்டைக் கடலை அல்லது 20 கிராம் பச்சைப் பயறு வியாழக் கிழமைகளிலும், 20 கிராம் வேக வைத்த உருளைக் கிழங்கு வெள்ளிக் கிழமைகளிலும் குழந்தைகளுக்குச் சத்துணவுடன் சேர்த்து வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் குழந்தைகளுக்குக் கூடுதலாக வாரத்திற்கு 248.60 கலோரி சக்தியும், 17 கிராம் புரதச் சத்தும் கிடைக்கிறது.

சத்துணவுபெறும் குழந்தைகள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கு வாரம் மூன்று முட்டைகள் வழங்க 2007-2008 ஆண்டில் ரூபாய் 165 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உப்பு**

2-15 வயது குழந்தைகளிடையே அதிகமாகக் காணப்படும் இரும்புச் சத்துக் குறைபாடு/இரத்த சோகை ஆகியவற்றைக் கட்டுப்படுத்தவும், வராமல் தடுக்கவும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் இரும்புச் சத்துச் செறிவூட்டப்பட்ட உப்பு சத்துணவு சமைக்கும்போது பயன்படுத்தப்படுகிறது. இரு முறை செறிவூட்டப்பட்ட (இரும்புச் சத்து/அயோடின்) உப்பு நீலகிரி, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, கரூர், பெரம்பலூர் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் பயன்படுத்தப்படுகிறது.

**உணவுப் பொருள் வழங்கல்**

சத்துணவு மையங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை (அரிசி, பருப்பு மற்றும் எண்ணெய்) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தமது வட்டக் கிடங்குகளிலிருந்து வட்டார வளர்ச்சி அலுவலர் அளிக்கும் தேவைப் பட்டியலின் அடிப்படையில் மையங்களுக்கு விநியோகம் செய்கிறது. பொதுவாக ஒவ்வொரு

மாதமும் 10 ஆம் தேதி மற்றும் 25 ஆம் தேதி ஆகியவற்றுக்கு இடைப்பட்ட காலத்தில் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. உணவுப் பொருட்களுக்கான தொகை (நகராட்சி நிர்வாக ஆணையரால் செலுத்தப்படும் சென்னை மாநகராட்சிப் பள்ளி சத்துணவு மையங்களுக்குண்டான பட்டியல் தவிர) சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர்களுக்கு வழங்கப்படுகிறது. காய்கறிகள், தாளிதம் மற்றும் விறகு ஆகியவை சத்துணவு அமைப்பாளர்களால் உள்ளூரில் வாங்கப்படுகின்றன. சத்துணவு மையங்களைத் தூய்மையாக சுகாதார முறையில் பராமரிக்க மாதம் ஒன்றிற்கு 500 பயனாளிகளுக்குக் குறைவாக உள்ள மையங்களுக்கு ரூ.20 வீதமும் மற்றும் 500 பயனாளிகளுக்குமேல் உள்ள மையங்களுக்கு ரூ.30 வீதமும், சோப்பு, பினாயில், துடைப்பம்போன்ற பொருட்கள் வாங்கச் சில்லரைச் செலவினமாக அனுமதிக்கப்படுகிறது.

**சர்க்கரைப் பொங்கல்**

மதிப்பு மிக்க தலைவர்களின் பிறந்த நாளன்று சத்துணவு உட்கொள்ளும் பயனாளிகளுக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கப்படுகிறது.

**பயனாளிகளின் எண்ணிக்கையினை நிர்ணயித்தல்**

மாணவ, மாணவியர்கள் பள்ளிக்கு வருகை தரும் நாட்களின் அடிப்படையில், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பயனாளிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மையத்திற்கும், ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் நிர்ணயம் செய்யப்படுகிறது.

**பெண்களுக்கான வேலைவாய்ப்பு மற்றும் பணியாளர் அமைப்பு**

இத்திட்டம் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் பெண்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குகிறது. விதவைகள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மையத்திலும் ஒரு சத்துணவு அமைப்பாளர், ஒரு சமையலர் மற்றும் ஒரு உதவியாளர் பணியமர்த்தப்படுகின்றனர். 500-க்கு மேற்பட்ட பயனாளிகளைக் கொண்ட மையங்களுக்குக் கூடுதலாக ஒரு சமையலர் மற்றும் ஒரு உதவியாளர் நியமனம் செய்யப்படுகின்றனர்.



**சத்துணவுப் பணியாளர்கள் எண்ணிக்கை**

பள்ளிச் சத்துணவு மையங்களில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் பின்வருமாறு:

| மையங்களின் எண்ணிக்கை | வகை | பணியாளர் எண்ணிக்கை | மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | வேலை நாட்களில் | விடுமுறை நாட்களில் |
| 41,916 | சத்துணவு அமைப்பாளர் | 41,916 | 58,42,451 | 6,31,459 |
| | சமையலர் | 41,993 | | |
| | சமையல் உதவியாளர் | 41,993 | | |
| | மத்திய சமையலர்கள் | 38 | | |

பணியாளர் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டால்தான் திட்டத்தின் செயல்பாடு சிறப்பாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு 29,773 (பள்ளிச் சத்துணவு மையங்கள் 14,090 + அங்கன்வாடி மையங்கள் 15,683) பணியிடங்களை நிரப்பிட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

**எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வழங்குதல்**

ஒவ்வொரு ஆண்டும் பயனாளிகளுக்குப் புதியதாக எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் வழங்கப்படுகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில், ரூ.50.00 இலட்சம் செலவில், 1,51,515 பள்ளி மாணவ, மாணவியர்களுக்குப் புதிய எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் வழங்கப்பட்டன. 2007-2008-ல் சத்துணவுத் திட்டப் பயனாளிகளுக்குப் புதிய எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் வழங்க ரூ.135 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**புதிய அலுமினிய சமையல் பாத்திரங்கள் வழங்குதல்**

2006-2007 ஆம் ஆண்டு ரூ.50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1,667 சத்துணவு மையங்களுக்குத் தலா ரூ.3,000 வீதம் புதிய அலுமினிய

சமையல் பாத்திரங்கள் வாங்கி வழங்கப்பட்டன. 2007-2008 ஆம் ஆண்டிலும் 1,667 சத்துணவு மையங்களுக்குப் புதிய அலுமினிய சமையல் பாத்திரங்கள் வாங்கி வழங்க ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**சத்துணவு மையங்கள் பழுது நீக்கம்**

2006-2007 ஆம் ஆண்டு ரூ.1.00 கோடி (ரூபாய் ஒரு கோடி) பொதுப் பணித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதில் மையத்திற்கு சராசரியாக ரூ.10,000/- வீதம் மொத்தம் 1,000 சத்துணவு மையங்களுக்குப் பழுது நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**சத்துணவு சமையலறைகளை நவீனப்படுத்துதல்**

ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், பள்ளிச் சத்துணவு சமையலறைகளை நவீனப்படுத்தவும் நகராட்சி/மாநகராட்சிப் பள்ளிகளில் உள்ள 750 சத்துணவு மையங்களுக்கு எரிவாயு அடுப்பு மற்றும் எரிவாயு இணைப்பு ஒரு மையத்திற்கு ரூ.20,000/- வீதம் ரூ.150 இலட்சம் செலவில் 2006-2007 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

**3.2. தேசியத் திட்டம் – ஆரம்பப் பள்ளிக் கல்விக்கான ஊட்டச் சத்துத் திட்டம்.**

தேசிய ஆரம்பப் பள்ளிக் கல்விக்கான ஊட்டச்சத்து உதவித் திட்டம் தமிழ்நாட்டில் 15-8-1995 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தினால் இலவசமாக 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு ஒரு பயனாளிக்கு 100 கிராம் அரிசி வீதம், ஒரு கல்வியாண்டில் 10 மாதங்களுக்கு (200 நாட்கள்) வழங்கப்படுகிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் உள்ள கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தி மாணவ, மாணவியர்களுக்கு சமைக்கப்பட்ட உணவு வழங்கப்படுகிறது. சமையல் செய்ய ஆகும் செலவு மத்திய அரசினால் ஒரு பயனாளிக்கு ஒரு நாளைக்கு ரூ.1.50 வீதம் வழங்கப்படுகிறது.

2006-2007 ஆம் ஆண்டு தேசிய ஆரம்பப் பள்ளிக் கல்விக்கான ஊட்டச் சத்து உதவித் திட்டத்தின்கீழ் மத்திய அரசு கீழ்க்கண்டவாறு நிதியுதவி வழங்கியுள்ளது:

2006-2007 ஆம் ஆண்டு 8,124 சத்துணவு மையங்களுக்கு, ஒரு மையத்திற்கு ரூ.5,000/- வீதம் புதியதாக சமையல் கருவிகள்/பாத்திரங்கள் வாங்கி வழங்க ரூ.406.17 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.



சமையலறையுடன்கூடிய வைப்பு அறை புதியதாகக் கட்டுவதற்கு ஒரு மையத்திற்கு ரூ.60,000/- வீதம், 265 சமையலறையுடன்கூடிய வைப்பு அறைகள் கட்ட ரூ.159.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளது.

மதிய உணவுத் திட்டத்தில் மேலாண்மை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்யும் பணிகளுக்கு ரூ.165.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளது.

**3.3. கண்காணித்தல்**

சத்துணவு மையங்களில் பயனாளிகளின் வருகைக்குத் தக்கவாறு உரிய அளவில் தரமான உணவு வழங்கப்படுவதை உறுதிப்படுத்த மாநில அளவிலான ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. பள்ளிச் சத்துணவு மையங்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்க மாவட்ட/வட்டார/மாநகராட்சி/நகராட்சி மற்றும் ஊராட்சி மன்ற அளவில் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழுக்களில் அலுவலர்களுடன் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளும் இடம்பெற்றுள்ளனர்.

சத்துணவு உட்கொள்ளும் மாணவ, மாணவியரின் தாய்மார்களில் விருப்பமுள்ள ஒருவர் அல்லது இருவர், முறைப் பணியில் சுகாதாரமான முறையில் தரமான உணவு மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுவதைக் கண்காணித்து வருகின்றனர்.

**3.4. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்**

பள்ளி முன்பருவக் கல்வி, குழந்தைகளின் நலன் மற்றும் அவர்களின் மேம்பாட்டிற்காக உலக அளவில் செயல்படுத்தப்படும் ஒப்பற்ற திட்டங்களில் ஒன்றாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் செயல்பட்டு வருகின்றது. வாழ்வில் பின்தங்கிய சமூகத்தினர் வாழும் கிராமம் மற்றும் குக்கிராமங்களில் அரசின் நலத் திட்டங்களைப் பிரதிபலிக்கும் சின்னமாகவும், இளம் சிறார்கள் விளையாட்டின்மூலம் கற்கும் சிறந்த களமாகவும், வளர்இளம் பெண்கள் மற்றும் தாய்மார்களின் சமூகப் பாதுகாப்பிற்கும், அரசின நலத் திட்டங்கள் பின்தங்கிய சமூகத்தினரைச் சென்றடைந்து, அவர்களது கல்வி மற்றும் சுகாதார மேம்பாட்டினை உயர்த்திடும் சிறந்த ஊடகமாகவும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் செயல்படுகின்றது. வசிப்பிடத்தைத் தவிர, குழந்தைகளுக்குப் பாதுகாப்பான முறையில் மருத்துவம் உள்ளிட்ட ஊட்டச் சத்து உணவு வழங்குவதில் தமிழகத்திற்கு நீண்ட வரலாறு உள்ளது.

[2007 ஏப்ரல் 10

தமிழகத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் 1975 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு முதன்முதலாக சென்னை, நிலக்கோட்டை, மற்றும் தளி ஆகிய பகுதிகளில் 3 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. பின்னர் இத்திட்டம் தமிழகமெங்கிலுமுள்ள இதரப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

திருத்தி அமைக்கப்பட்ட விதிமுறைகளின்படி, கிராமம் மற்றும் நகர்ப் புறங்களில் 500-1,500 மக்கள் தொகைக்கு ஒரு மையமும், மலைப் பகுதிகளில் 300-1,500 மக்கள் தொகைக்கு ஒரு மையமும் ஏற்படுத்தப்பட வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் அனைத்து உறைவிடங்களையும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறச் செய்யவும் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் ஆணையினை நிறைவேற்றும் முகமாகவும் 2006-2007 ஆம் ஆண்டில் கூடுதலாக 3,049 அங்கன்வாடி மையங்களைத் துவக்க மத்திய அரசு ஒப்புதலின் அடிப்படையில் தமிழக அரசு அனுமதி அளித்து, புதிய அங்கன்வாடி மையங்கள் துவக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் சுமார் ஐந்து கோடி மக்கள் தொகையினை உள்ளடக்கிய வகையில் தற்போது இத்திட்டம் 434 வட்டாரங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு, 45,726 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. 23.91 இலட்சம் பயனாளிகள் இத்திட்டத்தின்மூலம் பயன்பெறுகின்றனர். இது தவிர, மேலும் கூடுதலாக 1,539 புதிய அங்கன்வாடி மையங்கள் மற்றும் 3,168 சிறு அங்கன்வாடி மையங்களைத் துவக்கிட இந்திய அரசு தற்போது அனுமதி அளித்துள்ளது.

### 3.4.1. குறிக்கோள்கள்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகளின் குறிக்கோள்களாவன:

(அ) குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் பணிகளைப் பரவலாக்கல்;

(ஆ) குழந்தைத் பராமரிப்புப் பழக்கங்களை குடும்ப அளவில் மேம்படுத்துவதோடு 0-5 வயதுக் குழந்தைகளின் ஊட்டச் சத்து, சுகாதாரம், மன மற்றும் சமூக நிலையினை மேம்படுத்துதல், குறிப்பாக 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே ஊட்டச் சத்துக் குறைபாட்டைத் தடுத்தல்;

(இ) பெண்களிடையே, குறிப்பாகக் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளர்இளம் பெண்கள் ஆகியோரின் ஊட்டச் சத்து மற்றும் சுகாதார நிலையினை மேம்படுத்துதல்;



2007 ஏப்ரல் 10]

(ஈ) பெண்கள், வளர்இளம் பெண்கள், தங்கள் மற்றும் தங்களுடைய குடும்ப நபர்களின் ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளைத் திறமையுடன் எதிர்கொள்ளத் தேவையான கூடுதல் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதிகாரப் பகிர்வைப் பெறச் செய்தல்;

(உ) வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்கள், அதிலும் முக்கியமாகக் கர்ப்பிணித் தாய்மார்கள், பச்சிளம் குழந்தைகள், குழந்தைகள் மற்றும் வளர்இளம் பெண்கள் ஆகியோருக்கு முழுமையான வாழ்க்கைச் சுழற்சி முறை மற்றும் சத்துணவு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் தமிழ்நாட்டை "ஊட்டச் சத்துக் குறைபாடற்ற மாநிலமாக மாற்றுதல்".

### 3.4.2. திட்டத்தின் பயனாளிகள்

- 6-24 மாதங்கள் மற்றும் 25-60 மாதக் குழந்தைகள்
- கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்
- வளர்இளம் பெண்கள்
- ஓய்வூதியம்பெறும் முதியோர்
- சமுதாயக் குழுக்கள்/சமுதாயத் தலைவர்கள்

### 3.5. கிஷோரி சக்தி யோஜனா

வளர்இளம் பெண்களின் கல்வி நிலையை உயர்த்தியும், தொழிற் கல்வி அளித்தும் அவர்களைச் சிறப்பான குடிமக்களாக்கும் நோக்குடன், அவர்களின் நலனுக்காக மட்டுமே புதுக்கோட்டை, தருமபுரி, நாகப்பட்டினம், நீலகிரி, சேலம், காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், திண்டுக்கல் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் உள்ள 37 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பகுதிகளில் 2001-2002 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ்,

- ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரம், சட்ட உரிமைகள், வீட்டைப் பராமரித்தல், குழந்தை வளர்ப்பு ஆகியவற்றில் விழிப்புணர்ச்சி முகாம்கள் 11-15 வயதுடைய பள்ளிக்குச் செலலும் மற்றும் பள்ளிக் கல்வியினை நிறுத்திய வளர்இளம் பெண்களுக்குப் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

- 16-18 வயது வளர்இளம் பெண்களுக்கு 60 நாள் தொழிற்கல்விப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது.

தற்போது, ஒரு திட்டப் பகுதிக்கு ரூ 1.10 இலட்சம் வீதம் 434 திட்டப் பகுதிகளுக்கு ரூ 477.40 இலட்சம் செலவில் இத்திட்டம் மத்திய அரசு அனுமதி அளித்துள்ளவாறு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### 3.6. வளர்இளம் பெண்களுக்கான ஊட்டச் சத்துத் திட்டம் (Nutrition Programme for Adolescent Girls)

வளர்இளம் பெண்களுக்கான ஊட்டச் சத்துத் திட்டத்தின்கீழ் (NPAG) ஊட்டச் சத்துப் பற்றாக்குறையுள்ள வளர்இளம் பெண்களுக்குப் பிரதி மாதம் 6 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது. தற்போது இத்திட்டம் திருவண்ணாமலை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2007-2008 ஆண்டில் ரூ.3 கோடி வரை இலவச அரிசி வழங்கச் செலவினம் மேற்கொள்ளப்படும்.

### 3.7. இணை உணவுத் திட்டம்

2007-2008 ஆம் ஆண்டில் ரூ 116 கோடி செலவில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகளின்கீழ் பல்வேறு நிலைகளில் உள்ள பயனாளிகளுக்கு இணை உணவு வழங்கப்படும். இத்தொகையில் 50 சதவீதச் செலவினத்தை மத்திய அரசு பகிர்ந்துகொள்ளும்.

இணை உணவுத் திட்டத்தின்கீழ் நாளொன்றுக்கு ஒரு பயனாளிக்கு வழங்கப்படும் இணைச் சத்துணவு விகிதம் பின்வருமாறு:

| ஊட்டச் சத்து நிலை | சத்து மாவு அளவு | | |
|---|---|---|---|
| | குழந்தைகள் (6–24 மாதங்கள்) | குழந்தைகள் (25–36 மாதங்கள்) | கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் |
| சாதாரண நிலை | 50 கிராம் | 100 கிராம் | 100 கிராம் |
| நிலை 1 மற்றும் 2 | 50 கிராம் | 100 கிராம் | .. |
| நிலை 3 மற்றும் 4 | 100 கிராம் | 150 கிராம் | .. |



இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவோரின் மொத்த எண்ணிக்கை பின்வருமாறு:—

| | |
|---|---|
| 6-24 மாதக் குழந்தைகள் .. .. .. | 3,87,760 |
| 25-36 மாதக் குழந்தைகள் .. .. .. | 2,55,794 |
| கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் .. .. .. | 5,13,028 |

### 3.8. பள்ளி முன்பருவக் கல்வி விளையாட்டுப் பொருட்கள் வழங்குதல்

அங்கன்வாடி மையங்களில் முறைசாரா மற்றும் விளையாட்டு மூலமாக முன்பருவக் கல்வி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு அங்கன்வாடி மையத்திற்கும் ஆண்டொன்றுக்கு ரூ.500/- செலவில் பள்ளி முன்பருவக் கல்வி உபகரணங்களை அரசு வழங்குகிறது. இது தவிர, ஒவ்வொரு புதிய அங்கன்வாடி மையத்திற்கும் விளையாட்டுப் பொருட்கள் வாங்குவதற்காக ரூ.1,000/- ஒரு முறை மட்டும் அனுமதிக்கப்படுகிறது.

### 3.9. அங்கன்வாடி மையங்களை நவீனமயமாக்குதல்

**மையங்களுக்கு ஒரே மாதிரியான வண்ணம் பூசுதல்**

முதற்கட்டமாக 2006-2007-ல், ஒரு அங்கன்வாடி மையக் கட்டடத்திற்கு ரூ.1,500/- வீதம் 1,000 மையங்களுக்கு ரூ.15,00,000/- செலவில் ஒரே மாதிரியான வண்ணம் பூசப்பட்டுள்ளது.

**எரிவாயு அடுப்பு மற்றும் குக்கர் வழங்குதல்**

முதற்கட்டமாக 2006-2007 ஆம் ஆண்டு, 1,000 அங்கன்வாடி மையங்களுக்கு ரூ.81,65,000/- செலவில் புதிய சமையல் எரிவாயு இணைப்பு, சமையல் எரிவாயு அடுப்பு, குக்கர்கள் மற்றும் மின்சார வசதிவழங்கப்பட்டுள்ளது.

**சமையல் பாத்திரங்கள் வழங்குதல்**

2006-2007 ஆம் ஆண்டில் 7,000 அங்கன்வாடி மையங்களுக்குப் புதிய சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் ரூ.1,03,55,000/- செலவில் 1,76,000 பயனாளிகளுக்குப் புதிய எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் வழங்கப்பட்டுள்ளன.

[2007 ஏப்ரல் 10

**எவர்சில்வர் தட்டு, டம்ளர்கள் வழங்குதல்**

அங்கன்வாடி மையக் குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டு, டம்ளர்கள் மற்றும் மையங்களுக்குப் புதிய சமையல் பாத்திரங்கள் வாங்கவும் 2006-2007 ஆம் ஆண்டு ரூ1.04 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2007-2008 ஆம் ஆண்டில் சிறப்புத் திட்டமாக அங்கன்வாடி மைங்களில் பயன்பெறும் 2,20,425 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பயனாளிகளுக்குப் புதிய எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் ரூ. 66.12 இலட்சம் செலவில் வழங்கப்படவுள்ளன.

**3.10. கண்காணிப்புப் பிரிவு**

கடுமையான ஊட்டச் சத்துக் குறைபாட்டைத் தடுத்து, ஊட்டச் சத்து நிலையை மேம்படுத்தும் வகையில் சிறப்பு ஆய்வுகள் மேற்கொண்டு அதன்மூலம் பிரச்சினைகளைக் கண்டறிந்து தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கிராம அளவிலான செயல் குழுக்கள் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழு 15 உறுப்பினர்களைக் கொண்டது. இக்குழு அங்கன்வாடி மைய அளவில் செயல்படுத்தப்படும் திட்டங்களைக் கண்காணிப்பதோடு கிராம அளவில் திட்டப் பணிகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ஒத்துழைப்பினை அளிக்கிறது.

**3.11. மேலாண்மைத் தகவல் முறை**

தகவல் பரிமாற்றத் திட்ட அடிப்படையில் மாவட்டங்களிலிருந்து சரியான புள்ளிவிவரங்கள் கணினிமூலமாக உடனுக்குடன் அனுப்புவதற்கு ஏதுவாக மென்பொருள் தயாரிக்கப்பட்டு, தலைமையிடத்தில் நிறுவப்பட்டுள்ளது. இதன் தொடர்பாக மாவட்ட அளவில் தொடர்புடைய பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்பட்ட 318 திட்ட அலுவலகங்களுக்கும் மற்றும் 116 பொது ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களுக்கும் கணினி வழங்கப்பட்டு, அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**3.12. புதிய அங்கன்வாடி மையங்கள் மற்றும் குறு அங்கன்வாடி மையங்கள்**

தமிழ்நாட்டில் மொத்தம் 45,726 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் இரண்டாவது விரிவாக்கத்தின்கீழ் இந்திய அரசின் மகளிர் மற்றும்



2007 ஏப்ரல் 10]

குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கருத்தினை ஏற்று தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையினர் வாழும் பகுதிகளில், குறிப்பாக அவ்வினக் குழந்தைகள் பயன்பெறுவதை உறுதி செய்யும்பொருட்டும், திருத்தப்பட்ட மக்கள் தொகையின் அடிப்படையில் மேலும் 1,539 அங்கன்வாடி மையங்கள் மற்றும் 3,168 குறு அங்கன்வாடி மையங்கள் அமைக்க முடிவு செய்து, மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இக்கூடுதல் மையங்கள் விரைவில் செயல்படத் துவங்கும். அப்போது பயனாளிகள் திட்ட நலப் பணிகளைப் பெற ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கும் அதிகத் தொலைவு நடந்து செல்ல வேண்டியதில்லை.

அங்கன்வாடி மையத்தின் தரத்தை உயர்த்துவதற்கு ஏதுவாக மாதந்தோறும் புள்ளியியல் ஆய்வாளர்களால் நம்பகத் தன்மை ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**3.13. அங்கன்வாடி மையங்களின் தரம்**

அங்கன்வாடி மையங்களின் தரத்தைக் கண்டறிய கீழ்க்காணும் 10 வகையான குறியீடுகள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன:

| வரிசை எண் | பிரிவு | குறியீடுகள் | மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| 1. | ஊட்டச் சத்துக் குறைபாடு இல்லாத நிலை | 7 | 20 |
| 2. | சுகாதாரம் | 10 | 17 |
| 3. | வளர்ச்சியைக் கண்காணித்தல் | 5 | 10 |
| 4. | இணை உணவு மற்றும் சத்துணவு | 5 | 10 |
| 5. | சுத்தம் மற்றும் பராமரிப்பு | 6 | 10 |
| 6. | வளர்இளம் பெண்களின் நிலை | 6 | 10 |
| 7. | பதிவேடுகள் பராமரித்தல் | 3 | 7 |
| 8. | பணியின் தரம் | 4 | 7 |
| 9. | சமுதாயப் பங்கேற்பு | 3 | 4 |
| 10. | ஒருமித்த சேவை | 3 | 5 |
| | மொத்தம் | 52 | 100 |

மேலே குறிப்பிட்டுள்ள குறியீடுகளின்படி அங்கன்வாடி மையங்களின் தரம் வகைபடுத்தப்படுகிறது.

முதல் தர அங்கன்வாடி மையம் — (80-100 மதிப்பெண்)

இரண்டாம் தர அங்கன்வாடி மையம் — (60-80 மதிப்பெண்)

மூன்றாம் தர அங்கன்வாடி மையம் — (60-க்குக் கீழ்)

ஊட்டச் சத்துக் குறைபாடில்லாத அங்கன்வாடி மையம் எனில், முதல் தர மதிப்பு வழங்கப்படும். மாவட்டத் திட்ட அலுவலர்கள் முதல் தர அங்கன்வாடி மையங்களிலிருந்து சிறந்த மூன்று மையங்களைத் தேர்வு செய்து தேசிய விருது மற்றும் மாநில விருதிற்குப் பரிந்துரை செய்கின்றனர்.

### 3.14. சுகாதாரப் பிரிவு

பொதுச் சுகாதாரத் துறையுடனும், பிற துறைகளுடனும் ஒருங்கிணைந்து கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 5 வயதிற்குக் குறைவான குழந்தைகள் ஆகியோருக்கு சுகாதார நலப் பணிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

- மருந்து உபகரணப் பெட்டி ஒன்று ரூ. 600/- வீதம் 38,383 அங்கன்வாடி மையங்களுக்கு ரூ. 230.30 இலட்சம் செலவில் வாங்கி வழங்குதல்.
- ஒவ்வொரு வருடமும், மருந்துச் செலவினமாக நகர்ப்புறத் திட்டங்களுக்கு ரூ.5,000/- கிராமப்புறத் திட்டங்களுக்கு ரூ.3,000/- வழங்குதல். இதற்காக மொத்தம் ரூ.5 இலட்சம் செலவிடப்படுகிறது.

### 3.15. நிர்வாகம்

உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் காலியாக இருந்த 1,922 அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் 4,966 அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்களை விதிமுறைகளின்படி நிரப்ப அரசு ஆணையிட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மீதமுள்ள 2 361 அங்கனவாடிப் பணியாளர் பணியிடங்கள் மற்றும் 6,434 அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்களை நிரப்பவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.





### 3.16. சிறந்த பணியாளர்களுக்கான ஊக்கப் பரிசு

அங்கன்வாடிப் பணியாளர்களின் பணியின் தரத்தினை உயர்த்தும் பொருட்டு ஆண்டுதோறும் சிறப்பான முறையில் பணியாற்றும் 98 பணியாளர்களை மாநில அளவில் தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் தலா ரூ.5,000/- வீதம் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. இதற்கான ஆண்டுச் செலவினம் ரூ.4.90 இலட்சம் ஆகிறது.

### 3.17. பயிற்சி

களப் பணியாளர்களின் வேலைத் திறன் மற்றும் செயல்பாட்டுத் திறன் இவற்றை மேம்படுத்தப் பயிற்சி வழிவகை செய்கிறது. 1999-2006 வரை பணிப் பயிற்சி, புத்தாக்கப் பயிற்சி, புத்தறிவுப் (ஓரியன்டேசன்) பயிற்சிபோன்ற பல பயிற்சிகள் அங்கன்வாடிப் பணியாளர்கள், அங்கன்வாடி உதவியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு நடத்தப்பட்டன.

2006-2007 ஆம் ஆண்டு மத்திய அரசு பயிற்சித் திட்டச் செயல்பாட்டின்படி ரூ.527 இலட்சத்தினைப் பயிற்சிக்காக ஒப்புதல் அளித்துள்ளது.

அங்கன்வாடிப் பணியாளர்களுக்குப் பணிப் பயிற்சி மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி அந்தநதத் திட்டப் பகுதியில் நடத்தப்படுகிறது.

மேற்பார்வையாளர்களுக்கான பணிப் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி சென்னை நடுநிலைப் பயிற்சி மையத்தில் நடத்தப்படுகிறது.

குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி, பயிற்சியாளர்களுக்கான புத்தறிவு (ஓரியன்டேசன்) பயிற்சி ஆகியவை சென்னை தரமணி பயிற்சி மையத்தில் நடத்தப்படுகிறது.

"இதர பயிற்சி"யின்கீழ் பச்சிளங்குழந்தைகளுக்கு உணவூட்டுப் பயிற்சி அனைத்துத் திட்டப் பணியாளர்களுக்கும் அந்தந்த மாவட்டம் மற்றும் திட்டப் பகுதிகளில் நடத்தப்படுகிறது.

2007-2008 ஆம் ஆண்டில் பணிப் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி பெறாத களப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் வகையிலும் தேவைக்கேற்பப் புதிய பயிற்சிகள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.10. (ஆ) வாசிப்பாளர் உதவித் தொகை

பார்வையற்ற மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகையுடன் மாநில அரசால் கீழ்க்குறிப்பிடப்பட்ட விகிதத்தில் வாசிப்பாளர் உதவித் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.

| வ.எண். | வகுப்பு | ஆண்டு ஒன்றிற்கான வாசிப்பாளர் உதவித் தொகை ரூ. |
|---|---|---|
| (அ) | 9–12 ஆம் வகுப்பு வரை | 750 |
| (ஆ) | பட்டப் படிப்பு | 1,250 |
| (இ) | தொழில் மற்றும் பட்ட மேற்படிப்பு | 1,500 |

### 4.11. பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத உதவுபவர்களுக்கு உதவித் தொகை

பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் பார்வையற்ற மாணவர்கள் பள்ளித் தேர்வுகள் எழுத, பார்வையுள்ள உதவியாளர் ஒருவரை அமர்த்திக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். இதற்கு உதவி புரிபவர்களுக்கு ஒரு தேர்வுத் தாளுக்கு ரூ.50 வீதம் உதவித் தொகையை இத்துறை வழங்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின்கீழ் பயனடையும் 400 பார்வையற்ற மாணவர்கள் படிக்கும் பள்ளிகள் விவரம் பின்வருமாறு:—

1. பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை.
2. பார்வையற்றோருக்கான அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி.
3. பார்வையற்றோருக்கான அரசு உயர்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்
4. பார்வையற்றோருக்கான சிறுமலர் மேல்நிலைப் பள்ளி, சென்னை.
5. புனித லூயிஸ் காது-கேளாதோர் மற்றும் பார்வையற்றோருக்கான நிறுவனம், சென்னை.



6. பார்வையற்றோருக்கான இந்தியச் சங்கத்தின் மேல்நிலைப் பள்ளி, மதுரை.

### 4.12. சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி

வெவ்வேறு வகை ஊனத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குப் பாடம் கற்பிக்கும் சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பிரத்தியேகப் பயிற்சி தேவைப்படுகிறது. இந்த சிறப்புப் பயிற்சியின் காலம் பத்து மாதங்களாகும். பயிற்சிகளின் விவரங்கள் கீழ்வருமாறு:—

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | அளிக்கப்படும் பயிற்சி | பயிற்சி ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை | பார்வையற்றோருக்கு போதிக்கும் இளநிலைப் பட்டயம். | 15 |
| 2. | பால விஹார் பயிற்சிப் பள்ளி, கீழ்ப்பாக்கம், பள்ளி | மன வளர்ச்சி குன்றியோருக்கு போதிக்கும் இளநிலை/முதுநிலைப் பட்டயம். | 25 |
| 3. | சிறுமலர் காது கேளாதோருக்கான மேல்நிலைப் பள்ளி, சென்னை | காது கேளாதோருக்கு போதிக்கும் இளநிலை/முதுநிலைப் பட்டயம். | 50 |

### 4.13. பார்வையற்றோர் மற்றும் கை, கால் ஊனமுற்றோருக்கான இடைநிலை (ஆசிரியர் கல்விப் பட்டயம்) ஆசிரியர் பயிற்சி

ஊனமுற்றோருக்குத் தக்க பயிற்சிகள் அளித்து வேலைவாய்ப்புகளை அதிகப்படுத்துவதே அரசின் நோக்கமாகும். பூவிருந்தவல்லி, பார்வையற்றோருக்கான அரசு மேனிலைப் பள்ளி வளாகத்தில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி மையம் (ஆசிரியர் கல்விப் பட்டயம்) நடத்தப்பட்டு வருகிறது. இதில் ஆண்டுதோறும் 25 பார்வையற்றோர் மற்றும் 25 கை, கால் ஊனமுற்றோர் இரண்டு ஆண்டு காலத்திற்கு ஆசிரியர் பயிற்சிபெறுகின்றனர். இப்பயிற்சியைப் பெறுவதன்மூலம பார்வையற்றோர் மற்றும் கை, கால் ஊனமுற்றோருக்கு எளிதில் வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

மேற்கூறப்பட்ட பயிற்சித் திட்டத்தில், 17 பார்வையற்ற நபர்களுக்கு இலவசமாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் கல்விக் கட்டணம், பயிற்சிச் செலவு, இலவச உணவு, இருப்பிடம் மற்றும் இரண்டு சீருடைகள் ஆகியன அடங்கும். மேலும், கிண்டியிலுள்ள அரசுத் தொழிற்பயிற்சி நிலையத்தில் காது கேளாத 19 நபர்களுக்குப் பொருத்துநர் பிரிவில் இரண்டு ஆண்டுகள் பயிற்சி அளிக்கப்பட்டு, பயிற்சியின்போது மாதம் ரூ.100/- வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**4.19. போலியோ மற்றும் முதுகுத் தண்டுவடம் பாதித்தோருக்குச் சரி செய்தலுக்கான இலவச அறுவை சிகிச்சை**

இத்துறை மாவட்ட மறுவாழ்வு மையங்களின்மூலம் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தி, அந்தந்த மாவட்டப் பகுதிகளில் போலியோ மற்றும் முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்ட ஊனமுற்ற நபர்களைக் கண்டறிந்து, பின்னர், அவர்கள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள்/மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டு, மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு, அவர்கள் சுலபமாக நடக்கவும், அவர்களது அன்றாடப் பணிகளை அவர்களே பிறருடைய உதவியின்றி மேற்கொள்ளவும், அதன்மூலம் அவர்கள் சுயமாக வாழவும் வழிவகை செய்கிறது.

இந்த அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் ஊனமுற்ற நபர்களுக்கு மருத்துவமனையில் தங்கியிருக்கும்போது செலவிற்காக ரூ.500/- வழங்கப்படுவதுடன், அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு மதிப்பூதியமாக ரூ.300/-ம் வழங்கப்படுகிறது.

**4.20. ஊனமுற்றோருக்கு இலவச உதவி உபகரணங்கள் வழங்குதல்**

உதவி உபகரணங்கள் ஊனமுற்றோர் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சென்று சுயமாக வாழ்ந்து, உற்பத்தித் திறனை அதிகப்படுத்த உதவுகின்றன. மாவட்ட மறுவாழ்வு மையங்கள்மூலம் இனங்கண்டறியப்பட்ட, தேவையுள்ள ஊனமுற்றோருக்கு அவர்களின் தகுதி, திறன், பாதிப்பு மற்றும் தேவைக்கேற்ப கீழ்க்கண்ட உதவி, உபகரணங்கள் இலவசமாக அளிக்கப்படுகின்றன:

(அ) மூன்று சக்கர வண்டி

(ஆ) சக்கர நாற்காலி





(இ) கறுப்புக் கண்ணாடி

(ஈ) மடக்கு ஊன்றுகோல்

(உ) பிரெய்லி கை கடிகாரம்

(ஊ) காது கேட்புக் கருவி

(எ) சூரிய ஒளியினால் மறு செறிவூட்டக்கூடிய பாட்டரி

(ஏ) கால் தாங்கிகள்

(ஐ) தோள்பட்டை தாங்கி மற்றும்

(ஒ) செயற்கை அவயம்

**நவீன செயற்கை அவயவம் வழங்குதல்**

உடல் அவயவம் இழந்த மாணவ, மாணவியருக்கு இயங்கும் வசதியுடன்கூடிய நம் நாட்டிலேயே கிடைக்கும் நவீன செயற்கை அவயவம் வழங்க அரசு உத்தேசித்துள்ளது. இவ்வாண்டு 83 மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் நவீன அவயவம் வழங்கப்படும். இந்த நவீன செயற்கை அவயவத்தின் மதிப்பு ரூ.30,000/- ஆகும்.

**மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர சைக்கிள்**

2007-2008 ஆம் ஆண்டு முதல் ரூ.35,000/- மதிப்பிலான மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர சைக்கிள்கள் 60 ஊனமுற்ற மாணவ, மாணவிகளுக்கு இலவசமாக வழங்கப்படும். மேலும், 290 பணிபுரியும் ஊனமுற்ற நபர்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர சைக்கிள்கள் அல்லது மோட்டார் சைக்கிள்கள் 30% மானியம் அல்லது ரூ.10,000/-, இதில் எது குறைவோ அந்த விலைக்கு வழங்கப்படும்.

**4.21. ஊனமுற்றோருக்கான இட ஒதுக்கீடு**

ஊனமுற்றோருக்கான இட ஒதுக்கீட்டினைச் சரியாக, திறம்பட அமல்படுத்த இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் (அரசு, அரசு நிதி உதவிபெறும் மற்றும் உள்ளாட்சி நிர்வாகம்) எழும் காலிப் பணியிடங்கள் மற்றும் பயிற்சியிடங்களில் 3 சதவீதம்

ஊனமுற்றோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 3 சதவீதத்தில், 1 சதவீதம் பார்வையற்றோருக்கும், 1 சதவீதம் பேசும் திறன் இழந்த காது கேளாதோருக்கும், 1 சதவீதம் கை, கால் ஊனமுற்றோருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வித் துறையில், ஆசிரியர்கள் பணியிடத்தில் பார்வையற்றவர்களுக்கு 2 சதவீதமும், ஆசிரியர் அல்லாத பணியிடங்களில் காது கேளாத, பேசும் திறனற்றவர்களுக்கு 2 சதவீதமும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3% இட ஒதுக்கீட்டின்கீழ், அரசுத் துறைகளிலும், அரசு சார்பு நிறுவனங்களிலும் ஊனமுற்றோருக்குப் பணிகள் அளிப்பதற்கு, மத்திய அரசின் சுழற்சி முறையைப்போன்றே மாநிலத்திலும் பின்பற்றும் வகையில் ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், ஓர் ஆண்டில் ஊனமுற்றோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டு, தகுதியான ஊனமுற்ற நபர்கள் அந்த ஆண்டில் இல்லாத பட்சத்தில், அந்தப் பணியிடங்களை மூன்று ஆண்டுகள் வரை கொண்டு செல்ல (Carry Forward) இந்த அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

**ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பு வழங்க சிறப்புத் தேர்வு**

தகுதியான ஊனமுற்றோர்கள் இல்லாததால் முந்தைய ஆண்டுகளில் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டு நிரப்பப்படாமல் உள்ள 3% காலிப் பணியிடங்களை நிரப்ப சிறப்புத் தேர்வு ஒன்றை நடத்த அரசு முடிவு செய்துள்ளது. இத்தேர்வுமூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வரம்பில் உள்ள காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்.

**4.22. வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை**

வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு 10 வருட காலத்திற்கு அல்லது 40 வயது வரை (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) அல்லது வேலை கிடைக்கும் வரை, இதில் எது முன்னரோ அது வரை நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.



| கல்வித் தகுதி | வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| பட்டதாரிகள்/முதுநிலைப் பட்டதாரிகள் | ரூ.450/– |
| புகுமுக வகுப்பு/மேல்நிலை வகுப்பு/ பட்டப் படிப்புக்குக் கீழ் படித்தவர்கள் | ரூ.375/– |
| பத்தாம் வகுப்பு மற்றும் அதற்கும் குறைவாகப் படித்தவர்கள் | ரூ.300/– |

(அ) 18 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) இருக்க வேண்டும்.

(ஆ) வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்து, குறைந்தபட்சம் ஓராண்டுக்கு மேல் காத்திருப்பவராக இருக்க வேண்டும்.

**4.23. சுய வேலைவாய்ப்பு**

சுய தொழிலில் ஈடுபட ஊனமுற்றோரைத் தயார் செய்யும்பொருட்டு, அவர்களின் திறனை வளர்க்கப் பல்வேறு பயிற்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன. ஊனமுற்றோர் சுய வேலைவாய்ப்பில் ஈடுபடுவதற்காக, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் கடன் பெற்றுக்கொள்ளவும், பெட்டிக் கடைகள் அமைத்துக்கொள்ளவும் இத்துறை பயனுள்ள நடவடிக்கை எடுத்து வருகிறது. ரூ.3,000/- அல்லது மொத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு, இதில் எது குறைவோ அது அரசு மானியமாக வழங்கப்படுகிறது. பொது இடங்களில் பெட்டிக் கடை வைக்க விரும்பும் ஊனமுற்ற நபருக்கு ரூ.5000/- அல்லது மொத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு, இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படுகிறது.

ஊனமுற்ற பெண்களுக்கு வேலைவாய்ப்புக்கான பயிற்சியும், சுய தொழில் கடன் வழங்கிடவும், கிராமப்புறங்களில் உள்ள ஊனமுற்றோருக்குக் கைவினைத் தொழிலும், சிறு கடையும் நடத்த முன்னுரிமை வழங்கப்படுகிறது.

ஊனமுற்ற ஆண்களும், பெண்களும் நிதி உதவிபெற்று, சுய வேலைவாய்ப்பில் ஈடுபடவென சிறப்புச் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மத்திய அரசின் தேசிய ஊனமுற்றோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தினால் செயல்படுத்தப்படும் திட்டங்களை திறம்படச் செயல்படுத்தி, அதன்மூலம் ஊனமுற்றோர் அதிக அளவில் சுய வேலைவாய்ப்புப் பெற மாநில அரசு திறம்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**4.24. தேசிய ஊனமுற்றோர் அடையாள அட்டை, பாஸ் புத்தகம் மற்றும் ஊனமுற்றோர் சான்றிதழ்கள் வழங்குதல்**

தகுதி வாய்ந்த அனைத்து ஊனமுற்றோருக்கும் தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் பணிக்கு இவ்வரசு முக்கியத்துவம் அளித்துள்ளது. ஊனமுற்றோருக்கான சட்டம், 1995-ன்படி, ஊனமுற்றோருக்கான மருத்துவச் சான்றிதழ்கள், மாவட்டந்தோறும் மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட மருத்துவக் குழுக்கள்மூலம், வாரத்தின் குறிப்பிட்ட நாள்/நாட்களில் வழங்கப்படுகின்றன. இம்மருத்துவக் குழுவில் 3 மருத்துவ நிபுணர்கள் இடம்பெறுகின்றனர். இதில் ஒரு மருத்துவ நிபுணர் காது, மூக்கு, தொண்டை நிபுணர்/கண் மருத்துவர்/கை, கால் மருத்துவர்/மன நல மருத்துவர்/குழந்தைகள் நல மருத்துவர் ஆக இருப்பர். சான்றிதழ்கள் வழங்குவதற்கென ஊனமுற்றோரிடமிருந்து எவ்விதக் கட்டணமும் பெறப்படுவதில்லை.

அடையாள அட்டைகள் வழங்குவதற்காக, வட்டாரம் மற்றும் வட்ட அளவிலும் முகாம்கள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. தமிழகத்தில் செயல்படும் 50 மருத்துவக் குழுக்கள்மூலம் ஊனமுற்றோருக்கான தேசிய அடையாள அட்டை மற்றும் மருத்துவச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

ஊனமுற்ற மாணவர்களுக்கு அவரவர் பயிலும் சிறப்புப் பள்ளி/அனைவருக்கும் கல்வித் திட்டம்/ஒருங்கிணைந்த கல்வித் திட்டப் பள்ளிகளிலேயே சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன.

**4.25. ஊனமுற்றோரைத் திருமணம் செய்துகொள்ளும் நபர்களுக்கான சலுகைகள்**

ஊனமுற்றோரைத் திருமணம் செய்துகொள்ளும் நபர்களை ஊக்குவிக்கும்வண்ணம், கீழ்க்குறிப்பிட்டவாறு சலுகைகள் அரசால் வழங்கப்படுகின்றன:—





இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த திருமண உதவித் தொகை ரூ.10,000/-லிருந்து ரூ.20,000/- ஆக 2006-2007 ஆம் ஆண்டில் இவ்வரசால் உயர்த்தப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வழங்கப்படும் உதவி | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பார்வையற்றோரைத் திருமணம் செய்து கொள்ளும் நபர்களுக்கான சலுகைகள் | (1) திருமணச் செலவிற்கு ரொக்கத் தொகை ரூ.10000/— (2) ரூ.10000/—க்கு தேசிய சேமிப்புப் பத்திரம் | 100 |
| 2. | காது கேளாதோரைத் திருமணம் செய்து கொள்ளும் நபர்களுக்கான சலுகைகள் | (1) திருமணச் செலவிற்கு ரொக்கத் தொகை ரூ.10000/— (2) ரூ.10000/—க்கு தேசிய சேமிப்புப் பத்திரம் | 145 |
| 3. | ஒரு கை அல்லது கால் இல்லாதோரைத் திருமணம் செய்துகொள்ளும் நபர்களுக்கான சலுகைகள் | (1) திருமணச் செலவிற்கு ரொக்கத் தொகை ரூ.10000/— (2) ரூ.10000/—க்கு தேசிய சேமிப்புப் பத்திரம் | 145 |

**4.26. உடல் ஊனமுற்றவர்களுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை**

ஊனமுற்றோர் பயன்பெறும்வண்ணம் அனைத்து வகை ஊனமுற்றோருக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை வழங்கப்படுகிறது. பார்வையற்றோர் அனைவரும் எவ்வித நிபந்தனையுமின்றித் தமது வசிப்பிடத்திலிருந்து 100 கிலோ மீட்டர் தூரம் வரை அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். ஏனைய உடல் ஊனமுற்றவர்களுக்கு இச்சலுகை சில நிபந்தனைகளுக்குட்பட்டு, அவர்கள் கல்விக் கூடம், மருத்துவமனை, தொழிற்பயிற்சி மையம்

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், எறவார்பட்டி ஊராட்சி, கவுல்பட்டியில் தனியாக வாக்குச் சாவடி அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது தமிழ்நாட்டில் சட்டமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்யும் பணி நடைபெற்று வருகின்றது. சட்டமன்றத் தொகுதிகள் மறுவரையறை செய்து முடிக்கப்பட்டபின், வாக்குச் சாவடிகளை மறுசீரமைக்கும் பணியையும் மேற்கொள்ள இந்தியத் தேர்தல் ஆணையம் ஆணையிடும். இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரை பெறப்பட்டவுடன், இது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், கவுல்பட்டி கிராமம் சுமார் 500 வாக்காளர்களைக் கொண்ட கிராமமாகும். அங்கிருந்து எறவார்பட்டிக்கு 2 கிலோ மீட்டர் நடந்து சென்று வாக்களிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, மறுபரிசீலனை செய்து கவுல்பட்டி கிராமத்தில் வாக்குச் சாவடி அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற இந்தக் கேள்விக்குத்தான் முதலிலேயே அளிக்கப்பட்ட விடை—தொகுதிகள் சீரமைப்புப் பணி நடைபெறுகிறது; எது தொகுதி; எந்த அளவு அந்தத் தொகுதி; எந்தெந்த வட்டாரத்திலே உள்ள மக்கள் வாக்களிப்பார்கள் என்பதெல்லாம் தீர்மானிக்கப்பட்டதற்குப் பின்னர், வாக்குச் சாவடி, அதிலே வாக்களிக்கிற மக்களுடைய எண்ணிக்கை, [illegible] பற்றி அதற்குப் பின்னர்தான் ஆலோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.

227566
சென்னை-600 008
நூலகம்



**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி சீரமைப்புப் பணி முடிந்த பின்பு இந்தப் பணி தொடர்ந்து நடைபெறுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, தேர்தல் ஆணையத்தினுடைய பொறுப்பில் தொகுதிச் சீரமைப்பு இப்போது நடைபெறுகிறது. அதற்குப் பின்னர் தேர்தல் ஆணையம் ஒவ்வொரு தொகுதியிலேயும் வாக்குச் சாவடிகளைத் தீர்மானிப்பதற்கு மாவட்ட ஆட்சியர்மூலமாக வரைமுறைகளை அப்பொழுதுதான் வெளியிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற, சட்டமன்றத் தொகுதிகளை வரையறை செய்ததற்குப் பின்னாலே, புதிதாகத் தனி வாக்குச் சாவடிகள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். நாடாளுமன்ற, சட்டமன்றத் தொகுதி வரையறைகளைப் பற்றிய கருத்துகள் தமிழகத்திலே பரவலாகப் பேசப்படுகின்றன. நாடாளுமன்றத் தொகுதி, சட்டமன்றத் தொகுதிகள் வரையறை என்பது சரியான நிலையிலே செய்யப்படவில்லை. ஏற்கெனவே இருக்கிற சட்டமன்றத் தொகுதிகளும் அந்த மாதிரியாக இருக்கின்றன என்று சொல்லப்பட்டாலும், இப்பொழுது வரையறை செய்வது என்பது, பலவாறாகப் பிரித்து, வெவ்வேறு தொகுதிகளிலே, நாடாளுமன்றத் தொகுதிகளிலே இணைக்கப்படுகின்றன, குறிப்பாக, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த நாகப்பட்டினம் நாடாளுமன்றத் தொகுதியில் இருந்த நன்னிலம் சட்டமன்றத் தொகுதி தஞ்சாவூருக்கு மாறிவிட்டது. இதற்கும், அதற்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. 100 கிலோ மீட்டருக்கு மேலே தூரம் இருக்கிறது. ஆனால், அருகிலே 30 கிலோ மீட்டரில்தான் நாகப்பட்டினம் தொகுதி இருக்கிறது. எப்படி இந்த மாதிரியாக வரையறைகள் மாறுகின்றன என்பது தெரியவில்லை. இதைப் பற்றிய கருத்துகள் வலுவாக வருகிறபோது, இதில் நம்முடைய அரசு தனிக் கவனம் செலுத்தி, சட்டமன்ற, நாடாளுமன்றத் தொகுதி வரையறைகளை ஒருமுகப்படுத்தி, மக்கள் பாதிக்காதவண்ணம் அல்லது பயன்படுகிற வகையிலே சரியாக அமைப்பதற்குரிய முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

இவ்வாறு வழங்கப்படும் ஊக்கத் தொகை சேமிக்கப்பட்டு இல்லவாசிகளின் கைச்செலவுக் கணக்கில் மாதந்தோறும் வரவு வைக்கப்படுகிறது. இதிலிருந்து இல்லவாசிகளின் கைச்செலவிற்காக மாதந்தோறும் ரூ.5/- வழங்கப்படுகிறது.

**5.12. இல்ல நீக்கம் செய்யப்படும் இல்லவாசிகளுக்கான தொழிற்பயிற்சிகள்**

காஞ்சிபுரம் மாவட்டம், ஆத்தூரில் உள்ள அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனத்தில், இல்லத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இல்லவாசிகளுக்கு வேலைவாய்ப்புடன்கூடிய தொழிற்பிரிவுகளில் கணினிப் பயிற்சி (டி.ட்டி.பி), தானியங்கி பழுதுபார்த்தல் மற்றும் மின் கம்பியாளர் பயிற்சி வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்மூலம் இதுவரை 216 மாணவர்கள் பயிற்சி முடித்துப் பயன் அடைந்துள்ளனர்.

வேலூர், அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனத்தில் தங்கும் இல்லவாசிகளுக்கு ஊசி வேலைப்பாடு மற்றும் தையல் ஆகிய பிரிவுகளில் தொழிற்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**5.13. மறுவாழ்வுத் திட்டங்கள்**

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் நிறுவனங்களில் பயிற்சி பெற்று வெளியேறும் குழந்தைகள்/இல்லவாசிகளுக்கு கீழ்க்குறிப்பிட்ட மறுவாழ்வுத் திட்டங்கள் வழங்கப்படுகின்றன:

1. மறுவாழ்வு வழங்கும்விதமாகப் பெண் இல்லவாசிகளுக்குத் திருமணக் கொடையாக ரூ.3000/-ம், திருமண நாள் செலவாக ரூ.2,000/-ம் வழங்கப்படுகிறது.

2. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தமிழ்நாடு சமூகப் பாதுகாப்பு நல நிதி விதிகள், 2002-ன்படி நிறுவனங்களுக்கான உள்ளமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல், முற்றிலும் அனாதை/ஆதரவற்ற குழந்தைகளுக்கு கல்வி உதவி ரூ.5000/-க்கு மிகாமல் மற்றும் பொருளுதவி ரூ.10,000/-க்கு மிகாமலும் இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2000 மற்றும் 1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின்கீழ் வீடேகிய இல்லவாசிகளுக்கு உதவும் வகையில் ஏற்படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. மேலும் நிறுவனக் கட்டடங்களில் சிறு பழுதுபார்த்தல் பணிகள் மற்றும் கட்டுமானப் பணிகளுக்கென ஒரு நிறுவனத்திற்கு ஓர் ஆண்டுக்கு ரூ.20,000/-க்கு மிகாமல் செலவிடவும், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குச் சாதனங்கள் வாங்கவும் மற்றும் குழந்தைகளின் நலன் கருதி மேற்கொள்ளும் செலவினங்களும் இந்நிதியிலிருந்து செலவிடப்படும்.





இத்தொகை இதற்கென அமைந்த ஆட்சிக் குழுமத்தினால் நிர்வகிக்கப்படுகிறது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தமிழ்நாடு சமூகப் பாதுகாப்பு நல நிதியில் இருந்து, மகளிர் காப்பகங்கள்/ பிற்காப்பு நிறுவனங்களில் இருந்து வீடேகிய இல்லவாசிகளுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.5,000/- வரை, சிறு கடைகள், தையற்கடை, ஆடு, மாடு வளர்த்தல் ஆகிய தொழில்களைத் தொடங்குவதற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் இதுவரை 153 முன்னாள் இல்லவாசிகள் பயன்பெற்றுள்ளனர்.

3. மேலும், அரசினர் குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களில், கீழ்க்கண்ட பல்வேறு தொழிற்பிரிவுகளில் பயிற்சிபெற்று வீடேகும் இல்லவாசிகள் சுய தொழில் தொடங்க உதவுவதற்காகக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க ஒட்டுமொத்த மானியம் வழங்கப்படுகிறது:

| வ. எண். | தொழிற்பிரிவுகள் | எண்ணிக்கை | உதவித் தொகை (தலா) ரூ. |
|---|---|---|---|
| 1. | தச்சு | 5 | 2000 |
| 2. | நெசவு | 2 | 1000 |
| 3. | புத்தகம் கட்டுதல் | 3 | 1000 |
| 4. | தோட்டம் மற்றும் வேளாண்மை | 4 | 500 |
| 5. | கொத்துப் பிரிவு | 2 | 500 |
| 6. | தையல் | 10 | 2500 |
| 7. | பூத்தையல் | 2 | 1000 |
| 8. | உலோக வேலை | 4 | 1000 |
| 9. | பாய் நெசவு | 4 | 1000 |
| 10. | வீட்டு மின் இணைப்பு, கம்பிச் சுருள் சுற்றுதல் மற்றும் குழாய்ப் பணிகள் | 2 | 1000 |
| 11. | மின் பற்றவைப்பு | 2 | 1000 |
| 12. | இரண்டு சக்கர வாகனப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் | 2 | 2000 |

## 5.14. குடும்ப உதவித் திட்டம்

பின்தங்கிய பொருளாதாரச் சூழ்நிலை காரணமாகக் குழந்தைகள் இல்லங்களுக்கு வரும் சிறார்களுக்கு உதவி செய்யும்விதத்தில் குடும்ப உதவித் திட்டம் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் குழந்தைகள் இல்லத்தில் பராமரிக்கப்படும் குழந்தைகள், இல்ல நீக்கம் செய்யப்பட்டுக் குடும்பத்துடன் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். இதுபோன்ற சிறார்களுக்கு, அவர்களின் கல்வியினைத் தொடரும் பொருட்டு நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி அமைக்கப்பட்ட குழுமூலம், சிறார்கள் கண்டறியப்பட்டு, அவர்கள் பெற்றோர் வசம் மீண்டும் ஒப்படைக்கப்படுகின்றனர். சிறார் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.200/- வீதம் நிதி உதவி அவர்களின் குடும்பத்திற்கு, இல்லவாசியின் உரிய இல்ல நீக்க நாள் வரை வழங்கப்படுகிறது. இல்லங்களில் சேர்ந்து பயிலாமல், சிறார்கள் தாமாகவே பயில உதவும் முயற்சியாக இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

## 5.15. சிறார்கள் பிச்சையெடுத்தலை ஒழித்தல்

சிறார்கள் பிச்சை எடுப்பதைத் தடுப்பதற்கு, சிறார்களுக்கும், பெற்றோர்களுக்கும் ஆலோசனை வழங்கும் வகையில், சென்னை, இந்தியக் குழந்தைகள் நலச் சங்கம் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் இளைஞர் வழிகாட்டி நிலையம் ஒன்று தமிழ்நாடு அரசின் நிதி உதவியுடன் இயங்கி வருகின்றது.

## 5.16. சிறப்புப் பராமரிப்பு மையம்

குழந்தைகள் இல்லங்களில் பயிலும் ஆதரவற்ற சிறார்களுக்குப் பெற்றோர்களின் அரவணைப்புக் கிடைக்கும் வகையில் ஒரு சிறப்புப் பராமரிப்பு மையம் (சிறுமியர்) தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் சென்னையில் நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஐம்பது சிறுமியர் பயன்பெறுகிறார்கள்.

## 5.17. ஆதரவற்ற மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளான சிறார்களின் இடர்ப்பாடுகள் தலையீட்டு மையம்

குழந்தைகளை முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்க, தமிழ்நாடு அரசு, இந்திய குழந்தைகள் நலச் சங்கம், சென்னை (தமிழ்நாடு கிளை) வாயிலாக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில், குழந்தைகளைத் தவறாகப் பயன்படுத்துவது



குறித்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப்படுவதுடன், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தற்காலிகக் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. குழந்தைகளுக்கும், அவர்களின் பெற்றோருக்கும் உரிய வழிகாட்டுதல்களையும் மற்றும் ஆலோசனைகளையும் வழங்குகிறது.

## 5.18. சாலையோரச் சிறார்களுக்கான விரிவானதிட்டம்

சாலையோரச் சிறார்களுக்கான விரிவானதிட்டத்தின்கீழ் ஒவ்வொரு புகலிடத்திலும் 50 சிறார்கள் சேர்க்கப்பட்டு, அவர்கள் பயன்பெறும் வகையில் உணவு, முறைசாராக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி வழங்கப்படுகிறது. இப்புகலிடங்கள் சாலையோரச் சிறார்களுக்கு ஒரு பாதுகாப்பான இடமாக விளங்குகின்றன. பராமரிப்பு மானியமாக ஒரு வருடத்திற்கு ஒரு புகலிடத்திற்கு ரூ.1,35,000/- (ஒரு இல்லவாசிக்கு ஒரு மாதத்திற்கு ரூ.225/- வீதம் x 50 இல்லவாசிகளுக்கு x 12 மாதங்கள்) என வழங்கப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் சென்னையில் அரசுசாரா அமைப்புகளின்மூலமாக மேலும் 6 சாலையோரச் சிறார்களுககான புகலிடங்களை துவக்க அரசு அனுமதி அளித்துள்ளது. தற்போது பின்வரும் இடங்களில் புகலிடங்கள் செயல்பட்டு வருகின்றன:

| | | | |
|---|---|---|---|
| சென்னை | 2 | திருநெல்வேலி | 1 |
| மதுரை | 2 | சேலம் | 1 |

300 சிறார்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுகின்றனர்.

## 5.19. குழந்தைகளுக்கான தொலைபேசி உதவித் திட்டம் (Childline)

குழந்தைகளுக்கான தொலைபேசி உதவித் திட்டம் என்பது துன்பச் சூழ்நிலையிலுள்ள குழந்தைகளுக்கு அவசர காலத் தொலைபேசி அழைப்புகள்மூலம் உதவுவதற்காக ஏற்படுத்தப்பட்ட 24 மணி நேரமும் இயங்குகிற இலவசத் தொலைபேசிச் சேவை ஆகும். 1098 என்கிற இந்த இலவசத் தொலைபேசிச் சேவை நாடு முழுவதிலும் உள்ள நகரங்களுக்குப் பொதுவானது. இந்தியக் குழந்தைகளின் இலவசத் தொலைபேசி அமைப்பு [Childline India Foundation (CIF)] 1996 ஆம் ஆண்டு இந்தியா முழுவதிலும் குழந்தைகளுக்கான இலவச அவசர காலத் தொலைபேசிச் சேவையை வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது. தற்போது இத்திட்டம் நாடெங்கிலுமுள்ள 73 நகரங்களில்

செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தமிழகத்தில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, கடலூர், நாகப்பட்டினம் மற்றும் காஞ்சிபுரம் (மாமல்லபுரம்) ஆகிய இடங்களில் மத்திய அரசு நிதியுதவியுடன் தனியார் தொண்டு நிறுவனம்மூலம் செயல்படுத்தப்படுகிறது. சென்னை குழந்தைகளுக்கான இலவச அவசர காலத் தொலைபேசி அமைப்பின் ஆலோசனைக் குழுமத்தின் தலைவராக சமூகப் பாதுகாப்பு ஆணையர் இருக்கிறார். துயருறும் சூழ்நிலையில் பாதிப்புக்குள்ளான 0-18 வயது வரையுள்ள குழந்தைகளைக் கண்டறிந்து, காப்பாற்றி, அவர்களுக்கு உறைவிடம், மருத்துவ வசதி, மீட்பு, குடும்பத்துடன் அவர்களை இணைத்தல், உணர்வுபூர்வமான உதவி மற்றும் ஆலோசனை வழங்கும் நோக்கத்துடன் குழந்தைகளுக்கான அவசர காலத் தொலைபேசி அமைப்பு செயல்படுகிறது.

## 5.20. காணாமற்போன சிறார்களுக்கான தகவல் மையம்

காணாமற்போன சிறார்களுக்கான தகவல் மையத்தின் முக்கிய நோக்கங்களாவன:

- ❖ காணாமற்போன சிறார்களைக் கண்டுபிடித்து அவர்களுடைய குடும்பத்துடன் சேர்க்க உதவுதல்.
- ❖ குழந்தைகள் புறக்கணிக்கப்படுவதையும், தவறாகப் பயன்படுத்தப்படுவதையும் தடுத்தல்.
- ❖ காணாமற்போகும் சிறார்கள் தொடர்பாக அரசுக்கும், தனியாருக்கும் பாலமாகச் செயல்படுதல்.
- ❖ காணாமற்போகும் சிறார்கள் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் சேகரித்தல் மற்றும் நிறுவனங்களில் உள்ள குழந்தைகள் பற்றிய தகவல்களைச் சேகரித்துப் பராமரித்தல்.

வீட்டிலிருந்து ஓடிப் போன மற்றும் காணாமற்போன குழந்தைகளை எளிதில் கண்டுபிடிக்கும்பொருட்டு இந்தத் தகவல் சேகரிக்கும் பணி காவல் துறையினர்மூலம் கிடைக்கும் தகவல் மற்றும சமூகப் பாதுகாப்புத் துறையில் வரும் விண்ணப்பங்கள்மூலமாகச் சேகரிக்கப்படுகின்றன.



காவல் துறையிலிருந்து பெறப்படும் தகவல்கள் இது தொடர்பான நிறுவனங்களுக்கு (அரசுசார்/அரசுசாரா அமைப்புகள்) வழங்கப்பட்டு, குழந்தைகள் அந்நிறுவனங்களில் சேர்க்கப்பட்டுள்ளனரா என அறியப்படுகிறது. காணாமற்போன குழந்தைகளின் பெற்றோரிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் துறையின் வலை தளத்தில் (www.tn.nic.in/socialdefence) சேர்க்கப்படுகின்றன. தற்போது இத்தகவல் மையங்கள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

## 5.21. திட்ட முன்னேற்றம், கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு

தற்சமயம் சமூகப் பாதுகாப்புத் துறை ஆணையரகத்தில் திட்ட முன்னேற்றம், கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வு பிரிவில் ஒரு திட்ட முன்னேற்றம், கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வு அலுவலர் மற்றும் இரண்டு கள அலுவலர்கள் உள்ளனர். இப்பிரிவின் பணியானது, இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பராமரிப்பு) சட்டம் மற்றும் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் இயங்கும் நிறுவனங்களை மேற்பார்வையிடல், சாலையோரச் சிறார்களுக்கான விரிவான திட்டம், சுவதார் திட்டம், போதை மருந்து பயன்படுத்துவதைத் தடுத்தல் திட்டம்போன்ற மாநில மற்றும் மத்திய அரசு உதவியுடன் நடைபெறும் திட்டங்கள் முறையாகச் செயல்படுத்தப்படுவதைக் கண்காணித்தல்:

## 5.22. மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுதலைத் தடை செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்பட்டு வணிகரீதியில் பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்தப்படுதலைத் தடுப்பது மாநில அரசின் முக்கிய நோக்கமாகும். இந்நோக்கத்திற்கென கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:—

- ❖ மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஒன்று தலைமைச் செயலரின் தலைமையின்கீழ் 21-11-2001-ல் ஏற்படுத்தப்பட்டு, 1-8-2006-ல் மீண்டும் மாற்றி அமைக்கப்பட்டது.
- ❖ இதேபோல, மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- கிராமப் பஞ்சாயத்துத் தலைவரின் தலைமையில் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் இப்பிரச்சினைகளை ஆரம்ப நிலையிலேயே கவனித்துத் தடுக்க, 12,547 கிராம அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வகையான மூன்றடுக்குத் திட்டத்தைத் தோற்றுவித்ததில் தமிழ்நாடு முதல் மாநிலமாகும்.
- பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதல் மற்றும் வணிக ரீதியாகப் பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்துவதைத் தடுப்பதற்காக மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் மேற்பார்வைக்காகத் துணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுக்கள் மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழுக்கள் மற்றும் கிராம அளவிலான கண்காணிப்புக் குழுக்களின் பணிகளை மேற்பார்வையிடும் குழுக்களாகும்.
- பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்தி, வணிகரீதியில் பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்துவதைத் தடுக்கவும், கடத்தலுக்கு எதிராகப் பிரசாரம் செய்யவும், தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், பாதிக்கப்பட்டவரின் மறுவாழ்வுக்கு உதவிகரமாக இருக்கவும் அதற்காகச் செயல்படும் அமைப்புகளுக்குப் புத்தறிவுப் பயிற்சி, 2005-06 ஆம் ஆண்டில் எல்லா மாவட்டங்களிலும் ரூ.1.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டது.
- இந்த மூன்று நிலைக் குழுக்களிலும் உள்ள உறுப்பினர்களுக்கு யூனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் புத்தாக்கப் பயிற்சி வழங்குதல்.

**5.23. 2006–2007 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட புதிய திட்டங்கள்**

தஞ்சாவூரில் உள்ள குழந்தைகள் இல்லத்திற்குத் துயிற்கூடம் ஒன்று கட்டப்பட்டது. வேலூரில் இயங்கும் அரசு சிறப்பு இல்லத்திற்கு ஒரு கூடுதல் கட்டடம். சென்னை, பெண்களுக்கான அரசு சிறப்பு மற்றும் குழந்தைகள் இல்லத்திற்கு மேலும் ஒரு பள்ளிக் கட்டடம், சென்னை, சிறுவர்களுக்கான குழந்தைகள் இல்லத்தில் நூலகக் கட்டடம், இராணிப்பேட்டை குழந்தைகள் இல்லத்திற்கு உணவருந்தும் கூடம், சென்னையில் குழந்தை நலக் குழுக்களுக்குக் கட்டடம் ஆகியவை கட்டப்பட்டு வருகின்றன.



**5.24. சமூகப் பாதுகாப்புத் துறை இணைய தளம்**

இத்துறைக்கான இணைய தளம் ஒன்று தேசியத் தகவல் மையத்தின் (NIC) உதவியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**இணைய தளத்தின் முகவரி--www.tn.nic.in/socialdefence**

**2007–2008 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் விவரப் பட்டியல்**

**சமூகப் பாதுகாப்புத் துறை**

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண். | திட்டங்கள் | தொகை |
|---|---|---|
| 1. | அரசினர் கூர்நோக்கு இல்லங்கள், குழந்தைகள் இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், பிற்காப்பு நிறுவனங்கள் மற்றும் மகளிர் காப்பகங்களில் உள்ள இல்லவாசிகளுக்கு வாரம் ஒரு முறை கோழி இறைச்சி வழங்குதல். | 7.42 |
| 2. | சென்னை அரசினர் மகளிர் காப்பகம், தஞ்சாவூர் மற்றும் செங்கல்பட்டு, சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு சமையல் பாத்திரங்கள் வழங்குதல். | 1.20 |
| 3. | சென்னை, இராயபுரம், சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லம் மற்றும் செங்கல்பட்டு, ஆத்தூர், அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனத்திலும் பாதுகாப்பு சுற்றுச் சுவர் அமைத்தல். | 13.00 |
| 4. | கோயம்புத்தூர், அரசினர் மகளிர் காப்பகத்திற்கு அறைகலன்கள் வழங்குதல். | 0.22 |
| 5. | மதுரை, மண்டல அலுவலகத்தில் உள்ள கணினி அறைக்கு ஒரு சீர்வளிச் சாதனம் வழங்குதல் | 0.30 |
| 6. | ஈரோடு, அரசினர் குழந்தைகள் இல்லத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல். | 10.00 |
| 7. | ஆணையரகத்தில் உள்ள திட்ட முன்னேற்றம் மற்றும் கணிப்பாய்வுப் பிரிவை வலுப்படுத்துல் | 2.25 |
| 8. | பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்துதல் குறித்த கணக்கெடுப்பு | 15.00 |
| | மொத்தம் .. | 49.39 |

# அத்தியாயம் 6

## சமூகப் பாதுகாப்பு வளையம்

### 6.1. ஓய்வூதியத் திட்டங்கள்

தமிழகத்தில், வாழ்வாதாரமோ, உற்றார் உறவினர், ஆதரவோ இன்றி வாடும் முதியோர்/ஆதரவற்றோருக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு தமிழக அரசு கீழ்க்கண்ட ஓய்வூதியத் திட்டங்களை வருவாய்த் துறைமூலம் செயல்படுத்தி வருகிறது:

(1) முதியோர் ஓய்வூதியம் (சாதாரணம்) திட்டம்

(2) ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம்

(3) ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம்

(4) ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம்

(5) கணவனால் கைவிடப்பட்ட/ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம்

ஓய்வூதியத் திட்டப் பயனாளிகளுக்கு மாதம் ரூ.400/- மாவட்டங்களிலுள்ள வருவாய்த் துறையைச் சார்ந்த சமூகப் பாதுகாப்புத் திட்டத் தனி வட்டாட்சியர்களால் பணவிடைமூலம் அனுப்பப்பட்டு வருகிறது.

### 1. முதியோர் ஓய்வூதியம் (சாதாரணம்) திட்டம் (1–4–1962 முதல்)

இத்திட்டத்தின்கீழ், பிழைப்புதவி இல்லாமலும், காப்பாற்றுபவர் இல்லாமலும் உள்ள 65 வயதிற்கு மேற்பட்ட (பார்வையின்மை, தொழுநோய், மன நோய், பாரிசவாயு மற்றும் கை, கால் இழந்து வருவாய் ஈட்ட முடியாத நிலையிலுள்ள ஆதரவற்றோருக்கு 60 வயது) அனைத்து முதியோருக்கும் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின்கீழ் முதியோர் உதவித் தொகைபெறத் தகுதிபெறுபவர்.

(அ) எந்த ஒரு வருமானமோ அல்லது பிழைப்பூதியத்திற்கான ஆதரவு வழியோ பெற்றிருத்தல் கூடாது.



(ஆ) பிச்சை எடுத்தலைத் தொழிலாகக் கொண்டிருத்தல் கூடாது.

(இ) இருபது அல்லது அதற்குமேலும் வயதுள்ள மகன் அல்லது மகன்களால் ஆதரவு அளிக்கப்படுபவர்களாக இருக்கக் கூடாது மற்றும்

(ஈ) ரூ.5,000/-க்குமேல் மதிப்புள்ள சொத்து வைத்திருப்பவராக இருக்கக் கூடாது.

இத்திட்டத்தின்கீழ் உதவிபெறும் முதியோருக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகை ரூ.400/-ல் தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ் மத்திய அரசு ரூ.200/-ஐ வழங்குகிறது.

*31-3-2007* அன்றைய நிலவரப்படி *5,01,073* பயனாளிகள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

### 2. ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம் (1–11–1974 முதல்)

50 சதவிகிதம் மற்றும் அதற்குமேலும் நிலையான உடல் ஊனம் உள்ள 45 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் இத்திட்டத்தின்மூலம் பயன்பெறத் தகுதி உடையவர்கள் ஆவர். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் மாவட்ட மருத்துவ அலுவலர் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கி வரும் அரசால் ஏற்படுத்தப்பட்ட மாவட்ட அளவிலான குழுக்கள், ஊனமுற்றோரிடமிருந்து ஓய்வூதியம் வேண்டிப் பெறப்படும் மனுக்களை ஆய்வு செய்து, அவர்களின் ஊனத்தின் தன்மைக்கு ஏற்ப, தகுதியுள்ளவர்களுக்கு, வயது வரம்பை வலியுறுத்தாமல் ஓய்வூதிய அங்கீகாரம் வழங்கி வருகின்றது. முதியோர் ஓய்வூதியம் (சாதாரணம்) திட்டத்திற்குப் பொருந்தக்கூடிய ஏனைய நிபந்தனைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும். தொழுநோயாளிகளும் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்திற்கான முழுச் செலவையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது.

*31-3-2007* அன்றைய நிலவரப்படி இத்திட்டத்தினால் பயனடைந்த ஆதரவற்ற உடல் ஊனமுற்றவர் எண்ணிக்கை *70,626* ஆகும்.

### 3. ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் (1–6–1975 முதல்)

மறுமணம் செய்துகொள்ளாத ஆதரவற்ற விதவையர் எந்த வயதினராக இருந்தாலும், 18 அல்லது அதற்குமேல் வயதுடைய வாரிசு உள்ளவராக இருந்தாலும்கூட இத்திட்டத்தின்கீழ் பயனடையலாம். முதியோர் ஓய்வூதியம் (சாதாரணம்) திட்டத்திற்குப் பொருந்தக்கூடிய ஏனைய நிபந்தனைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும். இத்திட்டத்திற்கான முழுச் செலவும் மாநில அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

31-3-2007 அன்றைய நிலவரப்படி இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தோர் எண்ணிக்கை 5,01,896 ஆகும்.

### 4. ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம் (15–3–1981 முதல்)

60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடையலாம். முதியோர் ஓய்வூதியம் (சாதாரணம்) திட்டத்திற்குப் பொருந்தக்கூடிய ஏனைய நிபந்தனைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும். இத்திட்டத்திற்கான செலவினம் மாநில அரசின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

31-3-2007 அன்றைய நிலவரப்படி 88,481 ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள் இத்திட்டத்தில் பயனடைந்து வருகின்றனர்.

### 5. கணவனால் கைவிடப்பட்ட/ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம் (25–4–1986 முதல்)

கணவனால் கைவிடப்பட்டு, குறைந்தபட்சம் 5 ஆண்டுகளுக்கு மேல் கணவரைப் பிரிந்து வாழும்/சட்டப்படிப் பிரிந்து வாழ நீதிமன்றத்தின்மூலம் சான்றுபெற்ற ஆதரவற்ற 30 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் பயன்பெறும் வகையில் முதியோர் ஓய்வூதியத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 18 வயது நிரம்பிய வாரிசு உள்ள, கணவனால் கைவிடப்பட்ட பெண்களும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெறலாம். முதியோர் ஓய்வூதியம் (சாதாரணம்) திட்டத்திற்குரிய பிற நிபந்தனைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும். இத்திட்டத்திற்கான முழுச் செலவினம் மாநில அரசின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

31-3-2007 அன்றைய நிலவரப்படி இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தோர் எண்ணிக்கை 84,949 ஆகும்.



### 6. பிற பயன்கள்

#### (1) இலவச வேட்டி/சேலை வழங்குதல்

ஆண்டுக்கு இரு முறை பொங்கல் மற்றும் தீபாவளிப் பண்டிகையின் போது மேற்குறிப்பிட்ட திட்டங்களின்கீழ் உதவித் தொகைபெறும் பயனாளிகளில் ஆண்களுக்கு ஒரு வேட்டியும், பெண்களுக்கு ஒரு சேலையும் இலவசமாக வழங்கப்படுகிறது.

#### (2) இலவச சத்துணவு மற்றும் இலவச அரிசி வழங்குதல் (15–9–1991 முதல்)

மேற்கண்ட திட்டங்களின்கீழ் பயன்பெறும் அனைத்துப் பயனாளிகளும் கீழ்க் குறிப்பிடப்பட்ட அளவுகளின்படி இலவச அரிசி பெற்றுக்கொள்ள அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(அ) சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் ஒரு முறை தலா 4 கிலோ சன்ன ரக அரிசி.

(ஆ) சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் ஒரு முறை தலா 2 கிலோ சன்ன ரக அரிசி.

### 6.2. அன்னபூர்ணா திட்டம்

தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் ஆதரவற்ற/மூத்த குடிமக்களுக்கு தேசிய சமூக உதவித் திட்டத்தின் ஒரு பகுதியான அன்னபூர்ணா திட்டத்தின்கீழ் மாதமொன்றுக்கு 10 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது. மத்திய அரசால் தமிழ்நாட்டிற்கு 71,974 பயனாளிகள் எனக் குறியீடு நிர்ணயிக்கப்பட்ட இத்திட்டம், இம்மாநிலத்தின் பொது விநியோகம் மற்றும் நுகர்பொருள் பாதுகாப்பு ஆணையரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கான செலவினம் முதலில் மாநில அரசின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டு, பின்னர் மைய அரசால் ஒவ்வோர் ஆண்டும் தேசிய சமூக உதவித் திட்டத்திற்காக விடுவிக்கப்படும் கூடுதல் மைய நிதி உதவியிலிருந்து சரி செய்யப்படுகிறது.

இத்திட்டத்திற்கான பயனாளிகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களால், அவர்களுடைய மாவட்டத்திலுள்ள தேசிய ஓய்வூதியத் திட்டப் பயனாளிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தனியான வண்ணம்கொண்ட, "அன்னபூர்ணா" என்று பெயர் பொறிக்கப்பட்ட

பொது விநியோக அட்டைகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அச்சிடப்பட்டுப் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

### 6.3. தேசிய குடும்ப நலத் திட்டம் (2–10–1995 முதல்)

இத்திட்டமும் தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு, மைய அரசால் வழங்கப்படும் கூடுதல் மைய நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பங்களில், பிரதான வருவாய் ஈட்டும் நபர் இறப்பின், அக்குடும்பத்திற்கு மத்திய அரசால் ரூ.10,000/- வழங்கப்படுகிறது. தமிழகத்தில், தேசிய குடும்ப நல நிவாரணம்பெறும் பயனாளிகள், தமிழ்நாடு நலிந்தோர் நிவாரணத் திட்டம் மற்றும் தமிழ்நாடு விபத்து நிவாரணத் திட்டம் ஆகியவற்றின் கீழ் பயனடைகின்றனர். தமிழ்நாடு விபத்து நிதி உதவித் திட்டத்தின் கீழ் ரூ.15,000/- வழங்கப்பட்டு வருகின்றது. இதில் மைய அரசின் பங்கு ரூ.10,000/-ம், மாநில அரசின் பங்கு ரூ.5,000/-ம் ஆகும்.

தமிழ்நாடு நலிந்தோர் நிவாாணத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வழங்கப்படும் ரூ.10,000/- பயனாளிக்கு வழங்கப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நலிந்தோர் நிவாரணத் திட்டத்தின்கீழ் 55,067 நபர்களும், தமிழ்நாடு விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் 817 நபர்களும் பயனடைந்துள்ளனர்.

**முடிவுரை**

சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக நலப் பணிகள், சமுதாயத்தின் குழந்தைகள், வளர்இளம் பருவத்தினர், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், ஆதரவற்றோர், முதியோர் மற்றும் ஊனமுற்றோர் என அனைத்துப் பிரிவினரின் நலனையும் ஒருங்கே காப்பதாகும். வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றம் ஏற்படுவது எப்போதுமே வசதியற்ற சூழலில் வாழ்வோரிடையே வசந்தத்தை ஏற்படுத்தும். வாரம் இரு முறை முட்டை வழங்கியது, வயோதிகர்களுக்கு ஓயவூதியத்தை உயர்த்தியது, திருமண நிதியுதவித் திட்டத்தை மீண்டும் கொண்டு வந்தது ஆகியவை இதைத்தான் ஏற்படுத்தியது.

11-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் மையக் குறிக்கோளாக ஊட்டச் சத்துக் குறைபாடற்ற குழந்தைகளை உருவாக்குதல் மற்றும் மகளிரின் ஒட்டுமொத்த உடல் மற்றும் மன வளர்ச்சியை மேம்படச் செய்தல் இருக்கும். இது ஒரு குறிப்பிட்ட பாலினத்தின் அல்லது



பிரிவினரின் வளர்ச்சிக்காக மட்டுமல்லாமல் ஒட்டுமொத்தச் சமூகச் சூழ்நிலையின் வளர்ச்சியை மையமாகக்கொண்டிருக்கும். மனித மேம்பாட்டு அறிக்கையின்படித் தமிழகத்தில் பெண்களின் நிலை மற்ற மாநிலங்களை ஒப்புநோக்குங்கால் உயர்ந்த நிலையில் இருந்தாலும், இங்குள்ள ஆண்களோடு ஒப்பிடுகையில் படிப்பறிவு, உயர் கல்வி, வேலையில் ஈடுபடுதல், ஊதிய நிலை, சொத்து வைத்திருத்தல் மற்றும் அரசியலில் பங்குபெறுதல் ஆகியவற்றில் மேலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. தமிழகத்தில் முதியோரின் சதவிகிதம் 2011 ஆம் ஆண்டில் 11.43% உயரும். இது கேரளத்திற்கு அடுத்த நிலையில் இருக்கும். சிறந்த மருத்துவச் சேவை மற்றும் வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றம் ஆகியவையே இதற்குக் காரணம். இப்பிரிவினரின் தேவைகளைக் கூர்ந்து நோக்கிப் பூர்த்தி செய்து, இவர்களை நாம் பாதுகாக்க வேண்டும். நமது திட்டங்களின் வெற்றிச் சரித்திரம் நமது கடும் முயற்சிகளையும், அதனால் விளைந்த நற்பயன்களையும் பறைசாற்றுகின்றன.

சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையானது வல்லமையும், திறமையும் படைத்த நமது மாண்புமிகு முதலமைச்சரின சீரிய வழிகாட்டுதலின்கீழ், 11-வது ஐந்தாண்டு திட்டத்தின் முதல் ஆண்டிற்காக வகுக்கப்பட்ட குறிக்கோள்களை அடைந்துவிடும். வாய்ப்பு, வசதிகளற்ற ஏழை எளியோரின் துன்பத்தைப் புரிந்துகொண்டு அவர்களின் துயர்துடைப்பதில் தன்னிகரற்ற நமது மாண்புமிகு முதலமைச்சரின் முயற்சிகள்,

“பெண்மை அறிவுயரப் பீடோங்கும் பெண்மைதான்
ஒண்மையுற ஓங்கும் உலகு”

என மகாகவி பாரதி கனவு கண்டதுபோலப் பெண்ணினம் வளர்ச்சியுறுவதையும், பாலின வளர்ச்சிக் குறியீட்டில் தமிழகம் முதல் நிலையை அடைவதையும் உறுதி செய்யும்.

## இணைப்பு II

(365 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 45—சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

## அறிவிப்புகள்–2007–2008

1. தமிழ்நாட்டிலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படும் அங்கன்வாடி மையங்கள் இனி மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும்வண்ணம் தமிழில் "குழந்தைகள் மையம்" என அழைக்கப்படும்.

2. 1 வயது முதல் 2 வயது வரையுள்ள குழந்தைகள் மையங்களின் மூலம் பயனடையும் குழந்தைகளுக்கும் இவ்வாண்டு முதல் வாரம் ஒரு முட்டை வழங்கப்படும்.

3. சென்னையை அடுத்துள்ள பரனூரில் உள்ள தொழுநோயால் அவதியுறும் நோயாளிகளுக்கு மருத்துவ உதவி மற்றும் மறுவாழ்வு அளிக்கும் அரசு மறுவாழ்வு இல்லத்திற்குக் கூடுதலாக 100 குடும்பங்களுக்கு இட வசதி வழங்கும் வகையில் மேலும் ஒரு புதிய கட்டடம் கட்டப்படும்.

4. 2007-2008 ஆம் ஆண்டில் 1,539 குழந்தைகள் மையங்கள் மற்றும் 3,168 சிறிய குழந்தைகள் மையங்கள், ஆக மொத்தம் 4,707 புதிய மையங்கள் அமைக்கப்படும்.

5. பள்ளிச் சத்துணவு மையங்கள் மற்றும் குழந்தைகள் மையங்களுக்குப் பாத்திரங்கள் வாங்கவும், சமையலறைகளை நவீனபடுத்தவும் இந்த ஆண்டு ரூபாய் 4 கோடியே 51 இலட்சம் செலவிடப்படும்.

6. உடல் ஊனமுற்றோருக்கு மோட்டார் பொருத்திய மூன்று சக்கர சைக்கிள்கள் வாங்க அரசு ரூபாய் 50 இலட்சம் மானியம் வழங்கும்.

7. குழந்தைகள் மையங்களில் பணிபுரியும் ஊழியர்களின் வேலை நேரம் தற்போதுள்ள முறையான காலை 7.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை என்றிருப்பதை மாற்றி, காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை என அமைக்கப்படும்.





8. கல்வித் தகுதிபெற்ற 810 சத்துணவுச் சமையலர்/உதவியாளர்களுக்குச் சத்துணவு அமைப்பாளர்களாகப் பதவி உயர்வு வழங்கப்படும்.

9. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் நடத்தப்படும் 16 முதியோர் இல்லங்களுக்குத் தற்போது தலா ரூபாய் 2 இலட்சம் அரசு மானியமாக வழங்கப்படுகிறது. இவ்வாண்டு மேலும் 15 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் நடத்தப்படும் முதியோர் இல்லங்களுக்கு ஒரு இல்லத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 2 இலட்சம் வீதம் மானியம் வழங்கப்படும்.

10. தூத்துக்குடி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் உள்ள குழந்தைகள் காப்பகங்களுக்கு ரூபாய் 1 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

11. ஆதரவற்ற சிறுவர், சிறுமியருக்கான சிறப்பு இல்லங்கள் மற்றும் குழந்தைகள் இல்லங்களைப் பராமரிக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு அளிக்கும் மானியம் ஒரு நபருக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 225 என்ற நிலையிலிருந்து ரூபாய் 450 ஆக இவ்வாண்டு முதல் உயர்த்தப்படும்.

12. ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் ஊனமுற்றோர் நலம் குறித்த விழிப்புணர்வு முகாம்களை நடத்துவதற்கு விளம்பரப் பொருட்கள் வாங்க ரூபாய் 20 இலட்சம் ஒதுக்கப்படும்.

13. ஊனமுற்றோருக்கு நவீன செயற்கை அவயவம் வாங்க அரசு மானியமாக ரூபாய் 25 இலட்சம் ஒதுக்கப்படும்.

14. அரசினர் கூர்நோக்கு இல்லங்கள், குழந்தைகள் இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், பிற்காப்பு நிறுவனங்கள் மற்றும் மகளிர் காப்பகங்களில் உள்ள இல்லவாசிகளுக்கு இவ்வாண்டு ரூபாய் 7 இலட்சத்து 42 ஆயிரம் செலவில் வாரம் ஒரு முறை கோழி இறைச்சி வழங்கப்படும்.

15. சென்னை அரசினர் மகளிர் காப்பகம், தஞ்சாவூர் மற்றும் செங்கல்பட்டில் உள்ள அரசினர் குழந்தைகள் இல்லங்களுக்கு ரூபாய் 1 இலட்சத்து 20 ஆயிரம் செலவில் சமையல் பாத்திரங்கள் வழங்கப்படும்.

**4.31. மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக அரசுசாரா அமைப்புகள் மூலம் தேனி மாவட்டத்தில் மூன்று பகல் நேரப் பராமரிப்பு மையங்கள் நடத்துதல்**

90 மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் பயனடையும் வகையில் தேனி மாவட்டத்தில் மூன்று பகல் நேரப் பராமரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழக அரசு வழங்கும் மானிய உதவியைக் கொண்டு, அரசுசாரா அமைப்புகள் இம்மையங்களை நடத்தி வருகின்றன.

**4.32. மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான சிறப்புப் பள்ளி நடத்த அரசின் மானிய நிதியுதவி வழங்குதல்**

தேனி மாவட்டத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனம்மூலம் 25 மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் பயனடையும் வகையில் சிறப்புப் பள்ளி ஒன்று துவக்கப்பட்டு, அரசின் மானிய நிதியுதவியுடன் செயல்பட்டு வருகிறது. மேலும், சென்னை, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள மன வளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகள் தலா ஒவ்வொன்றிற்கும் அரசு மானிய நிதியுதவி வழங்கப்படுகிறது.

**4.33. மன நலம் குன்றியோர் மறுவாழ்வு மையங்களைப் பதிவு செய்தல்**

மன நோயினால் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்களை வரன்முறைபடுத்த வேண்டி, இந்தியாவிலேயே முதன் முறையாகத் தமிழ்நாடு, "மன நலம் குன்றியோர் மறுவாழ்வு மையங்கள்" விதியை இயற்றியுள்ளது. இவ்விதியின்கீழ் மன நலம் குன்றியோர் மறுவாழ்வு நிறுவனங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டும்.

**4.34. சட்டப் படிப்பு முடித்த ஊனமுற்றோருக்கு உதவி**

சட்டப் படிப்பு முடித்த 15 உடல் ஊனமுற்ற சட்டப் பட்டதாரிகள் வழக்கறிஞர் மன்றத்தில் பதிவு செய்துகொள்ளவும், சட்டப் புத்தகங்கள் வாங்கவும் ஒவ்வொரு பட்டதாரிக்கும் தலா ரூ.3,000/- வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**4.35. அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாள்**

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தின்படி, ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் திங்கள் 3 ஆம் நாள் "அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாளாக" மாநில அரசால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.



ஊனமுற்றோர் தமது திறமைகளையும், ஆற்றலையும், கலை மற்றும் விளையாட்டுத் துறைகளில் வெளிக்காட்ட ஊக்கப்படுத்துவதே இந்த நாளைக் கடைப்பிடிப்பதன் முக்கிய நோக்கமாகும். இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, ஊனமுற்ற குழந்தைகளுக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகளில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் 5,000-க்கும் மேற்பட்ட ஊனமுற்ற மாணவ, மாணவியர் கலந்துகொள்கின்றனர். 102 வகையான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகளும், பங்கேற்றவர்களுக்குப் பங்கேற்புச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இதன் தொடர்ச்சியாக, டிசம்பர் 3-ம் நாள் ஊனமுற்ற குழந்தைகளின் கலைத் திறனை வெளிப்படுத்தவெனக் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். இவ்விழாவில் ஊனமுற்றோருக்குச் சிறந்த வேலைவாய்ப்பு அளித்தவர், சிறந்த சமூகப் பணியாளர், சிறந்த பணியாளர், சிறந்த ஆசிரியர் மற்றும் சிறந்த நிறுவனத்திற்கான மாநில விருதுகள் வழங்கப்படுகின்றன. இந்த நாளில் ஊனமுற்றோருக்கு உதவி உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

**4.36. மாநில விருதுகள்**

ஊனமுற்றோருக்கான சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள்/நிறுவனங்களைப் பாராட்டி, ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் மாநில அரசால் சுதந்திரத் தினத்தன்றும், அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாளன்றும் கீழ்க்கண்ட மாநில விருதுகள் வழங்கப்படுகின்றன:

சுதந்திரத் திருநாள் விழாவன்று வழங்கப்படும் மாநில விருதுகள் விவரம்:

| வ. எண். | விருதின் வகை | விருது விவரம் |
|---|---|---|
| 1. | ஊனமுற்றோருக்கு மிக அதிக அளவில் வேலைவாய்ப்பு அளித்த தனியார் நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2. | ஊனமுற்றோருக்குச் சேவை செய்யும் சிறந்த நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், சான்றிதழ் மற்றும் ரூ.50,000/- ரொக்கப் பரிசு |

| வ. எண். | விருதின் வகை | விருது விவரம் |
|---|---|---|
| 3. | மகளிருக்குச் சேவை செய்யும் சிறந்த நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், சான்றிதழ் மற்றும் ரூ.50,000/– ரொக்கப் பரிசு |
| 4. | ஊனமுற்றோருக்குச் சேவை புரிந்த சிறந்த சமூகப் பணியாளர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 5. | மகளிருக்குச் சேவை புரிந்த சிறந்த சமூகப் பணியாளர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 6. | ஊனமுற்றோருக்குச் சேவை புரிந்த சிறந்த மருத்துவர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 7. | சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், ரூ.25,000/– ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ் |
| 8. | சிறந்த மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |

அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாளன்று (டிசம்பர் மாதம் 3 ஆம் தேதி) வழங்கப்படும் மாநில விருதுகள் விவரம்:

| வ. எண். | விருதின் வகை | விருது விவரம் |
|---|---|---|
| 1. | ஊனமுற்றோருக்கு மிக அதிக அளவில் வேலைவாய்ப்பு அளித்த தனியார் நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2. | ஊனமுற்றோரில் மிகச் சிறந்த பணியாளர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 3. | ஊனமுற்றோருக்குக் கல்வி கற்பிப்பதில் மிகச் சிறந்த ஆசிரியர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 4. | சிறந்த நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |



### 4.37. தேசிய விருதுகள்

ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் திங்கள் 3 ஆம் நாள் அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாள் விழாவின்போது மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கும் அமைச்சகம்மூலம் தேசிய விருதுகள் வழங்கப்படுகின்றன. சிறந்த ஊனமுற்ற பணியாளர், தொழிலதிபர், பணியமர்த்தும் அலுவலர், நிறுவனம், தனி நபர், தனித் திறன்பெற்ற ஊனமுற்ற நபர், தனித் திறன்பெற்ற ஊனமுற்ற குழந்தை, முன்னோடி ஊனமுற்ற நபர் மற்றும் ஊனமுற்றோர் பயன்படுத்தும் வகையிலான சிறந்த தொழில்நுட்பங்களை உருவாக்கியவர் ஆகிய பிரிவுகளில் தேசிய விருதுகள் வழங்கப்படுகின்றன. சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கும் அமைச்சகம், ஒவ்வோர் ஆண்டும், 12 பிரிவுகளில் 70 தேசிய விருதுகளை வழங்குகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் 6 தேசிய விருதுகளைத் தமிழ்நாடு பெற்றுள்ளது.

### 4.38. மாவட்ட மறுவாழ்வு மையங்கள்

இந்தியாவில் தமிழ்நாட்டில் மட்டும்தான் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட மறுவாழ்வு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மாநிலத்தில் 30 மாவட்டங்களிலும் மாவட்ட மறுவாழ்வு மையங்கள் மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்பட்டு வருகின்றன. இம்மாவட்ட மறுவாழ்வு மையங்கள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள ஊனமுற்றவர்களைக் கண்டறிந்து, அவர்களின் ஊனத்தின் தன்மைக்கு ஏற்றவாறு மறுவாழ்வு உதவிகளை வழங்குகின்றன.

### 4.39. மாவட்ட மறுவாழ்வு மையங்களில் பணியாற்றும் பார்வையற்ற நாற்காலி ஒயர் பின்னும் பணியாளர்கள்

தற்போது, சென்னை மற்றும் மதுரை நீங்கலாக இதர மாவட்ட மறுவாழ்வு மையங்களில் ரூ.2,550-55-2,660-60-3,200 என்ற சம்பள ஏற்ற முறையில், 26 நாற்காலி ஒயர் பின்னும் பார்வையற்ற பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

### 4.40. ஊனமுற்றோருக்கான தேசிய மறுவாழ்வுத் திட்டம் (National Programme for Rehabilitation of Persons with Disabilities) (NPRPD)

ஊனமுற்றோருக்கான தேசிய மறுவாழ்வுத் திட்டம் தமிழகத்தில் திருவண்ணாமலை, காஞ்சிபுரம், தேனி, இராமநாதபுரம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் ஆகிய 6 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், சமுதாயம் சார்ந்த மறுவாழ்வுப் பணியினை ஊராட்சி மட்டத்தில் மேற்கொள்வதாகும். ஊனமுற்றோருக்கான சமுதாயம் சார்ந்த மறுவாழ்வுப் பணிகளை இந்த மாவட்டங்களில் மேற்கொள்வதே இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, மாநில வளம் மற்றும் பயிற்சி மையம் சென்னையில் இயங்கி வருகிறது. ஊனமுற்றோர் மறுவாழ்வு சம்பந்தமான பயிற்சித் திட்டங்களை அரசு அலுவலர்களுக்கும், மற்றவர்களுக்கும் இப்பயிற்சி மையம் செயல்படுத்தி வருகிறது.

### 4.41. தேசிய அறக்கட்டளை

ஆட்டிசம், மூளை முடக்கு வாதம், மன வளர்ச்சி குன்றிய தன்மை மற்றும் பல்வகை ஊனத்தினால் பாதிக்கப்பட்டோர் சுயமாக வாழ வழிவகை செய்யவும், அவர்களைச் சமுதாயத்தில் சுயமாக ஒருங்கிணைந்து வாழ வைப்பதைக் குறிக்கோளாகக்கொண்டு 1999 ஆம் ஆண்டு தேசிய அறக்கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டது. இக்குறிக்கோள்களைத் திறம்பட நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர்களைத் தலைவராகக் கொண்ட உள்ளூர் அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேசிய அறக்கட்டளையின் சாராம்சங்கள் குறித்து அரசுசாரா நிறுவனங்களுக்கு எடுத்துரைக்கவும், விழிப்புணர்வு முகாம்கள் நடத்தவும், சட்டப் பாதுகாவலர் நியமனங்கள் பற்றி எடுத்துரைக்கவும் ஒவ்வோர் உள்ளூர் அளவிலான குழுவிற்கும் ஆண்டுக்கு ரூ.10,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.42. அரசு மறுவாழ்வு இல்லங்கள்

தொழுநோயால் அவதியுறும் நோயாளிகளுக்கு மருத்துவ உதவி மற்றும் மறுவாழ்வு அளித்திடவென கீழ்க்காணும் 10 இடங்களில் மறுவாழ்வு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன:





| வ. எண். | அரசு மறுவாழ்வு இல்லம் | நிறுவப்பட்ட நாள் |
|---|---|---|
| 1. | பரனூர், காஞ்சிபுரம் மாவட்டம் | 2–10–1971 |
| 2. | உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் மாவட்டம் | 22–1–1972 |
| 3. | பர்கூர், கிருஷ்ணகிரி மாவட்டம் | 18–6–1972 |
| 4. | புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம் | 7–1–1973 |
| 5. | மனையேறிப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம் | 17–2–1973 |
| 6. | யா.புதுப்பட்டி, மதுரை மாவட்டம் | 22–4–1973 |
| 7. | மல்லவாடி, திருவண்ணாமலை மாவட்டம் | 4–7–1973 |
| 8. | செல்லியம்பட்டி, தருமபுரி மாவட்டம் | 19–10–1973 |
| 9. | தேவியாக்குறிச்சி, சேலம் மாவட்டம் | 23–10–1973 |
| 10. | விண்ணப்பள்ளி, ஈரோடு மாவட்டம் | 10–1–1974 |

ஒவ்வோர் அரசு மறுவாழ்வு இல்லத்திலும் 400 பெரியவர்கள் மற்றும் 25 சிறார்கள் சேர்க்கப்படுகின்றனர். தொழுநோயால் பாதிக்கப்பட்டுத் தானாகச் சேர முன்வரும் நோயாளிகள் அவர்களுடைய நோயின் தன்மையை மருத்துவர் உறுதிப்படுத்திய பின்பு, இல்லங்களில் சேருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். உளுந்தூர்பேட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் நீதித் துறை நடுவரால் தண்டிக்கப்பட்ட தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். நோயாளிகள் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுடன் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இல்லங்களில் தங்குவோர் முழுமையாகக் குணப்படுத்தப்பட்ட நிலையிலோ அல்லது ஒழுங்கு நடவடிக்கை காரணமாகவோ இல்லத்தைவிட்டு வெளியேற்றப்படுகின்றனர்.

இல்லவாசிகளுக்கு இலவசத் தங்கும் வசதி, உணவு, உடை, மருத்துவ வசதி, இவற்றுடன் பொழுதுபோக்கு வசதிகளான விளையாட்டு, நூலகம், இசைக் கருவிகள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி ஆகியவைகள் அளிக்கப்பட்டுள்ளன. நல்ல நிலையில் உள்ள இல்லவாசிகளுக்குப் பாய் முடைதல், துணி நெய்தல், தையல் மற்றும் காலணிகள் தயாரித்தலில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படுகிறது.

இல்லவாசிகளுக்கு நாளொன்றுக்கு ரூ.20/- செலவிலும், அவர்களைச் சார்ந்திருப்போர் மற்றும் குழந்தைகளுக்கு ரூ.15/- செலவிலும் உணவு வழங்கப்படுகிறது. சிறப்பு விழா நாட்களான பொங்கல், தீபாவளி மற்றும் காந்தி ஜெயந்தி ஆகிய தினங்களில் நபர் ஒன்றுக்குக் கூடுதலாக ரூ.5/- செலவில் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது. ஒவ்வோர் இல்லவாசிக்கும் ஆண்டுக்கு இரண்டு இணை உடைகளுடன், பொங்கல் அன்று இலவச வேட்டி/சேலைகளும் வழங்கப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் இலவசமாகப் பாய்கள் மற்றும் நுண்ணிய துளை ரப்பர் காலணிகள் வழங்கப்படுகின்றன. தட்டுகள் மற்றும் குவளைகள் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையும், போர்வைகள் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் வழங்கப்படுகின்றன. இல்லவாசிகளின் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன

இல்லவாசிகளுக்கு மருத்துவ அலுவலர்களின்மூலம் மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வோர் இல்லத்திற்கும் செலவுக்கென கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது:

| வ. எண். | விவரம் | செலவினம் ஆண்டொன்றிக்கு |
|---|---|---|
| 1. | செயற்கைக் காலணிகள் மற்றும் செயற்கைக் கால் அவயவங்கள் (தேவை உள்ளவர்களுக்கு மட்டும்) | ரூ.1000/– |
| 2. | மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கு | ரூ. 2000/– |
| 3. | பற்பொடி மற்றும் பல் துலக்கும் பிரஷ் வழங்குவதற்கு (வருடமொன்றுக்கு) | ரூ.2000/– |
| 4. | விளையாட்டுச் சாதனங்கள் வாங்கிட | ரூ.1200/– |
| 5. | இசைக் கருவிகள் வாங்கிட | ரூ.400/– |

மேலும், இல்லவாசிகள் இறந்தால் அவர்களின் ஈமச்சடங்கிற்காக ரூ.500/- வழங்கப்படுகிறது.



**4.43. அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம், மேல்பாக்கம்**

1945 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிச்சை எடுப்பதைத் தடுக்கும் சட்டம் இயற்றப்பட்டது. மேல்பாக்கத்திலுள்ள அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம் 950 நபர்கள் தங்கும் வகையில் (ஆண்கள் 770 + பெண்கள் 180) கொண்டு 1-3-1954 அன்று தொடங்கப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் நீதித் துறை நடுவர்மூலமாகத் தண்டிக்கப்பட்ட பிச்சைக்காரர்கள் இந்த இல்லத்தில் தங்க வைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு இவ்வில்லத்தில் இலவசத் தங்குமிடம், உணவு, உடை, மருத்துவ வசதி அளிக்கப்பட்டு, நெசவு, தச்சு, மண்பாண்டத் தொழில் மற்றும் தையல் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும், இல்லத்திலுள்ள ஆண்களுக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு துண்டுகள், இரண்டு இணைச் சட்டைகள் மற்றும் கால் சட்டைகளும், பெண்களுக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு இணைச் சேலைகள் மற்றும் ஜாக்கெட்டுகளும் வழங்கப்படுகின்றன. இவற்றைத் தவிர, பொங்கல் நாளன்று இலவச வேட்டிகளும், சேலைகளும் வழங்கப்படுகின்றன. இவர்கள் தண்டனைக் காலம் முடிந்தவுடன் சொந்த ஊருக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

**4.44. இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்**

2006 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வண்ணத் தொலைக்காட்சி இல்லாத குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது. இதன்படி, 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் உள்ள தொழுநோயால் பாதிக்கப்பட்ட இல்லவாசிகளுக்கு 14" அளவுள்ள 419 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும், 21" அளவுள்ள 104 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் வழங்கப்பட்டுள்ளன. மேல்பாக்கத்தில் உள்ள அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லத்தில் தங்கியுள்ள இல்லவாசிகள் பயனடையும் வகையில் 21" அளவுள்ள 2 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

**4.45. ஊனமுற்றோருக்கான நல வாரியம்**

ஊனமுற்றோர்க்கென ஒரு தனி நல வாரியம் அமைத்து அனைத்து உதவிகளையும் வழங்க அரசு ஆவன செய்துள்ளது. இந்த நல உதவிகள் அரசால் எக்காலத்திலும் தொடர்ந்து வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் ஒரு தனிச் சட்டமுன்வடிவு இச்சட்டமன்றக் கூட்டத் தொடரில் அறிமுகப்படுத்தப்படும்.

**2007–2008 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் விவரப் பட்டியல்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | திட்டம் | தொகை |
|---|---|---|
| 1. | உடல் ஊனமுற்றோருக்கான மோட்டார் பொருத்திய மூன்று சக்கர சைக்கிள் வாங்க அரசு மானியம் வழங்குதல் | 50.00 |
| 2. | ஊனமுற்றோருக்கு நவீன செயற்கை அவயவம் வாங்க அரசு மானியம் வழங்குதல் | 25.00 |
| 3. | ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அலுவலக நூலகத்திற்குப் புத்தகங்கள் வாங்குதல் | 2.00 |
| 4. | ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்துவதற்கான விளம்பரப் பொருட்கள் கொள்முதல் செய்தல் | 20.00 |
| 5. | அரசு மறுவாழ்வு இல்லங்களுக்கு மின்னணு எடை இயந்திரம் வாங்குதல் | 0.27 |
| 6. | அரசு மறுவாழ்வு இல்லங்களுக்குக் கணினிகளும் மற்றும் தொடர்பான அறைகலன்களும் வாங்குதல் | 3.00 |
| | மொத்தம் | 100.27 |





# அத்தியாயம் 5

## சமூகப் பாதுகாப்பு

5.1 மற்ற துறைகளைப்போன்றே, கைவிடப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட மற்றும் தவறிழைத்த சிறார்களின் சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்வுக்காக 1887 ஆம் ஆண்டிலேயே செங்கல்பட்டில் சீர்திருத்தப் பள்ளி ஒன்றைத் துவக்கி, தமிழ்நாடு அரசு முன்னோடியாகத் திகழ்கிறது.

இத்துறையின்கீழுள்ள நிறுவனங்கள் 2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் பிரிவுகளில் வரும் புறக்கணிக்கப்பட்ட மற்றும் தவறிழைத்த மற்றும் சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் சிறார்களின் கவனிப்பு, பராமரிப்பு (சீர்திருத்தம்) பயிற்சி (கல்வி மற்றும் தொழில் சார்ந்த) ஆகியவற்றிற்காகவும், 1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல (தடுப்புச்) சட்டத்தின்கீழ் பாதுகாப்பிற்காக அனுப்பப்படும் பெண் குழந்தைகள் மற்றும் மகளிரின் பாதுகாப்பிற்காகவும் இயங்குகின்றன. இந்நிறுவனங்களிலிருந்து விடுவிக்கப்படும் சிறார்கள், சிறுமிகள் மற்றும் பெண்கள் ஆகியோருக்குப் பிற்காப்புச் சேவைகளையும் இத்துறை செயல்படுத்துகிறது.

மத்திய அரசானது 2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தினை மறு ஆய்வு செய்து, 2006 ஆம் ஆண்டில் இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) திருத்தச் சட்டம் ஒன்றினை இயற்றியது. அதன் அடிப்படையில் விரிவான விதிமுறைகள் விரைவில் ஏற்படுத்தப்படும்.

### 5.2.1. இளைஞர் நீதிக் குழுமங்கள்

சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் சிறார்கள் குறித்த வழக்கு விசாரணைகளை விசாரிக்க, சென்னை, திருநெல்வேலி, தஞ்சாவூர், சேலம், கடலூர், திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூா ஆகிய மாவட்டங்களில எட்டு இளைஞர் நீதிக் குழுமங்கள் ஏற்படுத்தப்பட்டன. இக்குழுமங்கள் பெருநகா நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதிமன்ற நடுவர் மற்றும் இரண்டு சமூகப் பணியாளர்களைக்கொண்டு (ஒரு பெண் சமூகப் பணியாளர் உட்பட) 1973 ஆம் ஆண்டின் குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பின்படி அதிகாரங்களைக்கொண்ட நீதிமன்ற நடுவர் குழுவாகச் செயல்படுகின்றன. சம்பந்தப்பட்ட கூர்நோக்கு இல்லங்களில்,

இக்குழுமங்கள் திங்கள், புதன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் வாரத்தில் மூன்று முறை கூடுகின்றன.

### 5.2.2. கூர்நோக்கு இல்லங்கள்

தவறிழைத்ததாகக் கருதப்படும் சிறார்கள், இளைஞர் நீதிக் குழுமங்கள்மூலமாகக் கூர்நோக்கு இல்லங்களில் சேர்க்கப்பட்டு வருகின்றனர். சென்னை, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சி, சேலம் மற்றும் கடலூர் ஆகிய ஆறு இடங்களில், தலா ஓர் அரசு கூர்நோக்கு இல்லமும், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்கீழ் இரண்டு கூர்நோக்கு இல்லங்களும் செயல்பட்டு வருகின்றன. தன்னார்வத் தொண்டு அமைப்புகளின் கீழியங்கும் கூர்நோக்கு இல்லங்களுக்குப் பராமரிப்பு மானியமாக அரசு மாதம் ஒன்றுக்கு ஓர் இல்லவாசிக்கு ரூ.225/- வீதம் வழங்குகிறது.

### 5.2.3. சிறுவர்/சிறுமியருக்கான சிறப்பு இல்லங்கள்

இளைஞர் நீதிக் குழுமங்கள்மூலம், தவறிழைத்ததாகக் கருதப்படும் சிறுவர்/சிறுமியருக்கான சிறப்பு இல்லங்களில் அனுமதிக்கப்பட்டு அச்சிறார்களுக்குக் கவனிப்பு, பாதுகாப்பு, பயிற்சி, மற்றும் மறுவாழ்வு ஆகியவை இளைஞர் நீதிக் குழுமங்கள் ஆணையிடும் காலம் வரை வழங்கப்படுகின்றன.

சிறுமிகளுக்காகச் சென்னையிலும், சிறுவர்களுக்காக வேலூரிலும் இரண்டு அரசினர் சிறப்பு இல்லங்கள் இயங்கி வருகின்றன.

### 5.3.1. குழந்தைகள் நலக் குழுக்கள்

கவனிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் சிறார்களுக்காகக் கீழ்க்கண்ட இடங்களில் 18 குழந்தைகள் நலக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. சென்னை | 7. சேலம் | 13. தஞ்சாவூர் |
| 2. செங்கல்பட்டு | 8. கோயம்புத்தூர் | 14. திருச்சிராப்பள்ளி |
| 3. இராணிப்பேட்டை | 9. விருதுநகர் | 15. மதுரை |
| 4. கடலூர் | 10. திண்டுக்கல் | 16. திருநெல்வேலி |
| 5. தருமபுரி | 11. காரைக்குடி | 17. நாகப்பட்டினம் |
| 6. ஈரோடு | 12. தூத்துக்குடி | 18. திருவள்ளூர் |



ஒவ்வொரு குழந்தைகள் நலக் குழுவும், ஒரு தலைவர் (அரசு சார்பற்றவர்) மற்றும் நான்கு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது (ஒரு பெண் உறுப்பினர் உட்பட). பெருநகர் நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதிமன்ற நடுவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் இக்குழந்தைகள் நலக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளி என வாரத்தில் மூன்று நாட்கள் சம்பந்தப்பட்ட குழந்தைகள் இல்லங்களில் கூடுகின்றன.

### 5.3.2. சிறுவர்/சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள்

குழந்தைகள் நலக் குழுக்கள்மூலம் அனுப்பப்படும் சிறார்களுக்குப் பாதுகாப்பு, பயிற்சி, கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகியவை வழங்குவதற்காக மாநிலத்தில் 31 சிறுவர்/சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள் இயங்கி வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | அரசினர் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள் (செங்கல்பட்டு, தட்டப்பாறை, இராணிப்பேட்டை, தஞ்சாவூர், சென்னை–13, மல்லிப்புத்தூர், பஞ்சப்பள்ளி, ஈரோடு, விழுப்புரம் மற்றும் காரைக்குடி) மற்றும் சிறுமியர்–1 (சென்னை) | 11 |
| 2. | தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள் (சென்னை–21, சென்னை–113, சென்னை–8, சென்னை–93, சென்னை–17, சென்னை–107, சென்னை–39, சென்னை–10 (2 இல்லங்கள்), காந்தி கிராமம், கோயம்புத்தூர், தருமபுரி, சேலம், மதுரை, திருவள்ளூர், திருவண்ணாமலை, விருதுநகர், மயிலாடுதுறை, திண்டுக்கல் மற்றும் தூத்துக்குடி) | 20 |
| | மொத்தம் | 31 |

குழந்தைகள் நலக் குழுவின் ஆணைப்படி, கவனிப்பு மற்றும் பாதுகாப்பிற்காக மட்டும் அனுமதிக்கப்படும் சிறார்கள், குழந்தைகள் இல்லங்களில் அனுமதித்துப் பராமரிக்கப்படுகின்றனர்.

அரசுசாரா நிறுவனங்களினால் நடத்தப்படும் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்களுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு குழந்தைக்கு ரூ.225/- என பராமரிப்புத் தொகை அரசால்

வழங்கப்படுகிறது. மன நலம் குன்றிய குழந்தைகளையும் வைத்துப் பராமரிக்கும் சென்னை பால விஹார் என்ற தொண்டு நிறுவனத்தால் நடத்தப்படும் குழந்தைகள் இல்லத்திற்குப் பராமரிப்பு மானியமாக குழந்தை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.400/- வீதமும், ஊனமுற்ற குழந்தைகளைப் பராமரிக்கும் மயிலாடுதுறை குழந்தைகள் இல்லத்திற்குப் பராமரிப்பு மானியமாக குழந்தை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.600/- வீதமும் அரசால் வழங்கப்படுகிறது.

**5.3.3. பிற்காப்பு நிறுவனங்கள்**

சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களிலிருந்து வீடேகும் சிறார்களின் மறுவாழ்வு நலனை முன்னிட்டு, பிற்காப்பு நலத் திட்டங்களைச் செயல்படுத்த கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் மூன்று "பிற்காப்பு நிறுவனங்கள்" செயல்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| 1. | அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனம், ஆத்தூர் (காஞ்சிபுரம் மாவட்டம்) |
| 2. | அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனம், மதுரை |
| 3. | அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனம் (வேலூர்) |

பிற்காப்பு நிறுவனத்தில் தங்கும் இல்லவாசிகளுக்கு வேலைவாய்ப்புடன்கூடிய தொழிற்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. குழந்தைகள் இல்லத்திலிருந்து வெளியேறும், கவனிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் தங்கள் உயர் கல்வியினைத் தொடரப் பிற்காப்பு நிறுவனங்களில் அனுமதிக்கப்படுகின்றனர்.

**5.4. 1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின்கீழ் அமைந்த மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள்**

1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின் கீழ் தவறிழைத்தவர்களாகக் கருதப்படும் சிறுமியர் மற்றும் மகளிருக்கென அமைக்கப்பட்ட கீழ்க்கண்ட ஐந்து மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்களில் இவர்களுக்குப் பாதுகாப்பு, பராமரிப்பு, பயிற்சி மற்றும் மறுவாழ்வு வழங்கப்படுகிறது:



| | |
|---|---|
| சென்னை | 1 |
| மதுரை | 1 |
| திருச்சிராப்பள்ளி | 1 |
| சேலம் | 1 |
| கோயம்புத்தூர் | 1 |
| மொத்தம் | 5 |

**5.5. மீட்புப் புகலிடம்**

1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின்கீழ் விசாரணைக்குட்படும் சிறுமியர் மற்றும் பெண்களுக்கென 6 மீட்புப் புகலிடங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்புகலிடங்கள் அந்தந்த இடங்களில் உள்ள மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களுடன் இணைந்து செயல்படுகின்றன. ஒரு மீட்புப் புகலிடம் வேலூரிலுள்ள பிற்காப்பு இல்லத்துடன் இணைக்கப்பட்டுள்ளது

**5.6. மணமாகாத தாய்மார்கள் இல்லம்**

பாலியல் கொடுமைகளால் பாதிப்பிற்குள்ளாகி மகப்பேறடைந்த மகளிர் மற்றும் சிறுமியர் கீழ்க்குறிப்பிட்டுள்ள இல்லங்களில் அனுமதிக்கப்படுகின்றனர்:

1. அரசினர் மகளிர் காப்பகம் மற்றும் ஸ்ரீசதனா, சென்னை-4

**5.7. குறுகிய கால இல்லம்**

திக்கற்ற சிறுமியருக்கென அரசுசாராத் தொண்டு நிறுவனங்கள் மூலம் கீழ்க்கண்ட இரண்டு குறுகிய கால இல்லங்கள் இயங்கி வருகின்றன:

(1) "அபய நிலையம்", சென்னை

(2) புனித பிரான்சிஸ் சேவியர் மீட்பு இல்லம், அடைக்கலபுரம், தூத்துக்குடி மாவட்டம்.

இச்சிறுமியர் 90 நாட்கள் வரை இக்குறுகிய கால இல்லங்களில் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். சமூகப் பாதுகாப்பு ஆணையரின் அனுமதி பெற்று மேலும் 45 நாட்களுக்கு இச்சிறுமியர் தங்க அனுமதிக்கப்படுகிறது. இத்தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்குப்

பராமரிப்புத் தொகையாக, ஒரு பெண் இல்லவாசிக்கு, மாதம் ஒன்றிற்கு ரூ.225/- வீதம் ஒவ்வொரு ஆண்டும் அரசினால் வழங்கப்படுகிறது.

**5.8. இடைவழி இல்லம்**

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் 1999-2000 ஆம் ஆண்டில், தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் ஓர் இடைவழி இல்லம் 25 பெண்களைப் பராமரிக்கும் வகையில், துவக்கப்பட்டது. தற்போது இவ்வில்லம் விழுப்புரம் மாவட்டம், மடப்பட்டு கிராமம் என்ற இடத்தில் இயங்கி வருகிறது. கீழ்க்கண்ட நோக்கங்களுக்காக இந்த இடைவழி இல்லம் ஏற்படுத்தப்பட்டது:

- பாதிக்கப்படக்கூடிய சூழலில் உள்ள சிறுமியருக்குத் தற்காலிகப் பராமரிப்பு அளித்தல்.
- அக்குழந்தைகளை மீண்டும் அவர்கள் குடும்பத்துடன் விரைவாக ஒன்றிணைத்தல் மற்றும் மறுவாழ்வு அளித்தல்.
- பாதிக்கப்பட்ட சூழலில் உள்ள சிறுமியர்களுக்குப் புகலிடம், கல்வி மற்றும் தொழிற்பயிற்சி அளித்தல்
- பெண் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாத்தல்

**5.9. இளைஞர் வழிகாட்டி நிலையங்கள்**

கூர்நோக்கு இல்லங்கள், குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களிலுள்ள சிறார்களுக்கும், அவர்களின் பெற்றோர்/பாதுகாவலர்களுக்கு ஆலோசனைகள் கூறவும், வழிகாட்டவும், அக்குழந்தைகளின் பிரச்சினைகளை இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் உளவியல்ரீதியாக ஆய்ந்து, சம்பந்தப்பட்ட தகுதியுடைய அதிகாரிகளுக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கின்றன. சென்னை (2), மதுரை, வேலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தலா ஒன்றும், ஆக 5 இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்கீழ் இயங்கி வருகின்றன.

**5.10. கல்விப் பயிற்சி**

அனைத்து அரசு சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள்/சிறப்பு இல்லங்களில் 8 ஆம் வகுப்பு வரை கல்வி அளிக்கப்படுகிறது. செங்கல்பட்டு அரசினர் சிறுவர் குழந்தைகள் இல்லம் மற்றும் சென்னை அரசினர் சிறுமியருக்கான குழந்தைகள்/சிறப்பு இல்லத்தில்



10 ஆம் வகுப்புக் கல்வியுடன் கணிப்பொறிப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இத்துறை, சிறார்கள், தமது உயர் கல்வியினைத் தொடரும்பொருட்டு, மருத்துவம், பொறியியல், தொழில்நுட்ப கல்வி, தொழிற்பயிற்சிக் கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வி ஆகியவை படிக்க உரிய வசதிகள் செய்து தருகிறது. குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களின் சிறார்கள் வெளியில் பயின்று வரும் சில உயர் கல்வி பற்றிய விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| மருத்துவக் கல்வி பட்டப் படிப்பு | 1 |
| பொறியியல் பட்டப் படிப்பு | 1 |
| தொழிற்பயிற்சி சான்றிதழ் படிப்பு | 61 |
| மேல்நிலைக் கல்வி | 18 |
| மொத்தம் | 81 |

**5.11. தொழிற்பயிற்சி**

பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் மற்றும் தொழில் ஆசிரியர்கள்மூலம் தொழிற்பயிற்சியும் பயிற்றுவிக்கப்படுகிறது. மேற்குறிப்பிட்டவை தவிர, பின்வரும் குறுகிய காலத் தொழிற்பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன:

(1) மாவு அரைத்தல்

(2) தானியங்கிப் பழுதுபார்ப்பு

(3) திரை அச்சுக் கலை மற்றும்

(4) கணினிப் பயிற்சி

தொழில் பிரிவுகளில் உள்ள சிறார்களுக்குக் கீழ்க்கண்டவாறு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| 1. | முழுத் திறன்பெற்ற சிறார்கள் | ஒரு சிறாருக்கு மாதம் தோறும் ரூ.70/- |
| 2. | பாதித் திறன்பெற்ற சிறார்கள் | ஒரு சிறாருக்கு மாதம் தோறும் ரூ.50/- |

16. தற்போது பார்வையற்றோரைத் திருமணம் புரியும் நல் உடற்கூறு உள்ள நபர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையைப் பெற ஆண்டு வருமான உச்சவரம்பு ஏதும் இல்லை. ஆனால், மற்ற வகை ஊனமுற்றோரை மணம் புரியும் நபர்களுக்கு ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.24,000 என உள்ளது. இந்த வருமான உச்சவரம்பு இவ்வாண்டு முதல் நீக்கப்படுகிறது. இதன்மூலம் மற்ற தகுதிகள் உள்ள அனைவரும் இத்திட்டங்களின்கீழ் பயனடைவார்கள்.

17. கிண்டியிலுள்ள அரசுத் தொழிற்பயிற்சி நிலையத்தில் காது கேளாத நபர்களுக்குப் பொருத்துநர் (Fitter) பிரிவின் இரண்டாண்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பிரிவில் பயிற்சிபெறுபவர்களுக்குத் தற்போது மாதம் ஒன்றுக்கு ரூபாய் 100/- உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இவ்வாண்டு முதல் இவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 300/- ஆக உயர்த்தப்படும்.

D V211,31 Poi P07,21.2

18. ஊனமுற்ற நபர்களைத் திருமணம் செய்துகொள்ளும் சாதாரண நபர்களுக்கு வழங்கப்படும் திருமண உதவித் தொகை கோரி நிலுவையில் உள்ள விண்ணப்பங்களுக்கு வழங்க வேண்டிய நிதியுதவிக்காக ரூபாய் 20 இலட்சம் ஒதுக்கப்படும்.

19. 2 முதல் 15 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே பொதுவாகக் காணப்படும் இரும்புச் சத்துக் குறைபாட்டால் ஏற்படும் இரத்த சோகை மற்றும் அயோடின் குறைபாடு ஆகியவற்றைத் தடுக்கும் நோக்கத்தில் இப்பொழுது 7 மாவட்டங்களில் உள்ள சத்துணவு/குழந்தைகள் மையங்களில் இரு முறை செறிவூட்டப்பட்ட உப்பு பயன்படுத்தப்படுகிறது. இவ்வாண்டு முதல் எஞ்சியுள்ள 23 மாவட்டங்களுக்கும் இது விரிவுபடுத்தப்படும்.

20. சமுதாயத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் முழுமையாக ஊனமுற்றோரும் பங்கேற்பதை உறுதி செய்யத் தமிழ்நாடு முழுவதும் புதிதாகக் கட்டப்படும். அரசுக் கட்டடங்கள், அரசு சார்ந்த கட்டடங்கள், தனியார் நிறுவனக் கட்டடங்கள் மற்றும் பொதுக் கட்டடங்களை ஊனமுற்றோர் பயன்படுத்தும் வகையில் சாய்வு தளம் (Ramp) போன்ற வசதிகள் மற்றும் தடையில்லாச் சூழ்நிலை (Barrier-free environment) ஏற்படுத்துவது கட்டாயமாக்கப்படும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227566
சென்னை-600 008
நூலகம்

ஐஐஐஐ